வெளியீடு 24-2-99 Issued 24-2-99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, ஏப்ரல் 23, 1999– தொகுதி 47 – எண் 1**

**Thursday the 23rd April, 1999 – Volume 47 – No. 1**

... பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

V211, 31'N99.
N99. 47.1
218462.

**[Price Rs. 3.00**

23-4-1998

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| 1. **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-40 |
| 2. **தகவல் கோரல்--** | |
| கோவை குண்டு வெடிப்பு சம்பந்தமாக அரசின் வெள்ளை அறிக்கையின்மீது விவாதிக்க நாள் குறிப்பிடுதல் | 40-43 |
| 3. **சிறப்புக் கவன ஈர்ப்பு--** | |
| (அ) சந்தனமரக் கடத்தல் வீரப்பனின் கூட்டாளிகள் கைது | 43-55 |
| (ஆ) டான்செம் சிமென்ட் அரசுத் துறைப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து வாங்காமல் வெளிச் சந்தையில் சிமென்ட் வாங்கலாம் என்ற அரசின் முடிவு | 56-60 |
| (இ) அடையாறில் அரசுக்குச் சொந்தமான அறிவொளி இயக்கக் கட்டடத்தைத் தனி நபர் கையகப்படுத்தியது | 60-65 |
| 4. **அறிவிப்புகள்--** | |
| (அ) மெட்ரிகுலேஷன் தேர்விற்கான வினாத்தாள் முன்கூட்டியே வெளிவந்தது குறித்த அறிவிக்கை எடுத்துக்கொள்ளுதல் | 66 |

| | பக்கங்கள் |
|---|---|
| 4. அறிவிப்புகள்--தொடர்ச்சி | |
| (ஆ) பிளஸ்-2 விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய மறுத்து ஆசிரியர்கள் போராட்டம் நடத்துவது குறித்த அறிவிக்கை எடுத்துக்கொள்ளுதல் | 66 |
| 5. கவன ஈர்ப்பு-- | |
| (அ) நாகூர் வெட்டாறு பாலம் பழுதடைந்தும், மிகவும் குறுகலாகவும் உள்ளதால் ஏற்படும் நிலை | 67-70 |
| (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் மூடப்பட்டதால் ஏற்பட்டுள்ள நிலை | 70-72 |
| 6. அறிக்கைகள் அளித்தல்-- | |
| பொதுக் கணக்குக் குழு | 73 |
| 7. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் 29 - சமூக நலன் | 73-152 |
| மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் | 73,130-149 |
| *திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் | 77-85 |
| டாக்டர் காஞ்சனா கமலநாதன் | 85-93 |
| திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் | 93-100 |
| *திரு. நா. பெரியசாமி | 100-107 |
| திரு. கோ. நயினா முகமது | 107-112 |
| *திரு. ஜி. நிஜாமுதீன் | 112-118,125 |
| திருமதி ஏ.ஆர். வேடம்மாள் | 118-122 |
| திரு. சி. ஞானசேகரன் | 123-130 |
| 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 152-153 |


21862



1215 N 9447

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | : | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள். |
| 2. கல்வி அமைச்சர் | : | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன்:
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா.நா. நேரு:
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம்:
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா:
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:
வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம்.

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:**
கால்நடைப் பராமரிப்பு.

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—*Justice Selvi M. FATHIMA BEEVI*

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** : **The Hon. Kalaignar M. Karunanidhi:**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** : **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** : **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** : **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** : **The Hon. Thiru Ko. Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

| | |
|---|---|
| **Minister for Agriculture** | : **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| **Minister for Public Works** | : **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works. |
| **Minister for Transport** | : **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| **Minister for Highways** | : **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :** Highways and Ports. |
| 0. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | : **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 11. **Minister for Food, Public Distribution System and Co-operation** | : **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 12. **Minister for Milk** | : **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slun Clearance and Accommodation Control. |



| | |
|---|---|
| 13. **Minister for Labour** | : **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 14. **Minister for Law** | : **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures. Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| 15. **Minister for Handlooms** | : **The Hon. Thiru N. K. K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control. |
| 16. **Minister for Backward Classes** | : **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 17. **Minister for Forest and Printing** | : **The Hon. Thiru Pongaiur N. Palanisamy:** Forest, Cinchona, Stationery and Printing and Government Press. |
| 18. **Minister for Housing** | : **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 19. **Minister for Rural Industries and Registration** | : **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 20. **Minister for Information and Publicity** | : **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act. |

| | |
|---|---|
| **21. Minister for Animal Husbandry** | : **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| **22. Minister for Social Welfare** | : **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** | : **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** | : **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi** | : **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| **26. Minister for Fisheries** | : **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

திரு. ரா. சேதுநாதன்

திரு. கு. மனோகரன்

திரு. வ. வேலுசாமி

திரு. சி. ஞானசேகரன்

திரு. நா. பெரியசாமி

திரு. முகம்மது கோதர் மைதீன்

*செயலாளர்*

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி அனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 13. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |

| | | | |
|---|---|---|---|
| 17. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 18. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 19. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 20. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 25. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ | .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 30. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| 31. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 32. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 33. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 35. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 36. | திரு. நா. நடராஜன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)
### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. லி. | .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. | பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம் |
| 19. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு
22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
23. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
24. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
25. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
26. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
27. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
28. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
29. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
30. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
31. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
32. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
33. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
34. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
35. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
36. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
37. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
38. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு
39. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
40. இராஜரெட்டி, திரு. ச. .. தளி
41. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
42. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)



44. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
47. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
51. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
52. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
53. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
55. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
56. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. .. நாங்குநேரி
57. கிருஷ்ணன், திரு. சீ.வெ. .. வேடசந்தூர்
58. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
59. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
60. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
61. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
62. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
63. கோபால், திரு. பா. .. மேட்டூர்
64. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
65. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
66. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி

112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)

113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்

114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்

115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்

116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)

117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை

118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி

119. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2

120. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு

121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி

122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)

123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு

124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி

125. தனபாலன், திரு. கு.ர.கோ. .. சேலம்-1

126. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்

127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்

128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)

129. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி

130. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி

131. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்

132. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)

133. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்

134. துரைமுருகன், திரு. .. காட்பாடி



135. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி

136. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)

137. நடராசன், திரு. ஆ. .. பேரூர்

138. நடராஜன், திரு. த. .. செஞ்சி

139. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்

140. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)

141. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி

143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்

144. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்

145. நேரு, திரு. கா.நா. .. லால்குடி

146. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை

147. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)

148. பரணிகுமார், திரு. [illegible] .. திருச்சிராப்பள்ளி-1

149. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)

150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)

151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு

152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

153. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)

154. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்

155. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்

156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி

157. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

158. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

159. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
160 புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
161. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
162. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
163. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
164. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
165. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
166. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)
167. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
171. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
172. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
173. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
179. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
180. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு



181. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
182. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
183. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
184. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
185. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
186. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். .. அரவக்குறிச்சி
188. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
189. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
190. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
191. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
192. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
193. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
194. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
195. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
196. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
197. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
198. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
199. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
200. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
201. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
202. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி
203. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்

204. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்

205. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)

206. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்

207. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்

208. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி

209. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்

210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்

211. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு

212. வல்லரசு, திரு. பி. என். .. உசிலம்பட்டி

213. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்

214. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்

215. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்

216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. வீரபாண்டி

217. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை

218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்

219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி

220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு

221. வெங்கடேசன், திரு. ச.க. .. மதுராந்தகம்

222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். .. காவேரிப்பட்டினம்

223. வெங்கிடு, திரு. ஜி. பி. .. கோபிச்செட்டிப் பாளையம்

224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)

225. வேணு, திரு. கி. .. கும்மிடிப்பூண்டி



226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்

227. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்

228. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு

229. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)

230. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி

231. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்

232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்

233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி

234. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு

235. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 10, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2029

## 1998 ஏப்ரல் 23, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாந் தலை.''*

இருப்போர் இல்லாதோர் என்றில்லாமல், கிடைத்ததைப் பகிர்ந்துகொண்டு, எல்லா உயிர்களும் வாழ வேண்டும் என்ற சமநிலைக் கொள்கைக்கு ஈடானது வேறு எதுவுமே இல்லை.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 301, திரு. செங்கை சிவம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[1998 ஏப்ரல் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியசெவலை செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் தொழிலாளர்கள் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அந்த ஆலை நிர்வாகி பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள மறுக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் சில முடிவுகளை எடுத்து சுமுகமான தீர்வு காண்பதற்கான முயற்சி எடுத்தும், ஆலை நிர்வாகியினுடைய பிடிவாதம் காரணமாக அதில் தீர்வு காணப்படாமல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தத் தீர்வினைக் காண்பதற்கான முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் அங்கே கரும்பு சக்கையாக எப்படிப் பிழியப்படுகிறது என்ற அந்தக் கேள்விக்குத்தான் பதில் அளிக்கின்ற விவரங்கள் மட்டும்தான் இருக்கின்றன. கரும்பு சக்கையாகத்தான் அங்கே பிழியப்படுகிறது. இப்போது கரும்பு ஆலையே பிழியப்படுவதாக ஒரு செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அதுபற்றி அரசு கவனிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் இன்றைக்கு அறந்தாங்கி பகுதியிலே ஒன்று, வலங்கைமான் பகுதியிலே ஒன்று, மேலும் இரண்டு மூன்று சர்க்கரை ஆலைகள், ஆக நான்கு, ஐந்து சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இப்படி ஒன்றாக இருக்கின்ற அவற்றிலேயிருந்து கிடைக்கின்ற சக்கைகளை வைத்து ஒரு காகித ஆலையை, என்னுடைய திருவோணம் தொகுதியிலே, அந்தச் சர்க்கரை ஆலை இருக்கின்ற பகுதியிலே--அதாவது அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைப் பகுதியிலே ஆயிரக்கணக்கான ஏக்கர் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன-- ஒரு காகித ஆலையைத் துவக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பல சர்க்கரை



1998 ஏப்ரல் 23]

ஆலைகளிலேயிருந்து வருகின்ற கரும்புச் சக்கைகளைக் கொண்டு ஒரு காகித ஆலை நிறுவ முடியுமா என்று கேட்கிறார். அப்படி அந்தந்த ஆலைகளிலேயிருந்து கிடைக்கிற இந்தச் சக்கைகள் எல்லாம் ஏற்கெனவே வேறு காகித ஆலைகளுக்கும், வேறு பணிகளுக்கும் இப்போது பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக, பெரியசெவலை செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலேயிருந்து கிடைக்கிற-நான் ஏற்கெனவே சொன்னேனே 1,34,000 டன் கரும்புச் சக்கை கிடைக்கிறது என்று-அந்தக் கரும்புச் சக்கையில் முக்கால் பகுதி அந்தச் சர்க்கரை ஆலையிலேயே கொதிகலன்களுக்கு எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டுவிடுகிறது. மிஞ்சுவது 21,000 டன்தான். அதைப்போலத்தான் மற்ற சர்க்கரை ஆலைகளிலும் மிஞ்சுவது குறைவாக இருக்கும். எனவே, அவற்றை வைத்து ஒரு காகித ஆலையை உருவாக்குவது இயலாத காரியம். அதுமாத்திரமல்ல. ஒரு காகித ஆலையை இப்போது நிறுவுவது என்றால் ஆயிரம் கோடி ரூபாய் அதற்கு முதலீடு தேவைப்படுகிறது. காகிதத் தொழில்நுட்பத்தின்படி, சிறிய 'காகிதத் தொழிற்சாலை இலாபகரமாக இயங்காது என்கிற கருத்தும் இப்போது முனைப்பாக இருந்து வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

முற்பகல் 9-40

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சோழவந்தான் தொகுதியிலே, கூட்டுறவுத் துறையிலும், அரசுத் துறையிலும் இயங்குகின்ற இரண்டு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அதிலே நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, போதிய அளவுக்குக் கரும்புச் சக்கைகள் கிடைக்கின்ற நிலை இருக்கிறது. எனவே, எனது தொகுதியிலே காகித ஆலையை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 இலட்சம் டன் கரும்புச் சக்கை தேவை என்று குறிப்பிட்டிருக்கிறேன். உறுப்பினருடைய தொகுதியில் உள்ள ஆலையில் எத்தனை இலட்சம் டன் சக்கை மிஞ்சுகிறது என்ற விவரத்தைத் தெரிவிப்பாரேயானால், அதுபற்றி யோசிக்கலாம்.

[1998 ஏப்ரல் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 303, திரு. இ.ஜி. சுகவனம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**303--**

**பாடநூல் நிறுவன அலுவலகத்தை மாற்றுதல்**

*3412--**திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் இயங்கி வரும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன அலுவலகத்தை, பர்கூரில் உள்ள புதிய அலுவலகக் கட்டடத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும்?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் இயங்கி வரும் தமிழ்நாட்டு பாடநூல் நிறுவன வட்டார அலுவலகம், பர்கூரிலுள்ள, கழகத்தின் சொந்தக் கட்டடத்திற்கு, ஜனவரி 1997 முதல் மாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகிறது.

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அலுவலகம் நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய பெருமுயற்சியால் இன்றைக்கு அங்கு மாற்றப்பட்டு இயங்கி வருகிறது. அந்தப் பகுதி மலையடிவாரமாக இருக்கின்ற காரணத்தால், அந்த அலுவலகத்தைச் சுற்றிலும் கற்பாறைகளும், முட்புதர்களும் அதிகமாக இருக்கின்றன. ஆகவே அவைகளை அகற்றுகின்ற வகையில், சுத்தப்படுத்துகின்ற வகையில் நம்முடைய அரசு, அவைகளை உடனடியாக நீக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கையின் சூழ்நிலை அப்படியிருக்கிறது. அந்தச் சூழ்நிலையிலும் சில கட்டடங்கள் கட்டப்பட்டு வந்திருக்கின்றன. அதை மாற்றுவதைவிட, அந்த அமைப்பை கிருஷ்ணகிரிக்கே மாற்றிவிடலாம். (சிரிப்பு)



1998 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 304, திரு. இ. ஏ. பி. சிவாஜி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**304--**

**பல்தொழில்நுட்பப் பயிலகம் அமைத்தல்**

*7461--**திரு. இ.ஏ.பி. சிவாஜி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருத்தணி தொகுதியில் அரசினர் பல்தொழில்நுட்பப் பயிலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி, பள்ளிப்பட்டு தொகுதிகளில் இதுபோன்ற தொழில்நுட்பப் பயிலகங்கள் இல்லாத காரணத்தால், அவர்கள் சென்னைக்கு வரவேண்டிய ஒரு நிலை இருக்கிறது. எனவே, மீண்டும் பரிசீலனை செய்கின்ற எண்ணம் அரசுக்கு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் சுயநிதி பாலிடெக்னிக்குகளை பல இடங்களில் ஏற்படுத்துவதற்கு, உரிய வசதிகள் இருக்கக்கூடிய அப்படிப்பட்ட பல நிறுவனங்கள் விண்ணப்பிக்கின்றபோது, அப்படிப்பட்ட கல்லூரிகளை அமைக்க ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இப்பொழுது திருவள்ளூர் மாவட்டத்திலும், காஞ்சிபுரம் மாவட்டத்திலும் பல இடங்களில் அவை வந்துகொண்டிருக்கின்றன. அதைப்போல, திருத்தணியிலும் வருகின்ற வாய்ப்பு இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

[1998 ஏப்ரல் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 305, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**305--**

**பெண்ணாகரம் தொகுதியில் மின் இணைப்பு**

*6270--**திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கோடிஅள்ளி பஞ்சாயத்தில் இருக்கும் காந்தி நகர், தித்தியொப்பனஅள்ளி ஊராட்சி, மருவரட்டுப்பள்ளம், காசிக்காரப்பள்ளம், வட்டுவனஅள்ளி பஞ்சாயத்து, அட்டப்பள்ளம், அஞ்சேஅள்ளி ஊராட்சி, பூஞ்சோலை ஆகிய கிராமங்களுக்கு மின் இணைப்பு இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வினா எண் 306, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**306--**

**எலும்பு மருத்துவப் பிரிவு அமைத்தல்**

*10038--**திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--



1998 ஏப்ரல் 23]

அரியலூர் அரசு பொது மருத்துவமனையில் எலும்பு சம்பந்தமான மருத்துவப் பிரிவு அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரியலூர் அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே எலும்பு சிகிச்சைப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எலும்பு மருத்துவச் சிகிச்சைப் பிரிவு செயல்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பிரிவுக்கு மருத்துவர்கள் இல்லை, நர்சுகள் இல்லை, மருந்து கொடுக்கின்ற டாக்டர்கள் இல்லை, பணியாளர்கள் இல்லை. இன்னும் பல்வேறு குறைகள் இருக்கின்றன. அங்கு எக்ஸ்-ரே பிலிமும் 50 தான் இருக்கின்றன. அதனால் குருத்தெலும்பு, தலைப் பாகங்களில் அடிபட்டால், படம் பிடிக்கின்ற போதுமான வசதி இல்லை. எனவே, அந்த வசதியைச் செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் அரசு மருத்துவமனையில் 70 படுக்கை வசதிகள் இருக்கின்றன. அங்கே குழந்தைகள் நலப் பிரிவு, எலும்பு மருத்துவச் சிகிச்சைப் பிரிவு, பல் சிகிச்சைப் பிரிவு, இரத்த வங்கி, விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவு ஆகிய பிரிவுகள் சிறப்பாக இயங்கி வருகின்றன. பரிசோதனைக் கூடமும் உள்ளது. நுண்கதிர் இயக்கப் பிரிவும் உள்ளது. தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகத்தின் மூலம் மருந்துகளும் முறையாக அங்கே வழங்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்ததைப்போல, அந்தந்த மருத்துவமனைக்குரிய சிறப்பு மருத்துவர்களை நியமிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

[1998 ஏப்ரல் 23

முற்பகல் 9-45

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லையென்றாலும்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிந்த காரணத்தினால் இந்தக் கேள்வியை எழுப்ப விரும்புகிறேன். மதுரை மாநகரிலுள்ள அரசு இராஜாஜி மருத்துவமனை மிகப்பெரிய மருத்துவமனைகளிலே ஒன்று. அங்கே குவியக்கூடிய கழிவுகள் அதிகம் இருக்கின்ற காரணத்தினால், 'Incinerators' வாங்க வேண்டுமென்று அரசாணை வெளியிட்டு ரூ.58 இலட்சம் நிதியொதுக்கீடு செய்தும், இன்னும் அந்த 'Incinerators' பொருத்தப்படவில்லை. அதுபற்றி அரசு அறியுமா, அவற்றை விரைவிலே பொருத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் தெரிந்த செய்தி என்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் இதுகுறித்து ஏற்கெனவே என்னிடத்தில் தெரிவித்தபோது உரிய பணத்தை அரசு அந்த மருத்துவமனைக்கு வழங்கியிருக்கிறது. அந்தக் கருவிகளை வாங்குவதற்கும் அனுமதி அளித்திருக்கிறது. இதுவரையிலே அந்தப் பணிகள் நடைபெறவில்லையென்றால், உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் உரிய உத்தரவுகளை உடனடியாகப் பிறப்பிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எலும்பு முறிவுச் சிகிச்சையில் இன்றைக்குப் பல முன்னேற்றங்கள் வெகுவேகமாக வந்துவிட்டன. செயற்கை மூட்டுப் பொருத்துதல் போன்ற பல்வேறு முன்னேற்றங்கள் இன்றைக்கு வந்துவிட்டன. ஆனாலும்கூட, ஆந்திராவில் உள்ள புத்தூர் என்ற இடம் எலும்பு முறிவு வைத்தியத்திற்கு நீண்ட நெடுங்காலமாகப் பெயர் பெற்று விளங்குகின்றது. ஆனால், புத்தூர் என்ற பெயரை வைத்துக் கொண்டு, "இங்கே புத்தூர் கட்டுப் போடப்படும்" என்று பல்வேறு போலியான வைத்தியசாலைகள் தமிழ்நாட்டிலே மூலைமுடுக்கெல்லாம் இருக்கின்றன. அவற்றைத் தடை செய்வதற்கு அல்லது முறைப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.



1998 ஏப்ரல் 23]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தூரிலே இருக்கின்ற சித்த மருத்துவத்தைக் கொண்டு, விபத்துக்கள் ஏற்படுகின்ற நேரத்தில், மூட்டு விலகலாக இருந்தாலும் சரி, எலும்பு முறிவாக இருந்தாலும் சரி, அவற்றிற்குச் சிகிச்சை அளிக்கிறார்கள். அது பெரும்பாலும் நல்ல மருத்துவ முறை இல்லை என்று மக்களுக்குத் தெரிந்திருந்தும்கூட, கிராமத்து மக்கள் பல ஆண்டுகளாக அதே பழக்கத்தில் ஊறிப்போன காரணத்தினால்; அந்த இடத்திற்குச் சென்றுகொண்டுதான் இருக்கிறார்கள். எனவே, நம்முடைய நாட்டு மக்களுக்கு, நல்ல அலோபதிக் மெடிசின் மூலமே இதற்குரிய மருத்துவ வசதி கிடைக்கின்றது; சிகிச்சை கிடைக்கின்றது; உரிய நிவாரணம் கிடைக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினரைப் போன்ற மிகச் சிறந்த டாக்டர்கள் பிரச்சாரம் செய்தால், அதுவே மிகவும் நல்லது. அரசாங்கத்தால் இந்த அளவிற்குத்தான் நடவடிக்கை எடுக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. துரைசாமி.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் அரசு பொது மருத்துவமனையில் மருத்துவர்களும், நர்ஸ்களும் தங்களுடைய பணிகளைச் சரிவரச் செய்யாத காரணத்தினால் அந்தப் பகுதியிலுள்ள பொதுமக்களும், நோயாளிகளும் மிகவும் அல்லல்படுகின்றார்கள். எனவே, இதனை அறிந்து, அந்தப் பகுதியிலே இருக்கின்ற அந்த மருத்துவமனை நன்கு இயங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் மருத்துவர்களை நியமிக்கின்றது. ஊழியர்களை நியமிக்கின்றது. அவர்கள் முறையாக பணி புரிகின்றார்களா என்பதை அடிக்கடி மேலதிகாரிகளை அனுப்பி பரிசோதனையும் செய்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் மாதத்திற்கு இரண்டு முறையாவது அந்த மருத்துவமனைப் பக்கம் சென்று உரிய நடவடிக்கையிலே ஈடுபடுவார்களேயானால், அவர்களுக்கும் ஓர் அச்சம் ஏற்படும். எனவே, அப்படிப்பட்ட நடவடிக்கைகளில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஈடுபடும்படி நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[1998 ஏப்ரல் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 307, திரு. தா. உதயசூரியன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**307--**

**பாவளம் ஊராட்சிக்குக் குடிதண்ணீர் வசதி**

*4556--**திரு. தா. உதயசூரியன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சங்கராபுரம் ஒன்றியம், பாவளம் ஊராட்சிக்கு அரசம்பட்டு ஆற்றிலிருந்து குடிதண்ணீர் கொண்டுவர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) வினா எழவில்லை.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாவளம் ஊராட்சியில் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக இருந்த காரணத்தினால், கழக ஆட்சி வந்த பிறகு ஓர் ஆழ்குழாய்க் கிணறு போடப்பட்டது. ஆனால், நிலத்தடி நீர் அந்தக் கிராமத்தின் பல்வேறு பகுதிகளிலும் இல்லை என்ற காரணத்தினால், அங்கிருந்து 2½ கிலோ மீட்டர் தூரத்திலேயிருக்கின்ற அரசம்பட்டு ஆற்றிலேயிருந்து குடிநீர் கொண்டு வந்தால், அந்தக் கிராம மக்களுக்கு வசதியாக இருக்கும். அதன் பொருட்டுத்தான் இந்தக் கேள்வியே கேட்கப்பட்டது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அரசம்பட்டு ஆற்றிலிருந்து பாவளம் ஊராட்சிக்குக் குடிநீர் கொண்டு வர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.



1998 ஏப்ரல் 23]

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 6-9-1996-லே இங்கே அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்த இடத்தில் கணக்கு எடுத்துப் பார்த்தபோது, 1991ஆம் ஆண்டுக் கணக்கின்படி, சங்கராபுரம் ஊராட்சியில், பாவளம் குடியிருப்பில் உள்ள மொத்த மக்கள்தொகை 1950 ஆகும். அதில், ஆதிதிராவிடர் 550 பேர் ஆவர். பாவளம் குடியிருப்பிற்கு 1990ஆம் ஆண்டில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு ஒன்றியத்தின் பராமரிப்பிற்கு ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தில், நீராதாரமான ஆழ்துளைக் கிணற்றின் கொடுதிறன் குறைந்ததால், 1996வது வருடம் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மாற்று நீராதாரம் அமைக்கும் பணிக்கான நிலநீர் ஆய்வு முடிந்து, ஆழ்துளைக் கிணறு அமைக்கும் பணியைத் தொடங்கும்போது, இக்கிராம மக்கள், ஆற்றுநீர் ஆதாரம் வேண்டுமென்று கூறி, இக்கிராமத்திற்குள் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணியைத் தடை செய்தனர். ஆற்றிலிருந்து புதிதாக நீராதாரம் அமைத்து, திட்டத்தைப் பயனுக்குக் கொண்டு வர வேண்டுமெனக் கேட்டனர். ஆனால், தோராயமாக, ஏறத்தாழ 6 இலட்சத்திற்கு மேல் கூடுதல் செலவாகும் என்பதாலும், அது தேவையில்லை என்பதாலும், தேவைப்படும் நீர், தேவைப்படும் கால அளவில், இங்கேயே கொடுத்து விடலாம் என்ற காரணத்தினால், நிலநீர் ஆய்வின்படி போதிய நீர் ஆழ்துளைக் கிணற்றில் கிடைக்கும் என்ற நம்பிக்கையைக் கிராம மக்களிடம் தெரிவித்து, அவர்களின் ஒப்புதலுடன் ஆழ்துளைக் கிணறு நல்லமுறையில் இக் கிராமத்திற்குள்ளேயே அமைக்கப்பட்டது. நீர்வரத்துக் கொடுதிறன், நிமிடத்திற்கு 134 லிட்டர் கிடைக்கிறது. மேலும், புதிய மின் இறைப்பான், புதிய மின் அறை, நீரேற்றுக் குழாய் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, திட்டம் பயனுக்குக் கொண்டு வரப்பட்டு, இப்போது சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குடிநீர்த் திட்டம் கடந்த ஓராண்டுக் காலமாக நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. தவிர, இக்குடியிருப்பில் 2 கையிறைப்பான்களும் 2 திறந்த வெளிக் கிணறுகளும் உள்ளன. எனவே, பாவளம் குடியிருப்புக்கு 4 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அரசம்பட்டு ஆற்றிலிருந்து நீராதாரம் அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.

[1998 ஏப்ரல் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பால. ஆனந்தன்.

**திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் கேட்டபோது, 1991 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி என்று சொல்கிறார்கள். 7 ஆண்டுகள் கடந்துவிட்டதால், குடியிருப்புகளில் மக்கள்தொகை கூடியிருக்கும். ஆகவே latest-ஆக, சமீபத்திய கணக்கெடுத்து, அதன்படி நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991ஆம் ஆண்டு கணக்கை நான் சொன்னேன். ஆனால் புதிய திட்டங்கள் 1996ஆம் வருடமோ அல்லது 1997ஆம் வருடமோ தொடங்கும்போது, ஏறத்தாழ 1991ஆம் ஆண்டிலுள்ள மக்கள் தொகைக்கு ஈடாக, எதிர்காலத்தில் 30 ஆண்டுகளில் ஏற்படக்கூடிய மக்கள் தொகை அதிகரிப்பிற்கு உட்பட்டுத்தான் கணக்கெடுக்கப்பட்டு, திட்டங்கள் அமலாக்கப்படுகின்றன. அந்த அடிப்படையில் இத்திட்டம் எடுக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும், தற்போதோ அல்லது எதிர்காலத்திலோ அந்தத் திட்டத்தில் பலன் இருக்காது என்று கருதினால், நிச்சயம் அதை நாம் ஆராய்ந்து புனரமைப்புச் செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 308, திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**308--**

### தஞ்சாவூர் மாவட்டத்தில் பேரூராட்சிகள்

*6674--**திரு. செ. இராமலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் பேரூராட்சிகளில், ஆண்டு வருமானம் ரூ.10.00 இலட்சத்திற்குள் உள்ள பேரூராட்சிகள் எவை?

(ஆ) அவற்றில் எவை சிற்றூராட்சிகளாக மாற்றப்படும்?



1998 ஏப்ரல் 23]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தஞ்சை மாவட்டத்தில் ஆண்டு வருமானம் ரூ. 10.00 இலட்சத்திற்குள் கீழ்க்கண்ட 12 பேரூராட்சிகளில் உள்ளன:

1. வலங்கைமான்
2. மதுக்கூர்
3. திருவிடைமருதூர்
4. மெலட்டூர்
5. திருபுவனம்
6. திருப்பனந்தாள்
7. சுவாமிமலை
8. திருநாகேஸ்வரம்
9. சோழபுரம்
10. வேப்பத்தூர்
11. பெருமகளூர்
12. மேலதிருப்பந்துருத்தி

(ஆ) இவைகளில் வேப்பத்தூர் பேரூராட்சி மன்றம் மட்டுமே, மேஜர் பஞ்சாயத்தாக அதனை மாற்றுவதற்குத் தீர்மானம் இயற்றியுள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரூராட்சிகளில், என்னுடைய தொகுதியில் மட்டும் 6 பேரூராட்சிகள் இருக்கின்றன. எனவே, சிற்றூராட்சிகளில் செயல்படுத்தும் திட்டங்களாகிய தொகுப்பு வீடுகள் கட்டுகிற திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற திட்டங்கள், இந்தப் பேரூராட்சிகளிலும் செயல்படுத்தப்பட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

[1998 ஏப்ரல் 23

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய நார்ம்ஸ்படி, அதாவது விதிமுறைகளின்படி, இவைகளை நிறைவேற்ற இயலாது. அதற்கு முடியாத காரணத்தாலும், ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிற பஞ்சாயத்துக்கள் சரிவரக் கணக்கெடுத்து அமைக்கப்படாத காரணத்தாலும்தான், தற்போது இப்படிப்பட்ட பேரூராட்சிகளை, மேஜர் பஞ்சாயத்துக்களாக ஆக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபோன்ற நடவடிக்கையை மேற்கொள்வார்களேயானால், அதையும் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 309, திருமதி ஏ.ஆர். வேடம்மாள், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**309--**

**விவசாயிகளுக்கு மானிய விலையில் செடிகள்**

*9799--**திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தர்மபுரி மாவட்டம், வாணியாறு அணைக்கட்டுப் பகுதியில், தோட்டக்கலைத் துறையின் சார்பாக, தென்னை, மா, பலா, கொய்யா, புளி, சப்போட்டா, மாதுளை போன்ற செடிகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 50 சத மானியத்தில் பழச்செடிகள், சிறு, மிகச் சிறு மற்றும் அனைத்துத் தர விவசாயிகளுக்கும் 1 ஹெக்டேருக்கு மிகாமல் மா, பலா, கொய்யா, சப்போட்டா, மாதுளை, புளி போன்ற செடிகள் வழங்கப்படுகின்றன. தர்மபுரி மாவட்டத்தில் திம்மாபுரம் மற்றும் ஜுனூர் ஆகிய ஊர்களில்



1998 ஏப்ரல் 23]

உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில், மா, கொய்யா, சப்போட்டா, மாதுளை போன்ற பழச் செடிகள் உற்பத்தி செய்து, இம்மாவட்டத்திலுள்ள சிறு மற்றும் மிகச் சிறு அனைத்துத் தர விவசாயிகளுக்கும் இத்திட்டத்தின்கீழ் பழச்செடிகள் 50 சத மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

முற்பகல் 9-55

**திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் பகுதியில் அந்தப் பண்ணை இல்லை. எனவே அந்தப் பகுதியில் அந்தப் பண்ணை ஒன்றை அமைத்துத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் மூலக் கேள்வியில் தர்மபுரி மாவட்டத்தில் வாணியாறு அணைக்கட்டுப் பகுதியில் தோட்டக் கலைத் துறையின் சார்பாக தென்னை, மா, பலா, கொய்யா, புளி, சப்போட்டா, மாதுளை போன்ற செடிகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு மானிய விலையில் அரசு வழங்குமா என்றுதான் கேட்டார். 'வழங்கப்படும்' என்று தெரிவித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Honourable Speaker Sir, there is a great demand for alphonso mango plants in Dharmapuri and Salem Districts. May I know from the Honourable Minister for Agriculture whether the Government has any plan to improve the variety of alphonso mangoes?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல, தர்மபுரி மாவட்டம் முழுவதும்தான் இந்த 50% மானியத்தில் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்குப் பழச் செடிகளை நாம் வழங்குகிறோம். அதுமட்டுமல்ல, தென்னையைப் பொறுத்தவரையில் அந்த மாவட்டத்திலே நாம் 'நெட்டை, குட்டைக் கன்றுகள்' என்று வளர்த்து அவற்றையும் விவசாயிகளுக்கு வழங்குகிறோம். இதைத் தவிர, கொச்சியிலே உள்ள தென்னை அபிவிருத்தி வாரியத்தின் மூலம் தென்னை வளர்ப்புக்கு என்று காய்ப்பு இல்லாத மரங்களை அகற்ற ஒரு மரத்திற்கு 200 ரூபாய் மானியம், புதிய மரக்கன்றுகள்

[1998 ஏப்ரல் 23

நடுவதற்கு ஒரு கன்றுக்கு 5 ரூபாய் மானியம், உரம் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு செய்ய ஒரு மரத்திற்கு 8 ரூபாய் மானியம், தென்னையில் ஊடுபயிர் சாகுபடி செய்ய ஒரு ஹெக்டேருக்கு 200 ரூபாய் மானியம் என்றெல்லாம் நாம் இப்போது வழங்குகிறோம். இந்த 50% மானியத்தில், நான் முன்பு சொன்னதுபோல, இந்த மாவட்டம் முழுவதும் பயன்பெறலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அல்போன்சா மாம்பழத்தைப்பற்றிக் கேட்கிறார். அல்போன்சா மாம்பழத்திற்கு ஏதாவது தனித் திட்டம் வைத்திருக்கிறீர்களா என்று கேட்கிறார்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு முதலில் பதில் சொல்லியவாறு, இப்போது 50% மானியத்தில் மா ஒட்டு, ஒரு செடி 15 ரூபாய் என்றால், அதை ரூ. 7.50 என்று நாம் கொடுக்கிறோம். அதைப்போல, சப்போட்டா 22 ரூபாய் ஒரு செடி, அதை 11 ரூபாய்க்குக் கொடுக்கிறோம். கொய்யா பதியன் போட்டது 8 ரூபாய், அதை 4 ரூபாய்க்குக் கொடுக்கிறோம். எலுமிச்சைக் கன்று 2 ரூபாய், 1 ரூபாய்க்குத் தருகிறோம். பதியன்கள் 6 ரூபாய், அவற்றை 3 ரூபாய்க்குக் கொடுக்கிறோம். சீதா கன்றுகள் 2 ரூபாய், 1 ரூபாய்க்குக் கொடுக்கிறோம். மாதுளை 8 ரூபாய், நாம் 4 ரூபாய்க்குக் கொடுக்கிறோம். நெல்லிக் கன்றுகள் 2 ரூபாய், அவற்றை 1 ரூபாய்க்குக் கொடுக்கிறோம். பப்பாளிக் கன்றுகள் 2 ரூபாய், 1 ரூபாய்க்குக் கொடுக்கிறோம். ஆக, 50% மானியத்தில் இந்தச் செடிகள் எல்லாம் வழங்கப்படுகின்றன. அதில் 'மா' வும் உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் வறட்சியான மாவட்டம், எந்தவித தொழில் வசதியும் இல்லாமல், சிறு விவசாயிகளைக்கொண்ட, விவசாயத்தையே நம்பி வாழக்கூடிய மக்களைக்கொண்ட பகுதியாக இருக்கிறது. அதே நேரத்தில் பாசன வசதியும் இல்லாத ஒரு பகுதி. ஆகவே, அந்த விவசாயிகளுக்குப் பலன் தரக்கூடிய வகையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி தென்னை, மா, பலா, கொய்யா, புளி, சப்போட்டா, பப்பாளி போன்ற அதிகப் பலன் தரக்கூடிய மரக் கன்றுகளை முழு மானிய விலையிலே கொடுப்பதற்கு அரசு



1998 ஏப்ரல் 23]

முன்வருமா, அதன்மூலம் விவசாயிகளை ஊக்கப்படுத்த ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழு மானியத்திலே தருவதற்கு அரசிடம் திட்டமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மகேந்திரன்.

**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஓசூர் சட்டப் பேரவைத் தொகுதி மாண்புமிகு உறுப்பினர் வெங்கடசாமி அவர்கள் அல்போன்சா, அதாவது காதர் மாம்பழத்திற்கு அதிக அளவில் டிமாண்டு இருக்கிறது என்று சொன்னார்கள். இன்று அந்தக் காதர் மாம்பழம் ஒரு டன் 20,000 ரூபாய் முதல் 40,000 ரூபாய் வரை விற்பனையாகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அல்போன்சா மாஞ் செடிகளை ஏழை விவசாயிகளுக்கு இலவசமாகத் தருவதற்கு ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நர்சரி வைத்திருக்கிறார்கள். அவர் அந்த வகை மாம்பழத்தை உற்பத்தி செய்கிறாரோ, இல்லையோ எனக்குத் தெரியாது. அப்படி இலவசமாகத் தர முடியாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி, இது தர்மபுரி மாவட்டம் சம்பந்தப்பட்ட கேள்வி.

முற்பகல் 10-00

வினா எண் 310, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**310--**

**பூவிருந்தவல்லி-சுங்குவார்சத்திரம் பேருந்துகள் இயக்குதல்**

*8172--**திரு. டி. சுதர்சனம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

[1998 ஏப்ரல் 23

(அ) பூவிருந்தவல்லி--சுங்குவார்சத்திரம் செல்லும் பேருந்து வழித்தடம் டி.64 அடிக்கடி நிறுத்தப்படுவதால் மக்கள் அவதிப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த வழித்தடத்தில் தடையின்றிப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பூவிருந்தவல்லியிலிருந்து சுங்குவார்சத்திரம் வரை இயக்கப்படும் தடம் எண் டி. 64 சரியான நேரத்தில் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்பொழுது தடையின்றி இயக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வினா எண் 311, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**311--**

**திண்டுக்கல்லில் கலையரங்கம் கட்டுதல்**

*7453--**திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திண்டுக்கல் நகரில் கலையரங்கம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.



1998 ஏப்ரல் 23]

(ஆ) மைய, மாநில அரசுகளின் நிதியுதவியுடன் கட்டப்படவுள்ளது. மைய அரசின் நிதியுதவி கிடைக்கப் பெற்றவுடன் மாநில அரசின் நிதியுதவி வழங்கி கலையரங்கம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின்போது இந்தத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், இன்னும் மத்திய அரசிடமிருந்து அந்தப் பங்குத் தொகை வராத காரணத்தால் அந்தக் கலையரங்கத்தைக் கட்ட இயலவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். இதுகுறித்து மத்திய அரசுக்குக் கடிதம் எழுதித் தெரிவிக்க வேண்டும். ஏனென்றால், தொடக்கமாக திண்டுக்கல் மற்றும் சில மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக பல்வேறு மாவட்டத் தலைநகரங்களுக்கு இத்திட்டம் கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அப்படிப்பட்ட நிலையை ஏற்படுத்தித் தர, அதற்கான முயற்சிகளை அரசு எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பகுதி-2 திட்டத்திலேயே இதற்காக தமிழக அரசு 12 இலட்ச ரூபாய் ஒதுக்கியிருந்தது. அதுமட்டுமல்ல, மானியக் கோரிக்கையின்போதும் இது உறுதி செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் நடுவண் அரசுக்கும் மடல் எழுதப்பட்டு, நினைவூட்டும் எழுதப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதியுதவி கிடைக்கப்பெற்றவுடன் 24 இலட்சம் ரூபாய் செலவில் அந்தக் கலையரங்கம் கட்டப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 312, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**312--**

**மானிய நிலங்களுக்குப் பட்டா வழங்குதல்**

*9373--**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

[1998 ஏப்ரல் 23

(அ) தமிழகத்தில் கோவில்களில் மானிய நிலங்களில் 15 ஆண்டுகளுக்கு மேல் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள பல்வேறு இடங்களில் 15 ஆண்டுக் காலமாக, 20 ஆண்டுக் காலமாக தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களும், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய மற்ற வகுப்பினரும் குடியிருந்து வரக்கூடிய இந்தக் காலகட்டத்தில், ஏழைகளுக்கு அரசின் மூலமாக நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு இலவச மனைப் பட்டா வழங்கப்படுவதைப்போல், திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களையும் அரசு ஆர்ஜிதம் செய்து, அதற்குண்டான தொகையை அந்தத் திருக்கோயில்களுக்குக் கொடுத்துவிட்டு, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணக்கூடிய இந்த அரசு, ஏழை எளிய மக்களுக்குப் பட்டா வழங்குமா? இதுகுறித்து, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி ஒரு நல்ல முடிவை அறிவிப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையிலே இருக்கின்ற நிலங்களின் அமைப்பு வேறு. கோயில்களுக்கு என்று வழங்கப்பட்டிருக்கிற 4.9 இலட்சம் ஏக்கர் நிலங்களும் முழுக்க, முழுக்கத் தனிப்பட்டவர்களால், கோயில் திருவிழாக்களுக்காக, கோயிலில் நடைபெறுகின்ற வழிபாடுகளுக்காகத் தானமாகக் கொடுக்கப்பட்டவை. அப்படித் தானமாகக் கொடுக்கிறபோதே, அந்தக் கோயில் விழாக்களுக்காக, பூஜைகளுக்காகத் தனித்தனியாக ஒதுக்கப்பட்டு ஓர் உயர்ந்த நோக்கத்தோடு அவை கொடுக்கப்பட்டன. எனவே, அந்த நோக்கத்திற்கு மாறாக அரசு எந்த முடிவையும் எடுக்க இயலாது.



1998 ஏப்ரல் 23]

அதுமட்டுமல்லாமல், திருக்கோயில் நிலங்களில் 84,220 நபர்கள் அடிமனை வாடகைதாரர்களாக ஏற்கெனவே இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு முறைப்படி குத்தகை நிர்ணயம் செய்யப்பட்டு, வாடகை நிர்ணயக் குழுவால் உயர்ந்த வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்படுகிறது. அந்தத் தொகை முழுவதும் கோயில் நற்காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச.க. வெங்கடேசன்.

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, மதுராந்தகம் நகரில் ஈஸ்வரன் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் 20 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் குடியிருந்து வருகிறார்கள். அவர்கள், தாங்கள் நிர்ணயிக்கும் மாத வாடகையைத் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அந்த மாத வாடகையைப் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மைக் காலத்தில் அரசு எடுத்த நடவடிக்கைகளின் வாயிலாக, பல்வேறு இடங்களில், ஏற்கெனவே அடிமனை வாடகைதாரர்கள், ஆக்கிரமிப்புச் செய்து இருந்தவர்கள் தாங்களாகவே முன்வந்து அரசோடு பேசி, 'நாங்கள் முறைப்படுத்திக் கொள்கிறோம்' என்று முன்வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், அண்மையில் குன்றத்தூரில்கூட 135 குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட பிறகு, அவர்கள் நேரடியாகப் பேசியதன் அடிப்படையில் இப்போது முறையாக ஒப்பந்தங்கள் எழுதப்பட்டு, அவை முறைப்படுத்தப்பட்டன. அந்த அடிப்படையில் யார், யார் எல்லாம் ஆக்கிரமிப்புச் செய்து, நீண்டகாலமாக அனுபவித்து வந்தாலும், இந்த நிர்வாகத்தோடு பேசி முறைப்படுத்திக்கொள்ள முடியும் என்று முன்வருபவர்களுக்கு முறையாக அந்தக் குத்தகை ஒப்பந்தப் பத்திரங்கள் நிறைவேற்றப்படும்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்றபோது கோயில்களிலே ஆறு கால பூஜை ஒழுங்காக நடைபெறுவதற்காக, அந்தக் காலத்திலே நிலங்களை எழுதி வைத்தார்கள் என்று தெரிவித்தார்கள். ஆனால், இடையிலே அந்தக் கோயில்களுக்கு நியமிக்கப்பட்ட பரம்பரை தர்மகர்த்தாக்கள் தங்களுடைய வறுமையின் காரணமாகவோ அல்லது அந்த நிலம் இருந்தால் பயன்படாது என்ற எண்ணத்தின் காரணமாகவோ மாற்றார்க்குக் குறைந்த விலையிலே, ரூபாய் ஆயிரத்திற்கோ அல்லது ரூபாய் இரண்டாயிரத்திற்கோ விற்றுவிட்டு, அங்கே கிட்டத்தட்ட 15, 20 ஆண்டுக் காலமாக அதை வாங்கியவர்கள் குடியிருக்கிறார்கள். அப்படி அங்கே குடியிருப்பவர்களுக்காவது அந்த இடங்களைப் பட்டா செய்து கொடுக்க அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு காலகட்டங்களிலே பணியாற்றிய சில அறங்காவலர்கள், கோயிலுக்கே தொடர்பு இல்லாத சிலர் இவர்கள் எல்லாம் சேர்ந்து கோயிலுக்கு உரிமையுள்ள நிலங்கள் என்று காட்டாமலேயே பல பேருக்கு விற்று வரவு செய்து கொண்டு இருக்கிறார்கள். இதையெல்லாம் கண்டறிந்த பிறகு முறைப்படி இவர்கள்மீது குற்றவியல் வழக்குத் தொடரப்பட்டு, ஒரு சிலர் தண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எவ்வளவு காலத்திற்கு முன்னால் விற்றிருந்தாலும், அந்தக் கோயில் நிலங்களை, தங்களுக்கு உரிமை இல்லாத நிலங்களை யார் விற்றிருந்தாலும் அது குற்றமே. எனவே, அந்த அடிப்படையில்தான் இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறதே தவிர, அப்படி எதிர்பாராமல் ஏமாந்து வாங்கிவிட்டார்கள் என்பதற்காக அவர்களுக்குப் பட்டா வழங்க இயலாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.பி. வெங்கிடு.

**திரு. ஜி.பி. வெங்கிடு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் வேற்று இடம் இல்லாத காரணத்தால், ஒரு சிறு வீடு அமைத்து அதில் குடியிருந்து வருகிறவர்களுக்கு இலவசமாகப் பட்டா வழங்க இயலாது என்று அமைச்சர் அவர்கள்



சொன்னார்கள். எனவே, அரசு நிர்ணயித்து இருக்கிற விலையை 'கைடுலைன் வேல்யு' என்ற அந்த வகையிலாவது, அவர்கள் குடியிருக்கிற இடப் பகுதியை மட்டும் பட்டா செய்து கொடுப்பதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற அறநிலையச் சட்டத்தில் பட்டா வழங்குவதற்கு அத்தகைய வழிவகை இல்லை. ஆனால், அதே நேரத்தில் அடிமனையைக் குத்தகைக்கு விடலாம், அவர்களோடு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்ற அளவில்தான் சட்டம் இருக்கிறது. எனவே, இதுகுறித்து மேலும் ஆய்வு செய்யப்பட வேண்டுமானால் முறைப்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்துதான் எந்த முடிவையும் எடுக்க முடியும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. சொக்கலிங்கம்.

**திரு. ஜி. சொக்கலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இன்றைக்கு பதில் கூறுகின்றபோது நீண்டகாலமாக வீடு கட்டிக் கொண்டு இருக்கிறவர்களுக்கும் பட்டா வழங்க இயலாது என்று சொல்லியிருக்கிறார். கிட்டத்தட்ட 25 ஆண்டுக் காலமாக பல கோயில் மனைகளில் வீடு கட்டிக்கொண்டு வாழுகிறார்கள். அவர்களுக்குப் பட்டா வழங்க முடியவில்லையென்றாலும்கூட, அவர்கள் வீடு கட்டக் கடன் பெறுவதற்கு ஏதுவாக இதுபோன்றவைகளுக்குக் கடன்களைப் பெறுவதற்கு சான்றிதழ் ஏதாவது அறநிலையத் துறையால் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை அந்தப் பொறுப்பை ஏற்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 313, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

[1998 ஏப்ரல் 23

**313--**

**திண்டிவனம் வழக்கறிஞர் சங்கத்திற்குக் கட்டடம்**

*8654--**திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திண்டிவனம் வழக்கறிஞர் சங்கத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டிவனம் வழக்கறிஞர் சங்கத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் வழக்கறிஞர்கள் சங்கத்திற்கான கட்டடம், புதியதாக அமைய இருக்கின்ற கூடுதல் சார்பு நீதிமன்றத்திற்காக வழக்கறிஞர்களால் வழங்கப்பட்டு, அங்கு கூடுதல் சார்பு நீதிமன்றமானது அமைய இருக்கின்றது. எனவே, இந்த வேளையிலே வழக்கறிஞர்களுக்கு என்று தனியாக ஒரு சங்கக் கட்டடம் அமைக்குமாறு வேண்டுவதோடு, கடந்த ஆண்டு நான் வேண்டுகோள் வைத்ததுபோல, ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திண்டிவனத்திலே ஆறு நீதிமன்றங்கள் இருக்கின்றன. எனவே, ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டடத்தைக் கட்டி, அதிலாவது வழங்கறிஞர்கள் சங்கத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, வழக்கறிஞர்களுடைய சங்கக் கட்டடம் கட்டுவதில் மாவட்டத் தலைநகரங்களுக்குத்தான் முன்னுரிமை வழங்க முடியும். ஆனால் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்குத் திட்டம் இருப்பதனால் அதற்கு முன்னுரிமை வழங்கலாம். ஆனால் வழக்கறிஞர்கள் சங்கக் கட்டடம் கட்டுவதற்கு, ஒரு வட்டத் தலைநகருக்கு முன்னுரிமை அளித்தால், அது அரசுக்குப் பிரச்சினையை உண்டாக்கும். ஏனென்றால், இப்போது பெரும்பாலான



1998 ஏப்ரல் 23]

மாவட்டத் தலைநகரங்களிலேயே வழக்கறிஞர்கள் சங்கக் கட்டடம் இல்லை. அதற்குத்தான் முன்னுரிமை கொடுத்தாக வேண்டும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 314, திரு. லி. அய்யலுசாமி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**314--**

**எட்டயபுரம் நெசவாளர்கள் குடியிருப்பு**

*8215--**திரு. லி. அய்யலுசாமி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) எட்டயபுரம் நெசவாளர்களுக்காகக் கட்டப்பட்ட 512 குடியிருப்புகள் குடியேறும் முன்னரே பழுதடைந்திருந்தும் கடன் தவணைத் தொகை மட்டும் பிடித்தம் செய்யப்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கடன் வசூல் செய்வதை உடனடியாக நிறுத்தவும், பாக்கிக் கடன் முழுவதையும் ரத்து செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கடன், ரூபாய் 49 இலட்சத்து 90 ஆயிரமும் மற்று மானியம், ரூபாய் 25 இலட்சத்து 60 ஆயிரமும் விசேட இனமாக கருதி தள்ளுபடி செய்திடப் பெறப்பட்ட பிரேரணை அரசி பரிசீலனையில் உள்ளது.

**திரு.லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்க இந்தக் கேள்வியை நான் மூன்றாவது தடவையாகக் கேட்டிருக்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது உங்களுக்கு நல்ல பதில் கிடைத்து விட்டது அல்லவா?

**திரு. லி. அய்யலுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரிலே வந்து அந்த இடத்தைப் பார்த்தார்கள். அந்த வீடுகள் குடியிருப்பதற்கு லாயக்கில்லாத வீடுகள் என்பதைப் புரிந்துகொண்டு, கடனைத் தள்ளுபடி செய்வதாகக் கூறினார்கள். ஆனால் இன்று வரைக்கும், அந்தச் சங்கத்தில் சாதாரண நெசவாளர்கள் நெய்து கொடுக்கக்கூடிய துணிகளுக்கு, கொடுக்கக்கூடிய கூலி மூலமாக வரக்கூடிய வருமானத்தை வீட்டுக் கடன் தொகைக்காகப் பிடித்துக் கொண்டே இருக்கிறார்கள். இதிலே என்ன பிரச்சினை இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதில் தலையிட்டு, இந்த நெசவாளர்களிடமிருந்து கடன் தொகை பிடிப்பதை கருணையுள்ளத்தோடு நிறுத்திவிட்டு, அவர்களுக்கு வேறு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதிலே சற்றும் வேறுபாடான நிலை இல்லை. இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு உறுப்பினரும், நானுமே அந்த இடத்தைச் சென்று பார்த்தபோது அந்த வீடுகள் முற்றிலும் குடியிருப்பதற்குத் தகுதியற்ற வீடுகள் என்ற அளவிலே முடிவு எடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து கோப்பு ஒன்றை மறுநாளே நானே போடச் சொல்லி, அவர்களுடைய ஒட்டுமொத்தக் கடன் தொகையையும் வஜா செய்ய வேண்டும்; அவர்களுக்குப் புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும்; இருக்கின்ற வீடுகள் பழுதுபார்ப்பதற்குக்கூடத் தகுதியில்லாத நிலையில் இருக்கின்றன என்று தெரிவித்து, உத்தரவு பெறுவதற்காக அந்தக் கோப்பு தற்போது சுற்றோட்டத்தில் இருக்கிறது. சில நேரங்களில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், நெசவாளர்களிடமிருந்து கடன் தொகையைப் பிடித்தம் செய்ய வேண்டும் என்று கேட்கின்றபோது, நானே அவர்களைக் கூப்பிட்டு, அப்படியெல்லாம் பிடித்தம் செய்யக்கூடாது என்று பல நேரங்களிலே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்து பேசி, சீக்கிரம் ஒரு நல்ல உத்தரவை அவர்களுக்கு நிச்சயமாக வழங்க இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். காலதாமதம்



ஏற்படுகிறது என்றால், இந்தக் கோப்பு பல இடங்களுக்குச் சுற்றுக்குப் போகவேண்டியிருப்பதாலும், மத்திய அரசு, மாநில அரசு, இவை எல்லாம் தங்களுடைய தொகையை மானியமாகக் கொடுத்திருப்பதாலும், கடனாகக் கொடுத்திருப்பதாலும் சில சிக்கல்கள் இருக்கின்றன. அவையும் நிச்சயமாகத் தீர்க்கப்பட்டுவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *315*, திருமதி ஆர். சரஸ்வதி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**315--**

### தாராபுரத்தில் தொழிற்பேட்டை

***8084--திருமதி ஆர். சரஸ்வதி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தாராபுரம் நகரில் சிட்கோ தொழிற்பேட்டை தொடங்கும் கருத்துரு அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தாராபுரம் நகரில் சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்கான திட்டம் தற்பொழுது சிட்கோவிடம் ஏதுமில்லை.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலில் மிகவும் பின்தங்கிய பகுதியான எங்கள் தாராபுரம் தொகுதியில் விவசாயத்தைத் தவிர வேறு எந்தத் தொழிலும் இல்லை என்று காரணம்காட்டி, கடந்த ஆட்சிக் காலத்தில் ஆளுங்கட்சியினரால் கொண்டுவரப்பட்ட சிட்கோ தொழிற்பேட்டையை அவர்களே குடியிருப்புகளாக மாற்றி, வீட்டுமனைப் பட்டாக்களும் வாங்கிவிட்டார்கள். தற்போது எந்தவிதமான தொழிற்பேட்டையும் அங்கே இல்லாத காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு சிட்கோ தொழிற்பேட்டையை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1998 ஏப்ரல் 23

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 316, டாக்டர் காஞ்சனா கமலநாதன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**316--**

**வெள்ளை இனப் பன்றிகளை வளர்க்கும் பண்ணைகள்**

*9599--**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வெள்ளை (யார்க்ஷயர்) இனப் பன்றிகளை வளர்க்கும் பண்ணைகளை ஒன்றியந்தோறும் தோற்றுவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தில் முதன்முதலில் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்டது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான். யார்க்ஷயர் இனப் பன்றிகள் என்று அழைக்கப்படும் இந்த வெள்ளை இனப் பன்றிகள் தட்பவெட்ப நிலைகளுக்கெல்லாம் தங்களை ஆட்படுத்திக்கொள்ளாமல், பாதிக்கப்படாமல் வளரக்கூடிய தன்மை கொண்டவை என்று சொல்லுகிறார்கள். அதிகப் புரதச் சத்து கொண்ட இவற்றின் இறைச்சியினுடைய விலையும் மலிவு. அதைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்தால் அந்நியச் செலாவணியை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய வாய்ப்பும் இதில் இருக்கிறது. எனவே,



1998 ஏப்ரல் 23]

மாவட்டத்திற்கு ஒன்று என்ற அளவிலாவது, துறையின் சார்பில் இந்த வெள்ளை இனப் பன்றிகளை வளர்க்கும் பண்ணைகளை நிறுவ அரசு முன்வருமா? பஞ்சாபில் உள்ளதுபோல, 'Pork processing plant'--பன்றி இறைச்சியைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலையை சென்னையிலாவது தொடங்க அரசு ஆய்வு செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசியாவிலேயே முதன்முதலாக கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், 1989ஆம் ஆண்டு நம்முடைய தமிழக முதல்வர் அவர்களால்தான் கொண்டு வரப்பட்டது என்பது சிறப்பான ஒன்றாகும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல தமிழ்நாட்டில், 'யார்க்ஷயர்' என்ற வெள்ளை இனப் பன்றிகளை வளர்க்கும் பணிகள், ஓசூர், மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும், புதுக்கோட்டை கால்நடைப் பண்ணையிலும், செட்டிநாட்டிலுள்ள, மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும், அபிஷேகப்பட்டியிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும், 100 சைதாப்பேட்டை கால்நடை மருத்துவமனை வளாகத்திலும் விழுக்காடு மத்திய அரசு மானியத்துடன் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. ஒன்றியங்களில் மட்டுமல்லாது, மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட வேண்டுமானால், நிலம், நீர் ஆதாரம், கொட்டகை மற்றும் இதர வசதிகளுடன் போதிய பணியாளர்களும் தேவைப்படும். இது தவிர, ஏற்படுத்தப்படும் பண்ணைகளில் சுற்றுப்புறச் சூழல் மற்றும் சுகாதாரப் பாதிப்பையும் கருத்தில்கொள்ள வேண்டியது அவசியம் ஆகிறது. தற்போது 5 பண்ணைகளில் 514 யார்க்ஷயர் வெள்ளை இனப் பன்றிகள் வளர்க்கப்படுகின்றன. வருங்காலத்தில் இனப்பெருக்கம் கூடுதலாகிவிட்டால், பதப்படுத்தப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 317, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

[1998 ஏப்ரல் 23

**317--**

## ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனை ஒதுக்கீடு

**5596*--**திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருப்பூர் வட்டம், கண்டியங்கோயில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனை ஒதுக்கி, வீடு கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருப்பூர் வட்டம், கண்டியங்கோயில் கிராமத்திலுள்ள கொளத்துப்பாளையம், மருதுரையான்வலசு, தாயம்பாளையம் ஆகிய சிற்றூர்களில் நில எடுப்பு ஏற்கெனவே செய்யப்பட்டுள்ளது. மேலும், மனையில்லாத ஆதிதிராவிடர்களுக்கு வரும் ஆண்டில் நில எடுப்புச் செய்து கூடுதல் மனைகள் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

(ஆ) இலவச வீடு கட்டித் தருவது குறித்து ஊரக வளர்ச்சித் துறை நடவடிக்கை எடுக்கும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாரத நாடு பழம்பெரும் நாடு; நீரதன் புதல்வர்இந்நினைவகற் றாதீர்' என்றான் பாரதி. தாயினுடைய மடியிலே தலைவைத்துப் படுக்கிற உரிமை குழந்தைக்கு உண்டு. ஆனால், தேசிய துரதிருஷ்டம் என்னவென்றால், இந்தியாவில் நம்முடைய தாழ்த்தப்பட்ட, ஆதி திராவிட மக்கள் உள்ளாட்சி அமைப்புகளில் வேலை செய்கிறார்கள். அந்த உள்ளாட்சி அமைப்புகளில் வேலை செய்கின்ற ஆதிதிராவிட மக்களுக்கு என்று சொந்தமாக இன்றுவரையிலும் வீடு தரவில்லை. அவர்கள், பணிக் காலத்தில் வாடகையில் மட்டுமே குடியிருக்கலாம், அவர்களுக்கு என்று சொந்தமாக வீடு இல்லை. சமூக இழிவு கொடிகட்டிப் பறக்கின்ற இன்றைய நிலையில், நகரங்களில் வீடு



1998 ஏப்ரல் 23]

கட்டிக் குடியிருக்க வாய்ப்பும் இல்லை. எனவே மாநில அரசே உள்ளாட்சி அமைப்புகளில் வேலை செய்கின்ற ஆதிதிராவிடத் தொழிலாளர்கள், அதுவும் துப்புரவுப் பணியில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் ஆகியோருக்கு இலவசமாக வீட்டு மனை வழங்குவதற்குரிய மாஸ்டர் பிளான் தயாரிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் உள்ளாட்சித் துறையின் மூலமாகக் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டுகூட, 60 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே ஒரு முன்னோடித் திட்டமாக தமிழக முதல்வர் அவர்கள்தான் அறிவித்திருக்கிறார்கள். அதுபோல, துப்புரவுப் பணியாளர்களுக்கும் இந்த ஆதிதிராவிடர் நலத் துறையின் சார்பாக சிறப்பான, நல்ல பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அவர்களுக்கும் வீட்டடிமனை வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு கிராமப்புறங்களில் நில ஆர்ஜிதம் செய்து கொடுக்கிறார்கள். ஆனால், பேரூராட்சிகளில் நில ஆர்ஜிதம் செய்து வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம் முன்பு இருந்தது. இப்போது அது நிறுத்தப்பட்டுள்ளது. ஆகவே பேரூராட்சிகளில் நிலம் இல்லாத ஆதிதிராவிட மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்றும், இப்போது எத்தனை சென்ட் நிலம் பட்டா போட்டுக் கொடுக்கப்படுகிறது என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவல்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பேரூராட்சிகளில் வீட்டடிமனை வழங்கும் திட்டம் இப்போது இல்லை என்று சொல்கிறார்கள். பேரூராட்சிகளில் வீட்டடிமனை வழங்கும் திட்டம் இருந்துகொண்டிருக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் 3 சென்ட் நிலம் வழங்கப்பட்டு வந்ததை, 2 சென்ட்

என்று குறைத்து மாற்றினார்கள். தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, அந்த மக்கள்மீது அளவுக்கு அதிகமான பற்றுக்கொண்ட காரணத்தால், 2 சென்ட் என்று வழங்கப்பட்டு வந்ததை 3 சென்ட்டாக உயர்த்தி, வீட்டடிமனை வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்குப் பட்டா வழங்குவதில் நம்முடைய அரசு முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதிக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. ஆனாலும்கூட, பட்டா வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம், நில ஆர்ஜிதம் செய்து பட்டா வழங்குவதில் வட்டாட்சியருக்கு அதிகமானப் பொறுப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணை வினாவைக் கேளுங்கள்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு, மூன்று வட்டங்களுக்குச் சேர்த்து ஒரு தாசில்தார்தான் இருக்கிறார். ஒரு வட்டத்திற்கு ஒரு தாசில்தார் என்று ஆதிதிராவிட நலத் துறை மூலம் நியமித்தால்தான் பட்டாவை விரைவிலே வழங்க முடியும். எனவே, அரசு இதுகுறித்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டடி மனை வழங்குவதற்காக ஆதிதிராவிட தனி வட்டாட்சியர்களுக்கு, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான் 20 ஜீப்புகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. அதைப்போல வட்டாட்சியர்கள் விரைந்து பணியாற்றுவதற்கு 2 வட்டங்களுக்கு ஒரு தாசில்தார் நியமனம் என்பது இந்த அரசின் கொள்கையாகவும் அறிவிக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 318, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.





**318--**

### ஆரம்பப் பள்ளி தொடங்குதல்

*7735--**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் :**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பழுக்காடு ஆதிதிராவிடர் குடியிருப்பில் ஓர் ஆரம்பப் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள், கல்வித் துறை மூலம் மட்டுமே தொடங்கப்பட்டு வருகின்றன. அப்படித் தொடங்கப்படும் தொடக்கப் பள்ளிகளில் 18 விழுக்காடு ஆதிதிராவிடக் குடியிருப்புகளில் தொடங்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். அதன்படி, கடந்த 1997-98 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதில் மொத்தம் 168 புதிய தொடக்கப் பள்ளிகளில் 14 பள்ளிகள் ஆதிதிராவிடக் குடியிருப்புகளில் தொடங்கப்பட்டுள்ளன. ஆகவே, இது கல்வித் துறை சம்பந்தப்பட்ட ஒன்று ஆகும். கல்வித் துறையை அணுகினால், சாத்தியக்கூறுகள் இருப்பின், பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ருத்ரசிந்தாமணி ஊராட்சி, பழுக்காடு கிராமத்தில் ஏறக்குறைய 150 ஆதிதிராவிடக் குடியிருப்புகள் இருக்கின்ற காரணத்தினால், அவர்களுடைய குழந்தைகள் ஏறக்குறைய 3 கி.மீ. தூரம் சென்று படிக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு வரும் நிதி ஆண்டிலாவது ஒரு புதிய பள்ளி தொடங்கிட ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட நலத் துறையின

சார்பாக பள்ளி தொடங்கும் திட்டம் இல்லை என்று சொல்லி இருக்கின்றேன். மேலும், கல்வித் துறையின் மூலம்தான் அந்தப் பள்ளிகள் தொடங்கப்படுகின்றன. அவை எப்படித் தொடங்கப்படுகின்றன என்பதையும் சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கல்வித் துறையை அணுகினால், சாத்தியக்கூறுகள் இருந்தால் பரிசீலிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *319*, திரு. பெ. ஆசையன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**319--**

### மேகமலைப் பகுதியைச் சுற்றுலா மையமாக்குதல்

*9213--**திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தேனி மாவட்டம், மேகமலைப் பகுதியினைச் சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேனி மாவட்டம், மேகமலைப் பகுதியினை சுற்றுலா மையமாக்கும் திட்டம் ஏதும் தற்பொழுது இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. ராமச்சந்திரன்.

**திரு. செ. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1989 ஆம் ஆண்டு மறைந்த முன்னாள் அமைச்சர் ஐயா கே.பி.கே. அவர்கள் மேகமலைப் பகுதியைச் சுற்றிப் பார்த்த நேரத்தில்—the place must be thought of'f—அந்த இடத்தை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று அதிகாரிகளுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியைப் பார்வையிட்டு, அந்தப் பகுதியை, சுற்றுலாத் தலமாக ஆக்குவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேகமலையை, வருங்காலத்தில் நிதிநிலையைப்



பொறுத்து, சுற்றுலாத் தலமாக ஆக்கக்கூடிய முயற்சியில் இந்த அரசு ஈடுபடும் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *320*, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**320--**

### மீன்பிடித் துறைமுகத்தை விரிவுபடுத்துதல்

*9592--**திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள பழையாறு மீன்பிடித் துறைமுகக் கட்டடம் இடிந்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாகச் சீர் செய்யவும், விரிவாக்கவும் அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பழையாறு மீன்பிடித் துறைமுக வளாகத்தில் ஏலக்கூடம் பழுதடைந்துள்ளது. இதனைச் சீர் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் உள்ள ஏலக்கூடம் இடிந்து விட்டதை இந்த அரசு ஏற்று நடத்துவதற்காகப் பணியைத் தொடங்க இருப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, அந்த ஏலக்கூடத்தை ஒட்டியுள்ள, கடல் அரிப்பைத் தடுப்பதற்காக கட்டப்பட்டிருந்த தடுப்புச் சுவர் இடிந்து விட்டது; அதையும் கட்டித் தருவார்களா; இந்த ஆண்டு அந்தப் பணிக்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது; இந்த ஆண்டிலேயே பணி தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[1998 ஏப்ரல் 23

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழையாறு மீன்பிடித் துறைமுகம் பழுதடைந்த நிலையில், மீன் துறை ஆணையரிடமிருந்து 1997-98 ஆம் ஆண்டு 16 இலட்சம் ரூபாய் கோரப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 8 இலட்சம் ரூபாய் வழங்கி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில உள்ள மண்மேடுகள் எல்லாம் நீக்கப்பட்டுள்ளன. வரும் நிதிநிலை ஆண்டில் மேலும் 8 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து மீன் ஏலக்கூடங்கள் எல்லாம் பழுது பார்க்கப்படும். மேலும், கடல் அரிப்பின் காரணமாக உள்ள பாதிப்பை நீக்கும் பொறுப்பு பொதுப்பணித் துறையைச் சார்ந்தது. ஆகவே, அந்தக் கேள்வியை பொதுப்பணித் துறைக்குப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### கோவை குண்டு வெடிப்பு சம்பந்தமாக அரசின் வெள்ளை அறிக்கையின்மீது விவாதிக்க நாள் குறிப்பிடுதல்

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of clarification on White Paper.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

முற்பகல் 10-25

***திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் குண்டுவெடிப்பு குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இங்கே ஒரு வெள்ளை அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது. இந்த வெள்ளை அறிக்கையின் 2.10 பிரிவில் 1995 ஆம் ஆண்டு....



1998 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்லி முடித்து விடுகிறேன். உட்காருங்கள். அப்புறம் நீங்கள் பேசுங்கள். வெள்ளை அறிக்கை வைத்தாகிவிட்டது. அதில் விவாதம் வேண்டுமானால் தனி நேரம் ஒதுக்கி, எல்லா உறுப்பினர்களுக்கும் பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும். உங்களுக்கு மட்டும் அனுமதி கொடுத்தால் அது முறையாக இருக்காது.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளை அறிக்கையின்மீது ஒரு விவாதம் நடத்த வேண்டும் என்பதும் என்னுடைய கருத்து. அதற்கிடையில், வெள்ளை அறிக்கையில் தந்திருக்கிற ஒரு விஷயம் குறித்து நான் விளக்கம் பெற விரும்புகிறேன். இதில் இந்தச் சம்பவத்தைப் பற்றி அறிந்து ஆராய அப்போதைய மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. சிக்கந்தர் பக்த் அவர்கள் தலைமையில், திரு. ஜே.பி. மாத்தூர் (மாநிலங்களவை உறுப்பினர்), திருமதி சுஷ்மா ஸ்வராஜ் (மாநிலங்களவை உறுப்பினர்), திரு. தனஞ்ஜயகுமார் (நாடாளுமன்ற உறுப்பினர்), திரு. ஓ. ராஜகோபால் (மாநிலங்களவை உறுப்பினர்) ஆகிய அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை, நாடாளுமன்றத்தின் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. வாஜ்பாய் அவர்கள் அனுப்பி வைத்தார்கள்.

'அக்குழு, 29 மற்றும் 30-7-1995 ஆகிய நாட்களில் சென்னையில் ஆய்வு நடத்தி, அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது' என்று வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் கேட்க விரும்புவது, அந்த அறிக்கை மாநில அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறதா, மத்திய அரசுக்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறதா அல்லது பாரதிய ஜனதாக் கட்சி அனுப்பிய குழு என்ற முறையில் அந்தக் கட்சி அந்த அறிக்கையை வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அந்த அறிக்கையைப் பெற்று, அந்த அறிக்கையையும் இந்த வெள்ளை அறிக்கையோடு இணைத்து பேரவைமுன் வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புவதோடு, இந்த அறிக்கை குறித்து ஒருநாள் ஒரு விசேட விவாதம் நடத்த வேண்டுமென்பதையும் நான் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[1998 ஏப்ரல் 23

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினைக்கு நான் தருகின்ற விளக்கம்-இதைப்பற்றி ஒரு அறிக்கை, வெள்ளை அறிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கும்போது, அதிலே அவர்கள் குறிப்பிட்டுள்ள பாராளுமன்றக் குழு, அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. வாஜ்பாய் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட அந்தக் குழு, 29 மற்றும் 30-7-1995 ஆகிய நாட்களில் சென்னையிலே ஆய்வு நடத்தித் தெரிவித்த அறிக்கையைப்பற்றி விவரத்தைக் கேட்கிறார்கள். அந்த அறிக்கையை அவர்கள் யாரிடத்தில் தந்தார்கள் என்ற விவரங்கள் என்னிடத்திலே இல்லை. ஆனால் அந்த அறிக்கையினுடைய நகல் இந்த அரசுக்குக் கிடைத்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதித்தால், மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்களுக்கு வழங்கத் தயாராக இருக்கின்றேன். அல்லது எல்லா உறுப்பினர்களுக்கும் இது அளிக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆணையிடுவார்களேயானால், அதையும் தருவதற்கு நான் சித்தமாக இருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அறிக்கை யாருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது என்பது அல்ல. இது அப்போதே பத்திரிகைகளிலே வெளிவந்த செய்திதான். அதனுடைய முழுவிவரம்தான் இன்றைக்கு என்னிடத்திலே இருக்கிறது. தாங்கள் ஆணையிட்டால் அதைத் தரத் தயாராக இருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த அறிக்கையின் நகல் எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். விவாதத்தைப் பொறுத்தவரையில், அலுவல் ஆயவுக் குழுவைக் கூட்டித்தான் என்னால் முடிவெடுக்க முடியும். காரணம், அடுத்த மாத இறுதி வரை, அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யப்பட்ட அட்டவணையைத்தான் நான் அவைக்கு அறிவித்திருக்கிறேன். இடையிலே ஒரு நாளோ, அரை நாளோ விவாதம் என்று இருந்தால்கூட, அந்த அட்டவணை மாற்றப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, அலுவல் ஆய்வுக் குழுவிலே வைத்து, விவாதம்



ஒன்றை இதில் வைத்துக்கொள்ளலாமா, எப்போது வைத்துக் கொள்ளலாம் என்ற முடிவைப் பின்னால் அறிவிப்பேன்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) சந்தனமரக் கடத்தல் வீரப்பனின் கூட்டாளிகள் கைது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்தபடியாக, சந்தனமரக் கடத்தல் வீரப்பனின் கூட்டாளிகள் கைதானது குறித்து, ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. வை. சிவபுண்ணியம் ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. ஜி. நிஜாமுதீன், திரு. ஐ. கணேசன், திரு. பி.ஆர். சுந்தரம் ஆகியோரும் அவையில் எழுப்ப அனுமதி கோரியிருக்கிறார்கள். எல்லாவற்றையும் சிறப்புக் கவன ஈர்ப்பாக அனுமதித்து, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், சுருக்கமாகப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முதலில் திரு. ஞானசேகரன் அவர்களை அழைக்கின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனமரக் கடத்தல் வீரப்பன், கடந்த ஆட்சியிலும் கைது செய்யப்படவில்லை. இந்த ஆட்சி அமைந்த பின்னாலும் இன்னும் கைது செய்யப்படாமல் இருக்கக்கூடிய சூழ்நிலையில், வீரப்பனுடைய கூட்டாளிகள் மூன்று பேர் சென்னைக்கு வந்து, சரணடைந்திருக்கிறார்கள். சரணடைந்தபோதே ஓர் ஒலிநாடாவை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அனுப்பி வைத்ததாகவும், அதிலே சந்தனமரக் கடத்தல் வீரப்பன் சரணடைவதற்குத் தயார் என்ற தகவலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பியதாகவும் செய்திகள் வந்தன. அதற்குப் பிறகு ஏற்கெனவே சரணடையக்கூடிய அளவுக்குத் தன்னுடைய உள்ளத்தை மாற்றிக்கொண்ட அந்த சந்தனமரக் கடத்தல் வீரப்பன் பின்னாலே நம்முடைய அதிரடிப்படையோடு சண்டையிட்டு அவனுடைய கூட்டாளிகள் 5 பேர் இப்போது கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-30

ஆகவே, சந்தனமரக் கடத்தல் வீரப்பனை நம்பவே முடியவில்லை. அவன் உண்மையிலேயே சரணடைவதற்குத் தயாராக இருக்கிறானா அல்லது நமது அதிரடிப்படையோடு அடிக்கடி மோதுவதற்குத் தயாராக இருக்கிறானா என்பதும் புரியவில்லை. காரணம், இப்போது

தீவிரவாதத்தை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கிக் கொண்டிருக்கிற காவல் துறை, சந்தன மரக் கடத்தல் வீரப்பன் விஷயத்தில் மட்டும் கொஞ்சம், அவன் பெயரிலே வீரம் இருக்கிற காரணத்தினாலோ என்னவோ, இன்னும் அவனைப் பிடிக்க முடியாமல் இருக்கிறது. அதற்காக அடிக்கடி திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. பிறகு, ஏதோ சில சென்சிட்டிவ் சப்ஜெக்ட்ஸ் வந்த பின்னால் அது தனியாக ஓரம் கட்டப்பட்டு விடுகிறது. இப்போதிருக்கும் இந்தத் தீவிரவாதம், வெடிகுண்டு இவைகளெல்லாம் வந்த பிறகு வீரப்பனுடைய விஷயம் அப்படியே அடங்கிவிட்டது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வீரப்பன் விஷயத்திலேயும் கொஞ்சம் அக்கறை எடுத்து உடனடியாக ஆவன செய்ய வேண்டும். ஏற்கெனவே அவன் சரணடையக்கூடிய நிலைக்கு வந்து விட்டான் என்கிற ஒரு செய்தி இருக்கிறது. இன்னொரு செய்தி, அதிரடிப்படையோடு மோதல் என்கின்ற ஒரு செய்தி. எப்படியிருந்தாலும், ஒன்று மோதியாவது பிடியுங்கள் அல்லது சரணடைந்தால் அவனைத் தாராளமாக ஏற்றுக்கொண்டு அவனைச் சிறையிலே அடையுங்கள்.

இதற்கு மத்தியிலே, இப்போது கர்நாடகத்தினுடைய மேலவையிலேகூட, இந்த விவாதம் எழுப்பப்பட்டிருக்கிறது. அங்கே சொல்கிறபோது, ஏற்கெனவே அவன் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தனியாக அந்த ஒலிநாடாவை அனுப்பியதில், சந்தனமரக் கடத்தல் வீரப்பன், 'எந்தவிதமான நிபந்தனைகளும் இல்லாமல் நான் சரணடைவதற்குத் தயார்' என்று ஏற்கெனவே அந்த ஒலிநாடாவிலே சொல்லி, தகவலை அனுப்பியதாக இங்கே செய்திகள் வந்திருக்கின்றன. ஏற்கெனவே கர்நாடக மாநில மேல் சபையிலே விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே இருக்கக்கூடிய உள்துறை அமைச்சர் மாண்புமிகு ரோஷன் பெய்க் அவர்கள் சொல்லுகிறபோது........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அவர்கள் சொல்கிறபோது, 'சந்தனமரக் கடத்தல் வீரப்பன் 'டைமை கெயின்' செய்வதற்காகவும், நாட்களை கடத்துவதற்காகவும், அரசாங்கத்தின் கவனத்தைத் திருப்புவதற்காகவும்தான் இந்த சரணடையக்கூடிய நாடகத்தை ஆடிக் கொண்டிருக்கிறான்' என்ற ஒரு விளக்கத்தை அங்கே



அளித்திருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள், அது நாடகமா, ஒலிநாடாவிலே வந்த விஷயம் என்ன, அவன் எப்போது சரணடைவான் அல்லது நம்முடைய அதிரடிப்படை எப்போது அவனைக் கைது செய்ய இருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனமரக் கடத்தல் வீரப்பனைப் பற்றி சிறிது காலமாகவே இந்த அவையிலே நாம் பேசாமலிருந்தோம். மீண்டும் விவாதிக்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அது கிடப்பிலே போடப்பட்டிருந்த நிகழ்ச்சியைப் போல இருந்து திரும்பவும் வந்திருக்கிறது. ஆகவே, சரணடைகிறேன், சரணடைகிறேன் என்று சொல்லி நம்முடைய 2 மாநில அரசாங்கங்களையும் ஏமாற்றுகிற நிகழ்ச்சியிலே வீரப்பன் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறான். ஆனால், சமீபத்திலே அவனுடைய கூட்டாளிகள் 5 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. சத்தியமங்கலம் பகுதியிலே கோவில் திருவிழாவுக்கு வந்தபோது அங்கே நம்முடைய அதிரடிப்படையினருக்கும், அவர்களுக்குமிடையே துப்பாக்கிச் சண்டை நடந்து, அதிலே மறைந்திருந்து தாக்கிய 5 பேர்களும் கைது செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. பத்திரிகைகளிலே செய்திகள் வந்திருப்பதிலே, அந்தத் துப்பாக்கித் தோட்டாக்கள் பெரிய அளவிலே இருந்ததாகவும், அவை எங்கிருந்து அவர்களுக்குக் கிடைத்தன என்பது பற்றிய ஒரு அச்சத்தை, சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறார்கள். ஆகவே, அவை எங்கிருந்து அவர்களுக்கு வழங்கப்படுகின்றன என்ற ஒரு அச்சம் இருக்கிறது. இன்னும் பல்வேறு அச்சங்களையும் வெளிப்படுத்துவதற்கான சூழ்நிலைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, அவர்கள் திருவிழாவுக்கு வருவதும், மற்ற காரியங்களிலே ஈடுபடுவதுமாக இப்படிப்பட்ட செயல்களைச் செய்துக் கொண்டிருக்கிறார்கள். இவற்றை நாம் உடனடியாகக் கவனித்து, இந்த மாதிரியான விரும்பத்தகாத நடவடிக்கைகளுக்கு முடிவு கட்டுகின்ற வகையில், விரைவாக அவனைக் கைது செய்வதற்கு அரசு முயற்சி மேற்கொள்ளுமா? அதேபோல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒலிநாடா வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதிலே

குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிற விவரங்களின் அடிப்படையில் நடவடிக்கை ஏதாவது மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா? முன்னதாக நக்கீரன் கோபால் சென்று வந்தார். இப்போது நெற்றிக்கண் மணி அவர்கள் சென்று வந்திருக்கிறார். அவர்கள் சென்று வருவது, மேலும் அவர்களுக்கு இப்படிப்பட்ட வாய்ப்புகள் ஏற்பட்டுக்கொண்டே இருப்பது, நம்முடைய அரசு நிர்வாகத்திற்குப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இந்தக் காரணங்களினாலே மலைப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக, அந்த மலைப்பகுதியிலே வாழுகிற மக்கள் இதன்காரணமாக கர்நாடக மாநிலப் போலீசாரால் கைது செய்யப்பட்டு கர்நாடக மாநில சிறைச்சாலைகளிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். நூற்றுக் கணக்கானவர்கள் சிறைச்சாலைகளிலே இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அப்பாவிப் பழங்குடி மக்களை விடுதலை (மணியடிக்கப்பெற்றது) செய்வதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதுபற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும் கருத்துச் சொல்லப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்களை விடுதலை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

***திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சந்தனக் கடத்தல் வீரப்பன், தமிழகத்தையும், கர்நாடகத்தையும் மட்டுமல்லாமல், இந்தத் தேசத்தின் பாதுகாப்பையே ஒரு கேலிக்கூத்தான நிலைக்கு உள்ளாக்கிக்கொண்டிருக்கிறான். அடிக்கடி அவன், அதிரடிப்படை மற்றும் காவல் துறையின் நெருக்குதல் அதிகரிக்கும்போது, 'சரண் அடைகிறேன், பேச்சு வார்த்தைக்கு வருகிறேன்' என்று காவல் துறையின் கவனத்தைத் திருப்பி, அதன்மூலமாக, தன்னைப் பலப்படுத்திக்கொள்ளவும், அவனுக்குத் தேவையானவற்றை சேமித்துக் கொள்வதற்காகவும், இந்த நிலையைப் பயன்படுத்துகிறான். இந்த நிலை, இன்றல்ல, நேற்றல்ல, எப்போதும் தொடர்ந்திருக்கின்ற நிலையாக இருந்து கொண்டிருக்கிறது. சமீபத்தில் நம்முடைய தமிழக அதிரடிப்படையினரின் மிகுந்த வேகத்துடன் கூடிய செயல்பாட்டினால், கலக்கமுற்று, அவன் 3 பேர்களைச் சரண் அடையச் செய்து, அதன்மூலம் திசைத் திருப்ப நினைத்த நேரத்திலே, தமிழகக் காவல் துறையினர், அவர்களில் 5 பேர்களை



மிகுந்த திறமையாகச் சென்று கைது செய்திருக்கிறார்கள். இப்படி ஒவ்வொருவராகக் கைது செய்யப்படுகிற நிலையிலே, சுற்றிலும் அதிரடிப்படை சுற்றித் திரிகிற நேரத்திலும், ஆயுதங்களும், தோட்டாக்களும் அவனுக்குச் சென்று கொண்டுதான் இருக்கின்றன; உணவுப் பொருட்களும் சென்று கொண்டுதான் இருக்கின்றன. இதை ஏன் நமது இரு மாநில அரசுகளால், கண்டுபிடித்து, ஒழுங்கு நடவடிக்கை எடுத்துத் தடுக்க முடியவில்லை என்பது வியப்புக்குரிய ஒன்றாக இருக்கிறது. ஆகவே, மேலும் பாதுகாப்பையும், சோதனைச் சாவடிகளையும் பலப்படுத்தி, அவனை விரைவில் பிடித்து, நமக்கு ஏற்பட்டு இருக்கிற சவாலைப் போக்கும் வகையில், இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 'வீரப்பன் இப்போது திருந்தியுள்ளான்' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு கேசட், நெற்றிக்கண் ஆசிரியர் திரு. மணி மூலமாக வந்ததாகச் சொல்லப்படுகிறது. அவன் திருந்துவதாக, நாடகம் ஆடுவதாக கர்நாடக மேல்சபையில், அந்த மாநிலத்தினுடைய போலீஸ் அமைச்சரே சொல்கிறார். இந்தக் கேசட்டினுடைய பிரதி அந்த மாநிலப் போலீஸ் அமைச்சருக்குப் போட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளதா? அந்தக் கேசட்டில் என்ன விவரங்களை அவன் கூறியிருக்கின்றான்? நெற்றிக்கண் ஆசிரியரும், நக்கீரன் ஆசிரியர் கோபால் அவர்களும் அங்கு போய் அவனைச் சந்திக்கிற அளவிலே இருக்கிறது. ஆனால் நம்முடைய காவல் துறை ஏன் அங்கு போக முடியவில்லை? இல்லையென்றால், போனவர்களிடம் கேட்டு, எந்தப் பாதை, என்ன, ஏது, எப்படிப் போகலாம் என்று கேட்டு, ஒரு ஆய்வு நடத்தி, அங்கு போய் அவனைப் பிடிப்பதற்கு நீங்கள் ஏதாவது முயற்சி செய்து இருக்கிறீர்களா என்று இந்த நேரத்தில் அறிய ஆசைப்படுகிறேன். கர்நாடக அரசுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் வீரப்பனைப் பிடிப்பதில் ஏதாவது ஒரு நல்ல உடன்பாடு இருக்கிறதா? சமீபகாலத்தில் சந்தேகப்படுகிற அளவில் அது இருக்கிறது. பிடிபட்ட இந்த வீரப்பனுடைய ஆட்கள் உண்மையான ஆட்களா என்பது தெரியவில்லை. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். தமிழ்நாட்டிலே, 'அவர்கள் உண்மையான ஆட்கள்

கிடையாது, கோயம்புத்தூர் குண்டு வெடிப்பை மறைப்பதற்காக இந்த மாதிரி வீரப்பன் விவகாரம் சட்டசபை கூடும்போதெல்லாம் எப்போதும் வரும், இப்போதும் இந்தப் பிரச்சினையை கிளப்புகிறார்கள்' என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு) வெளியே பேசுகிறார்கள் முதல்வர் அவர்களே, அந்தமாதிரிதான் சொல்கிறார்கள். குண்டுவெடிப்பை மறைப்பதற்காக வீரப்பனை திடீரென்று ஒரு சினிமா மாதிரிக் காட்டுகிறார்கள். பத்திரிகையில் எல்லாம் வருகிறது என்று சொல்கிறார்கள். பிடிபட்டவர்கள், சரண் அடைந்தவர்கள் வேறு ஆட்கள், இவர்கள் உண்மையான ஆட்கள் கிடையாது என்று பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள். அதனால் எது உண்மையென்று ஒன்றுமே தெரியவில்லை. ஆகவே, வீரப்பனைப் பிடிப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு என்ன செய்து இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வீரப்பனைச் சரண் அடைய வைக்க வேண்டும். வீரப்பன் இந்த நாட்டினுடைய சமுதாய விரோதி என்பதைப் போன்று பலர் பலவிதமாக இங்கே பேசினார்கள். நான் ஒரு உண்மையான கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். வீரப்பன் சிறு வயதாக, 10 வயதுப் பையனாக காட்டுக்குள் சென்றான். அவன் ஒரு ஏழை மரவெட்டியினுடைய மகனாகக் காட்டுக்குள் சென்றான். (சிரிப்பு) பல்வேறு சூழ்நிலையின் காரணமாக-மரவெட்டியினுடைய பையன் என்பது கேவலம் இல்லை. கொள்ளைக் கூட்டத்தினுடைய கூட்டாளி என்றால் கேவலம். (குறுக்கீடு) ஒரு ஏழையைப் பற்றிச் சொல்வது தவறு அல்ல.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானையைப் பார்க்காத 4 குருடர்களுடைய கதை. தமிழ்நாட்டிற்கு மெத்தப் பொருந்தக்கூடிய அழகான ஒரு கதை; தமிழர்கள் உணர்ந்த கதை. அதைப்போல வீரப்பனை அறியாதவர்கள்,





வீரப்பனைப் பற்றி விமர்சனம் செய்வது, யானையைப் பற்றி 4 குருடர்கள் சொன்ன விமர்சனம் போன்றது; விளக்கத்தைப் போன்றது. வீரப்பன், எத்தனையோ காலகட்டங்களிலே தமிழர்களுக்குப் பலவகையிலே உதவி இருக்கின்றான். அவன் சம்பாதிக்க வேண்டும் என்றால், சம்பாதித்து இருக்கலாம். காவிரிப் பிரச்சினையின்போது, தமிழர்களை அடித்து கர்நாடகத்துக்காரன் விரட்டியபோது, அந்தத் தமிழர்களை தமிழ்நாட்டு எல்லைவரை கொண்டு வந்து சேர்த்தவன் வீரப்பன் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. மறந்தால் நன்றி கெட்டவர்களாக ஆவோம் என்பதை மட்டும் இந்தநேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பன் கோடிக் கணக்கான பணத்தைச் சம்பாதித்து கோடீஸ்வரனாக ஆக வேண்டும் என்று ஆசைப்படாதவன். அவன் ஒரு ஏழையாக வாழ்ந்து கொண்டிருப்பவன். அவனுடைய உற்றார், உறவினர்களை, இந்த அவையிலே இருப்பவர்கள் நோக்கிப் பார்ப்பீர்களானால், உங்களுக்குத் தெரியும். எல்லோரும் ஒருவேளைச் சோற்றுக்காக தினசரி கூலிவேலை செய்யக்கூடியவர்கள்தான். அவன் சந்தனமரத்தை விற்றோ, யானைகளைக் கொன்றோ, கோடி கோடியாகச் சம்பாதித்து, மாட மாளிகைகளை, கூடகோபுரங்களை நூற்றுக்கணக்கான பங்களாக்களை வாங்க வேண்டும் என்று திட்டமிடாதவன்.

**திரு. ச. அழகிரி:** பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், ஒரு நிமிடம் உட்காருங்கள். திரு. அழகிரி, என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர், சொல்லுங்கள்.

**திரு. ச. அழகிரி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பெரிய கிரிமினல் குற்றவாளி, ஒரு கொலைகாரன், ஒரு கொள்ளைக்காரனைப் பற்றி இந்தப் பேரவையிலே பாராட்டிப் பேசுவது தேவைதானா என்று உங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ஜனநாயகம். அது அவருடைய கருத்து. அதை நீங்கள் தடுக்கக்கூடாது. கணேசன், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

[1998 ஏப்ரல் 23

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகச் செம்மல், ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள், (சிரிப்பு)-நீங்கள் எங்கேயோ போகிறீர்கள்-தியாகச் செம்மல், ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள், பூலான்தேவிக்கு மன்னிப்பு அளித்தது எந்தவகையிலே நியாயமோ, அதைப்போன்று, வீரப்பனுக்கு பொது மன்னிப்பு அளிப்பது மாபெரும் தவறல்ல. 'நான் திருந்திவிட்டேன், எனக்கு மன்னிப்பு அளியுங்கள், பொது மன்னிப்பு அளியுங்கள்' என்று கேட்கிறான். நான், ஒரு குற்றவாளிக்காக வாதாடவில்லை. ஏற்கெனவே இந்தியச் சுதந்திர நாட்டில், பூலான்தேவி போன்றவர்களுக்குப் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால், கருணை உள்ளம் கொண்ட கலைஞர் அவர்களை முழுமையாக வீரப்பன் நம்புகிறான்.

இங்கே பேசிய ஞானசேகரன் அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள், வீரம் பெயரிலே இருப்பதால், அவன் தப்பித்து விடுகிறானா என்று. ஒரு வீரத் தமிழனாக வீரப்பன் இருப்பதால், நான் முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவருக்கு முடிந்தால் பொது மன்னிப்பு அளியுங்கள் என்று கேட்டுக்கொண்டு, திருந்தியவனுக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளியுங்கள் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அவன் பெயரைச் சொல்லி அவனுடைய உற்றார் உறவினர்கள் கிராமப்பகுதியிலே ஆயிரக்கணக்கான பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் கர்நாடகத்திலே அவர்கள் அடிபட்டு, உதைபட்டு, சித்திரவதைப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் விடுதலை செய்ய தமிழக அரசு முன்வரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர்கள் பட்டியலில் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய பெயரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனக் கடத்தல் வீரப்பனைப்பற்றி, ஏறத்தாழ ஒரு பட்டிமன்றமே இங்கே நடைபெற்றிருக்கின்றது. பட்டிமன்றம்



என்றால், எப்போதுமே ஒவ்வொரு அணியிலும் இங்கே 3 பேர் இருந்தால், இன்னொரு பக்கத்திலே 3 பேர் இருப்பார்கள். ஆனால் இந்தப் பட்டிமன்றத்தில் விசித்திரம் என்னவென்றால், எல்லோரும் ஒரு பக்கம், நம்முடைய நண்பர் கணேசன் இன்னொரு பக்கம். அவருடைய பெயரே கணேசன் என்று இருப்பதால் அந்த வெயிட்டே போதும் என்ற அளவில், அவர்கள் வீரப்பனுக்காக இங்கே வாதாடி இருக்கின்றார்கள்.

இந்தப் பிரச்சினை குறித்து தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஞானசேகரன் அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்களும், இந்திய தேசிய லீக் உறுப்பினர் நிஜாமுதீன் அவர்களும், அ.இ.அ.தி.மு.க-வினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் தாமரைக்கனி அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சி-1-ன் சட்டமன்றக் கட்சித் தலைவர் கணேசன் அவர்களும் பல கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

முற்பகல் 10-45

பல ஆண்டுக்காலமாக கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு ஆகிய இரண்டு மாநிலங்களுடைய எல்லைக்குட்பட்ட மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் கொலை வழக்குகளிலும், யானைகளைக் கொன்று தந்தங்கள் திருடிய வழக்குகளிலும், சந்தனக் கட்டைகளைக் கடத்திய வழக்குகளிலும், காவல்துறையினர், வன இலாகாவினர் மற்றும் பொது மக்களைப் பிணைக் கைதிகளாகக் கடத்திச் சென்ற வழக்குகளிலும் சம்பந்தப்பட்ட வீரப்பனோடு பேசி, கடந்த பல ஆண்டுக்காலமாக தமிழகத்திலே அமைந்த அரசுகளானாலும் அல்லது கர்நாடகத்திலே அமைந்த அரசுகளானாலும் வீரப்பனைப் பிடிக்க இயலவில்லை என்ற ஒரு நிலை ஏற்பட்ட அந்தச் சூழ்நிலையில் கர்நாடக மாநிலத்து அதிகாரிகள் பலரை வீரப்பன் கடந்த ஆண்டில் கடத்திச் சென்று, அவர்களுடைய உயிருக்கு ஆபத்து விளையும் என்கின்ற ஓர் அச்சம் தோன்றிய அந்தச் சூழ்நிலையில், கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்கள் என்னோடு தொடர்புகொண்டு, இரு அரசுகளும் சேர்ந்து எடுத்து வருகின்ற தொடர் முயற்சியை மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என்று இருவரும் எடுத்த முடிவுகளுக்கேற்ப, அதற்கு உதவியாக நக்கீரன் பத்திரிகையினுடைய ஆசிரியர் கோபால் அவர்கள் காட்டுப் பகுதிக்குச் சென்று, வீரப்பனைச் சந்திக்கின்ற வாய்ப்பைப்

பெற்று, வீரப்பன் சரணடைவதற்குத் தயாராக இருப்பதாகவும், பொது மன்னிப்பு வேண்டும் என்று கோரியதையும் எடுத்துச் சொன்னார்.

அதன் பிறகும்கூட, நானும், கர்நாடக முதல்வரும் கலந்து பேசி, சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, வீரப்பன் சரணடைந்தால் அப்போதும் உடனடியாக பொது மன்னிப்பு என்று தர இயலாது; சட்டப்படி நடைபெற வேண்டிய காரியங்கள் எல்லாம் நடைபெற்று, அவர் கோருவதுபோல் அவருடைய உற்றார், உறவினர், சுற்றத்தாருக்கு எல்லாம் எந்தவிதமான பழி வாங்குகிற நிலையிலேயும் பாதிப்பு ஏற்படாவண்ணம் இரு அரசுகளும் பார்த்துக்கொள்ளும் என்றும், இந்த வழக்குகளை எல்லாம் கர்நாடக மாநிலத்திலே விசாரிக்காமல், தமிழ்நாட்டிலே உள்ள நீதிமன்றங்களிலே விசாரிப்பதற்கு ஏற்றுக்கொண்டும், இவைகளுக்கு எல்லாம் கட்டுப்பட்டு வீரப்பன் சரணடைய வேண்டும், ஒரு பொது இடத்திலே என் முன்னிலையிலும், கர்நாடக முதல்வர் முன்னிலையிலும் என்றெல்லாம் சொல்லி அனுப்பப்பட்டு, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியதைப்போல 2, 3 முறை அதற்கு ஒப்புதல் அளித்த வீரப்பன், இறுதியாக வேறு சில புதிய நிபந்தனைகளைப் போட்டு, சரணடைய மறுத்துவிட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் இந்த அவைக்கு மிக நன்றாகத் தெரியும். எனினும், கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் வீரப்பனும், அவனுடைய கூட்டாளிகளும் எந்த வன்முறைகளிலும் ஈடுபடவில்லை என்பதை எல்லோரும் அறிவீர்கள். காரணம், இடையில் நக்கீரன் கோபால் மூலமாக நடைபெற்ற அந்தப் பேச்சு வார்த்தை. அது முறிந்த பிறகு, கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு கூட்டுச் சிறப்பு அதிரடிப் படையினர் மேற்குத் தொடர்ச்சி மலையின் உள்ளே பல பகுதிகளில் கிராமப் பாதுகாப்புக் குழுக்களை அமைத்து மக்களின் ஒத்துழைப்போடு வீரப்பன் மற்றும் கூட்டாளிகளைத் தேடும் பணியிலே ஈடுபட்டனர் என்றால் அது மிகையாகாது. அடர்ந்த காட்டுப் பகுதியிலே உள்ள பல்வேறு கிராமங்களுக்கு இரு மாநில சிறப்பு அதிரடிப் படையினுடைய தலைவராக நியமனம் செய்யப்பெற்ற திரு. காளிமுத்து, ஐ.பி.எஸ்., 75 நாட்களுக்கு மேல் காட்டிலேயே தங்கி அங்குள்ள மக்களையெல்லாம் சந்தித்து, அவர்களிடத்திலே கலந்துபேசி ஒரு பெரிய மனமாற்றத்தை அந்த மக்களிடத்திலே உருவாக்கியிருக்கிறார். அந்தப் பகுதி மக்களின் ஒத்துழைப்போடு சந்தனக் கடத்தல் வீரப்பனையும், அந்தக் கும்பலையும் கைது செய்ய வேண்டும் அல்லது சரணடையச்



செய்ய வேண்டும் என்று அதிரடிப் படையினர் மும்முரமாக உழைத்து வருகின்றார்கள். இதற்கிடையிலேதான் நெற்றிக்கண் மணி என்கின்ற இன்னொரு பத்திரிகை ஆசிரியர் மூலமாக வீரப்பனுடைய கூட்டாளிகள் அன்புராஜ், அப்புசாமி, தங்கபையன் என்ற மூவரும் சரணடைந்தார்கள். அவர்கள் சென்னையிலே வந்து, காவல் துறை ஆணையர் முன்னிலையிலே சரணடைந்தார்கள். அவர்கள் மூலமாக ஒரு ஒலி நாடா, ஒளி நாடா கொடுத்து அனுப்பப்பட்டிருந்தன. அந்த ஒலி நாடா, ஒளி நாடா இரண்டும் முழுமையானவைகளாக இல்லை. எப்படி முழுமையானவைகளாக இல்லாமல் போய்விட்டது என்பது எனக்கும் தெரியவில்லை. ஆனால் அதிலே இருந்த விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போலத்தான், 'சரணடையத் தயாராக இருக்கிறேன்' என்கின்ற வாசகம் அமைந்ததாக இல்லை.

முற்பகல் 10–50

அதிலே இருந்தது எல்லாம், 'இந்த மூவரையும் அனுப்பியிருக்கின்றேன்; இந்த மூவரையும் எப்படித் தமிழக அரசு நடத்தப் போகிறது என்பதை பார்த்துக்கொண்டிருக்கின்றேன். அவர்களைச் சரியாக நடத்தாவிட்டால் பழி வாங்குவேன்' என்பது போன்ற இந்த வாசகங்கள்தான் அதிலே அமைந்திருந்தன. வேறு விவரங்கள் அதிலே இல்லை. இருந்தபோதிலும் அவர்கள் மூவரும் தானாக வந்து சரண் அடைந்ததை உடனடியாக கர்நாடக மாநில அரசுக்குத் தெரிவித்து, அந்த மாநில அரசினுடைய காவல் துறையினரும் உடனடியாக சென்னைக்கு வந்து, இங்குள்ள காவல் துறை உயர் அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றார்கள். அதற்குப்பிறகு, இப்போது வீரப்பனுடைய கூட்டாளிகளாக இருந்த துப்பாக்கிச் சித்தன், அவரது மனைவி கும்பி மற்றும் கூட்டாளிகளான துப்பாக்கிச் சித்தனுடைய தம்பி மகாதேவன், ஜாக்கையன், சுரேஷ் மற்றும் ஜெயராமன் ஆகியோர் கடந்த சில நாட்களில் சத்தியமங்கலம், ஆசனூர், தாளவாடிப் பகுதிகளிலே, கடைமடைப் பகுதிகளிலே தற்காலிகமாக தனியாகப் பிரிந்து சென்று தலைமறைவாக இருந்து வந்தார்கள். அவர்கள் அப்பகுதியிலே சுற்றித் திரிவதை அறிந்த அதிரடிப் படையினர் 19-4-1998 அன்று காட்டிற்குள்ளே சென்று மேற்கண்டவர்களைச் சுற்றி வளைத்தபோது, அவர்கள் சிறப்பு அதிரடிப் படையினரை

நோக்கி துப்பாக்கியால் சுட்டார்கள். அதிரடிப் படையினரும் தற்காப்புக்காகத் திருப்பிச் சுட்டார்கள். அதனால் யாருக்கும் காயம் இல்லை. அதிரடிப் படையினர் சாமர்த்தியமாக எதிர்கொண்டு அவர்களைச் சரண் அடையுமாறு எச்சரித்து, அவர்களைச் சுற்றி வளைத்தபோது, துப்பாக்கிச் சித்தன் தப்பி ஓடிவிட்டான். அவனது சகாக்களான மகாதேவன், கும்பி என்ற சிக்குமடை என்ற பெண்மணி, ஜாக்கையன், சுரேஷ், ஜெயராமன் ஆகியோர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்களிடமிருந்து இரண்டு நாட்டுத் துப்பாக்கிகள் உள்ளிட்ட வெடிமருந்துப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள வீரப்பனும், அவனது கூட்டாளிகளும், கூட்டு அதிரடிப் படையினரிடமிருந்து தப்பி ஓடிவிட்டார்கள். இதுதான் இதுவரை நடைபெற்றுள்ள நிகழ்ச்சியாகும்.

இதிலே, அவர்கள் நாடகமாடுகிறார்களா, இல்லையா என்பதெல்லாம் நாடறிந்த விஷயம். நான்கு அல்லது ஐந்து முறை சரண் அடைவதாகத் தூது அனுப்பியும்கூட, அதற்கான நிபந்தனைகளையெல்லாம் விதித்தபிறகு, கடைசியாக மறுத்து விடுவது வீரப்பனுக்கு வாடிக்கையாக இருந்து வருகிறது. பொது மன்னிப்பு என்பது இயலாத ஒன்று. ஜெயப்பிரகாஷ் நாராயண் முன்னிலையில் சம்பல் பள்ளத்தாக்கிலே உள்ள அந்த முரட்டுத் தலைவர்கள், தீவிரவாதிகள், கொள்ளைக்காரர்கள், அவர்கள் எல்லாம் எப்படிச் சரண் அடைந்தார்கள், பொது மன்னிப்பு அளிக்கப்பட்டது என்று நம்முடைய கணேசன் குறிப்பிட்டார். யாருக்கும் பொது மன்னிப்பு அளிக்கப்படவில்லை.

பூலான்தேவிக்குக்கூட பொது மன்னிப்பு அளிக்கப்பட்டு, மறுநாளே அவர் நாட்டிலே உலாவத் தொடங்கவில்லை. அவர்கள்கூட, கொஞ்ச காலம் சிறையிலே இருந்துதான், அதற்கு விசாரணை எல்லாம் நடைபெற்றுத்தான் ஒரு 3, 4 ஆண்டுக்காலம், 5, 6 ஆண்டுக்காலம்கூட சிறையிலே இருந்துதான் அவர்கள் பின்னாலே வந்திருக்கின்றார்கள். எனவே, பொது மன்னிப்பு, உடனடியாக விட்டுவிடுவது என்றால், கர்நாடக மாநிலத்திலே தொடரப்பட்ட வழக்குகள், தமிழ் மாநிலத்திலே தொடரப்பட்டுள்ள வழக்குகளை எல்லாம் திரும்பப்பெற்றாக வேண்டும். அப்படித் திரும்பப்பெறுவதற்கு எந்தவிதமான சட்டரீதியான, நியாயமான காரணங்களும் இல்லை என்பதை அனைவரும் அறிவோம். இருந்தாலும், வீரப்பன் சரண்



அடைந்தால், அவரை, அவருடைய கூட்டாளிகளை அவருடைய உற்றார், உறவினரை, பழிக்குப் பழி வாங்குவோம் என்று இல்லாமல் சட்டப்படி நடத்துவோம் என்று வீரப்பனுக்கு ஏற்கெனவே தெரிவித்து இருக்கிறோம். அதை ஏற்றுக்கொண்டு, இப்போதும் காலம் வீணாகிவிடவில்லை, வீரப்பன் சரண் அடைவதற்குத் தயாராக இருந்தால் இந்த நிபந்தனைகளை எல்லாம் ஏற்றுக்கொண்டு, சரண் அடைவதற்குத் தயாராக இருந்தால், நம்முடைய கணேசனேகூட அந்த முயற்சியில் ஈடுபட்டு, அந்தக் காரியத்தை வெற்றிகரமாகச் செய்யலாம்.

ஏதோ குண்டு வெடிப்புகளையெல்லாம் மறைப்பதற்காக, இப்போது வீரப்பன் விவகாரம் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதாக நம்முடைய தாமரைக்கனி சொன்னார். ஜெயலலிதா ஆட்சியிலே கூட பலமுறை வீரப்பன் விவகாரம் பேசப்பட்டிருக்கிறது. அப்போதெல்லாம் எந்த வெடிப்புகளை மறைப்பதற்காக இந்த வீரப்பன் விவகாரம் வெளியிலே வந்தது என்பது எனக்குத் தெரியவில்லை. ஏதோ மனம்போன போக்கிலே பேசலாம், இந்த ஆட்சியைப்பற்றி ஏதோ குறை சொல்லலாம் என்பதற்காகச் சொல்லிக் கொண்டிருப்பது நியாயம் அல்ல. அவர்கள் எல்லாம் உண்மையிலேயே வீரப்பனுடைய கூட்டாளிகள்தானா என்ற சந்தேகத்தை தாமரைக்கனி எழுப்பினார். நான் என்ன செய்ய முடியும்? அவரை அழைத்துக்கொண்டு போய்த்தான் பார்த்துச் சொல்லுங்கள் என்று நான் கேட்க முடியுமே தவிர வேறு வழி எனக்கு இல்லை. சொல்வதைத்தான் நம்ப வேண்டியிருக்கிறது. போலீஸ்காரர்கள் சொல்வதைத்தான் நம்பி ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இதுவரையிலே அவருடைய கூட்டாளிகள்தான் என்று ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து மேலும் முயற்சிகள் காவல் துறையால் நடத்தப்படும் அல்லது பொதுநலன் விரும்புகின்ற அல்லது அமைதியை விரும்புகின்ற, இதுபோன்ற சீரழிவுகள் நடக்கக் கூடாது என்று எண்ணுகின்ற நல்லவர்களாக இருக்கின்றவர்களால் இதுபோன்ற முயற்சிகள் எடுக்கப்பட்டு, இரண்டு அரசுகளினுடைய நிபந்தனைகளுக்கு--கர்நாடக மாநில அரசு, தமிழக அரசு, இந்த இரண்டு மாநில அரசுகளுடைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு சரண் அடைவதற்கு வீரப்பன் தயாராக இருப்பாரேயானால், ஏற்கெனவே நாம் விதித்திருக்கின்ற அந்த நிபந்தனைகளின் அடிப்படையிலே அதை அணுக தமிழக அரசும், கர்நாடக அரசும் தயாராக இருக்கின்றன என்பதை மீண்டும் தெரிவித்து, இந்த அளவில் அமைகின்றேன்.

முற்பகல் 10-55

**(ஆ) டான்செம் சிமென்ட் அரசுத் துறைப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து வாங்காமல் வெளிச் சந்தையில் சிமென்ட் வாங்கலாம் என்ற அரசின் முடிவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டான்செம் சிமென்ட் அரசுத் துறைப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து வாங்காமல் வெளிச் சந்தையில் சிமென்ட் வாங்க அரசு முடிவு எடுத்துள்ள நிலை குறித்து திரு. கே. சுப்பராயன், திரு. டி. அமரமூர்த்தி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். முதலில் திரு. டி. அமரமூர்த்தி அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில மாதங்களுக்கு முன்பு நமது அரசாங்கம், அரசுத் துறைப் பணிகளுக்குத் தேவையான சிமென்டை வெளிச் சந்தையிலே டெண்டர் மூலம் வாங்கிக் கொள்ளலாம் என்ற ஒரு அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. இந்த அறிவிப்பின் மூலம் நாம் இரண்டு விதத்தில் பாதிக்கப்படுகிறோம் என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தனியார் முதலாளிகள் குறுக்கு வழியிலே புகுந்து அதன்மூலம் தரம் குறைந்த சிமென்டை அரசுக்கு விற்பனை செய்து, அதன்மூலம் கட்டப்படுகின்ற பாலங்களும், கட்டடங்களும் நீண்ட நாட்களுக்கு நிலைத்து நிற்காது. அதோடு மட்டுமல்லாமல் இன்றைக்கு அரியலூரில் இருக்கின்ற சிமென்ட் ஆலை நமது தமிழக முதல்வர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சிமென்ட் ஆலை. அது இப்போதுதான் 106% உற்பத்தித் திறனை எட்டியிருக்கிறது. கடந்த ஆண்டுதான் கிட்டத்தட்ட 18 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டித் தந்திருக்கிறது. இப்படி நல்ல முறையில் இயங்குகின்ற அரசு சிமென்ட் ஆலைகள் எல்லாம் எப்படித் தனியாருடன் போட்டி போட முடியும்? ஆகவே அரசுக்குத் தேவையான தரம் வாய்ந்த சிமென்டை அரசு சிமென்ட் ஆலைகள் மூலமே வாங்க வேண்டும் என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கிட்டத்தட்ட அந்த ஆலைகளை எல்லாம் கடந்த காலத்திலே விற்பதற்கு முயற்சி செய்தார்கள். மிகவும் நஷ்டத்திலே இயங்குவதாகச் சொல்லி அந்த ஆலையை விற்பதற்குக் கடந்த காலத்திலே முயற்சி செய்தார்கள். இன்றைக்கு இந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது. இன்னும் ஒருசில மாதங்களில் 120% உற்பத்தித் திறனை எட்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள். அப்படி நல்லமுறையிலே இயங்குகின்ற அரசு சிமென்ட் ஆலை தொடர்ந்து நல்ல முறையில் இயங்கவும், அங்குள்ள தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் அவர்களுக்கு அரசு ஊக்கத் தொகையும், கருணைத் தொகையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆலை தொடர்ந்து நல்ல முறையில் இயங்குவதற்கு வெளிச் சந்தையில் சிமென்ட் வாங்குகின்ற வகையில் அரசு அளித்த டெண்டர் உத்தரவைத் திரும்பப் பெற்று, கடந்த காலத்தைப்போல் அரசுத் துறைகள் டான்செம் சிமென்டையே வாங்க வேண்டும் என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டான்செம் ஒரு பொதுத் துறை நிறுவனம். அரசு தங்களுடைய தேவைகளுக்கான சிமென்டை பொதுத் துறை நிறுவனமான டான்செம்மிலிருந்துதான் தொடர்ந்து பெற்று வந்தது. இந்த நிலையில் திடீரென்று இப்போது அங்கிருந்து பெறுவதில்லை என்கிற அடிப்படையில் ஒரு கொள்கை முடிவு எடுத்திருப்பது என்பது, பொதுத் துறை நிறுவனம் ஒன்றை, அது இயல்பாக மரணம் அடைந்துவிடுவதற்கு வழி அமைத்து விடுவதாக அமைந்துவிடுகிறது. நான் இந்த விஷயத்திலே மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, இதிலே ஏதாவது 'சபடேஜ்' இருக்கக்கூடும் என்பதால் நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைய தாராளமயக் கொள்கையின் காரணமாகப் பொதுத் துறை நிறுவனங்களை நடைமுறையில் கொல்லுவதற்குரிய பல உத்திகளை தனியார் நிறுவனங்கள் மேற்கொள்ளுகின்றன. தனியார் நிறுவனங்கள் அரசுத் துறையின் மார்க்கெட் வாய்ப்பைத் தாங்கள் பெற்றுக்கொள்வதற்காக, அரசுத் துறை நிறுவனங்கள் நடைமுறையில் நிலைகுலைந்து போவதற்குரிய பல வேலைகளைச் செய்கிறார்கள். அதற்கு அவர்களுக்குப் பயன்படுகிற களமே அரசு அதிகாரிகள்தான். துறை சார்ந்த அதிகாரிகளைப் பயன்படுத்தி, 'மெனோவரிங்' செய்து, அந்தத் துறையின் செயலை நடைமுறையில் நீத்துப்போக வைத்து, தங்களுடைய தனியார் துறை சிமென்ட் விற்பதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்த முயற்சித்து வருகிறார்கள். இந்த விஷயத்தில் அதிகாரிகள் எந்த வகையில் ஃபைலில் எழுதியிருக்கிறார்கள் என்றெல்லாம் நான்

அறிய முடியாது. ஆனால், அதிகாரிகள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை தங்கள் நோக்கத்திற்குத் தக்கபடி இயங்க வைக்கிற முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள் என்று நான் ஐயுறுகிறேன். எனவே, அதிகாரிகள் என்ன முடிவு எடுத்தாலும் கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அரசியல் முடிவு எடுக்க வேண்டும். அரசியல் ரீதியாகக் கொள்கை முடிவு எடுத்து, டான்செம் நிறுவனத்தில்தான் அரசுத் துறைகளுக்குத் தேவையான சிமெண்டை வாங்க வேண்டும் என்ற நிலையை, கொள்கை நிலையாக அறிவிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு பொதுத் துறை நிறுவனமான தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், 1971 ஆம் ஆண்டில் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டது.

1989 ஆம் ஆண்டில் மத்திய அரசு லெவி மூலம் செய்யப்பட்ட விற்பனை முறையை ரத்து செய்தபிறகு அரசு நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவை தங்களுக்குத் தேவையான சிமெண்டை, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்திடமிருந்து மட்டுமே பெறலாம் என்று தொழில் துறை, 6-6-1989 தேதியிட்ட அரசாணையைப் பிறப்பித்தது.

அரசுத் துறைகளுக்கு வழங்கப்படும் சிமெண்டின் விலை இந்நிறுவனத்தின் உற்பத்திச் செலவின் அடிப்படையில் அரசால் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. அரசுத் துறை நிறுவனங்களுக்கு உள்ள கொள்முதல் முன்னுரிமை --purchase preference-- காரணமாக, பல்வேறு அரசுத் துறைகள் வெளிச்சந்தை விலையைவிட அதிக விலை கொடுத்து, தேவையான சிமெண்டை வாங்கி வந்தால், அரசுத் துறைகள், டான்செம் நிறுவனத்திற்குத் தொடர்ந்து மறைமுக மானியம் -indirect subsidy- அளிப்பதுபோல் ஆகும் என்றும், டான்செம், வெளிச்சந்தையில் போட்டி அடிப்படையில் நிலவுகின்ற விலைக்குச் சிமெண்டை வழங்க வேண்டும் என்றும், இதனால் டான்செம் நிறுவனத்திற்கு நஷ்டம் ஏற்பட்டால், இந்த நஷ்டத்தை



வெளிப்படையாக -transparently- அரசு மானியமாக வழங்கக் கருதலாம் என்றும் அமைச்சரவை முடிவெடுத்தது.

இக்கொள்கையின் அடிப்படையில், டான்செம் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வந்த விற்பனை முன்னுரிமைச் சலுகையை உடனடியாக ரத்து செய்யாமல், 31-3-1998 வரை இச்சலுகையை நீட்டிக்கலாம் என்றும், இதனால் வெளிச் சந்தையிலே போட்டியிடக்கூடிய திறனை வளர்த்துக்கொள்ள டான்செம் நிறுவனத்திற்குத் தேவையான கால அவகாசம் கிடைக்கும் என்றும் அரசு தீர்மானித்தது. 1-4-1998-லிருந்து விற்பனை முன்னுரிமையைப் பொறுத்தவரையில், டான்செம் நிறுவனம், திறந்த ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் பெறப்படுகின்ற விலைக்கு அளிக்க முன்வந்தால், 50 சதவீதத் தேவையை டான்செம் நிறுவனத்திடமிருந்து பெறலாம் என்று, நிதித் துறை, 19-2-1997 தேதியிட்ட அரசு ஆணை மூலமாக அறிவித்துள்ளது.

எனவே, டான்செம் நிறுவனத்திற்கு முன்பிருந்த விற்பனை முன்னுரிமை முற்றிலும் ரத்து செய்யப்படவில்லை என்பதும், அரசுத் துறைகளின் 50 சதவீதத் தேவையை பொதுத் துறை நிறுவனங்களுக்கே வழங்கக்கூடிய முன்னுரிமையை 1-4-1998-லிருந்து தொடர்ந்து அரசு அளித்து வருகிறது என்பதும் தெளிவாகிறது.

அண்மைக்காலங்களில் சந்தையில் தனியார் சிமெண்ட் நிறுவனங்கள் விற்பனை செய்யும் சிமெண்டின் விலை, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் விற்பனை விலையைவிடக் குறைவாகவே இருந்து வந்துள்ளது.

உதாரணமாக, ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், இந்திரா வீடு கட்டும் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் போன்ற பல்வேறு திட்டப் பணிகளுக்காக ஊரக வளர்ச்சித் துறைக்கு ஆண்டுக்கு 5 இலட்சம் டன் சிமெண்ட் தேவைப்படுகிறது.

நடப்பாண்டில் (1997-98), தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் உற்பத்திச் செலவின் அடிப்படையில், 50 கிலோ எடையுள்ள ஒரு மூட்டை சிமெண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ. 157/- ஆகும்.

ஆனால், திறந்த ஒப்பந்தப்புள்ளி, டெண்டர் மூலம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள், சிமெண்ட் மூட்டை ஒன்று சராசரி

ரூ. 124/-க்குப் பெற முடிகின்றது. 157-124 என்கின்ற அளவில் உள்ள வேறுபாடு அது.

அரசு, வெளிச் சந்தையிலிருந்து திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் சிமென்டை, டான்செம் உட்பட பல நிறுவனங்களிலிருந்து பெற்று விரைவாகத் திட்டங்களை நிறைவேற்றலாம் என்று அரசு ஆணை பிறப்பித்ததன் அடிப்படையில், பல்வேறு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள், போட்டி விலையில் தேவையான சிமென்டை வாங்க முடிகின்றது.

எனினும், வெளி மார்க்கெட்டில் நிலவி வரும் போட்டியினிடையே, அரசு நிறுவனம் விற்பனையில் ஈடுபடும்பொழுது, எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அரசு மிகுந்த கவனத்தோடு ஆய்வு செய்து வருகிறது. விளைவுகள் டான்செம் நிறுவனத்தின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும் என்று அறியப்பட்டால், அரசு தனது முடிவை நிச்சயம் மறுபரிசீலனை செய்து, தக்க முடிவை உரிய நேரத்தில் மேற்கொள்ளும் என்றும், மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, எந்தச் சதிச் செயல்களுக்கும் அரசு இடம் அளிக்காது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

முற்பகல் 11-05

### (இ) அடையாறில் அரசுக்குச் சொந்தமான அறிவொளி இயக்கக் கட்டடத்தைத் தனி நபர் கையகப்படுத்தியது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அடையாறில், அரசுக்குச் சொந்தமான அறிவொளி இயக்கக் கட்டடத்தைத் தனி நபர் கையகப்படுத்தியது குறித்து, திரு. சி. ஞானசேகரன், திரு. டி. மணி, டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் அரசின் கவனத்தை ஈர்த்திருக்கின்றார்கள். திரு. ஞானசேகரன், சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடையாறில் ஏற்கெனவே அறிவொளி இயக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த இடத்தை ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் எடுத்துக் கொண்டார் என்ற செய்திகள் வர, இதே அவையிலே இரண்டு நாட்களுக்கு முன்னால், மாண்புமிகு உறுப்பினர் இராமஜெயம் அவர்கள் சொல்கிறபொழுது, 'ஏற்கெனவே ஆளுங்கட்சி உறுப்பினர்தான் அதை அந்த அறிவொளி இயக்கத்திற்காகக் கொடுத்து வைத்திருந்தார். பிறகு, அந்தக் கொடுத்து வைக்கப்பட்ட ஆள்



அதைத் தவறாகப் பயன்படுத்திய காரணத்தினாலேதான் இந்தச் சண்டை வந்தது. பிறகு அவர் மனுக் கொடுப்பதாகச் சொல்லி எல்லோரையும் அழைத்து வந்து சாலை மறியலிலே அமர வைத்து விட்டார்' என்றெல்லாம் இங்கே உறுப்பினர் இராமஜெயம் அவர்கள் கருத்து தெரிவித்தார்கள். அந்த இடம் அரசுக்குச் சொந்தமான இடமா, புறம்போக்கு இடமா? அல்லது, ஆளுங்கட்சி உறுப்பினர்தான் அந்த அறிவொளி இயக்கத்திற்குக் கொடுத்தார் என்று சொன்னால் அவர் சொந்த இடத்தை அறிவொளி இயக்கத்திற்காகக் கொடுத்தாரா என்பது போன்ற விளக்கங்களை இந்த அவைக்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டும். இது உண்மையிலேயே அரசு இடமாக இருந்தால், அது நிச்சயமாகக் கைப்பற்றப்பட வேண்டிய ஒன்று. அது சொந்த இடமாக இருந்தால் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு-அதாவது, தவறான செய்திகள் வந்துவிடக் கூடாது என்பதற்காக, நாட்டு மக்களுக்கு உண்மையை முதலமைச்சரவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடையாறு, மல்லிப்பூ நகர் குடிசைப்பகுதியில் அரசுக்குச் சொந்தமான இடத்தில் அறிவொளி இயக்க ஆபீஸ் ஒன்று இயங்கி வந்தது. ஏற்கெனவே எனக்கு முன்னால் பேசியவர்கள் கூறியதுமாதிரி, அந்த ஆபீசை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பிரமுகர் நடராஜன் என்பவர் திடீரென்று ஆக்கிரமித்துக் கொண்டதாகப் பத்திரிகையிலே செய்தி வந்தது. அதற்குப் பின்னால் அறிவொளி இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்கும், இவர்களுக்கும் மோதல் ஏற்பட்டு, அதிலே காவல் துறையினர் தலையிட்டு அடிதடியாகி, அதற்கு மேலே விவகாரங்கள் முற்றிப்போய் இருக்கிறது. மீண்டும் அந்தப் பகுதியை அறிவொளி இயக்கத்திற்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா அல்லது வேறு யாராவது கிரயம் செய்திருக்கின்றார்களா என்பதையெல்லாம் ஆராய வேண்டும். அந்தச் சாலை மறியலில் ஈடுபட்டவர்கள்மீது தடியடி மற்றும் விவகாரங்கள் நடந்திருக்கின்றன. அதிலே கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் மீது போட்டிருக்கின்ற வழக்கை வாபஸ் வாங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா? இப்படி நம்முடைய அரசுக்குச் சொந்தமான நிலங்களில், அறிவொளி இயக்கத்திற்கு வழங்கிய இடங்களை யாராவது தனி நபர்கள் ஆக்கிரமித்துக் கொண்டால் அதை மீட்டுக்

[திரு. டி. மணி] [1998 ஏப்ரல் 23

கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு அடையாறு மல்லிப்பூ நகரில் குடிசை மக்களுக்காகக் கொடுக்கப்பட்ட, அறிவொளி இயக்கத்திற்குச் சொந்தமான இடத்தை ஆளுங்கட்சிப் பிரமுகர் ஒருவர் ஆக்கிரமித்துக் கொண்டார் என்ற செய்தி 'இந்து' பத்திரிகையிலே வந்ததைத் தொடர்ந்து இந்த அவையிலே நான் ஒரு பிரச்சினையை எழுப்பியபொழுது மாண்புமிகு உறுப்பினர் இராமஜெயம் அவர்கள் அதை மறுத்தார்கள்.

நாங்கள் இந்த மன்றத்தின் மூலமாக, தங்கள் மூலமாக அறிய விரும்புவது, அந்த இடம் உண்மையிலேயே அரசுக்குச் சொந்தமானதா அல்லது தனியார் யாருக்காவது சொந்தமானதா? அரசுக்குச் சொந்தமானது என்றால், அந்த இடத்தை உடனடியாகக் கைப்பற்றி மீண்டும் அறிவொளி இயக்கத்திற்கும், அந்த மக்களுக்குமே வழங்கப்பட வேண்டுமென்று தங்கள் மூலமாக வேண்டி விடை பெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து, தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஞானசேகரன் அவர்களும், மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக மணி அவர்களும், புதிய தமிழகம் கட்சியின் சார்பாக டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும் கருத்துக்களைக் கூறியிருக்கின்றார்கள்.

*முற்பகல் 11-10*

நான் முதலிலே ஒன்றைத் தெளிவாக்க விரும்புகின்றேன். தவறு செய்பவர்கள் ஆளும் கட்சியினராக இருந்தாலும் அவர்கள்மீது தவறாமல் நடவடிக்கை எடுக்கின்ற அரசுதான் இந்த அரசு என்பதைத் திட்டவட்டமாக இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'இந்து' பத்திரிகையிலே செய்தி வந்ததைப்



1998 ஏப்ரல் 23] [கலைஞர் மு. கருணாநிதி]

பற்றிச் சொன்னார்கள். நானும் பார்த்தேன், அரைப் பக்கம் 'இந்து' பத்திரிகையிலே செய்தி பெரியதாக வெளியிடப்பட்டிருந்தது. எப்பொழுதுமே ஒரு கருப்பு ஆடையில் ஒரு துளி மை சிந்திவிட்டால் அதிகமாகத் தெரியாது. தூய வெள்ளை ஆடையிலே ஒரு துளி மை சிந்திவிட்டால் அது பளீர் என்று தெரியும். இப்படிச் சிந்தக் கூடாது, ஒரு துளி மைகூட சிந்தக் கூடாது என்பதிலே கண்ணும் கருத்துமாக இருக்கின்ற எதிர்க்கட்சிகள், தோழமைக் கட்சிகள் அனைவருக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். கருப்பு ஆடையிலே மை சிந்துகின்ற நேரத்திலே பத்திரிகைகள் அதை அவ்வளவு பெரிதுபடுத்துவதில்லை. வெள்ளை ஆடையிலே மை சிந்திவிட்டால், 'பார், பார், மை, மை' என்று கூறுகிறது. காரணம், கண்ணுக்குத் தெரிகிறது, அதனால் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். உடனடியாக எலுமிச்சம்பழமோ, எதுவோ போட்டு அதை மறைக்க நாங்கள் விரும்புவதில்லை. 'ஆமாம், சிந்திவிட்டது உண்மைதான்' என்று, 'ஏன் சிந்தியது' என்பது பற்றி நிச்சயமாக ஆராய்ச்சி நடத்தி அரசு நடவடிக்கைகள் எடுக்கிறது. எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அந்தப் பத்திரிகைகள் அந்த அளவுக்குப் பெரிதாகப் போடுமேயானால் நான் மகிழ்ச்சி அடைவேன். இருந்தாலும், என்ன செய்வது? நாங்கள் அல்லவா ஆண்டுகொண்டிருக்கிறோம்? எனவே, இந்தச் செய்திகள் பெரியதாகத்தான் வரும். அதற்காக நான் கவலைப்படுவதும் இல்லை. ஏனென்றால், அவர்கள் இன்றைக்கு விருந்து வைத்து, இப்படிப்பட்ட செய்திகளையெல்லாம் வெளியிடக்கூடிய அளவிற்கு அதை ஒரு விருந்தாகவே கருதிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, நான் அதற்காக அதிகமாக மனவருத்தம் கொள்ளக்கூடாது. இருந்தாலும், இந்த நிகழ்ச்சியைப்பற்றி நான் சில விவரங்களைச் சொல்ல விரும்புகின்றேன்.

அடையாறு ஜே. 2 காவல் நிலையச் சரகத்தில், திரு.வி.க. பாலத்திற்குத் தெற்குப் பகுதியில் மலர் மருத்துவமனையை அடுத்து 'மல்லிப்பூ நகர்' என்ற குடிசைவாழ்ப் பகுதியில் சுமார் 500 குடிசைகள் உள்ளன. அதில் சுமார் 2 ஆயிரம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் தி.மு.க., அ.தி.மு.க. மற்றும் பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இந்த இடம் சென்னை மாநகராட்சியின் 151-வது வட்டத்திலே உள்ளது. 10-10-1997ஆம் தேதியன்று மல்லிப்பூ நகரின் மத்திய பாகத்தில் மலர் மருத்துவமனை காம்பவுண்டுக்கு அருகே 10 அடி நீளம், 10 அடி அகலம் கொண்ட ஒரு இடத்தில் தி.மு.க.

கவுன்சிலர், 151வது வட்டத்தைச் சேர்ந்தவர், தமீமுன்னிசா என்பவர். பகுதிச் செயலாளர் டி.கே. கரிகாலன் என்பவர் முன்னிலையில் அறிவொளி இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார். இந்த அறிவொளி இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தவிடாமல், 151-வது வட்ட தி.மு.க. துணைச் செயலாளர் மு.ப. நடராஜன் என்பவர், அந்த இடத்திலே குடும்பத்தோடு குடியேறிவிட்டார். இது சென்னையிலே வழக்கமாக நடப்பது. எல்லா கட்சிகளுக்கும் சொந்தமான ஒரு உரிமை. நடராஜன் செய்துவிட்டார், இந்தக் காரியத்தை. இந்த அறிவொளி இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தவிடாமல் 151-வது வட்ட துணைச் செயலாளர், தி.மு.க.-வைச் சேர்ந்தவர், மு.ப. நடராஜன் என்பவர், அந்த இடத்திலே குடும்பத்தோடு குடியேறிவிட்டார். நடராஜனுக்குத் துணையாக வேதகிரி என்ற அ.தி.மு.க.-வின் அந்தப் பகுதியிலே உள்ள முக்கிய நபர் இருப்பதாகவும், நடராஜன் ஆக்கிரமிப்பு செய்து இருப்பதாகவும் கூறி, மல்லிப்பூ நகரைச் சேர்ந்த கோபால், நாகப்பன் ஆகியோர் 17-10-1997-ல் புகார் மனு ஒன்றைக் கொடுத்தார்கள். புகார் மனு விசாரிக்கப்படுகின்றபோது, நடராஜன் தனக்குக் குடியேற வேறு இருப்பிடம் இல்லையென்றும், மூன்று மாதத்தில் அந்த இடத்தைக் காலி செய்துவிடுவதாகவும் கூறியதை அனைவரும் ஒப்புக்கொண்டார்கள். ஆனால், அதன் பிறகு, நடராஜன் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் I.A.No. 5614 of 1998; O.S.No. 2305 of 1998 மனுத் தாக்கல் செய்து, இடைக்காலத் தடை injunction-பெற்றுவிட்டார். நீதிமன்றத்திலே தடை பெற்றுவிட்டார். இதனை ஊர்ப் பொது மக்களுக்கு எடுத்து விளக்கி, நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்து, உத்தரவைப் பெற்றுக்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டது. அந்த இடைக்காலத் தடையை உடைத்துவிட்டு அதை ஆக்கிரமித்துக்கொள்ள அந்தப் பகுதி பொது மக்களுக்கெல்லாம் அறிவுரை வழங்கப்பட்டது. ஆனால், சட்ட ரீதியாக அதை அணுக நினைக்காமல், அவர்கள் 20-4-1998 அன்று காலை சுமார் 9½ மணியளவில் நடராஜன் ஆக்கிரமிப்புச் செய்வதாகக் கூறப்பட்ட இடத்தை காவல் துறையினர், அவரிடமிருந்து மீட்டுத்தர வேண்டுமென்று கோரி, ம.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த கனகராஜ் தலைமையிலும், 151-வது வட்ட அ.தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் தலைமையிலும், அ.தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் வரதம்மாள் மற்றும் ஆண்கள், மகளிர் சுமார் 100 பேருக்கு மேல் திரு.வி.க. பாலம் அருகிலே சாலைக்கு வந்து, அடையாறு பக்கமிருந்து வந்த வாகனங்களைத் தடுத்து நிறுத்தினார்கள். அந்தச் செய்தியை





அறிந்த அடையாறு சரக உதவி ஆணையர், சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று மறியலில் ஈடுபட்டிருந்தவர்களை அமைதியாகக் கலைந்து செல்லுமாறு கேட்டபோது 'அந்த இடத்தை மீட்டுத் தராவிட்டால் சாலை மறியலைக் கைவிட முடியாது' என்று கூறிவிட்டார்கள்.

(முற்பகல் 11-15

நீதிமன்றத்திலே இடைக்காலத் தடை இருக்கிறது. 'உடனடியாக மீட்டுத் தர வேண்டும், இல்லாவிட்டால் சாலை மறியலைக் கைவிட முடியாது' என்றால் காவலர்கள் என்ன செய்வார்கள் என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். தடையாணை நீதிமன்றத்திலே பெறப்பட்டிருக்கிறது. எனவே, காவலர்கள், அந்த விவரங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி, கலைந்து போகச் சொல்லி பலமுறை வேண்டியிருக்கின்றார்கள். ஆனால், சாலை மறியலைக் கைவிட முடியாது என்று கூறிவிட்ட நிலையில், பாதுகாப்புப் பணியிலே ஈடுபட்டிருந்த காவலர்கள், கோபால், செல்வராஜ் உட்பட 15 ஆண்களையும், வரதம்மாள் உட்பட 22 பெண்களையும் கைது செய்து, போக்குவரத்தைச் சரி செய்து அமைதியை ஏற்படுத்தினார்கள். கைது செய்யப்பட்டவர்கள்மீது அடையாறு காவல் நிலையக் குற்ற எண் 416/98, சட்டப் பிரிவுகளான 147, 148, 332, 336, 506 (ii), இந்தியத் தண்டனைச் சட்டம் உடன் இணைந்த 7 (1) (a) C.L.A. சட்டப்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. கைது செய்யப்பட்டவர்கள் ரிமாண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதேபோல், பொது இடத்திலே ஆக்கிரமிப்புச் செய்து இந்தக் கலவரத்திற்குக் காரணமாக இருந்த நடராஜன் என்ற அந்த தி.மு.க.-காரரும் கைது செய்யப்பட்டு ரிமாண்ட் செய்யப்பட்டிருக்கிறார், உடனடியாக. தற்போது அங்கே எந்தப் பதட்ட நிலையும் இல்லை. அமைதியாக உள்ளது. சாலை மறியலில் ஈடுபட்டவர்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்பதும், அரசு அதற்கு இணங்குவதும் ஒரு முன்மாதிரியாக ஆகிவிடக்கூடாது; சாலை மறியலில் ஈடுபட்டால் கடுமையான தண்டனை உண்டு என்பதை அனைவரும் உணர்ந்தாக வேண்டும் என்பதற்காக மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்க இயலவில்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[1998 ஏப்ரல் 23

## 4. அறிவிப்புகள்

### (அ) மெட்ரிகுலேஷன் தேர்விற்கான வினாத்தாள் முன்கூட்டியே வெளிவந்தது குறித்த அறிவிக்கை எடுத்துக் கொள்ளுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மெட்ரிகுலேஷன் தேர்விற்கான வினாத்தாள் முன்கூட்டியே வெளிவந்தது குறித்து திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சி. ஞானசேகரன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. நா. பெரியசாமி, திரு. ஜி.கே. மணி ஆகியோர் கவனத்தை ஈர்த்திருக்கின்றார்கள். அதிலும், திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் அந்த வினாத்தாளின் நகல்களைக்கூட அவருடைய தீர்மானத்தோடு இணைத்திருக்கிறார்கள். துறையிலேயிருந்து அறிக்கை பெறப் பெற்றால் இன்றே எடுத்துக்கொள்வதாக நான் அறிவித்திருந்தேன். இதுவரை அறிக்கை வரவில்லை. ஆகவே. அதை நாளைக் காலை எடுத்துக் கொள்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (ஆ) பிளஸ்-2 விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய மறுத்து ஆசிரியர்கள் போராட்டம் நடத்துவது குறித்த அறிவிக்கை எடுத்துக்கொள்ளுதல்

**மாண்பமிகு பேரவைத் தலைவர்:** பிளஸ்-2 விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய மறுத்த ஆசிரியர்களின் போராட்டம் குறித்தும் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். ஆக, இந்த இரண்டு தீர்மானங்களும் நாளை காலை முதலிலே எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாத் தாளையும், அந்த வினாத் தாளையும் ஒப்பிட்டு, இவையிரண்டும் சரியாக இருக்கிறதா என்று பாருங்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு நல்லெண்ணத்தோடு அந்த வினாத் தாளினுடைய நகல்களையும் இணைத்துக் கொடுத்தீர்கள். இதிலே துறையின் அறிக்கையை எதிர்பார்க்கிறேன். அறிக்கை 11-00 மணிக்குள்ளே வந்தால் இன்றைக்கே எடுத்துக்கொள்கிறேன் என்று நான் சொன்னேன். நீங்கள் என்னிடம் வந்து கேட்டதற்கு, 'அறிக்கை இன்னும் வரவில்லை, ஆகவே, நாளை காலையிலே எடுக்கிறேன்' என்று சொன்னேன்.



1998 ஏப்ரல் 23]

## 5. கவன ஈர்ப்பு

### (அ) நாகூர் வெட்டாறு பாலம் பழுதடைந்தும், மிகவும் குறுகலாகவும் உள்ளதால் ஏற்படும் நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து, விதி 55-ன்கீழ் திரு. ஜி. நிஜாமுதீன் அவர்கள், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கின்றார்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகூர் வெட்டாறு பாலம் பழுதடைந்தும், மிகவும் குறுகலாகவும் உள்ளதால் ஏற்படும் சிரமம், அபாயம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

#### அறிக்கை

[illegible] ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளது, நாகை-காயிதே-
மில்லத் மாவட்டத்தில் நாகூர்-காரைக்கால் சாலை கி.மீ 7/2-8/2 ஒரு
மாவட்டப் பெருஞ்சாலை ஆகும். இச்சாலையில் கி.மீ 7/4-ல்
ஒவ்வொன்றும் 9.60 மீட்டர் கொண்ட 12 கண்களை உடைய சுமார்
150 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட, 3.00 மீட்டர்--ஒரு பாதை
அகலமே உள்ள செங்கல் ஆர்ச் (Brick Arch) பாலம் ஒன்று உள்ளது.
இப்பாலம் மிகவும் வலுவிழந்துள்ளதாலும், வங்காள விரிகுடாக்
கடலுக்கு மிக அருகில் வெட்டாற்றின் முகத்துவாரத்தில்
அமைந்துள்ளதாலும், ஆண்டு முழுவதும் நீர்வரத்து உள்ளதாலும்,
இப்பாலத்தை அகற்றிவிட்டு ஒரு புதிய உயர் மட்டப் பாலம்
கட்டப்பட வேண்டும். சுமார் 120 மீட்டர் நீர் வழிப்பாதை கொண்ட
புதிய உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு விலைவிகிதப்படி ரூ. 5.00
கோடி தோராயமாகத் தேவைப்படுகிறது.

தற்போது இக்கருத்துரு தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் ஆய்வில் உள்ளது என்பதுடன் நாகூர்-நாகப்பட்டினம்

[திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்] [1998 ஏப்ரல் 23

புறவழிச் சாலை அமைக்கும் நேர்பாட்டில் மேற்படி பாலம் அமையும் சாத்தியக்கூறுகளும் உள்ளன எனலாம். எனவே, தற்போது ஆய்வில் இருக்கும் இப்பாலம் மற்றும் சாலை ஆகியவை பற்றிய இறுதி வடிவம் பெற்ற கருத்துருக்கள் அரசு அங்கீகாரம் பெற்றவுடன் பணி மேற்கொள்ளப்படும்.

***திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்க அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில் இந்தப்பாலம் தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆய்வில் உள்ளது என்றும், அத்துடன் நாகூர்-நாகப்பட்டினம் புறவழிச்சாலை அமைக்கும் செயல்பாட்டில் மேற்படி பாலம் அமைக்கக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது என்றும், அப்படி இரண்டு கருத்துருக்கள் இருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாலம் இருக்குமிடம் மிகவும் போக்குவரத்து நெரிசல் வாய்ந்த முக்கியமான ஒரு பகுதியாகும். அந்தப் பகுதி வழியாகத்தான் ஓ.என்.ஜி.சி., எம்.ஆர்.எல்., ஐ.டி.பி., ஜி.ஏ.ஐ.எல்., போன்ற நிறுவனங்களினுடைய கனரக வாகனங்கள் சென்று வருகின்றன. பாலம் மிகவும் குறுகலாக இருக்கிற காரணத்தால், அந்தப் பாலத்திலே நடந்து செல்பவர்களும், சைக்கிளில் செல்பவர்களும், வாகனங்கள் வேகமாக வரும்போது அடிக்கடி அந்த ஆற்றிலே தவறி விழுந்து இறந்தும் விடுகின்றனர். இதுபோன்ற ஆக்ஸிடெண்ட்கள் அடிக்கடி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆய்வு என்றோ அல்லது பை-பாஸ் ரோடு ஏற்படுத்தப்படும்போது கட்டலாம் என்றோ இதைக் காலம் தாழ்த்துவதோ, அல்லது இதை ஒதுக்கி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மிகவும் சுருக்கமாகப் பேசி விளக்கம்தான் கேட்கலாம். ஆனால், இங்கே ஓர் உரையை நிகழ்த்திக் கொண்டிருக்கிறீர்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** ஆகவே, அந்தப் பாலத்தை ஓ.என்.ஜி.சி., எம்.ஆர்.எல். நிறுவனங்கள் கட்டித்தர வேண்டும் என்று நான் மத்திய அரசிடம், முன்னாள் பெட்ரோலியத் துறை அமைச்சர் அவர்களை அணுகியபோது அவர்கள் கடிதம் ஒன்றை அனுப்பினார்கள். 'அந்தப் பாலத்தின் முழுச் செலவையும் மத்திய அரசு ஏற்க இயலாது, அல்லது, அந்த நிறுவனங்கள் வழியாகச் செய்துதர இயலாது, மாநில அரசே செய்யுமாயின், ஒரு பகுதியை நாங்கள் பங்காகச் செலுத்தத் தயாராக உள்ளோம்' என்று மத்திய



1998 ஏப்ரல் 23] [திரு. ஜி. நிஜாமுதீன்]

அரசு கடிதம் வாயிலாகப் பதில் தந்திருக்கிறது. ஆகவே, அதைக் கொண்டாவது...

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சுருக்கமாகப் பேசி முடிக்கவில்லையென்றால், நான் உட்கார வைத்துவிடுவேன். உரை நிகழ்த்தக் கூடாது. கேள்வியைக் கேளுங்கள் என்றால், பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெட்டாற்றில் அமைந்திருக்கக்கூடிய அந்தப் பாலம், மாவட்டச் சாலையில், காரைக்காலுக்கும் நாகூருக்கும் இடையில் இருக்கக்கூடிய அந்தச் சாலையில் இருக்கிறது. பாலம் 150 ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டது என்பது உண்மை. மூன்று மீட்டர்-- ஒரு பாதை அகலம் மட்டுமே அந்தப் பாலத்தில் இருக்கிறது என்பதும் உண்மை. பழைய காலத்தில் செங்கற்களால் கட்டப்பட்டது என்பதும் உண்மை. போக்குவரத்து நெரிசல் இருக்கிறது என்பதும் உண்மை. அந்தப் பாலம் உடனடியாகக் கட்டப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் விரும்புவதைப் போல, அரசும் விரும்புகிறது. அதற்காகவே கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டத்தில் இதை இணைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆய்வுகள் முடிந்திருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், கிழக்குக் கடற்கரைச் சாலையில் சிதம்பரத்திற்கு அருகில் புறவழிச்சாலை ஒன்றும், அதைப்போலவே, சீர்காழியில் புறவழிச் சாலை ஒன்றும், நாகூருக்கும் நாகப்பட்டினத்திற்கும் அருகில் புறவழிச் சாலை ஒன்றும் அமைப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் புறவழிச் சாலையிலே அந்தப் பாலத்தை அமைக்க வேண்டும்; அமைக்க முடியும் என்ற முடிவும் தமிழ்நாடு ரோடு செக்டார் புராஜக்ட் மூலமாக முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. விரைவில் அந்தப் பாலம் கட்டி முடிக்கப்படும் என்ற உறுதியை நான் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னாள் மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு அவர்கள், மாண்புமிகு உறுப்பினருக்குக் கடிதம் எழுதியிருப்பதை

இங்கே குறிப்பிட்டார். அந்தக் கடிதத்தின் நகல் என்னிடத்திலே இருக்கிறது. மத்திய அரசு அந்தப் பாலத்தைக் கட்டுவதற்குத் தேவையான முழுத் தொகையைத் தர இயலாது என்று தெரிவித்துவிட்டு, இறுதியாக அவர் அந்தக் கடிதத்திலே இப்படித் தெரிவித்திருக்கிறார்:

"However, the Oil Companies who have operation in these areas can be asked to consider their contribution towards the cost after the State Government has finalised the master-plan and the total cost of the contribution in this regard is known," என்று தெரிவித்திருக்கிறார். எனவே, ரோடு செக்டார் புராஜக்டிலே எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய பாலமாகவும், சாலையாகவும் அது இருப்பதால், உலக வங்கி மூலம் அதற்கான நிதி கோரப்பட்டிருக்கிறது. உலக வங்கியும் ஒப்புக் கொண்டிருக்கிறது. ஆகவே, நிதியைப் பற்றிக் கவலையில்லை. விரைவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஆ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் மூடப்பட்டதால் ஏற்பட்டுள்ள நிலை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஜி. கே. மணி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் மூடப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.





**அறிக்கை**

தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் உள்ள விற்பனை நிலையம் 27-2-1955 அன்று ஆரம்பிக்கப்பட்டதாகும். இவ்விற்பனை நிலையம் 1128 சதுர அடி கொண்ட வாடகைக் கட்டிடத்தில் மாத வாடகை ரூ.1000/-க்கு இயங்கி வந்தது. தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்ததாலும், விற்பனையில் முன்னேற்றம் இல்லாததாலும், கணிசமான வியாபாரத்திற்கு வழிவகையில்லாததாலும் 31-1-98 அன்று இந்த விற்பனை நிலையம் மூடப்பட்டது. இது வணிகரீதியாக எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். இவ்விற்பனை நிலையத்தில் பணிபுரிந்த இரு ஊழியர்களும் சேலம் சரகத்திலுள்ள விற்பனை நிலையங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதன் நான்கு ஆண்டு விற்பனை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1994-95 | .. | 9.81 லட்சம் |
| 1995-96 | .. | 11.85 லட்சம் |
| 1996-97 | .. | 11.57 லட்சம் |
| 1997-98 (ஜனவரி 1998 வரை) | .. | 6.63 லட்சம் |

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். அதிலே கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலம் பெண்ணாகரத்தில் விற்பனை குறைவாக இருக்கின்ற காரணத்தால், வணிகரீதியாக இந்த முடிவு எடுக்கப்பட்டு அந்தக் கடை மூடப்பட்டு இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, பெண்ணாகரம் மிகவும் பரந்த பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியில் இருந்த விற்பனை நிலையம் மூடப்பட்டிருக்கிறது என்றால், 60, 70 கி.மீ. தூரமுள்ள தர்மபுரிக்குத்தான் செல்ல வேண்டிய நிலையிருக்கிறது. மேலும் சில விவரங்களெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 11-25

இந்த அறிக்கையிலே விற்பனை, 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 9.81 இலட்சம் என்றும், 1995-96ஆம் ஆண்டில் ரூ. 11.85 இலட்சம்

[திரு. ஜி.கே. மணி] [1998 ஏப்ரல் 23

என்றும், 1996-97ஆம் ஆண்டில் ரூ. 11.57 இலட்சம் என்றும், 1997-98ஆம் ஆண்டில் ரூ. 6.63 இலட்சம் என்றும் கொடுக்கப்பட்டுள்ளது. இப்படி விற்பனை ஆண்டுக்காண்டு உயர்ந்துகொண்டே இருந்திருக்கிறது. இறுதி ஆண்டிலே மூடப்பட்ட காரணத்தினாலே குறைவாக இருந்திருக்கிறது. ஆகவே, ஆண்டுக்காண்டு விற்பனை உயர்வாக இருந்த காரணத்தினாலும், நம்முடைய தமிழக அரசு கைத்தறித் துணியை விற்பனை செய்வதற்கு பல்வேறு முயற்சிகளை எடுத்திருக்கின்ற காரணத்தாலும்--அதிலும்கூட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் தலையிலே சுமந்து கைத்தறித் துணிகளை விற்றதாகவெல்லாம் சொல்லப்படுகின்றது--தள்ளுபடி விற்பனையை ஏழையெளிய சாதாரண மக்களும் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் அந்த விற்பனை நிலையத்தை அங்கே திறந்து, தொடர்ந்து நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, நடப்பு ஆண்டிலே அந்த நிலையம் திறக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 1955ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் திறக்கப்பட்ட கடை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சில புள்ளிவிவரங்களையெல்லாம் கொடுத்து, தொடர்ந்து அதிகம் விற்பனையாகியிருக்கிறது என்ற கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். தொடர்ந்து, அதனுடைய 10 ஆண்டு காலக் கணக்குகளையும், மற்ற அளவீடுகளையும் கணக்கிட்ட பின்புதான் வேறு வழியின்றி தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்ட காரணத்தினால், வர்த்தக ரீதியாக

ஆண்டுகூட, சென்னையிலே ஒரு புதிய கடையையும், கர்நாடகத்திலே ஒரு புதிய கடையையும் கோ-ஆப்டெக்ஸ் திறந்திருக்கிறது. எதிர்காலத்திலே இந்த கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தைச் சிறப்பாக ஒழுங்குபடுத்தக்கூடிய முறை வருகின்றபோது, இதுகுறித்துக் கவனிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## 6. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே.ஆர். இராமசாமி, குழுவின் தலைவர்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஆறாவது முதல் நூற்று எட்டாவது வரையிலான பதின்மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாக அளிக்கின்றேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

### கோரிக்கை எண் 29--சமூக நலன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். கோரிக்கை எண் 29-சமூக நலன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 458,26,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2671, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'சத்துணவுப் பணியாளர்களின் பணியை நிரந்தரமாக்கி, குறைந்த பட்ச சம்பளம் ரூ. 1,000/- என்று நிர்ணயம் செய்ய வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 458,26,13,000-ல், ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2926, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட (1) பளிஞ்ச அள்ளி, (2) சின்னவத்தலாபுரம், (3) ஊட்டமலை, (4) செல்லமுடி, (5) அத்திமரத்தூர், (6) எ. எட்டியானஅள்ளி, (7) ஒகேனக்கல், (8) ஜங்கமையனூர், (9) கரியம்பட்டி, (10) மோட்டுப்பட்டி, (11) சின்னப்பள்ளத்தூர், (12) நாகமரை, (13) பழையூர், (14) கீலநாயக்கனூர், (15) தின்னப்பெல்லூர், (16) வண்ணாத்திப்பட்டி, (17) கிட்லகாரம்பட்டி ஆகிய ஊட்டச்சத்து மையங்களில் குழந்தைகள் நல உதவியாளர் காலியிடங்களைப் போர்க்கால அடிப்படையில் நிரப்புவதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 458,26,13,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 246. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கலப்பு மணம் புரியும் தம்பதிகளின் வயது 20-ஆக உள்ளதை 18-ஆகக் குறைக்கவும் மற்றும் கலப்பு மணம் புரிந்த தம்பதிகள் எப்போது வேண்டுமானாலும் விண்ணப்பித்து அரசின் ஊக்கத் தொகையினைப் பெறலாம் என்ற விதியை அமலாக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 458,26,13,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1028, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.



**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பொதுமக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குவதற்கு ஆண்டு வருமானம் ரூ. 12,000 என்பதை ரூ.25,000 என உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,26,13,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1693, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதியில் உள்ள சத்துணவு மைய சமையல் கூடங்களில் கீற்றுக் கொட்டகையை மாற்றி, கட்டடம் கட்டும் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,26,13,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2258, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'விளவங்கோடு ஊராட்சி, அரகநாடு ஆகிய ஊட்டச்சத்து மையங்களுக்கு ஊட்டச் சத்துக்குப் போதுமான நிதி ஒதுக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 458,26,13,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3915, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'சத்துணவில் குழந்தைகளுக்கு வைட்டமின் மாத்திரை கொடுக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 458,26,13,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1829, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Honourable Speaker, Sir,

'To discuss the need to give suitable salary to the employees of Nutritious Noon Meal Scheme in Tamil Nadu,' I move--

"That the allocation of Rs. 458,26,13,000/- under Demand No. 29-Social Welfare be reduced by Rs. 100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2513, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'விதவை, முதியோர் உதவித்தொகையை மேலும் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,58,26,13,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3975, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

***திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'சமூக நலத் துறையின் மூலம் விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், அனாதைப் பெண்கள் ஆகியோர்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் Condensed Course ஆரம்பித்து நடத்த வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 458,26,13,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2596, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'மன்னார்குடி நகரில் ஆதரவற்றோருக்கான இல்லம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 458,26,13,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. முதலில், திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

முற்பகல் 11-30

***திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த விவாதத்திலே பேசுவதற்கு முன்பாக, என்னுடைய நிலக்கோட்டைத் தொகுதி மக்களுக்காக, நீண்ட நாட்களாகக் கேட்டுக்

---

@155 முதல் 230 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

கொண்டிருந்த ஓர் அரசுப் பெண்கள் கல்லூரி கொடுத்ததற்காகவும், சிறுமலை அருவித் திட்டம், பலகோடி ரூபாய்த் திட்டமாகப் போடப்பட்டு, தற்சமயம் அதைக் குறைந்த அளவிலே எடுத்து 'preliminary work' என்ற வகையிலே அதை முதலிலே பார்க்கலாம் என்று அறிவித்திருப்பதற்காகவும், நிலக்கோட்டையிலே தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்று அரசு அறிவித்திருப்பதற்காகவும் நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த, அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, என்னுடைய நல்வாழ்த்துக்களையும் நான் அவர்களுக்குக் கூறிக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோன்று, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும், கல்லூரிக்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், மிகத் திறமையாக, சிந்தனையிலே ஒவ்வொரு விஷயத்தையும் வைத்திருக்கக்கூடியவர்கள்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே சண்டை போட்டாவது முழுமையாக சிறுமலை அருவித் திட்டத்தை வழங்கியிருக்க வேண்டும். ஓரளவு ஒப்புக் கொண்டார்கள். இருந்தாலும், அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், தொழிற்பேட்டை அமைப்பதற்காக, என்னுடைய அருமைத்தம்பி, மாண்புமிகு அமைச்சர் திரு. பெரியசாமி அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியையும் முதலிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூக நலத் துறையின் மூலமாக சில திட்டங்களை, நல்ல திட்டங்களை--உண்மையிலே நான் இந்தப் புத்தகத்தை முழுவதும் படித்துப் பார்த்தேன்; என்றைக்கும் முழுவதையும் படித்ததில்லை; ஆனால், நேற்று இரவு, புத்தகம் முழுவதையும் படித்துப் பார்த்தேன்; அருமையான திட்டங்களை--அழகான முறையிலே, பெண்களுக்காக பல நல்ல திட்டங்களை அரசாங்கம், குறிப்பாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திருமதி சற்குணபாண்டியன் அவர்கள் மிகத் திறமையாக அறிவித்திருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களை, அவர்களுடைய பணி சிறக்க வேண்டும் என்பதற்கான பாராட்டுதல்களை முதலிலே கூறிக் கொள்கிறேன்.



இப்போது நாம் இங்கே போட்டிருக்கிற திட்டங்களிலே, உடல் ஊனமுற்றோர், விதவைகளுக்கு உதவித்தொகை வழங்கல், விதவைகள் மறுமணம் செய்துகொள்வதற்கான பணம், ஏழையெளியோர் கல்யாணத்திற்குப் பணம் என்று பல திட்டங்களைப் போட்டிருக்கிறோம். முதியோருக்கு உதவித்தொகை கொடுப்பதிலேகூட, ஆண் வாரிசு இருந்தால் அதைக் கொடுக்கக் கூடாது என்ற ஒரு நிலையை நாம் வைத்திருக்கிறோம். ஆனால், ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உண்மையிலேயே, ஆண்களை எவ்வளவுதான், ஈ கடிக்காமல், எறும்பு கடிக்காமல், அவர்களுடைய தாய் தந்தையர் வளர்த்து ஆளாக்கி, அவர்கள் சம்பாதிக்கக்கூடிய நிலைமையை உண்டாக்கினாலும்கூட, அந்தத் தாய்க்கும், தகப்பனாருக்கும், அவர்கள் முதிய நிலையை அடைந்துவிடுவார்களேயானால், அவர்களுக்கு எதுவுமே செய்வதில்லை. அவர்களைத் தூக்கி வெளியிலே எறிந்து விடுகிறார்கள். ஆனால், பெண்கள், உள்ளூரிலேயே திருமணமாகி அங்கே இருந்தால், அவர்கள் தங்களுடைய கணவனுக்குத் தெரியாமல்கூட அவர்களுக்கு உணவைக் கொண்டுவந்து கொடுப்பார்கள். ஆகையினால் அந்த நிபந்தனையை மாற்றி ஆண் மகன் இருந்தாலும், சகல பேர்களுக்கும், யார் 60 அல்லது 65 வயதுக்கு மேல் இருக்கிறார்களோ, அத்தனை பேர்களுக்கும் முதியோர் உதவித்தொகை வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் deserted, destitutes, widows, இவர்களுக்கெல்லாம் நான் காங்கிரஸ் ஆட்சியின்போது, ஒரு ஸ்கூலே வைத்து நடத்தினேன். அனாதைப் பெண்கள், விதவைகள், ஆதரவற்றோர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் என்று 18 வயதிலிருந்து 35 வயது வரை இருக்கக்கூடியவர்களைக் கொண்டு அன்றைக்கு நான் ஒரு பள்ளியை வைத்து நடத்தினேன். அந்தப் பள்ளியைத் தொடர முடியவில்லை. காரணம், --ஆக்ஸிடெண்ட்--கார் விபத்தினால் அவஸ்தைப்பட்ட காரணத்தினால் அதை மீண்டும் தொடர முடியாமல் போய்விட்டது. அதிலே எட்டாம் வகுப்பு பாஸ் செய்திருந்தால், பத்தாவது வகுப்பு வரைக்கும் அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து, மீண்டும் அவர்களை ஆசிரியர் பயிற்சிக்கு அனுப்பி, இன்று பலபேர்கள் ஆசிரியர்களாக வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். சிலபேர் 'ரிடையர்' ஆகிவிட்டார்கள். ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், ஒவ்வொரு ஜில்லாவிலும்

இந்தப் பள்ளியை நாம் ஆரம்பித்தோமேயானால், பல ஏழைப் பெண்கள் பிழைப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், I.C.D.S. திட்டம். Integrated Child Development Scheme, இதை 2 அல்லது 3 யூனியன்களிலேதான் நாம் வைத்திருக்கிறோம். இது மிகவும் சிறப்பாக இருக்கிறது. நாம் பெண்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்றால், தமிழகத்திலுள்ள 386 யூனியன்களிலும் இந்தத் திட்டத்தை அமல் நடத்த வேண்டும். இந்தத் திட்டத்தை அமல் நடத்தினால், ஒவ்வொரு யூனியனிலும் 100 இடங்களிலே பால்வாடிகளை, அங்கன்வாடிகளை ஏற்படுத்தலாம். அந்த 100 இடங்களிலும் அங்கன்வாடிகளை ஏற்படுத்தி, இரண்டு வயதிலிருந்து 5 வயது வரை உள்ள குழந்தைகளை அங்கே அனுப்பி, அந்தக் குழந்தைகளைப் பராமரிக்கக்கூடிய நிலைமையை உண்டாக்கி, அவர்களைக் குளிப்பாட்டி, சோப்புப் போட, பவுடர் போட, 'அ'னா, 'ஆ' வன்னா சொல்லிக் கொடுக்க என்று இப்படிப்பட்ட ஒரு நிலைமையை நாம் உருவாக்குவோமேயானால், ஒவ்வொரு அங்கன்வாடியிலும் 3 பெண்களுக்கு நாம் வேலைவாய்ப்புக் கொடுக்கலாம். இந்தமாதிரி நிலக்கோட்டையிலே 123 அங்கன்வாடிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மொத்தமாகப் பார்த்தால், பல ஆயிரக்கணக்கான பெண்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் இந்தநேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-35*

அடுத்து, இன்றைக்கு நாம் பல திட்டங்களைப் போட்டிருக்கிறோம். சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஒரு காலத்திலே, சுதந்திரத்திற்கு முன்பெல்லாம், 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்று சொல்லி பெண்களைப் பள்ளிகளுக்கு அனுப்ப முடியாத சூழ்நிலை இருந்தது. ஆனால் சுதந்திரத்திற்குப் பின்பு, 'இன்றைக்கு ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழுவோம்; இந்த நாட்டிலே பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்', என்கின்ற இலட்சியத்தின் அடிப்படையிலே இன்றைக்கு நாமெல்லாம் இங்கே வந்து அமர்ந்து கொண்டிருக்கிறோம். நான் இந்தநேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால் பஞ்சாயத்து போர்டு,



பஞ்சாயத்து யூனியன்களிலெல்லாம் பெண்களுக்கு 30 சதவிகிதம், 33 சதவிகிதம் வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்த காரணத்தாலே, இன்றைக்கு 12,000-க்கும் மேற்பட்ட பஞ்சாயத்துக்களில் 30 சதவிகிதம் பெண்கள் தலைவர்களாகவும், யூனியன் சேர்மென்களாகவும், ஜில்லாத் தலைவர்களாகவும் இருந்து கொண்டிருக்கிறார்கள். சிறப்பான முறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதில் ஒன்றிரண்டு பேர் வேண்டுமானால் வேறு மாதிரியாக இருக்கலாம். என்னைப் பொறுத்தவரையிலே நான் சொல்லிக்கொள்வது, பெண்கள் பொது வாழ்விலே வரும்போது அவர்கள் மற்றப் பெண்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறார்கள். அதேநேரத்தில் மற்ற ஆண்களும் அவர்களைப் பார்த்து, தன்னுடைய மனைவியையும் மகளையும் பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கின்ற அந்தப் பெண்ணோடு அனுப்பக்கூடிய ஒரு சூழ்நிலை வரும். அந்த அளவிற்கு, பதவிக்கு வரக்கூடிய பெண்கள் நடந்துகொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். ஏதோ ஒன்றிரண்டு பேர் வேறுமாதிரி இருப்பார்கள். நிறையப் பணம் சம்பாதித்து அந்தப்பணத்தை வைத்து, கோட்டை கட்டலாம் என்று நினைப்பார்கள். அந்தமாதிரி இல்லாமல் பெண்கள் பொது வாழ்விலே ஒரு உயர்ந்த நிலையை அடைவதற்கு அவர்களை ஊக்கப்படுத்தும் முயற்சியை அரசு செய்ய வேண்டும்.

நாம் எல்லாத் துறைகளிலும் பெண்களுக்கு 30% வேலைவாய்ப்புக் கொடுக்கிறோம். இப்போது நீங்கள் 78 தையல் தொழிற்சங்கங்களை ஆரம்பித்திருக்கிறீர்கள். அது உண்மையிலேயே மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. அதுமாத்திரமல்ல; இணை உணவு தயாரிப்பதற்காக 26 சங்கங்களை நீங்கள் ஆரம்பித்திருக்கிறீர்கள். அதோடு 13 இதரச் சங்கங்களையும் நீங்கள் ஆரம்பித்திருக்கிறீர்கள். தையல் சங்கங்கள் மூலமாக 34,721 பயனாளிகள் பயன் அடைகின்றார்கள். இணை உணவு தயாரிக்கும் இணை உணவுச் சங்கங்கள் மூலமாக 1457 பயனாளிகள் பயன் அடைகின்றார்கள். அதுபோல, எழுதுபொருள் சங்கங்கள் மூலமாக 960 பேர் பயனடைகின்றார்கள். இதரச் சங்கங்கள் மூலமாக 650 பேர் பயனடைகின்றார்கள். நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் ஆடைகளுக்கு வெளிநாடுகளிலே நல்ல கிராக்கி இருப்பதாகச் சொல்கிறார்கள். அதனால் இந்தத் தையல் சங்கங்களின் மூலமாக நல்ல துணிகளை வாங்கி நல்ல முறையிலே அவற்றைத் தைத்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான ஒரு நல்ல முயற்சியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

எடுப்பார்களேயானால், இன்னும் பல பெண்களுக்கு நாம் வேலைவாய்ப்பைக் கொடுக்க முடியும். அதுபோல சீருடை தைப்பதில் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். 12 வயது, 15 வயது என்று நாம் வயதைப் பார்த்துத் தைத்துவிடுகிறோம். ஆனால் 10 வயதுப் பையன் வளர்ந்துவிடுகிறான். 12 வயதுப் பையன் குட்டையாக இருக்கிறான். 16 வயதுப் பையன் குட்டையாக இருக்கிறான். 15 வயதுப் பையன் வளர்ந்துவிடுகிறான். எனவே, அந்தந்தப் பள்ளிகளில் சொல்லி, அளவை ஒழுங்காக எடுத்து அந்தக் குழந்தைகளுக்கு நல்லமுறையில் நாம் துணிகளைத் தைத்துக் கொடுத்தால் அது போடுவதற்கும் அழகாக இருக்கும், பார்ப்பதற்கும் சிறப்பாக இருக்கும் என்பதை இந்தநேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆயிரக்கணக்கான சங்கங்கள் மூலமாக இந்தத் தையல் தொழிலை ஆரம்பித்து எல்லாப் பகுதிகளிலும் இருக்கும் பெண்களுக்கு நாம் வேலைவாய்ப்பைக் கொடுப்பதற்கான ஒரு முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 'Weaning food' என்று சொல்லக்கூடிய அந்த உணவை காந்திகிராமத்தில் தயாரித்துக் கொடுக்கின்றார்கள். பாசி பருப்பு, கம்பு, கேப்பை இவற்றையெல்லாம் போட்டு அந்த 'Weaning food' தயாரிக்கிறார்கள். கிட்டத்தட்ட 6,806 மெட்ரிக் டன், அந்த உணவு தயார் செய்யப்படுகிறது என்று குறிப்பிலே இருக்கிறது. இது உண்மையிலேயே மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. இந்த அளவுக்கு வேலைகள் நடக்கின்றன என்பது எனக்கு உண்மையிலேயே தெரியாமல் இருந்தது. இந்தத் திட்டங்கள் எல்லாம் எல்லா மாவட்டங்களிலும் பரவ வேண்டும். ஏதோ 75 வட்டங்களில் மட்டும் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. அரசு எல்லாப் பகுதிகளிலேயும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுமேயானால் எல்லாப் பெண்களுக்கும் நல்லமுறையிலே வேலைவாய்ப்பு அளிக்க உதவும்.

அடுத்தது, மகளிர் மேம்பாட்டுத் திட்டம். இந்தத் திட்டம் பன்னாட்டு விவசாய வளர்ச்சிக்கான நிதி நிறுவன உதவியுடன் 75 வட்டங்களில் செயல்படுகின்றது. இந்தத் திட்டத்தின் மூலம் 1,20,276 பெண்கள் பயனடைகின்றார்கள். 1,20,276 பேர் பயனடைகின்றார்கள் என்றால் எவ்வளவு பெரிய திட்டம், சிறப்பான திட்டம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இதை எல்லா மாவட்டங்களுக்கும், எல்லா வட்டங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.



முற்பகல் 11-40

அடுத்து, பன்னாட்டு விவசாய வளர்ச்சிக்கான நிதி நிறுவன உதவியுடன் தொடங்கப்பட்ட, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் கிராமப்புற ஏழைப் பெண்கள் ரூ.1137.23 இலட்சம் சேமித்து, அத்தொகையை சுழலச் செய்து தங்களுக்குத் தேவையான சிறு கடன்களைப் பெற்றுள்ளார்கள். இது ஒரு மிகப் பெரிய, சாலச் சிறந்த, வரப்பிரசாதமான திட்டம் என்றே நான் கருதுகிறேன். பெண்களே பணத்தைச் சேர்த்து, அதை சுழலச் செய்து, வங்கியில் போட்டு, இரட்டிப்பாக்கியப் பிறகு அந்தப் பணத்திலிருந்து கடன் பெறக்கூடிய ஒரு நிலையை உருவாக்கும் இந்தத் திட்டம் மிகப் பெரிய திட்டமாகும். இதனை நான் மனதாரப் பாராட்டுகிறேன். இந்தத் திட்டத்தை எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பன்னாட்டு விவசாய வளர்ச்சி நிதித் திட்டம், மகளிர் திட்டத்தோடு முழுமையாக இணைக்கப்பட்டுவிடும் என்றும், அதன் மூலம், 5 ஆண்டுகளில் குறைந்தது 10 இலட்சம் பெண்கள் பயனடைவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுவும் ஒரு சாலச் சிறந்த திட்டமாகும். இத்திட்டத்தை ஒரு பகுதியில் மட்டும் செய்யாமல், எல்லாப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்திச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மகளிர் தொழிற்பயிற்சித் திட்டம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலமாக மகளிருக்கு 9 வகையான வேலைவாய்ப்புகள் அளிக்கக்கூடிய தொழிற்பயிற்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பை உருவாக்கி இருக்கிறீர்கள். இத்திட்டத்தின் மூலமாக, பெண்கள் எல்லாவிதமான தொழில்களிலும் பயிற்சி பெறுவதற்கான ஒரு வாய்ப்பு உருவாக்கிக் கொடுக்கப்படுவதால், பெண்கள் முன்னேறுவதற்கு உண்டான ஒரு நல்லச் சூழ்நிலை இந்தத் திட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, குழந்தைகள் நலனை எடுத்துக்கொண்டால், பெண் குழந்தைகளுக்கு அரசாங்கம் பல நல்ல திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. உசிலம்பட்டி போன்ற பகுதிகளிலே எல்லாம் பெண்

குழந்தைகள் பிறந்தால், ஒருவகையான நெல்லைக் கொடுத்து குழந்தைகளைக் கொலை செய்கின்ற ஒரு நிலை முன்பு இருந்தது. இன்றைக்கு நம்முடைய அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அந்த நிலையை மாற்றி, பெண் குழந்தை பிறந்தால் அதை அரசே தத்தெடுத்துக்கொள்ளும் நிலையை உண்டாக்கியிருக்கிறார்கள். பெண் குழந்தை பிறந்தவுடன் ரூ. 1,500 கட்டிவிட்டால், அத்தொகை வளர்ந்து அந்தப் பெண்ணின் 20-வது வயதில் ரூ. 29,000 கிடைக்கக்கூடிய நிலை இருக்கிறது. அதேபோல், பெண் குழந்தை பிறந்தவுடன் ரூ. 3,000 கட்டிவிட்டால், அத்தொகை வளர்ந்து அந்தப் பெண்ணின் 20-வது வயதில் ரூ. 58,000 கிடைக்கக்கூடிய நிலைமையும் இருக்கிறது. இதுபோன்ற திட்டங்களை நாம் செய்வோமானால் பெண்கள் நிம்மதியாக இருப்பார்கள். பிறக்கக்கூடிய குழந்தைகளும் எங்களுக்கு அரசாங்கம்தான் தாய், தந்தை என்று சொல்லி, அவர்களும் நிம்மதியாக இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஜப்பான் அரசின் உதவியுடன் சேலம் மாவட்டத்தில் தொட்டில் குழந்தைகள் இல்லம் கட்டுவதற்காக ரூ. 22 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் எங்கெல்லாம் செயல்படுகிறதோ, அங்கெல்லாம் ஜப்பான் நாட்டு நிதி உதவியைப் பெற்று, குழந்தைகள் இல்லம் கட்டிக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்திலே இத்திட்டம் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இத்திட்டத்தை விரிவுபடுத்தி எல்லா மாவட்டங்களிலும் குழந்தைகள் இல்லம் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சத்துணவுத் திட்டத்திற்காக சுவீடன் நாட்டில் இருந்து அரிசி கொடுக்கப்படுகிறது. மத்திய அரசாங்கம் அரிசி கொடுக்கிறது. மத்திய அரசாங்கம் சத்துணவுக்காக 2 இலட்சம் டன் அரிசியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது—முன்பு அது சரியாக வரவில்லை—ஆனால், எல்லா இடங்களிலும், மதிய உணவு அளிக்கும் திட்டத்தை எங்களுடைய தலைவர் காமராஜர் அவர்கள் அன்றைக்குக் கொண்டு வந்தார்கள். அத்திட்டத்தை நம்முடைய மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் விரிவுபடுத்தி, 'சத்துணவுத் திட்டம்' என்று கொண்டு வந்தார்கள். இன்றைக்கு, இத்திட்டம் ஏழை, எளிய மக்களுக்காக சிறப்பாகச் செயல்பட்டுக்



கொண்டிருக்கிறது. இதிலே பலபேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது. இத்திட்டம் நல்லமுறையில் செயல்படுவதற்கு உண்டான வழிவகைகளைச் செய்து கொண்டிருக்கின்ற உங்களுக்கு என்னுடைய நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். 10 இலட்சம் பெண்கள், கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். இத்திட்டத்தை ஒவ்வொரு வட்டத்திலும் ஆரம்பிக்க வேண்டும். முன்பெல்லாம் யூனியன்களில் 'கிராம சேவகிகள்' என்ற வகையில் பெண்கள் இருந்தார்கள். அவர்களுக்கு வேலையே கிடையாது. அலுவலகம் வருவார்கள், 'கல்கி' படிப்பார்கள், 'ஆனந்த விகடன்' படிப்பார்கள், பின்னர் வீட்டிற்குச் சென்று விடுவார்கள். இதுபோன்ற பணியாட்கள் யூனியன்களில் 10 பேர் இருப்பார்கள். அவர்களுக்கு இந்த வேலையைக் கொடுத்து, 10 ஊர்களிலே பெண்கள் கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்க அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, பெண்களை அங்கத்தினர்களாகச் சேர்த்து இந்தக் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பித்தால் பெண்களுக்கான வேலை வாய்ப்புகள் பெருகும். பெண்களுக்கு வேலைவாய்ப்பை இதன்மூலம் நாம் ஏற்படுத்திக் கொடுக்கலாம். இந்த நிலையை உருவாக்க அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண், தன் உள்ள உறுதியைப் பொதுவாக மறந்து அச்சம் என்ற குணநலனைக் காட்டுகின்றவள். தன் அறிவாற்றலை வேண்டுமென்றே மறைத்துக் கொண்டு மடமாகி நிற்பவள். தன் முனைப்புகளை உள்ளீர்த்து நாணம் ஆக்கிக் கொண்டவள். தன் செயல்திறத்தைச் சேமித்து, பயிர்ப்பு என்று சொல்லிக் கொண்டவள். ஆனால் உயிர்ச்சக்தியாக விளங்குகின்றவள். இந்தப் பெண் இனம் உயர வழிவகை செய்து, எண்ணத்தால், எழுத்தால், பேச்சால், செயல்திறத்தால் இமைப்பொழுதும் மறவாமல், மானிட இனத்தின் வலிவற்ற ஒரு பகுதியென ஒதுக்கி வைத்த

இந்தப் பெண் இனம் மேன்மை அடைய வேண்டுமென்பதற்காகப் பாடுபடுகின்ற, டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்தில் சமூக நலத் துறை மூலம் இந்த அரசு அளிக்கும் சலுகைகளை, திட்டங்களை உரிய காலத்திலே ஏற்றுப் பயன்பெற இந்தப் பெண்இனம் முன்வரவில்லையென்று சொன்னால், இனி ஆயிரம் ஆண்டுகள் போனாலும் வழி பிறக்காதே என்ற எண்ணம் மேலோங்க ஒரு சில கருத்துக்களை இந்த மானியத்தில் சொல்லி இந்த அவையினுடைய கவனத்தை ஈர்க்க நான் விரும்புகின்றேன்.

*முற்பகல் 11-45*

"உன் சொந்தத் தங்கைக்காக, அவள் சோபித வாழ்வுக்காக சுருண்டு போனாயே தவிர, நாட்டிலே எத்தனை தங்கைகள் நலிந்து கிடக்கின்றார்கள் என்று நினைத்துப் பார்த்தாயா? உன் சொந்தத் தங்கைக்காக அலையும்போது, வீதியிலே, வேலி ஓரங்களிலே, விழிநீர் பெருகி, வீட்டு வாசல்களிலே, பூங்காக்களிலே விம்மும் குரல்களில் 'பசி, பசி' என்று பதறி அழும் பாவையர்களைப் பார்த்திருப்பாயே, அவர்கள் எல்லாம் யார்? கல்யாணி, கல்யாணி என்று கதறுகின்றாயே, ஒரு கல்யாணி அல்ல, கோடி கல்யாணிகள் கண்ணீரும், கம்பலையுமாகக் கதியற்று நடைப்பிணங்களாக நாட்டிலே நடமாடுகின்றார்களே, அதற்காக உன் நா அசைந்தது உண்டா? உன் நெஞ்சு துடித்தது உண்டா".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அநேகமாக இந்த மாமன்றத்திலே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களுக்கும் இந்த வசனங்கள் நன்றாக நினைவிலே இருக்கும் என்று நான் நம்புகிறேன். 40 ஆண்டுகளுக்கு முன்பு 'பராசக்தி' திரைப்படத்திற்காக விமலா என்ற கதாபாத்திரத்தின் வாயிலாக தமிழக முதல்வர் அவர்கள் எழுதிய வசனம் இது. முதல்வராக வரப் போகிறோம் என்று தெரிந்தா எழுதினார்கள்? தெரிந்து எழுதிய வரிகளா இவைகள்? தீர்க்கதரிசனமாக அவர்கள் அன்றைக்கு எழுதிய அந்த வரிகள், டாக்டர் கலைஞர் அவர்களுடைய உரத்த சிந்தனை என்று சொன்னால், அது இந்தச் சந்தர்ப்பத்திலே மிகை ஆகாது என்றே நான் கருதுகிறேன்.

1989 ஆம் ஆண்டு மே திங்கள் 6 ஆம் நாள் இந்தச் சட்டப் பேரவையில் பெண்களுக்கு சொத்துரிமைச் சட்டம் கொண்டு வந்து, அது நிறைவேற்றப்பட்ட அந்தச் சந்தர்ப்பத்தில் இந்த மாமன்றத்திலே



உறுப்பினராக அமர்ந்திருந்து அதற்கு நன்றி கூறி வரவேற்றுப் பேசுகின்ற பெரும் பேற்றினைப் பெற்றிருந்தேன் என்பதை மகிழ்ச்சியோடு இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சொத்துரிமையோடு கணவன் வீட்டிற்குச் செல்கின்ற பெண்களின் மணவாழ்க்கையினுடைய ஏட்டில் துக்கங்கள் என்ற பக்கங்கள் வெகுவாக இன்றைக்குக் குறைந்துவிட்டன, வரதட்சணைக் கொடுமை அகன்றுவிட்டது எனறு நான் அன்றைக்குக் குறிப்பிட்டுச் சொன்னேன் என்பதையும் இங்கு உரையாற்றுகின்றபோது நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் கண்ட கனவு, நம்மையெல்லாம் வளர்த்து ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவு அத்தனைக்கும் செயல்வடிவம் கொடுத்த, சட்ட வடிவம் கொடுத்த, இந்தப் பெண் இனம் மேன்மையடைய வழிவகை செய்து கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி, நன்றி என்று சொல்லி நெஞ்சாரப் பாராட்ட நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த மானியத்திலே கொள்கை விளக்கக் குறிப்புகள் புத்தக வடிவத்திலே இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மகளிருடைய வாழ்க்கை மேம்பாட்டிற்காக இந்தத் துறை மூலமாக எத்தனை நல்ல அரும்பணிகள் தீட்டப்பட்டிருக்கின்றன என்பதை மரியாதைக்குரிய மூத்த உறுப்பினர் அக்கா பொன்னம்மாள் அவர்கள் சொல்லிவிட்டு இங்கே அமர்ந்திருக்கின்றார்கள். 'ரெபிடிஷன்' என்ற வகையிலே அவற்றைத் திரும்பத் திரும்ப நான் சொல்வது காலவிரயம் என்று கருதுகின்ற அதேநேரத்தில், சமூக நிர்ப்பந்தங்கள் காரணமாகத் திருமணம் செய்துகொள்ள முடியாமல் தவிக்கின்ற அந்த ஏழைக் குடும்பங்களுக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையாருடைய நினைவாக இன்று தமிழக அரசினுடைய சார்பிலே அளிக்கப்படுகின்ற அந்த நிதி உதவித்திட்டம் பற்றி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சந்தர்ப்பத்திலே நான் ஒரு உதாரணத்தை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதிகாச புராணக் காலத்திலே கூட ஜனக மகாராஜன் தன்னுடைய மகளுக்கு சுயம்வரம் நடத்தியபோது, 'எவன் ஒருவன் வில்லை, சிவதனுசை வளைத்து அதனை ஒடிக்கச்

சாத்தியப்பட்டவனாக வருகின்றானோ அவனுக்கே நீ பாத்தியம்' என்று ஒரு கண்டிஷன் போட்டான். அது புராண காலத்திலே வருகின்றது. துருபதநாட்டு மன்னன் துருபதன் தன் மகளுக்கு சுயம்வரம் நடத்தியபோது, 'உன்னுடைய வலது கையை ஒருவன் பற்ற வேண்டுமென்று சொன்னால் ஓர் இலக்கை அவன் அடிக்க வேண்டும், சுற்றுகின்ற சக்கரத்திலே இருக்கின்ற மச்சத்தை அடித்து வீழ்த்த வேண்டும்' என்று ஒரு கண்டிஷன் போட்டான். இது இதிகாசப்புராணம். அதற்குப் பிற்பாடு வந்த சங்கக் காலத்திலேகூட 'காளையை எவன் ஒருவன் அடக்குகின்றானோ அவனுக்கே என்னுடைய கன்னி சொந்தம்' என்றெல்லாம் கண்டிஷன் போட்டார்கள்.

முற்பகல் 11-50

ஆனால் இன்றைக்கு,

'மலைவாழை அல்லவோ கல்வி—அதை
வாயார உண்ணுவாய் போ என் புதல்வி'

என்ற பாட்டு வரிகளுக்கு இணங்க, தாயினுடைய நிலையிலேயிருந்து, தந்தையினுடைய நிலையிலேயிருந்து, கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, 'காளையையும் அடக்க வேண்டாம், வில்லையும் ஒடிக்க வேண்டாம் மகளே, நீ எட்டாவது வகுப்பு வரை படித்து முடித்தால் போதும், தமிழக அரசு உன்னுடைய திருமணத்திற்கு ரூபாய் பத்தாயிரம் வழங்கும்' என்று சொல்லுகிற தாயுள்ளம் இருக்கிறது என்று சொன்னால், இதைவிட சமூக நலனிலே நாட்டம் கொண்ட அரசு எதுவாக இருக்கும் என்பதை நான் இந்தப் பேரவையிலே கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டம். இங்கே கொடுக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித்திட்டத்திற்கு 60 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்கிறபோது, நம்முடைய டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டத்திற்கு என்று கொடுக்கப்பட்டிருக்கின்ற தொகையை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதை என்னுடைய கருத்தாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று



சொன்னால், பெண்கள் கருவுற்ற காலங்களில் ஓய்வாக இருப்பதும், மிக அதிக வேலை செய்யாமல் இருப்பதும், அவசியம் என்கிற உயரிய கருத்தின் அடிப்படையில், கொள்கையின் அடிப்படையில், இன்றைக்கு 2 இலட்சம் ஏழைப் பெண்கள் இந்த நிதி உதவியைப் பெறுவார்கள் என்று சொன்னாலும்கூட, பல இடங்களிலே, இந்த நிதி உதவி போதுமானதாக இல்லை என்கிற குறைபாடு சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கு இருக்கின்ற காரணத்தால் இந்தத் தொகையை இன்னும் அதிகப்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது ஒவ்வொரு தாய்க்கும் மொத்தமாக ரூ. 500/- நிதியுதவி மணியார்டர் மூலமாக அரசு அனுப்புகிறது. அதற்கெல்லாம் நன்றியையும், பாராட்டையும் சொல்கிற இந்த நேரத்தில் அந்தப் பணிக்காக மாவட்ட அளவில், வட்டார அளவில் நியமித்திருக்கின்ற Field Workers இன்னும் கொஞ்சம் இந்தப் பணியில் அக்கறை எடுத்துக்கொண்டு பணியாற்றினால், அரசினுடைய இந்த நலத் திட்டமானது, அடிமட்டத்தில் இருக்கின்ற அந்த மக்களுக்குப் போய்ச் சேருகின்ற நல்ல நிலை ஏற்படும் என்பதை என்னுடைய பணிவான கருத்தாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, சேவை இல்லங்கள். இதன்மூலமாக நீங்கள் பலதரப்பட்ட உதவிகளைச் செய்து வருகின்றீர்கள். உடல் ஊனமுற்றவர்களுக்கும், கணவனால் கைவிடப்பட்ட மகளிருக்கும், விதவைப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் என்று பல உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். உதாரணமாகச் சொல்லப்போனால், தாம்பரம் சேவை இல்லத்தில் தட்டச்சு மற்றும் கருக்கெழுத்து செயலகப் பிரிவு ஒன்று தனியாக இயங்கி வருகிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டுள்ளது. அங்கே ஒரு வருடப் பயிற்சிக்கு 20 பயிற்சியாளர்கள் மட்டும் எடுத்துக்கொள்ளப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இந்த எண்ணிக்கையை நீங்கள் இன்னும் அதிகப்படுத்துவீர்கள் என்று சொன்னால், உடல் ஊனமுற்றவர்கள் வேலைவாய்ப்பில் இன்னும் அதிகப் பயனடைவார்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்தச் செய்திகளை, எல்லாம் சொல்லுகிற இதேநேரத்தில், பணிபுரியும் மகளிர் விடுதிகள் பற்றி நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஓசூரில் மகளிர் விடுதி ஒன்று இருக்கிறது. அதாவது, Working Women's Hostel இருக்கிறது. ஆனால், அதை அடுத்து இருக்கின்ற கிருஷ்ணகிரியில் இல்லை. கிருஷ்ணகிரியிலும் அதிகப்படியான பெண்கள் வேலை நிமித்தம் வெளியூர்களிலேயிருந்து வந்து தங்கியிருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால், அவர்கள் தங்குவதற்குப் போதுமான இடவசதி கிடையாது. எனவே, அரசின் சார்பில் சேவை மையங்களையோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக நீங்கள் ஏற்படுத்திக்கொடுப்பதாகச் சொல்கிற விடுதிகளையோ கட்டிக் கொடுக்க வேண்டும். அப்படியில்லை என்றாலும், அரசுத் துறை மூலமாகவே, கிருஷ்ணகிரியில் பணிபுரியும் பெண்களுக்குத் தங்கும் இடம் --Working Women's Hostel-- ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு மாநிலப் பெண்கள் ஆணையம் தொடங்கப்பட்டுள்ளதாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டுள்ளது. Statutory powers அங்கே இல்லை. இதைத்தான் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பெண்களின் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு மாநிலப் பெண்கள் ஆணையம் தொடங்கப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்த ஆணையத்தில் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் உள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள். அவர்களுக்கு 'ஃபண்ட்ஸ்' குறைவாக இருக்கிறது. அவர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கான 'பவர்' இல்லை. அங்கே நிதி ஆதாரம் அதிகம் இல்லாத காரணத்தால் அவர்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. நானும் அதிலே உறுப்பினராக ஓராண்டுக்காலம் இருந்தேன் என்ற காரணத்தினால் இதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பெண்களுக்கான சட்டத் திட்டங்கள் மற்றும் அவற்றைச் செயலாக்கம் செய்வதற்கு அவ்வப்போது ஆய்வு நடத்துவதற்காக எங்களுடைய குழு கூடுகின்றபோது, statutory powers இல்லாமல் 'inference' என்ற அடிப்படையில் எல்லா நியாயங்களையும் கேட்டுக்கொள்கிறோம். முடிவில் நாங்கள் அவர்களுக்குப் பதில் சொல்லும்போது, எங்களுக்கு உரிமைகள் இல்லாத காரணத்தால், இந்த ஆணையம் ஒரு ஸ்டேஜில் saturation point-ஐ அடையக்கூடிய



சூழ்நிலை இருக்கிறது. எனவே, நீங்கள் அதற்குக் கொடுக்க வேண்டிய சலுகைகளை, உரிமைகளை நிச்சயம் கொடுப்பீர்களேயானால், மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-55

பெண்கள் உரிமைகளைப் பாதுகாக்க, முக்கியமாக அரசு அலுவலர்களுக்கு, அதிலும் குறிப்பாக, காவல் துறை அலுவலர்களுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னொன்றையும் இங்கே சொல்லியிருக்கிறார்கள், அதற்காகவும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது, பெண்கள் குறித்த மனப்பான்மையினை மாற்றிக்கொள்ளும் அவசியம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது முழுவதும் உண்மை. ஏதோ கதை கேட்பதைப்போல கேட்கிறார்கள், ஒரு கியூரியாசிட்டி; என்ன என்று தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, மாமியார் கொடுமை, மருமகள் சண்டை, கணவனால் பாதிக்கப்படுகின்ற கொடுமை, மறறவர்களால் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், கற்பழிப்புகள், மற்ற சில சம்பவங்களுக்கு அவர்கள் ஆளாகி வாழ்க்கையில் அல்லலுற்று இருக்கின்ற பெண்கள், வந்து புகார்கள் சொல்லுகின்ற நேரத்தில், தெரிந்துகொள்ள வேண்டுமென்ற கியூரியாசிட்டி மனப்பான்மையோடு, ஆவலோடு கேட்டுக்கொண்டு, தீர்வு காணுகின்ற நேரத்தில், அதற்குரிய தீர்வினைச் சொல்லமுடியாத ஒரு நிலைமை ஏற்படுகின்றபோது--அதனால் என்ன பயன் என்ற நிலை ஏற்படுகிறது. எனவே நீங்கள், 'ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், பெண்களைக் கண்ணியமாக நடத்த வேண்டுமென்று' குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதைப் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் இதற்கு இன்னும் அதிக அளவில் முயற்சி எடுக்க வேண்டும். குழுக் கூட்டங்களை அதிகமாகக் கூட்டி, முன்னோடிப் பயிற்சி அளித்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த முன்னோடிப் பயிற்சித் திட்டத்திற்கு ரூ. 4.96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் கொஞ்சம் அதிகப்படியாக நிதி ஒதுக்கீடு செய்து கொடுப்பீர்கள் என்று சொன்னால், எங்களுடைய அளவில் தீர்க்கக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அது மிகவும் பயனுடையதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்ட அளவில் சமூக நலத் துறை இருக்கிறது. சமூக நலத் துறையைப் பொறுத்து நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, சமூக நலன் என்பது கிட்டத்தட்ட அரசாங்கத்தை உள்ளடக்கியதாக இருக்கிறது. சமூகத்தினுடைய அனைத்து நலன்களையும் அனைத்துத் துறைகளின் மூலம் பாதுகாக்கின்ற அந்த நேரத்தில், திட்டங்களைச் செயல்திறன் கொண்டதாகக் கொடுக்கிற அந்தக் காலகட்டத்தில், அந்தத் திட்டங்களின் பயன்கள் மக்களைப் போய்ச் சேர வேண்டும். உங்களுடைய துறையிலே இருக்கின்ற அதிகாரிகளைப் பற்றி நான் குறை சொல்வதாகக் கருதிக் கொள்ளக்கூடாது என்று மெத்தப் பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். வட்டார அளவில், 'முக்கிய சேவிகாக்கள்' என்று சிலர் இருக்கிறார்கள். அவர்கள் எப்போது ஒன்றியங்களுக்கு வருகிறார்கள், போகிறார்கள் என்று, சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்குத் தெரியவில்லை. ஏதோ வருகிறோம், பார்க்கிறோம் என்று அவர்கள் இருக்கிறார்கள். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நான் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் செல்கிறபோது, வட்டார வளர்ச்சி அதிகாரியைப் பார்த்துக் கேட்டிருக்கிறேன். பலமுறை அவர்களிடம் விண்ணப்பங்களும் வைத்திருக்கிறேன். ஒரு ரிஜிஸ்டர் மெயின்டெயின் பண்ணுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். யார், எந்த ஒன்றியங்களுக்கு எந்தத் துறையிலிருந்து வந்திருக்கிறார்கள், என்று குறிப்பிட வேண்டும். எந்தத் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அல்லது 'டுவாட் போர்ட்'-தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமாக இருந்தாலும், வேளாண்மைப் பொறியியல் துறையாக இருந்தாலும், வேளாண்மைத் துறையாக இருந்தாலும், சுகாதாரத் துறையாக இருந்தாலும், எந்தத் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் குறிப்பிட வேண்டும். ஃப்ளோரைடு டெஸ்ட் என்று சொல்லிக் கொண்டு அதிகாரிகள் வருகிறார்கள். அதுபோல முக்கிய சேவிகாக்கள் என்று வருபவர்கள், நல மையங்களைச் சேர்ந்தவர்கள், சேவை மையங்களைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு வருகின்றவர்கள், பி.டி.ஓ. ஆபீசுக்குப் போய், நான் இந்தத் துறையைச் சேர்ந்தவன், இந்தப் பணிக்காக இந்த ஒன்றியத்திற்கு அல்லது இந்தக் கிராமத்திற்குச் செல்கிறேன் என்று தெரிவிக்க வேண்டும். 'நான் கருவுற்ற மகளிரைப் பார்க்கச் செல்கிறேன், சத்துணவு மையங்களைப் பார்வையிடச் செல்கிறேன். எனக்குக்கீழ் இத்தனை



ஆயாக்கள் இருக்கிறார்கள்' என்றெல்லாம் அறிவித்துவிட்டுச் சென்றால், எந்தப் பணி, எந்த ஊரில், எந்த அளவுக்கு நிறைவேற்றப்படுகிறது என்பதை அறிந்துகொள்ள சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களைப் போன்றவர்களுக்கு உதவியாக இருக்கும். நாங்கள் செல்லுகின்றபோது, எங்களுக்கு ஒரு வழிகாட்டுதலாக இருக்கும். எனவே, 'விசிட்ஸ்' என்று சொல்லுகிறார்களே, அதை முறையாகச் செய்ய வேண்டும். அதற்கு நீங்கள் தக்க அறிவுரை வழங்க வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேல்மட்டத்தில், அரசாங்க அளவில் அதிகாரிகள் இருக்கிறார்கள். கீழ்மட்டத்தில் பயந்து செய்யக்கூடிய ஆயாக்கள் போன்ற பணியாளர்கள் இருக்கிறார்கள். ஆனால், இடைப்பட்ட அதிகாரிகள் எந்த லெவலில் இருக்கிறார்கள் என்பதை நான் உங்களிடத்திலே பலமுறை பேசி இருக்கிறேன். கேளிக்கை மையங்களாகத் தங்களுடைய பணியிடங்களை அவர்கள் பயன்படுத்தக்கூடாது என்று மெத்தப் பணிவன்போடு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, ஒரு வேண்டுகோளாக வைத்து, நன்றி தெரிவித்து, அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் சமூக நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசக்கூடிய வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மீது எனக்குத் தெரிந்த ஒருசில கருத்துகளை நான் இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன். குறிப்பாக, இந்த நாடு வளமாக இருப்பதற்கு ஏற்ற வகையில் இங்கே வாழக்கூடிய மக்கள் அத்தனைபேரும் தொல்லைகளை மறந்திருக்கக்கூடிய வகையில், பெண்களும், பெண்களுடைய பாதுகாப்பில் இருக்கக்கூடிய குழந்தைகளும் சிறப்பாக இருக்க வேண்டுமென்ற கருத்தில் யாருக்கும் எந்தவிதக் கருத்து வேறுபாடும் இருக்காது என்று கருதுகிறேன்.

*நண்பகல் 12-00*

இப்படிப்பட்ட சூழ்நிலையில் சமூக நலத் துறையின் மூலமாக

கோடிக்கணக்கான ரூபாயை மத்திய, மாநில அரசுகள் மானியமாக, நீண்டகாலக் கடன்களாக, குழந்தைகளுக்கு, பெண்களுடைய முன்னேற்றத்திற்கு, முதியோர்களுக்கு, வயது வந்தவர்களுக்கு, நோய்வாய்ப்பட்டவர்களுக்கு, கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கு, கலப்புத் திருமணம் செய்பவர்களுக்கு--இப்படிப்பட்டவர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை எல்லாம் அரசு முழுமையாகச் செய்து வரக்கூடிய இந்தக் காலகட்டத்தில், அந்தப் பலன்கள் முழுமையாக அந்த மக்களுக்கு, அந்தப் பயனாளிகளுக்குச் சென்று அடைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், அரசு நினைக்கின்ற அந்த அடிப்படை நோக்கம் முழுமையாக நிறைவேறுவது இல்லை என்பதை நான் மாத்திரமல்ல, கொள்கைக் குறிப்பேட்டிலே தெள்ளத் தெளிவாக மாண்புமிகு அமைச்சர் அவர்களும் எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். இதை நான் கூறுவதற்குக் காரணம், இன்று நாட்டில் இருக்கக்கூடிய அரசியல்வாதிகளாக இருந்தாலும், அதிகாரிகளாக இருந்தாலும், பணியாளர்களாக இருந்தாலும், நாடு, தேசம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் எல்லோரும் ஒரே குடும்பம் என்ற எண்ணத்தின் அடிப்படையில், எந்த நோக்கத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றதோ, அந்த ஒதுக்கீடு ஏழை எளியவர்களை, தாழ்த்தப்பட்ட மக்களை, வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருக்கிறவர்களை, பெண்களை, குழந்தைகளைச் சென்று அடைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், அரசியல்வாதிகளாக இருக்கக்கூடிய நம்மைப் போன்றவர்களும், அதிகாரிகளும், பணியாளர்களும் சிறப்பாகப் பணியாற்றினால்தான் இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட முடியும் என்பதை நான் அன்போடு இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைக்கு கலைஞருடைய அரசு எந்த அளவிற்கு அதிகபட்சமாக ஏழை எளியவர்களுக்குச் செய்ய முடியுமோ, அதைச் செய்ய வேண்டுமென்று நினைத்தாலும்கூட, இந்த சமூக நலத் துறையிலே மாத்திரமல்ல, எல்லாத் துறைகளிலும், எல்லா வழிகளிலும் எப்படியாவது தமிழகத்தை ஒரு வளமான தமிழகமாகக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் செயல்பட்டாலும்கூட, முழுமையாக அந்த எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு இங்கே இருக்கக்கூடிய சில அரசியல் கட்சிகளும், அதிகாரிகளும், பணியாளர்களும் முழுமையாக நம்மோடு ஒத்துவரவில்லை என்பதை ஏற்று, எதிர்காலத்தில் அத்தனை பேரும்



ஒத்துவரக்கூடிய அளவிலேயும், இந்தத் திட்டங்கள் எல்லாம் முழுமையாக மக்களைச் சென்றடையக்கூடிய வகையிலேயும் நமது செயல்பாடுகள் அமைவதற்கு, எல்லோரும் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டுமென்று அன்போடு இந்தநேரத்திலே கேட்டுக் கொள்கின்றேன்.

குறிப்பாக, குழந்தைகளினுடைய வாழ்வு சிறப்பாக இருக்க வேண்டும். அந்த இளம் வயதிலே இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு தடுப்பூசி போடக்கூடிய சூழ்நிலையை, தகுந்த சரியான உணவு கிடைக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக மரியாதைக்குரிய மறைந்த பெருந்தலைவர் காமராசர் அவர்கள் ஆரம்பித்து வைத்த அந்த சத்துணவுத் திட்டம் படிப்படியாக விரிவாக்கப்பட்டு, புரட்சித் தலைவர் அமரர் எம்.ஜி.ஆர். மூலமாக அது வேகமாக அதிகப்படுத்தப்பட்டு, அதற்குப் பின்னர் அது இன்றைய முதல்வர் அவர்கள் மூலமாக வேகமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில், நல்ல உணவு கொடுத்தால்தான் குழந்தைகளினுடைய படிப்பு, மூளையினுடைய வளர்ச்சி நன்றாக இருக்கும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயும், இங்கே இருக்கக்கூடிய பெண்களுக்கு முழுமையான வாழ்வு கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேயும் பல்வேறு நலத் திட்டங்களை--தையல் மெஷின்கள் கொடுத்தும், அதேபோல குழந்தைகளுக்கு இல்லங்களை ஏற்படுத்தியும், அந்தப் பெண்களுக்குத் தொழிற் பயிற்சிகளைக் கொடுத்து சுயமாக வாழ்வதற்கு ஏற்றவகையிலேயும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு மறுவாழ்வு இல்லங்களிலே அடைக்கலம் கொடுத்தும், அவர்களுக்குக் குழந்தைகள் இருக்குமேயானால், அவர்களையும் அரவணைத்துச் செல்லும் வகையிலேயும் பல்வேறு நலத் திட்டங்களைச் --செயல்படுத்தி வருகிறார்கள்.

கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே, ஒவ்வொரு ஒன்றித்திலேயும் 30 மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டு, *11,540* குழுக்கள் தமிழகத்திலே ஏற்படுத்தி இருப்பதாகக் குறிப்பிட்டு இருக்கின்றார்கள். என்னைப் பொறுத்தவரையில் எங்களைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அன்றாடம் தொகுதியில் இருக்கின்ற நேரத்தில் எல்லாம் ஊராட்சி ஒன்றியத்திற்குச் செல்லக்கூடியவர்கள். என்னைப் பொறுத்தவரையில் இந்தக் கொள்கைக் குறிப்புகள் ஏட்டளவிலே இருக்குமேயொழிய, உண்மை நிலை என்னவென்றால், ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் *30*

குழுக்களைப் பெயரளவிலே எழுதி வைத்து உங்களுக்கு அனுப்பி இருப்பார்களேயொழிய, நூற்றுக்கு நூறு சதவீதம் அது அங்கே உண்மையல்ல என்பதையும், எதிர்காலத்திலே நீங்கள் சொல்லி இருப்பதைச் செயல்படுத்துவதற்கு என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்ய வேண்டும் என்பதை அன்போடும் பணிவோடும், வணக்கத்தோடும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், சொல்வது ஒன்றாக இங்கே இருக்கக்கூடிய நிலையில், ஒவ்வொரு பகுதியிலேயும் 30 குழுக்கள் வீதம் மொத்தம் 11,540 குழுக்கள் அமைத்து, இங்கே சுத்தமாக, சுகாதாரத்தோடு இருக்க வேண்டும்; சுற்றுச் சூழலைச் சுத்தமாக வைத்துக் கொள்வதற்கு, சீரான முறையில் சத்துணவை வழங்குவதற்கு, குழந்தைகளினுடைய வளர்ச்சியிலே நம்மைப் போன்றவர்களுடைய ஒத்துழைப்பு இருக்க வேண்டும் என்று கலந்துரையாடுவதற்கு ஏற்ற வகையில் இந்தக் குழுக்களை அமைத்து நாம் எண்ணுகின்ற எண்ணத்தின்படி செயல்பட்டால் உண்மையாகவே நாடு தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய அளவில் நமது முன்னேற்றம் அமையும். ஆக, அப்படிப்பட்ட சூழ்நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இங்கே அதிகாரிகள் சொல்வதை வைத்து கொள்கைக் குறிப்புகளைத் தயாரித்திருந்தாலும்கூட, 11,540 குழுக்கள் என்பது உண்மையிலேயே இல்லை. அப்படியிருந்தால் ஏட்டளவில்தான் இருக்கும். என்ன சொன்னீர்களோ அதை எதிர்காலத்தில் செயல்படுத்துவதற்கு ஏற்ற வகையில் உங்களுடைய செயல்பாடுகள் அமைய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

குறிப்பாக, பல்வேறு உதவிகள் பெறுவதற்கு, வருமானத்தின் வரம்பு 12,000/-க்குள்ளாக அல்லது ரூ. 6,000/-க்குள்ளாக இருக்க வேண்டுமென்று வைத்திருக்கிறீர்கள். அன்றைக்கு இருந்த சூழ்நிலைகள் எல்லாம் மாறிவிட்டன. சாதாரண விவசாயக் கூலிகூட குறைந்தபட்சம் ரூ. 30-லிருந்து ரூ. 75 வரை பெறுகிறார்கள். பெண்கள் ரூ. 20-லிருந்து 40 ரூபாய் வரை சம்பாதிக்கக்கூடிய காலகட்டத்தில், குறைந்தபட்ச ஆண்டு வருமானம் 15,000 ரூபாய் என்ற அளவுக்காவது வைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.



குறிப்பாக, சலவைப் பெட்டிகள் வழங்குவதற்கு, தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்குவதற்கு, ஆண்டு வருமானம் ரூ. 6,000/-க்கு மேற்படாமல் இருக்க வேண்டுமென்று சொல்லி, அதற்கு சான்றிதழ் வாங்கிக் கொண்டு வர வேண்டுமென்று அங்கே இருக்கிற அதிகாரிகள் கூறுகிறார்கள். எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அங்கே இருக்கக்கூடிய ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எங்களைப் போன்றவர்கள் அதைச் செய்யவில்லை என்றால், நாங்கள் தகுதியற்றவர்களாக அந்த மக்களால் தூற்றப்படுவோம். அந்த நிலையில் அதிகாரிகளை அணுகி, கெஞ்சவேண்டிய நேரத்தில் கெஞ்சி, ரூ. 6000/- தான் வருமானம் என்று சொல்லி, பொய் சான்றிதழைப் பெற்று, அவர்களுக்குச் சலவைப் பெட்டிகளையும், தையல் இயந்திரங்களையும் வாங்கிக் கொடுத்து வருகிறோம். இதை நான் சொல்வதற்குக் காரணம், குறைந்தபட்ச வாங்கும் சக்தி அதிகமாக ஆகியிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், மக்களுடைய வருமானம் அதிகமாகியிருக்கிற இந்தக் காலகட்டத்தில், கடந்த காலத்தில் இருந்த ரூ. 6000/-, ரூ. 12,000/- வரம்பு என்பதை மாற்றியமைத்து ஆண்டு வருமானம் ரூ. 15,000/- வரை இருக்கலாம் என்ற சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

3000 தையல் இயந்திரங்கள் கொடுப்பதற்காக இந்த ஆண்டு 54 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகக் கொள்கைக் குறிப்பில் கூறியிருக்கிறீர்கள். தையல் இயந்திரம் என்பது, பெண்கள் நாள் ஒன்றுக்குக் குறைந்த அளவாக ரூ. 100 சம்பாதிக்கக்கூடிய அளவில் இருக்கிறது. ஆகவே இந்த ஆண்டு 3000 தையல் இயந்திரங்கள் என்பதை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி அமைச்சர் அவர்கள் 5000 தையல் இயந்திரங்கள் என்று உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, மாவட்ட அளவில் இருக்கிற சமூக நல அதிகாரிகள் ஊனமுற்றோர்களிடமிருந்து மனுக்களைப் பெறும்போது, அந்த உடல் ஊனமுற்றோர்கள் தங்களைத் தேடி வர வேண்டுமென்று நினைக்காமல், அதிகாரிகளே ஊனமுற்றோர்களைத் தேடிச் சென்று உதவ வேண்டுமென்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்கிற வகையில் அமைச்சர் அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். நாம் தீட்டக்கூடிய திட்டங்கள், உண்மையாகவே, ஏழை எளியவர்களுக்கு, உடல் ஊனமுற்றவர்களுக்குப் போய்ச் சேர

வேண்டுமானால், மாவட்ட சமூக நல அதிகாரிகள், அவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெறுகிறபோதே, அந்த ஊனமுற்றவர்களின் இல்லத்திற்கே நேரில் சென்று உதவி செய்தால்தான் உண்மையாகவே இந்த நலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும். ஊனமுற்றவர்களுடைய உறவினர்கள், அவர்களை அலுவலகங்களுக்குத் தூக்கிக்கொண்டு வரக்கூடிய சூழ்நிலைகள் எல்லாம் இப்போது இருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பல திட்டங்களுக்கு நாம் கோடிக்கணக்கான ரூபாய்களை அள்ளி அள்ளிக் கொடுக்கிறோம். பன்னாட்டு நிறுவனங்களின் மூலமாக 1440 கோடி ரூபாயைப் பெறுகிறோம். 5 ஆண்டுகளுக்குள், 10 லட்சம் பெண்களை முன்னேற்ற முடியும் என்று சொல்கிறோம். இந்த ஆண்டில் 3 லட்சம் பெண்களுடைய வாழ்வு சிறப்பாக அமைகிற வகையில் 424 கோடி ரூபாய் கொடுத்து, அந்த இலக்கை சிறப்பாக எய்த வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில், மாவட்ட அதிகாரிகள், எங்கெங்கு குறைகள் இருக்கின்றனவோ, அங்கே அவர்கள் சென்று அந்த மக்களைப் பார்த்து, தேவையான உதவிகளை ஆங்காங்கு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் திட்டங்கள் முழுமையாக நிறைவேறும்.

எங்களைப் போன்ற எம்.எல்.ஏ.க்கள் தலையிட்டாலும்கூட, திட்டங்களின் பலன்களை விரைவாகப் பெற முடியவில்லை. அது திருமண உதவித் திட்டமாக இருந்தாலும் சரி, ஓய்வூதியப் பலன்கள் கிடைக்காமல் இருந்தாலும் சரி, கலப்புத் திருமண உதவித் திட்டமாக இருந்தாலும் சரி, விபத்துக் காப்பீட்டுத் தொகையாக இருந்தாலும் சரி, இத்திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்படுவதற்கு, எங்களைப் போன்றவர்கள் நேரடியாகத் தலையிட்டும், காலதாமதமாகச் சென்று கொண்டிருக்கிற சூழ்நிலையில், சாதாரண ஏழ்மை நிலையில் இருப்பவர்களும், சாதாரண மக்களும், குப்பனும், சுப்பனும் எப்படி உதவிகளை விரைவில் பெறமுடியும் என்பதைக் கருத்தில் கொண்டு சமூக நலத் துறை அதிகாரிகளை நான் அன்போடு கேட்டுக்கொள்வது எல்லாம், ஏழை எளிய மக்கள் முன்னேற, குறிப்பாக, குழந்தைகளும் பெண்களும் முன்னேற, தொழு நோயாளிகள் முன்னேற சமூக நல அதிகாரிகள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 12-10

அடுத்து, இங்கே கிராமங்களிலேயிருந்து .... (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். எல்லா மாவட்டங்களிலிருந்தும் இங்கே வேலையிலே இருக்கக்கூடிய பெண்களுக்கெல்லாம் இங்கே விடுதிகள் ஏற்படுத்துவதாகக் கூறியிருக்கின்றீர்கள். அதிலே, குறிப்பாக அதாவது ரூ. 5000/-த்திற்கு மேல் வருமானம் வரக்கூடாது என்று கூறியிருக்கின்றீர்கள். ஆனால் அந்த வருமான வரம்பை வைக்க வேண்டிய அவசியமே இல்லை என்பது என் கருத்து. ஒரு பெண் தனியாக வந்து, அங்கே அவர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான் இந்த மாணவியர் விடுதி இருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே, அந்த ரூ. 5000 என்ற உச்சவரம்பை நிர்ணயிக்க வேண்டிய அவசியமே இல்லை. யாராக இருந்தாலும் பெண்கள் அங்கே வந்து பாதுகாப்போடு தங்கக்கூடிய அளவில், உணவும் கொடுக்கக்கூடிய அளவில் அத்தனை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

குறிப்பாக, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு முழுமையாக அரசு உதவ வேண்டும். அரசே இன்னும் எதிர்காலத்திலே எல்லாவற்றையும் முழுமையாகச் செய்துவிட முடியாது. குறிப்பாக, அரசு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையெல்லாம் முழுமையாக [illegible]டுபடுத்தி, எப்படி இங்கே இருக்கக்கூடிய தனியா[illegible] தொழிலதிபர்களையும் அழைத்து, இங்கே இருக்கின்ற ஆரம்பச் சுகாதார நிலையங்களையெல்லாம் அவர்கள் மூலமாக நடத்த வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறீர்களோ, அதேபோல தொண்டு நிறுவனங்களின் மூலமாகக் கோரிக்கை விடுத்து அந்தந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களாக இருந்தாலும் சரி, மகளிருடைய விடுதிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் மூலமாக நிறைவேற்றப்பட வேண்டும்.

முன்பு 1976-லே மறைந்த முன்னாள் பிரதமர் மாண்புமிகு மொரார்ஜி தேசாய் அவர்கள், பிரதமராக இருந்த காலத்தில், தொழிலதிபர்களையெல்லாம் அழைத்துப்பேசி, அவர்களின் தொழிற்சாலைகளின் மூலமாக வரக்கூடிய இலாபத்தில் அவர்கள் எந்த அளவிற்குத் தொண்டு நிறுவனங்களுக்கு உதவுகின்றார்களோ, அவர்களுக்கு அந்த அளவுக்கு முழுவதுமாக வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று சொல்லி, பல்வேறு தொண்டு

நிறுவனங்களையெல்லாம் இதுபோன்ற பணிகளிலே 1997 முதல் 1980 வரை ஈடுபடுத்தினார்கள். அதேபோல இங்கே தமிழகத்திலேயும், எதிர்காலத்திலே தொண்டு நிறுவனங்களை முழுவதுமாக நம்பி அரசோடு ஒத்துழைப்பு கொடுக்க அத்தனை பேரையும் வரவழைத்து இதுபோன்ற திட்டங்களை ஒப்படைத்தால் நாடு எதிர்காலத்தில் வளமாக இருக்கும். இதற்கு தமிழகத்தில் வாழுகின்ற அத்தனை பேரும் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு, இறைவனுடைய அருள் கிடைக்க வேண்டுமென்று கேட்டு, இந்த நல்ல வாய்ப்பினை நல்கிய உங்கள் அத்தனை பேருக்கும் நன்றி கூறி, எனது உரையை நிறைவு செய்கின்றேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலன் குறித்த மானியக் கோரிக்கையின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பைக் கொடுத்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொதுவாக, சமூக நலன் என்பது கடந்த சில ஆண்டுகளாக ஜாதீயக் கூட்டமைப்புகளுடைய வலுவான ஆதிக்கத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஜாதீய ஆதிக்கத்தைத் தகர்ப்பதற்கான நடவடிக்கைகளைச் சமூக நலத் துறையின் மூலமாக மிக வலிமையோடு மேற்கொள்ள வேண்டிய நிலையிலேதான் இந்த மானியக் கோரிக்கை மீது விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. ஜாதீயக் கட்டுமானத்தைத் தகர்ப்பதற்கான முறையில் கலப்புத் திருமணங்களை ஊக்குவிப்பதற்கான ஒரு நடைமுறை அரசாங்கத்தால் தொடங்கி வைக்கப்பட்டது. அந்த நடைமுறையில், அதற்கு ஊக்கத் தொகை, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் ரூ. 10,000 வரையிலும், ஆதிதிராவிடர்கள், பட்டியல் சாதியினர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் 20,000 ரூபாய் வரையிலும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இப்படி உதவித் தொகை கொடுப்பது மட்டுமே ஜாதி சமயம் அற்ற சமுதாயத்தை உருவாக்கக்கூடிய அளவிற்கு, கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்கிற நடவடிக்கைகளுக்குப் போதுமான அளவுக்கு இல்லை என்பதை நம்முடைய அனுபவம் காட்டுகிறது. இன்றைக்கு இந்த ஜாதீயக் கலப்புத் திருமணங்களைக் குறித்து விவாதங்கள் சமூக



அரங்கங்களிலும், உயர் நீதிமன்றங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நேரத்தில், ஜாதிக் கட்டுமானத்தை அடியோடு தகர்க்கவல்ல பல வழிமுறைகளையும், கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்கிற வகையில் வேறு என்னென்ன மாதிரியான வழிமுறைகளைப் பின்பற்றலாம் என்பதைக் கண்டறிய வேண்டும் என்பதற்கான முறையில் ஒரு குழு அமைப்பது மிக மிக அவசியம் என்று நாங்கள் கருதுகின்றோம்.

அதைப்போல, ஏற்கெனவே பல உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல, சமூக நலத் துறையால் வழங்கப்படுகிற பல்வேறு சலுகைகளைப்பெற வருமான வரம்பு இருக்கிறது. அதுவும் ஆண்டு வருமானம் ரூ. 12,000 என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைய விலைவாசி அடிப்படையிலும், குறைந்தபட்ச ஊதியம் என்கிற அடிப்படையிலும், அந்தச் சட்டங்கள் நிர்ணயித்திருக்கிற ஊதிய விகிதத்தின் அடிப்படையிலும், ஆண்டு வருமானம் 12,000 ரூபாயைத் தாண்டிய நிலையில்தான் உள்ளது. இதற்கும் மேல்தான் சான்றிதழ்களைப் பெறக்கூடிய நிலைமை எல்லா இடங்களிலும் இருக்கிறது. எனவே நம்முடைய அரசாங்கம் அந்த நிலைமையைப் பரிசீலித்து, ஆண்டு வருமான வரம்பைக் குறைந்தபட்சம் ரூபாய் 25 ஆயிரம் என்ற அளவிற்கு எல்லா இனங்களிலும் உயர்த்த வேண்டியது மிகமிக அவசியம் என்பதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

D 12", 31 N97 N99.47.1

பிற்பகல் 12-15

அதேபோல விதவை மகள் திருமண உதவித் திட்டத்தில் ரூ. 3,000 வழங்கப்படுகிறது. அதற்கு 21 வயது இருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெண்களுக்குத் திருமண வயது 21 என்று நாம் பிரச்சாரம் செய்து, அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டாலும், 18 வயதில் திருமணமானவர்களுக்கும் அந்தச் சலுகையை வழங்குவதற்கான வாய்ப்புகளை அரசு உருவாக்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, சில குறிப்பிட்ட பிரச்சினைகள் பற்றி நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

முதலாவதாக, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் குறிப்பிட்டதைப்போல, மண்டல் கமிஷன் 1993 ஆம் ஆண்டிலே

24462

அவசரக்கோலத்திலே இங்கே அமைக்கப்பட்டது. இந்தப் பெண்கள் கமிஷனுக்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. ஓர் ஆலோசனைக் குழு என்ற அடிப்படையில் விவரங்களைச் சேகரிக்கிற முறையிலேதான் அந்தக் கமிஷன் அமைந்திருக்கிறது. மாநில பெண்கள் ஆணையத்தைப் போல, தேசிய அளவிலே ஒரு கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. தேசிய அளவிலே பெண்களுக்கான ஆணையம் அமைக்கப்பட்டபோது, பெண்களுடைய நல அமைப்புகள், பெண்கள் நலனில் அக்கறை கொண்டு செயல்படக்கூடிய எல்லா மாதர் சங்க அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் எல்லாவற்றையும் அழைத்து, அவர்களுடைய கருத்தறிந்து, அதனுடைய அடிப்படையில் மிக நல்லமுறையில், மத்திய அரசாங்கத்தால், இந்திய அரசாங்கத்தால் பெண்கள் ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதே வழிமுறையைப் பின்பற்றி, தமிழ்நாட்டிலும் ஒவ்வொரு மாதர் அமைப்புகளையும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் அழைத்து பெண்களுக்கான பாதுகாப்பு குறித்து கருத்தறிய வேண்டும். இன்றைக்கு பெண்களுக்கு இழைக்கப்படுகிற கொடுமைகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், பல்வேறு விவரங்களை எடுத்துச் சொல்ல முடியும். இருந்தாலும் அந்த விவரங்கள் எல்லாம் அரசின் கவனத்திலும் இருக்கும் என்ற காரணத்தால், அதிலும் குறிப்பாக, அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு, ஏராளமான முறையீடுகளும், கோரிக்கைகளும் வந்திருக்கும் என்ற காரணத்தால், நான் அதுபற்றி விவரிக்க விரும்பவில்லை. எனவே, பெண்களுக்கு இழைக்கப்படுகிற பாலியல் பலாத்கார நடவடிக்கையிலிருந்து மற்ற பல நடவடிக்கைகளையும் தடுப்பதற்கான உரிய அதிகாரத்தைக்கொண்ட ஒரு வலுவான மாநில பெண்கள் ஆணையத்தை அமைப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கிராமப்புறங்களில் இன்றைக்குப் பல்வேறு திருமணங்கள் பதிவு செய்யப்படாமலேயே நடந்து விடுகின்றன. பதிவு செய்யப்படாமல், பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நடைபெறுகிற அந்தத் திருமணங்கள், வரதட்சணை என்ற வகையிலோ, வேறு வகையான சமூக இடர்ப்பாடுகளுக்கோ ஆட்படுகிறபோது, அந்தத் திருமணப் பத்திரிகைகூட இல்லாத நிலையில் சில சங்கடங்கள், சில குடும்பங்களுக்கு ஏற்பட்டுவிடுகின்றன. எனவே, ஒவ்வொரு திருமணமும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பதிவு செய்யப்பட வேண்டும். பிறப்பு இறப்பு பதிவு செய்யப்பட



வேண்டும் என்பது எப்படிக் கட்டாயமாக்கப்பட்டிருக்கிறதோ, அறிவுறுத்தப்பட்டிருக்கிறதோ, அதேபோல இந்தத் திருமணங்களும் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதை நம்முடைய அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதேபோல, பாலியல் பலாத்காரம் என்று குறிப்பிடுகிறபோது, பொதுவாக எல்லோரும் இளம் பெண்களைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பெருநகரங்களில் வீடுகளில் வேலை பார்க்கக்கூடிய 5 வயது சிறுமிகளிலிருந்து, பல தரப்பினருக்கும் பல்வேறு தாக்குதல்கள் ஏற்படுவது இன்றைக்குச் செய்திகள் வழியாக நமக்குக் கிடைக்கிறது, அனுபவம் வழியாகவும் கிடைக்கிறது. பாலியல் பலாத்காரம் என்பதை, அதற்கான அர்த்தத்தைப் பலவகையிலே விரிவுபடுத்தி, சிறு குழந்தையிலிருந்து, வீட்டு வேலை செய்யக்கூடிய சிறுமிகள் வரை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையிலே சில புதிய சட்டங்களை நம்முடைய அரசு உருவாக்கிட வேண்டும். கர்நாடக மாநிலத்திலே அப்படிப்பட்ட சட்டமிருக்கிறது; கேரள மாநிலத்திலே அப்படிப்பட்ட சட்டம் இருக்கிறது. அதையெல்லாம் ஆய்வு செய்து புதிய சட்டத்தை உருவாக்குவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேபோல, குறிப்பிட்ட ஒரு நிகழ்வைப்பற்றி அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஏற்கெனவே அமைச்சருடைய கவனத்திற்கு அது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழக அச்சகம் ஒன்று, சிவகாசி கூட்டுறவுத் தொழிற்பேட்டையில் இயங்கி வருகிறது. கிண்டியிலும் ஓர் அச்சகம் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1987 ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்ட இந்த அச்சகத்தில், இன்றைய அளவிலே பார்க்கும்போது, ஏறத்தாழ 80 பேர் பணிபுரிகிறார்கள். 80 பேரும் பெண்கள், அவ்வளவு பேரும் ஊனமுற்றவர்கள் என்ற அடிப்படையில் அந்தத் தொழிற்சாலையை நீங்கள் பரிவோடு கவனத்தில் கொள்ள வேண்டும். அங்கே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம்கூட இல்லாத அளவிற்கு, வேலை நிரந்தரம் இல்லாத அளவிற்கு, மிகவும் அவலமான வாழ்க்கை வாழ்வதாக அவர்கள் முறையிட்டிருக்கிறார்கள். எனவே, இதிலே நீங்கள் கவனம் செலுத்தி, அவர்களுக்கு முழு அளவிற்கு வேலைப் பாதுகாப்பு, தொடர்ந்த வேலைவாய்ப்பு, அவர்களுடைய ஊதிய உயர்வுக்கான

நிலைமைகள் எல்லாவற்றையும் உருவாக்குவதற்கு நம்முடைய சமூக நலத் துறை முயற்சி எடுக்க வேண்டும்.

*பிற்பகல் 12-20*

அதேபோல் பார்வையற்றோர் பிரச்சினை. பார்வையற்றோர் உடல் ஊனமுற்றவராக வரையறுக்கப்பட்டிருக்கிறது. பார்வையற்றோருக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த இலவச பஸ் பாஸ் மூலம் பயணம் செய்யக்கூடிய தூரம் 100 கிலோமீட்டர் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இங்கேயிருந்து கோவைக்குச் செல்ல வேண்டும் என்று ஒரு பார்வையற்றவர் விரும்பினால், அவரால் செல்ல முடியாது. நிச்சயமாக, பார்வையற்றவர்களைப் போன்ற ஊனமுற்றவர்கள் எல்லாம் அனாவசியமாக இந்த இலவச பஸ் பாஸ் பயணத்தைப் பயன்படுத்தப் போவதில்லை. எனவே, நீங்கள் அருள்கூர்ந்து இதைப் பற்றிச் சிந்தித்து--இலவச பஸ் பாஸினுடைய பயண தூரத்தை வரையறுக்காமல், பார்வையற்ற அனைவருக்கும் எல்லா இடங்களுக்கும் செல்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும். இதிலே தூர வரம்பு வைத்துக் கொள்ளக்கூடாது என்பதை நான் வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் பார்வையற்ற மாணவர்கள். தங்களுக்கு வேண்டிய உதவியாளர் ஒருவரை நியமித்துக்கொள்கிறபோது, அந்த உதவியாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற உதவித் தொகை 15 ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1981 ஆம் ஆண்டிலே நிர்ணயிக்கப்பட்ட இந்தத் தொகை எந்தவிதமான மாறுதலுக்கும் ஆட்படுத்தப்படாமல் இருப்பது எந்தவகையிலும் ஏற்புடையதல்ல. எனவே, பார்வையற்ற மாணவர்கள் தங்கள் தேர்வுகளை எழுதுகிறபோது, அவர்கள் வைத்துக்கொள்கிற உதவியாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற உதவித்தொகையை ஏறத்தாழ 100 ரூபாய் அளவிற்கு உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பார்வையற்றோர்களுக்காக இட ஒதுக்கீடு அரசால் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த இட ஒதுக்கீட்டின்படி பல இடங்களில் பதவிகள் நிரப்பப்படாமல் இருக்கிறது. அதற்குப் போதுமான தகுதி உள்ள நபர்கள் இல்லாமல் இருக்கிறார்களா என்பதைப் பற்றி



என்னுடைய கையிலே விவரங்கள் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடல் ஊனமுற்றோர்களுக்காக வழங்கப்பட்டிருக்கிற இட ஒதுக்கீட்டில் தகுதியுள்ள பார்வையற்றோர்கள் இருப்பார்களானால் அவர்களை வைத்து, அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதிலே உள்ள இன்னொரு பிரச்சினை தற்போது கவனத்திற்கு வந்திருக்கிறது. பார்வையற்றோர் என்றால், அதிலே பிறவிக் குருடர்கள் இருக்கிறார்கள். சில பேர் ஆரம்பத்திலே கண் தெரிந்தவர்களாக இருந்து நாளாக, நாளாகக் கண் பார்வை குறைந்து, பெரும் பகுதி கண் பார்வை குறைந்துவிட்ட நிலையில் பல பேர் இருக்கிறார்கள். என்னுடைய கையிலேகூட இரண்டு சகோதரிகளுடைய விண்ணப்பங்கள் இருக்கின்றன. இவர்கள் எல்லாம் பிறக்கும்போது பார்வையோடு பிறந்தவர்கள். நாளாக, நாளாக, அவர்களுடைய பார்வை மங்கிப் போய்விட்டது. எந்த சிகிச்சை முறையிலும், அவர்களுக்குப் பார்வை கிடைக்கப்பெறவில்லை. அவர்கள் படித்து இருக்கிறார்கள். பிளஸ்-2 படித்திருக்கிறார்கள், பட்டப் படிப்புகூடப் படித்திருக்கிறார்கள். அப்படிப் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். அதிலே பாகுபாடு இல்லாமல், ஆரம்பத்திலே பார்வை இருந்து, பின்னால் பார்வையில்லாமல் போய்விட்டதால், அவர்கள் ஊனமுற்றவர்கள் அல்ல என்பதைப்போல் கருதாமல் அவர்களும் ஊனமுற்றவர்கள் என்று கருத்திலே எடுத்துக்கொண்டு, அவர்களுக்கும் பாதுகாப்பு நடவடிக்கை செய்வதற்கு, சலுகை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், பெண்கள் பணியாற்றும் அலுவலகத்தில் பாலியல் துன்புறுத்தல்களைச் செய்கிறவர்களைப் பணி நீக்கம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை மிக மிக நியாயமானது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். பாலியல் பலாத்காரம் என்பது ஏதோ யுவதிகளுக்கு மட்டும், இளம் பெண்களுக்கு மட்டும் நடைபெறுகிற காரியம் அல்ல. பெண்கள் என்றாலே, பல கட்டங்களிலே, பல மாதிரியான வடிவங்களில் தாக்குதல் நடைபெறுகின்றது. அதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புங்கூட இதிலே இருக்கிறது. குறிப்பாக, அரசுத் துறைகளில், பொதுத் துறைகளில்,

அரசு தொடர்புடைய துறைகளில் இதுபோன்ற பாலியல் பலாத்கார நடவடிக்கைகள் ஏதேனும் நடைபெறுகின்றன என்றால், அது கண்டறியப்பட்டால், அதற்குக் காரணமானவர்கள் பணி நீக்கம் செய்யப்படுகிற, கடுமையான தண்டனைக்கு உடனடியாக ஆட்படுத்தப்படுகிற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதற்கான முறையிலே சட்டம் கொண்டு வர வேண்டும், தனிச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்பதை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், சமூக நலத் துறையில் சிறுவர்களைப் பாதுகாப்பதற்காகச் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதிலும், பெருநகரங்களில், இரவு நேரப் பாதுகாப்பு இல்லங்கள், சாலையோரச் சிறுவர்களுக்கான பாதுகாப்பு இல்லங்கள் தொடங்கி வைக்கப்பட்டிருப்பது மிகச் சிறப்பான ஒன்று. கொடுங்குற்றவாளிகள் உருவாகாமல் தடுப்பதற்கும், சமூகச் சீரழிவுகளுக்கு அவர்கள் ஆளாகாமல் தடுப்பதற்குமான நல்ல அம்சங்கள் இதிலே அடங்கி இருக்கின்றன. இவை முழுக்க முழுக்கத் தனியார் தொண்டு நிறுவனங்களைச் சார்ந்து இருப்பினும், அரசும் உதவி செய்யக்கூடிய நிலையங்களாக அவை இருக்கின்றன. இதை எல்லா நகராட்சி மட்டங்களிலும், நகரப் பகுதி முழுமைக்கும் விரிவுபடுத்தி, சாலையோரச் சிறுவர்களுக்கான இரவு நேர தங்கும் இல்லங்கள் ஏற்படுத்தி, அவர்களைச் சமூக ரீதியாகப் பாதுகாக்கிற நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

இதேபோல், கண்காணிப்பு இல்லங்களில் சில முறைகேடுகள் நடந்திருப்பதாகத் தகவல்கள் வருகின்றன. குறிப்பாக, சேலம் பகுதியில் சில குறைபாடுகள் நடந்திருப்பதாகக் கவனத்திற்கு வந்திருக்கின்றது. கூர்நோக்கு இல்லங்களில் இருக்கிற சிறுவர்கள் சரியான முறையில் நிர்வகிக்கப்படுகிறார்களா என்பது பற்றிய விவரங்களை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த சமூக நலத் துறையில் பல நல்ல காரியங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். ஏற்கெனவே நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள், சத்துணவுத் திட்டத்தில் வாரந்தோறும் முட்டை தரப்படும் என்று



அறிவித்திருக்கின்றார்கள். அதனையும், அப்படி நல்லபல திட்டங்களையும் அடக்கியிருக்கின்ற இந்த சமூக நலத் துறையினுடைய கொள்கை அறிக்கையையும் ஆதரித்து, நான் கூறிய கோரிக்கைகளைக் கூர்நோக்கோடு கவனித்து, நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்தி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோ. நயினா முகமது.

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். சமூக நலன் மற்றும் சத்துணவுத் துறை மானியத்தில் பேசுகின்ற வாய்ப்பைக் கொடுத்த தங்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டிலே என்னுடைய தொகுதிக்கு அள்ளிக் கொடுத்த தமிழக முதல்வர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்னுடைய தொகுதியில் அடவிநயினார் அணைக்கட்டுத் திட்டத்திற்கு ரூ. 60 கோடி நிதி வழங்கியுள்ளீர்கள். வறட்டாறு-குப்பத்துமேடு அணைக்கட்டுத் திட்டத்திற்கு ரூ. 8.34 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கடையநல்லூர்-தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் இந்த ஆண்டு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் 24 படுக்கை வசதி மற்றும் கட்டடம் கட்டுவதற்கு சுமார் ரூ. 25 லட்சம் ஒதுக்கியதோடு, கடையநல்லூரில் ஒரு சித்த மருத்துவமனை கட்ட ரூ.10 லட்சம் நிதி ஒதுக்கி, எங்கள் தொகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்த நமது தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாயத்தில் மிகவும் கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரிவினரான பெண்கள், குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோர் மேம்பாட்டிற்காகவும், நலத்திற்காகவும், சமூக நல இயக்ககம் உருவாக்கப்பட்டது. இந்த உலகில் எத்தனையோ வகைப் படைப்புகள் உள்ளன. அந்த அத்தனை படைப்புகளிலும் மேலான படைப்பு

மனிதப் படைப்பு. இந்த மனிதன் அனுபவிக்கத்தான் மற்ற உயிர்ப்படைப்புகள் அத்தனையும் தங்களைப் பலி கொடுக்கின்றன. இவை அல்லாமல் மலைகள், நதிகள், இயற்கை வளங்கள், காற்று, மழை அத்தனையும் மனித இனத்தை மகிழ்விக்கத்தான் படைக்கப்பட்டிருக்கின்றன. அத்தோடு மட்டுமல்லாமல் மனித இனம், அறிவால், ஆற்றலால், தான் சுகமாக வாழ வேண்டுமென்பதற்காகப் புதிய புதிய கண்டுபிடிப்புகளைச் செய்துள்ளது. ஒரு மனிதன் பிறந்தால் இறப்பு என்பது நிச்சயம் என்று மனிதனாகப் பிறந்த அத்தனை பேருக்கும் தெரியும். ஆனால் தாம் இறந்துவிடுவோம் என்பதற்காக மனிதன் தன் அரிய கண்டுபிடிப்புகளை நிறுத்துவது இல்லை. மனிதன் கண்டுபிடித்த அத்தனையையும் அவனால் அனுபவிக்க முடிவதில்லை.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ரா. சேதுநாதன் தலைமை)**

அவன் வயதும், ஆயுளும் இடம் கொடுப்பதில்லை. ஆனால் அவனுக்குப் பின் வரும் அவனுடைய சந்ததியினர் அவனுடைய கண்டுபிடிப்பால் பயனடைகின்றனர். இந்த அடிப்படையின் வழித்தோன்றலாகத்தான் நமது முதல்வர் அவர்கள் இந்த நூற்றாண்டில் தோன்றி, மனித குலத்தில் மனித இனம் அத்தனையும் ஒன்றே என்று பறைசாற்றி, ஏதோ பிறந்தோம், வாழ்ந்தோம் என்று இல்லாமல், தனது ஒவ்வொரு அசைவிலும் தனது வருங்கால மனித சந்ததியினர் பயன்பெறுகின்ற வகையில் ஒரு வரலாற்றை உருவாக்கி தனது 60 ஆண்டுக்காலப் பொது வாழ்வில் தன்னை அர்ப்பணித்து, வாழ்ந்து கொண்டிருக்கிற நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் வாழ்கின்ற இந்த நூற்றாண்டில் நாமும் வாழ்கின்றோம் என்று நினைக்கும்போது பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கின்றது. இந்த அற்புதப் படைப்பான, மனித வர்க்கத்தில் பிறப்பால் ஏற்பட்ட ஊனம், கணவன் இறப்பால் உருவான விதவை, பெற்றோரை இழந்த அனாதைக் குழந்தைகள், கணவனால் கைவிடப்பட்ட மனைவியர், நிதியில்லாமையால் திருமணத் தடை, கருவுற்றும் சத்துணவு கிடைக்காத தாய்மார்கள், வாய் பேசாதோர், பார்வையற்றோர், சமூகத்தில் ஏளனப் பார்வைக்கு உட்பட்டோர் மற்றும் சமூகத்தில், மனித குலத்தில் தாழ்வு மனப்பான்மையோடு தன் காலத்தைக் கழிக்கின்ற அத்தனை பேரையும் அடையாளம் கண்டு, அவர்களுடைய எதிர்கால வாழ்வை ஒளிமயமாக்குவதற்குத்



தோற்றுவிக்கப்பட்ட சமூக நலத் துறை மூலம் பல்வேறு சலுகைகளை அறிவித்த நமது முதல்வர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

முதியோர் உதவித் தொகை, விதவைகளுக்கு உதவித் தொகை, ஊனமுற்றவர்களுக்கு உதவித் தொகை என்று மாதந்தோறும் ரூ.150 வழங்கப்படுவது பாராட்டுக்குரியது. ஆனால், இப்போதுள்ள காலச் சூழ்நிலையில் 150 ரூபாய் என்பது மிகக் குறைந்த தொகை. தயவுகூர்ந்து அதை ரூ.300 ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பழங்குடியின மகளிருக்குத் தையல் பயிற்சி அளித்தல், குறைந்த, நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு உணவு மற்றும் உறைவிட வசதி, சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பின்தங்கிய, பிற்படுத்தப்பட்ட மகளிர், விதவைகள், கைவிடப்பட்ட மனைவியர் ஆகியோருக்குத் தொழிற் கல்விப் பயிற்சி அளித்தல், பல்வேறு சமூகப் பொருளாதாரத் தடைகளைக் கடந்து கிராமப்புறப் பகுதியிலே உள்ள பெண்களை ஒன்றாக இணைத்து மகளிர் மன்றங்கள் அமைத்தல் ஆகியவை பாராட்டிற்குரியது. போதிய நிதிவசதி இல்லாத ஏழை விதவைகளின் மகள்களுக்குத் திருமணம் நடத்த ரூ.3,000 அளிக்கப்படுகிறது. இந்தத் தொகையையும் ரூ. 5,000 ஆக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால், அந்தத் குடும்பத்தில் ஒரு மகளுக்குத்தான் அந்தத் தொகை வழங்கப்படுகிறது. இதை அந்தக் குடும்பத்தில் பிறந்த அத்தனை பெண் குழந்தைகளுக்கும் வழங்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். திருமண உதவித் திட்டத்தின்கீழ் 8 ஆம் வகுப்பு வரை படித்த ஏழைப் பெண்களுக்கு ரூ. 10,000 வழங்க நம்முடைய முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதற்கு நான் என்னுடைய நன்றியை மனதாரத் தெரிவித்துக்கொள்கிறேன். இத் திட்டத்தில் 8 ஆம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டுமென்று இருக்கிறது. கிராமப்புறத்தில் இருக்கின்ற ஏஜைப் பெண்களுக்கு அதற்கான கல்வித் தகுதி 5 ஆம் வகுப்பு வரை என்று நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், கிராமப்புறப் பெண்களுக்குப் போதிய கல்வி வசதி கிடைக்காத காரணத்தால் 5 ஆம் வகுப்போடு பள்ளிப் படிப்பை நிறுத்தியுள்ளார்கள். இதைக் கருணை உள்ளத்தோடு நம்முடைய முதல்வர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும். வருமான வரம்பு ரூ. 12,000 என்றிருக்கிறது. தற்போது

ரேஷன் கார்டில், குடிசையில் வாழ்கின்றவர்களுக்குக்கூட மாதம் 2,000 ரூபாய் வருமானம் உள்ளதாகப் போடப்படுகிறது. இதனால் நிறையக் குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே, வருமான வரம்பை ரூ. 12,000-லிருந்து ரூபாய் 25,000 என்று உயர்த்த தமிழக முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். வயது வந்த ஆண் மகன் இருந்தால், முதியோர் உதவித்தொகை இல்லை என்று உள்ளது. வயது வந்த ஆண் மகன், வயதான முதிய பெற்றோர்களைக் கவனிப்பது கிடையாது. எனவே, வயது வந்த ஆண் மகன் இருந்தாலும் முதியோர் உதவித்தொகை வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு அமைப்பாளர்களாக பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டு, சுமார் 750 பேர் தமிழ்நாடு முழுவதும் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக எவ்விதப் பதவி உயர்வும் இல்லாமல் பணியாற்றி வருகிறார்கள். வயதும் 40ஐக் கடந்து விட்டது. எனவே ஆசிரியர் நியமனத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளைப் பெரிய பெரிய கம்பெனிகள் தத்தெடுக்க ஏற்பாடு செய்த நம்முடைய முதல்வர் அவர்கள், இந்த சமூக நலத் துறையின் மூலமாக நடத்தப்படுகின்ற, அரசு நடத்தும் ஆதரவற்றோர் இல்லங்கள், சேவை இல்லங்கள், முதியோர் இல்லங்கள், பார்வையற்றோர் பள்ளி, காது கேளாதோர் பள்ளி, மன வளர்ச்சி குன்றியவர்களுக்கான பள்ளி, கால் ஊனமுற்றவர்களுக்கான பள்ளி, தொழுநோயிலிருந்து குணம் அடைந்தவர்களுக்கான பள்ளி ஆகியவைகளையும் பெரிய பெரிய கம்பெனிகள் தத்தெடுக்க ஏற்பாடு செய்திட ஆவன செய்ய வேண்டும் என்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய துறைகளின் மூலம் ஊனமுற்றவர்களுக்கு இலவச 3 சக்கர வண்டி வழங்குதல், பார்வை இழந்தோருக்குப் பாதுகாப்புக் கண்ணாடிகள், மடக்குக் கம்புகள் வழங்குதல், பக்கவாத நோயாளிகளுக்குச் சக்கர நாற்காலிகள் வழங்குதல், காது கேளாதோருக்கு மீண்டும் செரிவூட்டக்கூடிய சூரிய வெட்ப மின்கலங்கள் வழங்குதல், பார்வை இழந்தோருக்கு பிரெய்லி கடிகாரம் வழங்குதல், வாய் பேசாதோர், காது கேளாதோருக்கு கிண்டி தொழில் பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளித்தல், பார்வையற்றோருக்கான அரசு தொழில் மையத்திற்கு உதவி, கடுமையாக உடல் ஊனமுற்றவர்களுக்குப் பராமரிப்புப் படி, நகர்ந்து



செல்லும் உடல் ஊனமுற்றவர்களை மணந்து கொள்கின்றவர்களுக்கு உதவித் தொகை, கலப்புத் திருமணம் செய்து கொள்கின்றவர்களுக்குச் சலுகை, கலப்புத் திருமணம் செய்கின்ற தம்பதியினருக்குப் பிறந்தவர்களுக்குச் சலுகை, பார்வையற்றவர்களை நல்ல உடல் நலம் உள்ளவர்கள் மணந்து கொண்டால் அவர்களுக்குச் சலுகை, இப்படி எண்ணிலடங்காச் சலுகைகளை அளித்த நம்முடைய முதல்வர் அவர்களுக்கும், சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். விதவைகள், முதியோர், உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை கோருகின்ற மனுவைப் பரிசீலித்து, விண்ணப்பித்த நாள் முதல் 2 மாத காலத்திற்குள் உதவித் தொகை வழங்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். என்னுடைய தொகுதியில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு பரிசீலனை செய்யாமல் அதிகாரிகள் காலதாமதம் செய்கிறார்கள். அவர்களைக் கண்டாலே இவர்கள் அலட்சியப் பார்வை பார்க்கின்றார்கள். இந்த சமூக நலத் துறையைப் பொறுத்த அளவிலே அதில் தங்களுக்குப் பணியாற்ற வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதை அதிகாரிகள் உணர வேண்டும். காலதாமதம் செய்கிறார்கள். எனவே, போர்க்கால அடிப்படையில் நிலுவையில் உள்ள அத்தனை மனுக்களையும் உடனடியாகப் பரிசீலனை செய்து உதவித் தொகை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

மனிதனை மனிதனாக வாழச் செய்யவும், மனித குலத்தில் பிறந்தவர்கள், உடல் ஊனம், மன ஊனம், இயற்கை ஊனம், பிறப்பு ஊனம் இவைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சலுகை அளிக்கின்ற இத்துறை ஏனைய மற்ற துறைகளைவிடச் சிறந்ததாகக் கருதப்பட்டு இத்துறைக்கு மீண்டும் நமது முதல்வர் அவர்கள் மேலும் ஊக்கம் அளிக்க வேண்டுமென்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்பேர்ப்பட்ட துறையைத்தான் இதற்கு முன்பு இருந்த ஆட்சியாளர்களின் அமைச்சர் சூறையாடி ஏழை எளிய ஊனமுற்றோர், விதவைகள், முதியோர், அனாதைகளின் வயிற்றில் அடித்து, தங்கள் வாழ்வை வளமாக்கிக் கொண்டார்கள். அவர்கள் எல்லாம் இன்று வெட்கம் இல்லாமல் வாய் கிழிய, தாம் யோக்கியர்கள் என்று பேசுவதை மக்கள் பார்த்துக்கொண்டுதான்

இருக்கிறார்கள். அவர்களுக்குத் தக்க சமயத்திலே மக்கள் பாடம் புகட்டவும் தயாராக உள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** திரு. ஜி. நிஜாமுதீன்.

***திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூக நலன் பற்றிய மானியக் கோரிக்கையின்மீது உரையாற்ற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, சமுதாயத்தின் அடித்தட்டுக்களாக விளங்கக்கூடிய பெண்கள், குழந்தைகளின் நலன்களைப் பாதுகாக்கக்கூடியதும், அதுபோல சமுதாயத்தின் அடித்தட்டுக்களாக விளங்கிய முதியோர்களைப் பாதுகாக்கக்கூடிய நலன்களில் அக்கறை கொள்ளக்கூடியதுமான இந்தத் துறை மானியக் கோரிக்கைமீது இந்திய தேசிய லீகின் சார்பாகப் பேசுவதிலே பெருமிதம் அடைகின்றேன். குழந்தைகளின் நலன்கள் பாதுகாக்கப்படுகின்ற வேளையிலே நாம் செல்லுகின்ற இடம் எல்லாம் குழந்தைத் தொழிலாளர்களைப் பார்க்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. பள்ளிகளிலே படித்து, வாழ்க்கையிலே முன்னுக்கு வந்து பல அரிய செயல்களைப் புரிய வேண்டியவர்கள் சின்னஞ்சிறு வயதிலே ஆதரவற்ற குழந்தைத் தொழிலாளர்களாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்காகக் குழந்தைத் தொழிலாளர் சட்டம் ஒன்று இருந்தும், அது முறையாக நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்து வருகிறது என்பதை இந்தத் துறையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதுபோல, இந்தத் துறையின் சார்பாகக் குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசிகள் போடப்பட்டு வருகின்றன. இந்தத் தடுப்பு ஊசிகளிலே மஞ்சள் காமாலை நோய்க்கும் தடுப்பு ஊசிகள் போடப்பட வேண்டும். மஞ்சள் காமாலை நோய்க்கு முறையான மருந்துகள் மருத்துவத் துறையில் கண்டுபிடிக்கப்படாத காரணத்தினால், ஆங்காங்கே உள்ள மக்கள் ஆங்காங்கே உள்ள கண்ட கண்ட மருந்துகளைச் சாப்பிட்டுத் தங்கள் உயிரை இழக்கவும் ஏதுவாக அமைகின்றது. ஆகவே, மஞ்சள் காமாலைக்கு இந்தத் துறையின் மூலம் தடுப்பு ஊசி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், அரசு, ஆயிரக்கணக்கான பெண்களுக்குத் திருமண உதவியை வழங்கிக்கொண்டு வருகிறது. அது மிகவும் பாராட்டக்கூடிய ஒரு விஷயம் ஆகும். ஆனால் இந்த உதவித்தொகை பெரும்பாலும் திருமணம் முடிந்த பின்புதான் அவர்களுக்குக் கிடைக்கின்றது. ஆகையினால் பெண் குழந்தைகளைப்பெற்று, திருமண நேரத்திலே கஷ்டப்படுகின்ற தாய், தந்தையர்களுக்கு இந்தப் பணம் உதவியாக இல்லை என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். ஆகவே, அவசியம் இந்தத் தொகை திருமணத்திற்கு முன்பே கிடைக்கப்பெற அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, ஆதரவற்ற பெண்கள் திருமண உதவி, விதவை மகள் திருமண உதவி, ஊனமுற்றோர் திருமண உதவி எல்லாம் 3,000 ரூபாய் என்ற அளவிலே இருக்கிறது. 8 ஆம் வகுப்புப் படித்த பெண்களுக்குக் கொடுக்கும் உதவித்தொகை ரூ. 10,000-த்தைப்போல இவற்றை உயர்த்த வேண்டும். ஆதரவற்ற காரணத்தினாலோ, விதவைகளினுடைய மகள்கள் என்ற காரணத்தினாலோ அல்லது ஊனமுற்றவர்களின் மகள்கள் என்ற காரணத்தினாலோ அவர்களால் படிக்க முடியாத காரணத்தினால் அவர்களுக்கு 3,000 ரூபாய் வழங்குவது முறையல்ல. ஆகவே, அவற்றை உயர்த்தி வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, திருமண உதவித் திட்டங்களில் ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒவ்வொரு வயது வரம்பு உள்ளது. அனைவரும் இந்த மாநிலத்தில் பிறந்தவர்கள், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றுதான் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாகச் சொல்லப்போனால் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தில் 18 வயது என்றும், ஆதரவற்ற பெண்களுக்கு 20 வயது என்றும், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவிக்கு 20 வயது என்றும், விதவை மகள் திருமணத் திட்டத்திற்கு 18 வயது என்றும், வயது வரம்பில் வித்தியாசங்கள் இருக்கின்றன. ஒரு நாட்டில் பிறந்து வளர்கின்ற குழந்தைகளுக்குத் திருமணம் முடிப்பதற்கு இந்த வயது வித்தியாசங்கள் ஏன் என்று எனக்குப் புரியவில்லை. ஆகவே, அனைத்துத் திட்டங்களுக்கும் ஒரே மாதிரியான வயது வரம்பு என்பதை ஏற்படுத்த வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அனைத்துத் திட்டங்களுக்கும் 18 வயது என்று குறிப்பிட்டு இந்த உதவித் தொகை வழங்கப்பட வேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

அதேபோல் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கர்ப்பிணிப் பெண்கள் உதவித் திட்டத்தில் 500 ரூபாய் என்று இருப்பதை உயர்த்தித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், 'ஜெம் பார்க்' என்ற நிறுவனத்தின் மூலம் பெண்களுக்குச் செயற்கை வைரம் பட்டை தீட்டும் பயிற்சி அளிக்கப்பட்டு, அதன்மூலம் பெரிய ஊழல் நடைபெற்றதை இந்த அரசும் அறிந்தது; இந்த ஊரும் அறிந்தது. அந்தத் திட்டத்தின் மூலம் செயற்கை வைரம் பட்டை தீட்டும் அந்த மிஷின் பெற்றவர்கள், அந்தக் கருவியைப் பயன்படுத்த முடியாமல், வங்கியில் பெற்ற கடனையும் அடைக்க முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். கடந்த ஆட்சியாளர்கள் செய்த குற்றத்திற்காக அந்தப் பெண்கள் பலியாவது முறையாகாது. அவர்கள் மீது இன்று வங்கி பல நடவடிக்கைகளை எடுத்து ஜப்தி என்ற முடிவுக்குச் சென்று கொண்டிருக்கிறது. ஆகவே, அதைக் கவனத்தில் கொண்டு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்று நாம் பெரும்பாலான பகுதிகளில் பார்க்கிறோம், லாட்டரிச் சீட்டுகளைப் பெரும்பாலும் ஊனமுற்றவர்கள் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு தொழில் செய்ய அதிகமாக முடியாத நிலையில், லாட்டரி டிக்கட்டுகள் விற்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆகவே, ஊனமுற்றவர்கள் மட்டுமே விற்கக்கூடிய ஒரு தொழில் என்று அந்த லாட்டரி விற்பனையை இந்த அரசு அறிவிக்க வேண்டும். அதன் மூலம் அவர்கள் வாழ்வில் ஒளியேற்றவும், அவர்கள் வளம் பெறவும் முடியும். நாம் இன்று அதை அனுமதித்து இருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில், லாட்டரி டிக்கட் சில்லரை விற்பனையை ஊனமுற்றவர்கள் மட்டும்தான் செய்ய முடியும் என்ற ஒரு சட்டத்தை இந்த அரசு ஏற்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். உதவித்தொகையை இந்த அரசு ரூ.100 லிருந்து ரூ. 150 ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறது. அதற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேசமயத்தில் இதை 150 ரூபாய் என்று வைத்திருப்பது போதாது; குறைந்தது ஒருவருக்கு 250 ரூபாய் என்ற அளவில் இருக்க வேண்டும். ஆகவே, அவற்றையும் கவனத்தில் கொண்டு இதை உயர்த்தித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



நாகையில் 'பணிபுரியும் மகளிர் இல்லம்' ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். முதியோர் இல்லங்கள் இன்று அரசு உதவி பெறும் தனியார் நிறுவனங்கள் மூலம்தான் செயல்பட்டு வருகின்றன. அதை அரசே துவக்கி நடத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஊனமுற்ற பெண்களைத் திருமணம் செய்பவர்களுக்கு, 40 சதவீதத்திற்கு மேல் வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு திட்டத்தை இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கு வீடு இருந்தால் அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுவது இல்லை. ஆனால் வீட்டை வைத்துக்கொண்டு ஒரு மனிதன் சாப்பிட முடியாது. ஆகவே அவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டு, வீடு குடியிருப்பதற்கு அவசியமான ஒன்று; வீடு இருந்தாலும் அவர்களுக்கும் உதவித்தொகை வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆண் குழந்தை இருந்தால், முதியோர் உதவித்தொகை வழங்கப்படுவது இல்லை. ஆண் குழந்தையால் கைவிடப்பட்ட முதியவர்களுக்கும், பெரியவர்களுக்கும் இந்த உதவித்தொகை வழங்கப்பட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சமூக நலத் துறை அலுவலர்கள் எங்கே இருக்கிறார்கள், என்ன பணியாற்றுகிறார்கள் என்பது ஒரு புரியாத புதிராக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அவற்றை எல்லாம் இந்த அரசு கவனத்தில் கொண்டு இந்தக் குறைகளை எல்லாம் போக்கி, நல்லவைகளை நிறைவாகச் செயலாக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த நாட்டில் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகம் செய்தவர் காமராஜர் அவர்கள். அந்தத் திட்டத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி அதில் சத்துணவு என்று ஏற்படுத்தி, சத்துணவுத் திட்டம் என்று மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்கள் அறிவித்தார்கள். அதில் காமராஜர் பெயர் மறைக்கப்பட்டு, இன்று எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்று இருக்கிறது.

கவனித்து நோக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நாட்டை ஆளுகின்ற பாரதிய ஜனதா அரசு, தனது தேர்தல் அறிக்கையில் சர்க்காரியா கமிஷன் பரிந்துரையின்படி, மாநில கவர்னரை நியமிக்கும்பொழுது மாநில அரசைக் கலந்தாலோசித்துத்தான் நியமிப்போம் என்று அறிவித்தார்கள். ஆனால் இன்று மாநிலத்திலே இருக்கின்ற கவர்னர்களை வலுக்கட்டாயமாக இராஜினாமாச் செய்யச் சொல்லிவிட்டு அந்த மாநில அரசுகளுக்குத் தொந்தரவு தரக்கூடிய கவர்னர்களை நியமித்து வருகின்றார்கள் என்பதையும் நான் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். (மணியடிக்கப்பட்டது)

ஒரே ஒரு நிமிஷம். மத்தியில் ஆளுகின்ற ஆட்சியாளர்கள், சிலரைத் திருப்திபடுத்த வேண்டுமென்ற எண்ணத்திற்காக, உண்மையை எடுத்து உரைப்பவரை, 'இட மாற்றம்' என்ற கழுத்தை நெறிக்கக்கூடிய ஒரு கருவியைக் கொண்டு மாற்றம் செய்து வருகின்றார்கள். ஒருவர் உண்மையைச் சொல்லிவிட்டால் அவருக்கு 'இடமாற்றம்' என்ற ஒரு தண்டனை வழங்கப்படுகின்றது.

இது எப்படி இருக்கின்றது என்று சொன்னால், சுதந்திரம் பறிக்கப்படும்பொழுது, ஒரு குருடனின் கோல் பிடுங்கப்படுவதுபோல் அமைகின்றது; ஒரு பறவையின் இறக்கை ஒடிக்கப்படுவதுபோல் அமைகின்றது. இந்த நாட்டில் அதிகாரிகள் சுதந்திரமாகச் செயல்பட முடியாத நிலையை ஏற்படுத்துகின்றார்கள். 'நாங்கள் நினைத்தால் எதையும் செய்வோம்; எங்களுக்குக் கட்டுப்பட்டுத்தான் நீங்கள் இருக்க வேண்டுமென்ற' நிலையை உருவாக்குகின்றார்கள். ஆகவே, இதுபோன்ற நிலைகளுக்கெல்லாம் ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** அடுத்து, திருமதி ஏ.ஆர். வேடம்மாள்.

**திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, சமூக நலத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு என்னுடைய கருத்தினைக் கூறுவதற்கு வாய்ப்பினை அளித்த எங்கள் கழகத் தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர்



டாக்டர் கலைஞர் அவர்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொதுவாக, ஏழை எளிய மக்களுக்குச் சேவை செய்வதைத்தான் சமூக சேவை என்று சொல்லுவார்கள். நாம் கேட்டு, போராடி, பெறுகின்ற நீதியைக்கூட குறிப்பிடுவது சமூக நீதி என்றுதான். அதைப்போல, சமூகநலத் துறை என்பது மிக முக்கியமான, குறிப்பாக மகளிருக்கான பல நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற துறை. மென்மையான மனது படைத்த மகளிருக்கு என ஏற்படுத்தப்பட்ட இந்தத் துறை ஊனமுற்றோர், முதியோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், குழந்தைகள் என்று மொத்தத்தில் திக்கற்றோருக்குத் திசை காட்டும் கருவியாக இருக்கிறது என்றால் அது மிகையாகாது.

இப்படிப்பட்ட நல்ல துறையைக் கடந்த காலங்களில் இருந்தவர்கள் இந்திரலோகத்துக் குமரிகளாகக் கருதிக் கொண்டு, கொள்ளையடித்து தங்களுடைய வசதிகளைப் பெருக்கிக்கொண்டு மக்களை மறந்தார்கள்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

கடந்த ஆட்சியில் சமூகநலத் துறையால் தயாரிக்கப்பட்ட ஏழை மகளிருக்கான சேலைகளெல்லாம் அரசு முத்திரையுடன் கல்கத்தா நகரின் பிளாட்பாரங்களில் விற்கப்பட்டன எனப் பேசப்பட்டது என்பதை இந்த நாடே அறியும்.

இந்தியாவிற்கே வழிகாட்டியாக விளங்கும் நம்முடைய தலைவர் மாண்புமிகு முதல்வரவர்களின் உள்ளத்தில்தான், எண்ணத்தில்தான், ஏழை வீட்டுப் பெண்ணின் துயரம் தெரிந்தது. அவர்களின் கண்ணீரைத் துடைக்கவும், அதேநேரத்தில் ஏழை வீட்டுப் பெண்களுக்குப் படிப்பறிவை ஏற்படுத்தவும் திட்டம் தீட்டினார்கள். அதன் விளைவாகத்தான் இந்தத் துறையின் மூலம் டாக்டர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரில், 8 ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு 10,000 ரூபாய் நிதியுதவி வழங்கப்படுகிறது. இதில் ஜாதி, மதப் பாகுபாடு எதுவும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

தாய்க் குலத்தின் கஷ்டத்தைப் போக்க, இதுபோல பல திட்டங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றியிருப்பது, பெண்கள் முதல்வராக இருக்கும்பொழுது அல்ல; நமது கழகத் தலைவர்

எங்களுடைய கண்களாக இருக்கும் கழகத் தலைவரினுடைய ஆட்சியில்தான் என்பதைத் தமிழகப் பெண்கள் பெருமையுடன் நினைவு கூர்கிறார்கள்.

*பிற்பகல் 12-50*

கடந்த ஆட்சியில் சமூகநலத் துறையின் திட்டங்களை வெறும் மக்கள் முன் வரும் கவர்ச்சியாக, 'காகிதப் பூ' திட்டங்களாகத்தான் தந்தார்கள் என்பதை இந்த நாடே அறியும். அதில் ஒன்று, தொட்டில் குழந்தைகள் திட்டம். ஆனால், இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் நமது கழக ஆட்சியில் சமூகநலத் துறை மக்கள் முன்னிலையில் மணம் வீசுகின்றது, மலர்ந்து மணம் வீசி மணம் பரப்பிக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நாடு அறியும்.

இந்தத் துறையின் மூலம் ஊர்நல அலுவலர்களாக, பல பெண்கள் பணியாற்றுகிறார்கள். இவர்களைப் பணிக்கு அமர்த்தும்போது, மாவட்டம் விட்டு மாவட்டம் பணி அமர்த்துவதால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, இவர்களைப் பணி அமர்த்தும்போதே, அதே மாவட்டத்தில் பணி அமர்த்தினால் அவர்களுக்கு வசதியாக இருக்கும். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஊட்டச்சத்து என்ற ஒரு திட்டம். இதில் பணிபுரியும் ஊட்டச் சத்து ஆசிரியர்கள் வேறு பல வேலைகளுக்குச் சென்றுவிட்டதால், அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. நம்முடைய அரசு உடனே தலையிட்டு, அந்தப் பணியிடங்களை நிரப்பித் தரவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சத்துணவுப் பிரிவில் உள்ள பலர் மற்ற வேலைகளுக்குச் சென்றுவிட்டதால், அந்த இடங்கள் எல்லாம் இன்றும் காலியான இடங்களாகத்தான் இருக்கின்றன. அதிகாரிகளை அணுகிக் கேட்டால், 'அரசாணை' என்று சொல்கிறார்கள். எனவே, இந்தப் பணியிடங்களையும் நிரப்பித்தர வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பணிபுரியும் பெண்கள் இன்றும் பணி நிரந்தரம் செய்யப்படாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய பணியை நிரந்தரம் செய்து, அவர்களுடைய வாழ்வில் ஒளி ஏற்ற வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



பெண்களுக்குத் தரும் திருமண உதவித் திட்டமாக இருந்தாலும், தையல் இயந்திரம் அளிக்கக்கூடிய திட்டமாக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்களின் தொகுதியில் கொடுக்கும் உதவித் திட்டங்களைப் பற்றி அதிகாரிகள் தெரிவிக்காத சூழ்நிலை இன்று உள்ளது. ஒரு விழாவிற்குப் போகும்போதுதான், தொகுதியிலிருந்து பல ஊனமுற்றவர்களுக்கு, விதவைப் பெண்களுக்கு வழங்கப்படும் பல திட்டங்களைப் பற்றி, சொல்கிறார்கள். 'இவ்வாறு தருகிறோம்' என்று அங்கேதான் சொல்கிறார்கள். சமூக நலத் துறை மூலமாகத்தான் நம்முடைய அரசாங்கத்தினுடைய பல திட்டங்களை அங்கே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட துறை, சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்து அவர்கள் முன்னிலையில் இந்தத் திட்ட உதவிகளை வழங்கினால் நமது அரசு நிறைவேற்றும் பல நல்ல திட்டங்களைப் பற்றி இந்த நாடு அறியும்.

எனவே, இதுபோன்ற திட்ட உதவிகளை வழங்குகிறபோது, வருங்காலங்களிலாவது சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு ஆலோசனை தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஒரு சேவை இல்லம் அமைத்துத் தர வேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் எந்தவிதமான தொழில் வசதியும் இல்லை. மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், பெண்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அதிக அளவில் தர்மபுரி மாவட்டத்தில் தையல் மெஷின் வழங்கி உதவிட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பெண்கள் திருமண உதவித் திட்டத்தின்கீழ், படித்த பெண்களுக்கு, தர்மபுரியில் சுமார் 375 பேருக்கு மேல், உதவி வழங்கப்படாமல் இருக்கிறது. தகுதி இருந்தும், அந்த உதவித்தொகை பெற முடியாதவர்களுக்கு உடனே உதவிட நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் வாழ்வு அளிக்க திட்டங்களைத் தீட்டுகின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின்

தலைமையில் இயங்கும் சமூகநலத் துறையில், 45 வயதான ஊனமுற்றவர்கள், ஆண்கள், பெண்களுக்குத்தான் 150 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படுகிறது. 100 சதவீதம் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய சிறார்களுக்கெல்லாம் இந்த உதவித்தொகை வழங்கப்படவில்லை. எனவே, இந்த உதவித் தொகையை, வயது வரம்பின்றி எல்லா ஊனமுற்றவர்களுக்கும் கிடைக்கும் அளவில் செய்ய நமது அரசு முன்வர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வயதான தாய் தந்தையரை, மகனோ, மகளோ, சரியாகக் கவனித்துப் பார்க்காததால், அவர்கள் பிச்சை எடுக்கும் நிலை உள்ளது. இதுபோன்ற வயதானவர்களுக்கு அமெரிக்காவில் பென்ஷன் வழங்குவது மட்டுமல்லாமல், பஸ், இரயில் போன்றவற்றில் இலவசமாகப் பயணம் செய்யவும், ஓட்டல்கள் போன்றவற்றின் மூலம் இலவசமாக உணவு அளிக்கவும் அரசாங்கமே ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, தமிழகத்திலும் இதுபோன்ற ஆதரவற்ற வயதானவர்களுக்குப் பல சலுகைகளை அளித்திட வேண்டுமென்று நான் மிகவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு தாலுகாவிலும் இதுபோல் பல முதியோர் இல்லங்களை அமைத்து, அந்த முதியவர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டுமென்று நான் மிகவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் வாழ்வு அளிக்க வேண்டி, திட்டங்களைத் தீட்டுகின்ற நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையில் சமூகநலத் துறை மேலும் சிறப்படைகிறது என்பதை இந்த மானியக் கோரிக்கையின் மூலமாக நாடு அறியும்.

சமுதாய மாற்றத்தைக் காண, பெண் அடிமைத்தனம் ஒழியப் பாடுபட்ட பெரியார், அண்ணா ஆகியவர்களைப் போல, பெண்கள் அடிமைத்தனம் ஒழிய நாடு நலம் பெறப் பாடுபடும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, வணங்கி முடிக்கிறேன், வணக்கம்.

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூகநலத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற நல்வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிதனைக் காணிக்கையாக்கிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சத்துணவு ஊழியர்களுடைய சம்பளத்தை அதிகரித்துக் கொடுத்து சத்துணவுப் பணியாளர்களுடைய வாழ்வில் ஒளியேற்றி வைத்திருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், சத்துணவுக்குப் பொறுப்பான மாண்புமிகு பதிவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சமூகநீதியைக் காக்கின்ற வகையில் இன்றைக்கு சத்துணவுப் பணியாளர்களுக்கும் இந்த உதவியை வழங்கியமைக்காக எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஊட்டச்சத்துத் திட்டத்திலே இருக்கக்கூடிய சில குறைபாடுகளை நாங்கள் சொல்லி உணர்த்த வேண்டியது எங்களுடைய கடமை. ஏற்கெனவே ஊட்டச்சத்துத் திட்டத்திற்காக கோதுமையை சிவில் சப்ளைஸ் துறை மூலமாக இந்தத் துறை வாங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் ராகி, வெல்லம், பொட்டுக்கடலை போன்றவற்றிற்கெல்லாம் நீங்கள் டெண்டர் வைத்துத்தான் வாங்கியாக வேண்டும். அந்த டெண்டர் எப்போதுமே வழக்கமாக பிப்ரவரி மாதத்திலே 'call for' செய்யப்பட்டு, மார்ச் மாதத்திலே அதை முடித்துவிட்டிருக்க வேண்டும். ஆனால், இந்த ஆண்டு டெண்டரை பிப்ரவரியிலே 'call for' செய்து அதை மார்ச் மாதத்திலேயும் ஃபைனலைஸ் செய்யாமல், இன்னும்கூட இந்தத் துறை காலதாமதம் செய்கிற காரணத்தாலே அங்கே ஊழல் நடைபெறுவதற்கும், முறைகேடுகள் வருவதற்கும் நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்டியாக வேண்டும். ஏற்கெனவே டெண்டர் முறையிலே கொடுத்தவர்கள அதிகமாக 'ரேட்டைக்' கொடுத்திருக்கிறார்கள். இப்போது நீங்கள் 'call for' செய்திருக்கக்கூடிய டெண்டரிலே குறைந்த ரேட் வந்திருக்கிறது. ஆனால் இப்போது இன்னும், அந்தக் காலக்கெடு முடிந்த பின்னாலும்கூட, அதிகமான விலையிலே ராகியையும், அதேபோல் வெல்லத்தையும், பொட்டுக் கடலையையும் கொடுக்கக்கூடியவர்களுக்குத்தான் நீங்கள் ஆணை கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று சொன்னால் அதிலே யார்

மீது குற்றம்? துறையினுடைய இயக்ககத்தின் மீதா? அமைச்சரின் மீதா? உடனுக்குடன் இதைச் செய்யாத காரணம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இவற்றையெல்லாம் நீங்கள் முறையாகச் செய்திருந்தால் நட்டம் வந்திருக்காது. இப்போது நட்டம் எவ்வளவு வரும் என்று நீங்கள் கணக்கிட்டுச் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கலப்புத் திருமணம். 'சாதிகள் இரண்டொழிய வேறில்லை' என்று சொல்கிறோம்; 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று சொல்கிறோம். ஆனால், நாம் பள்ளிக்குப் போனவுடனேயே அங்கே இருக்கக்கூடிய ஆசிரியர் நம்மைப் பார்த்துக் கேட்பது, 'நீ, என்ன சாதி?' என்றுதான். உடனே அந்த சாதியின் பெயரைக் குறிப்பேட்டிலே ஏற்றுகிறார்கள். பிறகு, சாதிகளுக்குத் தகுந்தாற்போல், முற்படுத்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்றெல்லாம் சொல்லி அதற்குத் தகுந்தாற்போல் ஸ்காலர்ஷிப் மற்றும் அங்கே இருக்கக்கூடிய வசதிகளைப் பெறுகிறோம். ஆனால், கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கின்ற இந்த அரசு, கலப்புத் திருமணத்தை நிச்சயமாக வரவேற்க வேண்டும் என்று சொல்லக்கூடிய இந்த அரசு, கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் ஈன்றிருக்கக்கூடிய குழந்தைகளுக்காக சாதியற்றோர் என்கிற ஒரு அமைப்பை உருவாக்கிக் கொடுப்பீர்கள் என்று சொன்னால், நீங்கள் கற்பனை செய்கிற, கனவு காண்கிற அந்தச் சாதியற்றோர் என்ற ஒரு சமுதாயத்தை, எதிர்காலத்திலாவது நம்மால் உருவாக்க முடியும். ஆகவே, இந்தக் கலப்புத் திருமணத் தம்பதிகள் மூலமாகப் பிறக்கக்கூடிய குழந்தைகளுக்காக நீங்கள் சாதியற்றோர் என்ற ஒரு பிரிவை, தயவுசெய்து உருவாக்குங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்வதாலே ஒரு ஆபத்தும் இருக்கிறது. இப்படிச் சொல்வதற்குக் காரணம், எங்களுடைய வேலூரிலே 'மாலை முரசு' பத்திரிகையிலே எடிட்டராக இருக்கக்கூடிய பிச்சையா என்பவர் தன்னுடைய குழந்தைகளுக்கு நான் சாதியைப் போடமாட்டேன் என்று சொல்லி பள்ளிச் சான்றிதழில் தன்னுடைய சாதியின் பெயரைக் கொடுக்கவில்லை. அவர் அப்படி சாதியின் பெயரைக் கொடுக்காத காரணத்தால், அவர் பிற்படுத்தப்பட்டவராக இருந்தாலும்கூட, அவருடைய குழந்தைகளுக்குக் கிடைக்க வேண்டிய



அந்த வசதிகள் அத்துணையும் இன்று மறுக்கப்படுகின்றன. அவர் சாதியினுடைய பெயரைச் சொல்லாத காரணத்திற்காக இன்று பழிவாங்கப்படக்கூடிய ஒரு கொடுமை இந்த நாட்டில் இன்னும் நிலவ வேண்டுமா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே, 'சாதியற்றோர்' என்ற ஒரு நல்ல உணர்வுக்கு வந்திருக்கிறாரே அவர், அதற்காகவாவது அவருக்குப் பாராட்டுத் தெரிவித்து அவருடைய குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடிய ஸ்காலர்ஷிப் போன்றவற்றையெல்லாம் இந்த அரசு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் பெண்ணினுடைய வயது குறைந்தபட்சம் இருபதாக இருக்க வேண்டும் என்று நீங்கள் வைத்திருக்கிறீர்கள். காதல் என்பது 16 வயதிலேயே வந்துவிடுகிறது அல்லது 13, 15 வயதிலேயே வந்துவிடுகிறது. அவர்கள் கலப்புத் திருமணத்தைச் செய்துகொள்கிறார்கள். ஆனால், 20 வயது என்று இருந்தால்தான் அந்தத் தொகையைக் கொடுப்போம் என்று சொல்வது என்ன நியாயம்? காரணம், இப்போது கேஸ் என்று வருகிறபோது 'consented' என்று சொல்லுவார்கள். 'At the verge of attaining majority' என்று சொல்லுவார்கள். பருவம்......

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள், காதல் என்பது 14 வயதிலே வரும், 16 வயதிலே வரும், 18 வயதிலே வரும் என்று குறிப்பிடுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் காதலித்து இருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காதல் என்றால், தமிழ் மீது காதல் அதிகமாக இருக்கிறது. ஆனால் என்னுடைய மனைவிமீது கல்யாணத்திற்குப் பிறகு காதல் ஏற்பட்டதே ஒழிய, அதற்கு முன்பு வரவில்லை. ஆனால் இப்பொழுது நீங்கள் காதல் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு, 20 வயது என்று சொல்லி விட்ட பின்னாலே, 18 வயதிலே ஏற்கனவே காதல் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு அந்த உதவித் தொகை கிடைக்கவில்லை. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்திற்கு 18 வயது என்று வைத்திருக்கிறீர்கள். அதைப்போல, இந்தக் கலப்பு

திருமணத்துக்கு உள்ள வயது வரம்பை 18 ஆகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று, கலப்புத் திருமணத்தை யாரெல்லாம் செய்துகொண்டார்களோ அவர்களுக்கு இட ஒதுக்கீட்டைக் கொடுத்து, கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு அரசாங்கத்தில் வேலை கொடுப்போம் என்றாவது ஒரு உறுதியை நீங்கள் ஏற்படுத்திக் கொடுத்தால், கலப்புத் திருமணம் நாட்டிலே அதிகமாகி, சாதி என்கிற அமைப்பு இல்லாமல், சாதியற்ற சமுதாயத்தைப் படைப்பதற்கு வழிவகுக்கும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, உடல் ஊனமுற்றோருக்கு இலவச பஸ் பாஸ் என்று நாம் பொதுப்படையாகச் சொல்லிவிடுகிறோம். ஆனால் 80% உடல் ஊனமுற்றவர்கள் என்ற சர்டிபிகேட் இருந்தால்தான், அவர்களுக்கு இலவச பஸ் பாஸ் அல்லது 60% இருந்தால்தான் பஸ் பாஸ் என்று சொல்கிறார்கள். சாதாரணமாக உடல் ஊனமுற்றோர் அத்தனை பேரும் என்ன நினைக்கிறார்கள் என்றால், நமக்கு அரசாங்கம் அறிவித்தாகிவிட்டது; நமக்குக் கிடைத்துவிடும் என்று நினைக்கிறார்கள். ஆனால் நீங்கள் போடக்கூடிய கணக்கு அவர்கள் கழுத்தை அறுக்கிறது. இன்னும் சொல்லப்போனால், உடல் ஊனமுற்றோர் யாரெல்லாம் பணியில் இருக்கிறார்களோ அவர்களுக்கு இலவச பஸ் பாஸ் இல்லை என்று சொல்லுங்கள்; நான் வேண்டாமென்று சொல்லவில்லை. பணியில் இருக்கின்றவர்கள் சம்பளம் வாங்குகிறார்கள். அவர்கள் பஸ்ஸில் காசு கொடுத்துக்கூடப் போகலாம். ஆனால் பணியில் இல்லாத உடல் ஊனமுற்றவர்களுக்கு நீங்கள் அதைக் கொடுக்க மறுக்கிறீர்கள். ஆகவே, எத்தனை சதவிகிதம் ஊனம் இருந்தாலும், உடல் ஊனமுற்றோர் அத்தனை பேரும் இலவசமாக பஸ்ஸில் போவதற்கு பஸ் பாஸ் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதில்கூட, பட்டுக்கோட்டை அழகிரி மற்றும் ஜீவா போக்குவரத்துக் கழகம் போன்ற கழகங்களில் பணத்தைக் கட்ட வேண்டும். குறிப்பிட்ட அளவு அவர்கள் பணத்தைக் கட்டிவிட்ட பின்னால், ‘எங்களுக்கு அலாட்மென்ட் முடிந்துவிட்டது. உங்களுக்கு பஸ் பாஸ் கிடையாது’ என்று அங்கிருக்கின்ற மண்டல அலுவலர்கள் சொல்கிறார்கள். ஆகவே, வரைமுறை வைக்காமல் அனைத்து உடல் ஊனமுற்றவர்களுக்கும் பஸ் பாஸ் வழங்கப்படும் என்கிற நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதுபோன்று உடல் ஊனமுற்றோருக்கு வாரத்திற்கு ரேஷன் கடைகளில் 5 கிலோ அரிசி கொடுப்பதற்குக்கூட நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும். அதைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உடல் ஊனமுற்றோருக்கு என்று இருக்கக்கூடிய கருவிகள், மூன்று சக்கர வாகனங்கள், 5 கிலோ அரிசி போன்றவற்றையெல்லாம் இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பெண்கள் முன்னேற்றம் என்று நிறையப் பேசிக் கொண்டிருக்கிறோம். பெண் அடிமை ஒழிய வேண்டும், அவர்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்பட வேண்டுமென்று விவேகானந்தர்கூடக் குறிப்பிட்டிருக்கிறார். பெண் அடிமை நிச்சயமாகத் தகர்த்தெறியப்பட வேண்டும். பெண்களுக்கு நாம் சுதந்திரம் கொடுத்திருக்கிறோம். ஆனாலும், சில இடங்களில் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் விடுதலை கொடுக்க வேண்டும். நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும் உள்ள பெண்கள் நாட்டிலே இன்னும் அதிகரிக்க வேண்டுமென்று நாம் எண்ணிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், உள்ளாட்சித் துறையிலே நாம் 30% அவர்களுக்குக் கொடுத்து, உள்ளாட்சித் துறையிலே அவர்கள் சேர்மனாக, கவுன்சிலராக இருக்கிறார்கள். ஆனால், ஒவ்வொரு கவுன்சிலர் பின்னாலும் அல்லது சேர்மன் பின்னாலும் ஓர் ஆடவன், அவர்களின் கணவனோ அல்லது தந்தையோ அல்லது சகோதரனோ வருகிறான். அவர்கள் இந்தச் சேர்மனையோ, கவுன்சிலரையோ இயக்குகிறார்கள். அவர்களுக்கு இவ்வளவு உரிமை கொடுத்து, சீட்டைக் கொடுத்து, வெற்றி பெறச் செய்து, ஆசனத்தில் அமர்த்திய பின்னரும், அவர்களின் கணவன்மார் தொல்லையும், தகப்பனார் தொல்லையும் இருந்து கொண்டிருப்பது, இவர்களுக்குப் பூரண சுதந்திரம் கிடைக்கவில்லையோ, அல்லது பெண்கள், தாங்கள் செய்யக்கூடிய தவறுக்கு அவர்களை உறுதுணையாக வைத்துக்கொண்டு இருக்கிறார்களோ என்று எதுவும் புரியவில்லை. ஆகவே, பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். நீங்கள் முழுமையாக அவர்களை விழிப்புணர்வுக்குக் கொண்டு வரவில்லை என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அடுத்து, பெண்களிடையே வளர்ச்சி என்பதெல்லாம் அவர்கள் அணியும் ஆடையிலே இருக்கிறது. இது குறித்து நம்முடைய தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்தான் சொல்ல வேண்டும். நம்முடைய தமிழ்க் கலாச்சாரம் சீரழிந்து போய்க் கொண்டிருக்கிறது. பெண்களுக்கு உரிமை, உரிமை என்று கொடுக்கப் போய், இன்று பெண்களிடையே எங்கு பார்த்தாலும் பாவாடை, தாவணியே பார்க்க முடியாத நிலைமை நிலவிக் கொண்டிருக்கிறது. ஏதோ சுடிதார் போட்டுவிட்டால், பெண்கள் வளர்ந்துவிட்டதாக எல்லோரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, தமிழ்க் கலாச்சாரம் எங்கோ போய்க் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சமூகநலத் துறையைப் பற்றிப் பேசுங்கள். (சிரிப்பு).

**திரு. சி. ஞானசேகரன்:** சமூகநலத் துறையில் பெண்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன், தலைவர் அவர்களே, ஆகவே தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சரும், சமூகநலத் துறை அமைச்சரும், தமிழ்க் கலாச்சாரத்தில் சீரழிவு ஏற்படாமல் பெண்களிடையே விழிப்புணர்வை உருவாக்க வழிகோல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சத்துணவுத் திட்டப் பணியாளர்களுக்கு, கிட்டத்தட்ட 928 ரூபாய் வரை உயர்த்திக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், இன்னும் அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் 1989 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே, அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவதாகச் சொல்லப்பட்டது. இன்றைக்குத் திரும்பவும் நீங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். சத்துணவுப் பணியாளர்களை நீங்கள் நிரந்தரம் செய்து, அவர்களை அரசு ஊழியர்களாக மாற்ற வேண்டுமென்று சத்துணவுப் பணியாளர்களின் சார்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு ஓய்வூதியம் போன்றவையெல்லாம் கொடுப்பதற்கு நீங்கள் வழிவகை செய்ய வேண்டும். அதேபோல..........

பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக் கொள்ள வேண்டும்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் முடித்துக்கொள்கிறேன். கோடைக் காலங்களிலே, 'மே' போன்ற மாதங்களிலே, பள்ளிகளை மூடிவிடக்கூடிய காலகட்டங்களிலே, உயர்நிலைப் பள்ளிகளிலே, மேல்நிலைப் பள்ளிகளிலே பணிபுரியக்கூடிய சத்துணவுப் பணியாளர்களுக்கு நீங்கள் சம்பளத்தைக் கொடுக்க மறுக்கிறீர்கள். அவர்கள் அந்த நேரத்தில் எங்கே போவார்கள்? கொடுக்கக்கூடிய சம்பளமோ மிகக் குறைவு. அந்த மாதங்களில் அதை நீங்கள் பிடித்துக்கொண்டால் அவர்களது வாழ்வில், பாவம், இருள் ஏற்பட்டு, அந்த 1½ மாத காலத்தில், 2 மாத காலத்தில் அவர்கள் அல்லலுக்கு ஆளாகின்றார்கள். ஆகவே, கோடை காலத்திலேயும் அவர்களுக்குச் சம்பளத்தை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சென்ற ஆட்சிக் காலத்திலே எழுதப்படாத உத்தரவொன்று எல்லாத் துறைகளுக்கும் வந்தது. இங்கே இருக்கின்ற சில சமூகநலத் துறை அதிகாரிகளுக்கே தெரியும். Written Order எதுவுமே இல்லாமல், 'லீவு நாட்களில், சென்டரைக் குளோஸ் செய்து விடுங்கள்; சாப்பாடு போடாதீர்கள்' என்ற உத்தரவு வந்தது. ஆனால், இங்கே அவர்கள் பேசுகின்றபோது மட்டும் என்ன சொல்வார்கள் என்றால், 'எங்களுடைய புரட்சித் தலைவி ஒரு நாளும் சத்துணவுக் கூடத்தை மூடக்கூடாது; எல்லோருக்கும் வழங்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள்' என்று சொல்லிவிட்டு, எந்த யூனியனிலும் அவர்கள் சத்துணவு போடாமல் போன காட்சியைக் கண்டு, அதை நான் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டுவந்து பேசினாலும்கூட, 'இல்லை' என்று அப்பட்டமான உண்மைக்குப் புறம்பான செய்திகளைச் சொன்னார்கள். ஆனால், இப்பொழுதும் அதே நிலை இருக்கின்றது. விடுமுறை நாட்களிலே பல சென்டர்கள் மூடித்தான் கிடக்கின்றன. அந்த நிலையை மாற்றியமைத்து, விடுமுறை நாட்களிலும் பணி செய்ய வேண்டும் என்ற நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும்.

அதேபோல, சோயா மாவு. இது தேவையில்லை. அந்தச் சோயா மாவிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, சத்துணவிலே பருப்பைக் கொடுப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும். விறகுக்கும், அதேபோல காய்கறிக்கும், மளிகை சாமானுக்கும் நீங்கள் கொடுக்கக்கூடிய அந்தத் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது.

ஆகவே விறகிற்கு 7 காசு என்றும், காய்கறிக்கு 7 காசு என்றும், அதேபோல, மளிகைக்கு 4 காசு என்றும் நீங்கள் அத்தொகையை அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சமூக சேவகர்கள். இங்கேகூட வித்யாசாகர் இருக்கிறார். எங்களுடைய வேலூரிலே 'உதவும் உள்ளங்கள்' என்ற அமைப்பை சந்திரசேகர் என்பவர் நடத்திக் கொண்டிருக்கிறார். இப்படி சமூக அமைப்புக்களை அமைத்துக்கொண்டு, சமூகத் தொண்டாற்றக் கூடியவர்களுக்கு, மாவட்ட அளவிலே ஒரு மீட்டிங் போட்டு அவர்களுக்கு நீங்கள் ஒரு விருதைக் கொடுக்க வேண்டும். அப்படி சமூகப் பணியை ஆற்றக்கூடியவர்களுக்கு நீங்கள் விருது வழங்கி, சான்று அளித்து ஊக்கப்படுத்துவீர்கள் என்றால், அவர்களுடைய பணி இன்னும் சிறப்பாக அமையும். இன்றைக்குச் சில போலி, தன்னார்வ நிறுவனங்கள்கூடச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. நீங்கள் சமூகநலத் துறையிலிருந்து ஒரு சான்றளித்தால்தான் அது சரியான தொண்டு நிறுவனம் என்ற நிலையை உருவாக்கிக் கொள்ள முடியும். சமூக சேவகர்களுக்கு நீங்கள் விருது அளித்து, அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி, அமர்கின்றேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலம் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 458,26,13,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்குமாறு கோருகிறேன்.

மண்ணுக்கும் கேடாய் மதித்து வந்த பெண்ணினத்தைத் தன் கண்ணுக்கும் மேலாய்ப் போற்றிடவும், சித்திர நிகர் பெண்டிர்களைச் சீரழிக்கும் நிலையினை மாற்றி சிறப்புக்குரியவர்களாய் ஆக்கிடவும், பொறுப்புள்ள மாதர்களை கல்லாக்கி அவர்களுக்குக் கல்வியில்லை, உரிமையில்லை, கடைத்தேற வழியுமில்லை என்றிருந்த நிலையினை மாற்றி, அனைத்துத் துறைகளிலும் ஆற்றலுள்ளவர்களாய் ஆக்கிடவும், அவர்களுக்கு வேண்டிய அடிப்படை உரிமைகளிலிருந்து, ஆதார உரிமைகள்வரை பெற்றுத் தரவும், கொள்கையளவில் மட்டுமின்றி



நடைமுறையிலும் அவர்களை நனியுயர்த்திட அரசு பாடுபட்டு வருகிறது.

நாடு விடுதலையடைந்து 50-வது சுதந்திரப் பொன் விழாவினைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்தியத் திருநாட்டில், குறிப்பாகத் தமிழகத்தில் பெண்கள் முன்னேற்றம் பிற மாநிலங்களினின்றும் தனித்துச் சிறந்து விளங்குகிறது. பெண்களுக்குச் சமூகத்தில் சரிசமமான தகுதி கிடைக்கவேண்டும் என்ற உணர்வுடன் அரசு தீர்க்கமாகச் சிந்தித்து, புதுப்புது மாற்றங்களையும், திட்டங்களையும் வகுத்துச் செயல்படுத்தி வருகிறது. பெண்கள் நலனுக்கு வழிகாட்டும் அரசாக மட்டுமல்ல, வழிவகுத்துக் கொடுக்கும் வழித்துணை அரசாகவும் இந்த அரசு திகழ்கிறது.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும், அவர்களின் அடிப்படைத் தேவைகளான சுகாதாரம், சத்துணவு, குழந்தைப் பராமரிப்பு மற்றும் பேறுக் காலப் பராமரிப்பு உள்ளிட்ட அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்வதில் சமூக நலத் துறை தனது சீரிய பணியினை ஆற்றி வருகிறது.

பிற்பகல் 1-10

தனது அயராத உழைப்பின் மூலம், நிறைவான பணியை தமிழ்ச் சமுதாயத்திற்குத் துவளாது வழங்கித் தொண்டாற்றி வரும் நமது முதல்வரின் தலைமையில் நடைபெற்று வரும் இந்த அரசில், சமூக நலத் துறை ஆற்றிவரும் பணிகள் மற்றும் சாதனைகள் குறித்து, இத்துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதை நீங்கள் படித்திருக்கிறீர்கள். பல உறுப்பினர்கள், அதன்மீது பாராட்டுத் தெரிவித்துப் பேசியிருக்கிறீர்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்; இங்கு
வாழும் மனிதரெல்லோர்க்கும்
பயிற்றிப் பல கல்வி தந்து-இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்"

என்று பாரதியார் மிக அருமையாகக் கூறிச் சென்றார். சாப்பாட்டுக்கே வழியில்லாமல் இருக்கும் நம் பிள்ளைகளுக்குப்

படிப்பு எதற்கு என எண்ணும் ஏழைகளின் எண்ணத்தினை மாற்றி, அவர்தம் குழந்தைகளைத் தன்னம்பிக்கையோடு பள்ளிக்கு அனுப்பி வைக்க ஆரம்பிக்கப்பட்ட திட்டமாகவும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களிலேயே பெரிய திட்டமாகவும் செயல்பட்டுவரும் சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் ஊழியர்களின் உணர்வினை மதித்து, கடுமையான நிதி நெருக்கடியிலும் சுமார் 40 கோடி ரூபாய் அளவில் கூடுதலாகச் செலவாகும் என்றாலும், அவர்களின் அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப் படியை உயர்த்தியதோடு, சத்துணவு மையங்களில் பணியாற்றும் சமையலர் மற்றும் உதவியாளர்கள் ஓய்வு பெறும் வயதினை 55-லிருந்து 58 ஆக அவர்கள் விருப்பப்படி உயர்த்தியும், சிறப்பு சேம நலம் மற்றும் பணிக்கொடைத் திட்டத்தின்கீழ், சத்துணவு ஊழியர்கள் ஓய்வு பெறும்போது, அவர்கள் சேமித்த தொகையை அதற்கான வட்டியுடன் அளிப்பதோடு, தாய்வீட்டுச் சீதனம்போல, அரசின் பங்காக ஐயாயிரம் ரூபாய் சேர்த்து வழங்குவதற்கு ஆணை பிறப்பித்து, சற்றொப்ப இரண்டு இலட்சத்துப் பதினெட்டாயிரம் சத்துணவு ஊழியர்களின் குடும்பத்தில் ஒளி விளக்கை ஏற்றி, நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்து வரும் தமிழக முதல்வருக்கு, சத்துணவு ஊழியர்களும், அவர்தம் குடும்பங்களும் தெரிவிக்கும் நன்றியோடு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த நன்றியோடு, சமூக நலத் துறையும் தனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறது.

சென்ற நிதிநிலை அறிக்கையில், மத்திய அரசின் மதிப்பூதியம் பெறும் நிலை-1 அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு, இடைக்கால நிவாரணத் தொகை வழங்கியவரும் நம் முதல்வர் அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல், குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், ஊட்டச்சத்துத் திட்டம், சத்துணவுத் திட்டம் ஆகிய 3 திட்டங்களின்கீழ் சுமார் 75 இலட்சம் குழந்தைகளுக்கு 18 கோடி ரூபாய் செலவில், 15 நாட்களுக்கு ஒரு முறை முட்டை வழங்கி வந்ததை மாற்றி,

"குழந்தைகள் நீங்கள்–
குன்றினைப் போல் உடல் வலிமை வேண்டும்
கொடுமை தீர்க்கப் போராடுதல் வேண்டும்"

எனும் பாவேந்தர் கருத்துப்படி, குழந்தைகள் ஆரோக்கியம்தான்



முக்கியம் எனக் கருதி, நிதி நெருக்கடியையும் பொருட்படுத்தாமல், கூடுதலாக 18 கோடி ரூபாய் செலவானாலும் பரவாயில்லை; வாரம் ஒரு முறை முட்டை வழங்க உத்தரவிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அந்தத் திட்டத்தில் பயனுறும் குழந்தைகள் சார்பாகவும், அவர்தம் பெற்றோர் சார்பாகவும், என்னுடைய துறை சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

பெண் என்றாலே, பேரிடி விழுந்ததுபோல் பெற்றவளே பெரிதும் வருந்திய நிலையினை மாற்றிடவும், பெற்ற குழந்தை பெண் என்றால், குழி தோண்டிக் கொல்லும் அறியாமை இருளினை அகற்றிடவும் அரசு பாடுபட்டு வருவதற்குச் சான்றாகத் திகழும் திட்டம், 'இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்'.

'பிள்ளைக் கனியமுதே-கண்ணம்மா!
பேசும் பொற் சித்திரமே!
அள்ளியணைத்திடவே-என்முன்னே
ஆடி வருந்தேனே!
ஓடி வருகையிலே-கண்ணம்மா!
உள்ளங் குளிருதடி!
ஆடித் திரிதல் கண்டால்-உன்னைப் போய்
ஆவி தழுவுதடீ!
உச்சி தனை முகர்ந்தால்-கருவம்
ஓங்கி வளருதடீ!
மெச்சி யுனையூரார்-புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடீ!
கன்னத்தில் முத்தமிட்டால்-உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடீ!
உன்னைத் தழுவிடிலோ-கண்ணம்மா!
உன்மத்த மாகுதடி!

எனப் பாரதியார், பராசக்தியைப் பெண் குழந்தையாகக் கண்டு களித்ததைப் போல, பெண் என்றாலும், 'ஏன் பெற்றோம்' என நினைக்காமல் இருக்கவும், பெண் குழந்தைகளின் மதிப்பை

உயர்த்தவும், ஒரு பெண் குழந்தை பெற்றால், ரூ. 3,000 முதலீடும், இரண்டு பெண் குழந்தைகள் பெற்றால், தலா ரூ.1,500 முதலீடும் அரசின் சார்பில் முதலீடு செய்யப்பட்டு, 5 ஆண்டுகாலம் நிரந்தர வைப்புத் தொகை ரசீதாக அந்தக் குழந்தைகளின் பெயரில் வழங்கப்பட்டு வருகிறது.

பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 1992 முதல் 31-3-1997 வரை ரூ. 1,500 முதலீட்டின்கீழ், 39,218 குழந்தைகளுக்கு, ரூ. 5,88,27,000ம் தமிழக முதல்வரின், 'இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 1-4-1997 முதல் 31-3-1998 வரை ரூ. 1,500 முதலீட்டுத் திட்டத்தில், 13,875 குழந்தைகளுக்கு ரூ. 2,08,12,500ம் ரூ. 3,000 முதலீட்டுத் திட்டத்தில் 286 குழந்தைகளுக்கு ரூ. 8,58,000ம் ஆக மொத்தம், இதுவரை 53,379 குழந்தைகளுக்கு ரூ. 8,04,97,500 ஒதுக்கி சாதனை புரிந்துள்ளார்கள் தமிழக முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி). கடந்த ஆட்சியிலே, 'பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்' என்று இரண்டாவது பெண் குழந்தைக்கு மட்டுமே 5,000 ரூபாய் முதலீடு செய்கிறோம் என்று அவர்கள் ஒரு பாஸ் புத்தகத்தைப் பெண் குழந்தை பெயரிலே வழங்கிவிட்டார்கள்.

பிற்பகல் 1-15

எந்தக் குழந்தையின் பெயரிலும் அந்தத் தொகை செலுத்தப்படவில்லை. 5 ஆண்டுக்காலம் முடிந்த பிறகு, குழந்தைகளைப் பெற்றவர்கள் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்து 5,000 ரூபாய் முதலீடு செய்திருக்கிறீர்களே, அந்த வட்டித் தொகை மூலமாக பள்ளிக்குக் குழந்தையை அனுப்புவதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும் என்று சொன்னபோது, அப்படி எந்தக் குழந்தையின் பெயரிலும் 5,000 ரூபாய் முதலீடு செய்யாமல் ஏமாற்றப்பட்டிருப்பது தென்பட்டது. இதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னபோது, 5 ஆண்டு காலமாக குழந்தைகள் பெயரிலே ரூபாய் இருக்கிறது என்று நம்பியிருக்கின்ற அந்தத் தாய்மார்களை நான் ஏமாற்றத் தயாராக இல்லை என்று பதிவு செய்திருந்த 29,000-க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு 1500 ரூபாய் முதலீடு செய்து வழங்கியிருக்கிறார்கள் என்பது மிகப் பெரிய சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி). கடந்த கால ஆட்சியில் அவர்கள் நன்மைகள் செய்யவில்லை. அப்படியே நன்மைகள்



செய்திருந்தாலும் அதை ஏற்றுக்கொண்டு அந்த நன்மைகளிலே சரியான வரைமுறைகள் இல்லாதபோது, சரியான வரைமுறைகளை உருவாக்கித் தந்த ஆற்றல் படைத்த மூதறிஞர்தான் டாக்டர் கலைஞர் என்பது வெள்ளிடைமலையாகத் தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்ல. இது என்ன ஓரவஞ்சனை? இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள் என்று சொன்னால், இரண்டாவது பெண் குழந்தை மட்டுமா பெண் குழந்தை? முதலில் பிறந்ததும் பெண் குழந்தைதானே, ஏன் அதற்கு உதவித் தொகை கொடுக்கக்கூடாது என்று, உண்மையான தாய் உள்ளத்துடன், குழந்தையைப் பெற்றுப் பேணி வளர்த்து, பாசத்துடன் இருக்கின்ற அந்தத் தாயன்புடன் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த ஆட்சியிலே இரண்டு பெண் குழந்தைகள் இருந்தாலும் வழங்குவோம் என்று தாராள மனதுடன் இரண்டு பெண் குழந்தைகளுக்கும் வழங்குவதற்கு உத்தரவிட்டார்கள்.

அதுமட்டுமல்லாமல், ஒரே பெண் குழந்தை என்றால் ஜனத்தொகைக் குறைப்பிற்கு அந்தப் பெண்தான் அதிகமாகப் பாடுபட்டிருக்கிறாள் என்பதற்காக அவளை 'மக்களைப் பெற்ற மகராசி' என்று சொல்வதைப் போல, 'உண்மையிலேயே நீ தான் நாட்டிற்கு வளம் சேர்க்க முன்வந்தாய்', என்பதற்காக 3000 ரூபாய் முதலீடு செய்து வழங்கியிருக்கிறார்கள். அம்மையார் திருமதி பொன்னம்மாள் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதுபோலும், உறுப்பினர் திருமதி வேடம்மாள் குறிப்பிட்டுச் சொன்னதுபோலும், இத்திட்டத்தின் மூலமாக 1500 ரூபாய் முதலீடு செய்தால் 29000 ரூபாய் அளவிற்கும் 3000 ரூபாய் முதலீடு செய்தால் 58,000 ரூபாய் அளவிற்கும் உதவித் தொகை கிடைக்கும் என்பதால், எதிர்காலத்திலே பெண் குழந்தைகளே பிறக்க வேண்டுமென்று கணவனும், மாமியாரும் வேண்டக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறது என்று சொன்னால் மிகையல்ல.

அடுத்தது, திருமண உதவித் திட்டம். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்கள் பெயரிலே உதவித் திட்டம். எட்டாவது வரை படித்த பெண்களுக்கு, 18 வயது நிரம்பிய பெண்களுக்கு, நலிவுற்ற குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலமாக, 1996-97-ஆம் ஆண்டிலே மட்டும், 31,680 பெண்கள் இந்தத் திட்டத்திலே பயனடைந்திருக்கிறார்கள். 1997-98-ஆம் நிதியாண்டில் 37,000 பெண்கள் பயன்பெறும் வகையில், 37 கோடி

ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம், 1996-97, 1997-98 ஆம் ஆண்டுகளில் மட்டும், பிப்ரவரி மாதம் வரை 68,680 பெண்கள் இந்தத் திட்டத்திலே பயனடைந்திருக்கிறார்கள் என்று சொன்னால் இது பெரிய சாதனை (மேசையைத் தட்டும் ஒலி) என்பது மட்டும் அல்ல; 'பெண் ஆட்சி நடத்தினேன், 5 ஆண்டுகாலம் முழுமையான ஆட்சி நடத்தினேன்' என்று சொல்கிறவர்கள் மத்தியிலே உண்மையாக, பெண்களுக்குப் பாதுகாப்பும், அவர்களுக்குரிய உதவியும் செய்த அரசு, பெண்களுக்குப் பாதுகாப்பான அரசு இந்த அரசுதான் என்பதை மீண்டும் நம்முடைய முதல்வர் அவர்கள் நிரூபித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அது மட்டுமல்ல. வரும் ஆண்டிலே 60 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கீடு செய்து 60,000 பெண்களுக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். 60,000 ரூபாய் முதற்கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. கடந்த இரு ஆண்டுகளில் 68,000 பேர் பயனடைந்திருக்கிறார்கள். இதிலே குறியீடு இல்லாமல், எத்தனை பெண்கள் விண்ணப்பம் செய்தாலும் தகுதியுள்ளவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். எனவே, இதிலே நிலுவையாக இருக்கிற விண்ணப்பதாரர்களுக்கும், அவர்கள் விண்ணப்பங்கள் சரியான முறையிலே பரிசீலிக்கப்பட்டு, அவர்களுக்கு இந்தத் தொகை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்பளிப்பு வேண்டும் என்று நன்கொடையாளர்களிடத்திலே செய்தியேடுகள் மூலமாக விளம்பரம் செய்து கொண்டதன் காரணமாக, கிட்டத்தட்ட 5¼ கோடி ரூபாய் வசூலாகியிருக்கிறது. இந்த நன்கொடையாளர்கள் தருகின்ற நிதிக்கு வருமான வரி விலக்கு அளிக்கவும் முதல்வர் அவர்கள் முன்வந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தாய், தந்தையை இழந்த ஆதரவற்ற பெண்ணாக இருக்கிற, 18 வயது பூர்த்தியான பெண்ணிற்கு, எட்டாம் வகுப்பு வரை கூட படிப்பதற்கு இயலவில்லை என்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அந்தப் பெண் குழந்தையின் திருமணத்திற்கு 3,000 ரூபாய் நிதி உதவி கடந்த ஆண்டு வழங்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இந்தத் தொகை உயர்த்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதே கருத்தை மாண்புமிகு முதலமைச்சர்



அவர்களிடத்திலே வலியுறுத்தியபோது அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு, தாய் தந்தையை இழந்த, 18 வயது பூர்த்தி அடைந்த, 8-ஆம் வகுப்பு வரை படிக்க இயலாத பெண்ணின் திருமண உதவித் திட்டத்திற்கு இரண்டாயிரம் ரூபாயைக் கூடுதலாக வழங்கி, 5 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கான உத்தரவை அளித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக அரசுக்குக் கூடுதல் செலவு ரூ. 1,30,000 ஆகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

விதவையினுடைய மகள் திருமண உதவித் திட்டம். இத்திட்டத்தின்கீழ் 18 வயது பூர்த்தி அடைந்த 8-ஆம் வகுப்பு வரை படிக்க இயலாத ஏழைப் பெண்ணுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. ரூ. 3,000 என்று வழங்கப்பட்ட இந்த உதவித் தொகையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு ரூ. 2,000 உயர்த்தி 5,000 ரூபாயாக இந்த ஆண்டு முதல் வழங்கியிருக்கிறார்கள். இதன் காரணமாக, 21 லட்சம் ரூபாய் அரசுக்குக் கூடுதல் செலவு ஏற்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் பெயரில் அமைந்து நடைபெற்று வரும் விதவை மறுமணத் திட்டம், அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண உதவித் திட்டம் மற்றும் பார்வையற்றோரைத் திருமணம் செய்து கொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கு வழங்கப்படும் திருமண உதவித் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களின் கீழும் ஆண்டு வருமானம் ரூ. 12,000க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற விதி நடைமுறையில் இருந்து வருகிறது. பல உறுப்பினர்கள் இந்த வருமான வரம்பை நீக்க வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பியிருக்கிறார்கள். சமுதாயத்தில் சீர்திருத்தம் ஏற்பட வேண்டும் என்பதற்காகவே, விதவை மறுமணத் திட்டம், கலப்புத் திருமணத் திட்டம், மற்றும் பார்வையற்றோரைப் பார்வையுள்ளவர்கள் திருமணம் செய்து கொள்கின்ற திட்டம் போன்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், கலப்புத் திருமணம் செய்து கொள்கின்றவர்களுக்கான திட்டத்தில், கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் இருந்து நடைபெறுகின்ற திருமணங்களிலே ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த ஒருவர்

இருப்பார் என்று சொன்னால், அந்தத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு வருமான வரம்பு இல்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே அறிவித்ததுபோல, மேற்கண்ட இந்த மூன்று திட்டங்களிலும் திருமணம் செய்து கொள்பவர்களுக்கும் வருமான வரம்பு முழுமையாக நீக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதயத்தில் எழும் உணர்வுகளைக்கூட மற்றவர்களிடத்தில் வெளிப்படுத்த இயலாத நிலையிலிருக்கும் பேசும் திறனற்றவர்களையும், 'செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்' எனும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப தலையாய கேள்விச் செல்வத்தை இழந்ததன் காரணமாகவே மற்றவர்களின் உணர்வுகளைக்கூடப் புரிந்துகொள்ள இயலாத நிலையிலிருக்கும் காது கேளாதவர்களையும் திருமணம் செய்ய முன்வரும் பேசும் திறன் மற்றும் காது கேட்கும் திறனுடையவர்களுக்கு இந்த வருடம் முதல் ஒரு பாராட்டுச் சான்றிதழும், திருமணச் செலவிற்காக ரூ. 2000/-மும், தேசிய சேமிப்புப் பத்திரமாக ரூ. 3,000/-மும் அளிக்கப்பட இருக்கிறது. இதற்கான உத்தரவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இது ஒரு புதிய திட்டமாகும். சமூக நலத் துறையிலே இணைக்கப்படுகிற இந்தப் புதிய திட்டம் பற்றி உங்களிடம் தெரிவித்துக்கொள்வதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆதிகாலத்தில் பெண்ணின் பெற்றோரால் மணமகனுக்கு மகிழ்ச்சியோடும், நிறைந்த மனதோடும் 'தட்சணை' என்ற பெயரில் அளித்து வந்த அன்பளிப்பு இன்று 'வரதட்சணை' என்ற பெயரில் விஷக்கிருமி போல் சமூகமெங்கும் பரவி, பெண்களைப் பழிவாங்கும் நோயாகிவிட்டது.

பெண் திருமணத்திற்குத் தடையாகவும், வரதட்சணை கொடுக்க முடியாதபோது ஏற்படும் விளைவுகளையும் சிந்தித்து நாட்டில் வரதட்சணைக் கொடுமையால் நடைபெறும் கொலைகள் மற்றும் சித்திரவதைகளைத் தடுப்பதற்கு மாவட்டந்தோறும் "வரதட்சணைத் தடுப்பு ஆலோசனைக் குழு" ஒன்றினை அரசு உருவாக்கி வருகிறது. மாவட்ட சமூக நல அலுவலரை, வரதட்சணைத் தடுப்பு அலுவலராகவும், மாவட்டத்தில் சமூக சேவையில் ஈடுபட்டு வரும் ஐந்து பேரை வரதட்சணைத் தடுப்பு ஆலோசனைக் குழு உறுப்பினர்களாகவும் கொண்டு இக்குழு செயல்படும். தற்போது 15



மாவட்டங்களில் இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மற்ற மாவட்டங்களிலும் விரைவில் இக்குழுக்கள் அமைக்கப்படும். ஏற்கெனவே அமைக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற மகளிர் ஆணையத்துடன் இந்தக் குழுக்களும் இணைந்து செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன் அவர்கள் பேசுகின்றபோது, மகளிர் ஆணையத்திற்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கூறினார்கள். கடந்த ஆட்சியின்போது இந்த அமைப்புக்கு ஓர் ஆடவர்தான் தலைவராக இருந்து வந்தார். நம்முடைய முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு ஒரு பெண் நீதிபதியை, பத்மினி ஜேசுதுரை அவர்களை அந்த ஆணையத்திற்கு தலைவராக நியமித்து இருக்கிறோம். அவர்கள் இருந்து பணியாற்றுவதற்குத் தேவையான இடம்கூட சொந்தமாக இல்லாமல் இருந்ததைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஒரு இடம் தர வேண்டும் என்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மகளிர் மேம்பாட்டுக் கழகம் நடைபெற்று வருகின்ற கிண்டி அலுவலகத்திலேயே அவர்களுக்கும் ஓர் இடத்தை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவியாளர்களையும், வேண்டிய வசதிகளையும் இந்த ஆட்சி செய்து தந்திருக்கிறது. மேலும், பல சமூகத் தொண்டு நிறுவனங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கவும், மாண்புமிகு உறுப்பினர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கவும் அந்த ஆணையத்தினுடைய அதிகாரத்தை உயர்த்துவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி ஆவன செய்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தையல் தெரிந்த 20 வயது முதல் 40 வயதுள்ள விதவைப் பெண், கணவனால் கைவிடப்பட்ட பெண், உடல் ஊனமுற்றவர், நலிந்த பிரிவைச் சார்ந்த பெண்களின் பொருளாதாரத்தைத் தன்னம்பிக்கையுடன் உயர்த்துவதற்கு வழங்கப்பட்ட இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்படி கடந்த ஆண்டு 3,000 பேர்களுக்கு இயந்திரங்கள் வழங்கப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர்கள் அதை 5,000-ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டார்கள். நிதிநிலை அதற்கு இடம் தரவில்லை என்ற காரணத்தினால் 1,000 கூடுதலாக வழங்குவதற்கு இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அதன்

காரணமாக இருபது இலட்சம் ரூபாய் அதிகமாகச் செலவினம் ஆகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-25*

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் இயங்கி வரும் 25 அரசு காப்பகக் குழந்தைகளுக்குச் சீருடைச் செலவினத்தை உயர்த்தித் தர வேண்டுமென்று உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஐந்து வயது முதல் 12 வயதுள்ள 4773 குழந்தைகளுக்கு கடந்த ஆண்டு ரூ. 200 என்று இருந்ததை இந்த ஆண்டு ரூ. 100 சேர்த்து உயர்த்தி, ரூ.300 என்று வழங்கப்படுகிறது.

அதேபோல 13 வயது முதல் 18 வயதுவரை உள்ள ஆதரவற்ற குழந்தைகள் 727 பேருக்கும், கடந்த ஆண்டு ரூ. 300 என்று இருந்ததை இப்போது ரூ. 400 ஆக உயர்த்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் தந்திருக்கிறார்கள். இதன் காரணமாக 4 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் கூடுதலாகச் செலவினம் ஆகிறது.

ஊனமுற்றவர்களுக்காக நடத்தப்படும் சிறப்புப் பள்ளி மாணவர்களுக்கு, சீருடை இரண்டு இணை என்று அவர்களுக்கு ஆண்டுக்கு வழங்கப்படுகிறது. அதற்காக உதவித் தொகை ரூ. 250 என்று இருந்ததை ரூ. 300 ஆக உயர்த்தப்படுகிறது.

அதைப்போலவே 8-ஆம் வகுப்பும், அதற்கு மேலும் படிக்கின்ற மாணவர்களுக்காக இருந்த உதவித்தொகை ரூ.400 என்று உயர்த்தப்படுகிறது.

சீருடையைத் தைப்பதற்குத் தையல் கூலி உயர்த்தப்பட வேண்டுமென்று பல பெண்கள், தையல் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். கடந்த ஆட்சியின்போது, இந்தச் சீருடைகள் தைப்பதிலே பல முறைகேடுகள் இருந்தன. அந்த முறைகேடுகள் எல்லாம் நீக்கப்பட்டு நல்ல முறையிலே குழந்தைகளுக்கு வேண்டிய அளவில் துணிகளைத் தைத்துத் தர வேண்டுமென்பதற்காக அவர்களுடைய அளவு எல்லாம்கூட கடந்த ஆண்டு உயர்த்தித் தரப்பட்டது. இப்போது தைத்துத் தருகின்ற பெண்கள், தங்களுக்குத் தரப்படுகின்ற கூலியை விலைவாசி உயர்வினைக் கணக்கிலே கொண்டு உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, பள்ளி மாணவர்களின் சீருடையான



அரைக்கால் சட்டை, மேல் சட்டை தைப்பதற்கும், பள்ளி மாணவியர்களுடைய சீருடையான பாவாடை, ஜாக்கெட் மற்றும் தாவணி போன்றவைகளைத் தைப்பதற்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த கூலியில் ஒவ்வொரு உருப்படிக்கும் ஐம்பது காசு கூடுதலாக வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இதனால் 65 இலட்சம் இணைகளுக்குக் கூடுதல் செலவினமாக ரூ. 87 இலட்சத்து 50 ஆயிரம் வழங்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் காரணமாக, 79 மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் 25,000 மகளிர் பயன்பெற இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஆறு சேவை இல்லங்களில் பயிலும் மாணவிகளுக்கும், 25 அரசு குழந்தைகள் காப்பகங்களில் பயிலும் மாணவ-மாணவியர்களுக்கும் வழக்கமாக புத்தகங்கள் இலவசமாகத் தருவதற்கு ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆவது வகுப்புவரை ரூ.15/-லிருந்து ரூ. 200/- வரை வழங்கப்பட்டு வந்தது. இந்தத் தொகையில் அவர்களுக்குப் புத்தகங்களை வாங்கி வழங்க இயலவில்லையென்றும், தற்போது ஏறியுள்ள விலைவாசியினைக் கருத்தில் கொண்டு அந்தத் தொகையை உயர்த்தாமல், தேவைப்படும் அனைத்துப் புத்தகங்களையும், நோட்டுப் புத்தகங்களையும் தமிழக அரசின் பாட நூல் நிறுவனம் மூலமாகப் பெற்று இவ்வாண்டு அவர்களுக்கு வழங்குவதற்கு அரசு முன் வந்திருக்கின்றது.

விதவைகளினுடைய ஓய்வூதியத்தைப் பற்றி இங்கு பலரும் குறிப்பிட்டுப் பேசினார்கள். ஓய்வூதியத் தொகை உயர்த்தப்பட வேண்டுமென்று பல உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கை வந்திருக்கிறது. நான் ஏற்கெனவே ஒரு வினாவிற்காக விடை சொல்கின்றபோது தெரிவித்திருக்கிறேன். சமீபத்தில்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ரூ. 100 என்பதை ரூ. 150 என்று உயர்த்தி வழங்கி இருக்கின்றார்கள். எனவே, மேலும் அந்தத் தொகையை உயர்த்தித் தருவதற்கு இப்போது வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், விதவைப் பெண், கணவனால் கைவிடப்பட்ட மனைவி இவர்களுக்கு 18 வயது உள்ள வாரிசு இருந்தால், அவர்களும் உதவித் தொகையைப் பெறலாம். 18 வயதிற்கு மேற்பட்ட ஆண் வாரிசு இருந்தால் அந்த உதவித்தொகை கிடைக்காது என்றும் விதிகள் இருக்கின்றன. அந்த விதி தளர்த்தப்பட

வேண்டுமென்று பலரும் கேட்டுக்கொண்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உறுப்பினர்கள் அனைவருடைய கோரிக்கையையும் ஏற்று, இந்த விதிமுறை நீக்கப்பட்டு, தகுதியின் அடிப்படையில் அனைத்து ஆதரவற்ற விதவை மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு மாதம் ரூ.150/- வழங்குவதற்கு அனுமதி வழங்கியிருக்கின்றார்கள்.

அதேபோல, முதியோர் உதவித்தொகையைப் பெறுவதிலே இருக்கும் சிரமங்களையும் கணக்கில் கொண்டு இந்தத் திட்டத்தில் கீழ்க்காணும் ஆணைகள் வெளியிடப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிக வயதுடன் தோற்றமளிக்கும் நபர்கள் முதியோர் உதவித்தொகை கோரும்போது அவர்களிடம் வயதை நிரூபிக்கும் மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும் என்ற ஆணை நீக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பார்வையிலேயே அவர்கள் வயதானவர்கள் என்று தெரியும். பார்வையிலேயே அவர்கள் ஊனமுற்றவர்கள் என்று தெரியும். இதற்காகத் தனியாக ஒரு மருத்துவச் சான்றிதழ் தேவையா என்கிற உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை ஏற்று அந்த மருத்துவச் சான்றிதழ் தனியாக சமர்ப்பிக்கப்படத் தேவை இல்லை என்று அரசு கருதுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட வயது வரம்பின் விளிம்பில் உள்ள நபர்கள் மற்றும் ஐயம் ஏற்படும் நபர்கள் உதவித்தொகை கோரும்போது அவர்களது வயது, பொருளாதார நிலைமை மற்றும் இருப்பிடம் குறித்து, அவர்களுடைய உள்ளூர் கிராமப் பஞ்சாயத்து அல்லது நகரப் பஞ்சாயத்தின் தீர்மான நகலைச் சமர்ப்பித்தால் போதும் என்று தெரிவிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல, ஊனமுற்றோர்களுக்கு உதவித்தொகை வழங்கும் பொருட்டு, இரண்டு கால்களும் அல்லது இரண்டு கைகளும்



அல்லது இரண்டு கண்களிலுமே பார்வையற்ற ஊனமுள்ள நபர்கள் மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்ற ஆணையும் நீக்கப்படுகிறது. ஏனைய ஊனமுள்ள நபர்களிடமிருந்து அவர்களது ஊனத்தின் தன்மை குறித்து மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

கைவிடப்பட்ட மற்றும் விதவைப் பெண்களுக்கு அளிக்கும் உதவித்தொகை குறித்து, சம்பந்தப்பட்ட நபர்கள் குறித்த அறிக்கையைக் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர்களிடமிருந்து பெறுவதற்குப் பதிலாக உள்ளூர் கிராம/நகரப் பஞ்சாயத்து மன்றத்தின் தீர்மான நகலைச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் வசிக்கும் தொழுநோயாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள் வாங்குவதற்கு ரூ. 500/- மட்டும் வழங்கப்பட்டு வந்தது. அதை இவ்வாண்டு முதல் ரூ. 2,000/- ஆக உயர்த்தி, அவர்களுக்கு, 10 இல்லங்களுக்கு ரூ. 20,000/- வழங்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள தொழுநோயாளிகள் இறந்து விடுவார்கள் என்று சொன்னால், அவர்களின் இறுதிச் சடங்கிற்கு ரூ.100/- மட்டும்தான் மானியமாக வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு முதல், தற்போது ஏறியுள்ள விலைவாசியைக் கருத்திற்கொண்டு ரூ. 200/- மானியம் வழங்குவதற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது.

ஊனமுற்றோருக்கான சிறப்புப் பள்ளிகள் பல மாவட்டங்களில் இல்லை என்று குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, ஊனமுற்றோருக்கென சிறப்புப் பள்ளிகள் தொடங்குவதற்கு அந்த மாவட்டத்தில் இருக்கிற சமூக நலத் தொண்டு நிறுவனங்கள் முன்வந்தால், அந்த சமூக நலத் தொண்டு நிறுவனங்களுடைய பள்ளிகளில் தங்கிப் பயிலுகின்ற சிறுவர்களுக்குப் பராமரிப்பு உதவித்தொகையும், மற்ற சலுகைகளும் அரசின் மூலம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, ஊனமுற்றோருக்கான சிறப்புப் பள்ளிகள் தேவைப்படுகின்றன என்று கூறியிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள்,

தங்கள் மாவட்டத்தில் இருக்கின்ற சமூக நலத் தொண்டு நிறுவனங்களை ஊக்கப்படுத்தி, அதை நடைமுறையில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

75 சதவீதம் கூடுதலாக ஊனமடைந்துள்ள குழந்தைகளுக்கு, மாதம் ரூ.150/- பராமரிப்பு உதவித்தொகை, மாவட்டத்திற்கு 100 பேருக்குக் கடந்த ஆண்டு வழங்கினோம். அந்த மாதிரி ஊனமுற்றவர்களுக்கு, கடும் ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படுகின்ற தொகையை உயர்த்த வேண்டுமென்று கேட்டார்கள். அந்த உதவித்தொகையைத் தற்போது உயர்த்துவதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, அந்தத் தொகையைப் பெறுகின்றவர்களின் எண்ணிக்கையை உயர்த்த முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மேலும் இந்த ஆண்டு 2000 கடும் ஊனமுற்றவர்களுக்கு ரூ. 150/- வழங்குவதற்கு உத்தரவிடப்படுகிறது.

வேலையற்ற, பார்வையற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு நிவாரணத் தொகையும் உயர்த்தப்பட வேண்டுமென்று பார்வையற்றோர்கள் பலர், பலமுறை என்னிடத்திலே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள பார்வையற்றோருக்கு ஓராண்டு அளவிலே வேலைவாய்ப்புக் கிடைக்கவில்லை என்றால், அவர்களுக்கு 5 வருட காலத்திற்கு அல்லது 40 வயது அவர்களுக்கு நிறைவு அடைகின்ற வரை--தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினராக இருந்தால் 45 வயதுவரை--அல்லது வேலை கிடைக்கும்வரை இதில் எது முன்னரோ, அதுவரை நிவாரணத் தொகை வழங்கப்படும்.

பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு இதுவரை 250 ரூபாய் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு முதல் அது 300 ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

10ஆம் வகுப்பு மற்றும் மேல்நிலைப் பள்ளியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 200 ரூபாய், இந்த ஆண்டு முதல் 250 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. மற்ற, இதர வகுப்புகள் படித்தவர்களுக்கு 150 ரூபாய் என்பது 200 ரூபாயாக உயர்த்தப்படுவதன் மூலமாக அரசுக்கு 7,20,000 ரூபாய் கூடுதல் செலவினமாகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊனமுற்றவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டும் என்பது பற்றிச் சொன்னார்கள். அனைத்து ஊனமுற்றவர்களுக்கும்



அந்தச் சலுகையை வழங்குவதற்கு இயலாது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். கிட்டத்தட்ட, இதுவரை 12,500 பேர்கள் இலவச பஸ் பாஸ் சலுகை பெற்று வருகிறார்கள். இதன் மூலமாக, 80 இலட்சம் ரூபாய் அரசுப் போக்குவரத்துத் துறைக்கு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அவர்கள் பணியிடங்களுக்குச் செல்வதற்கும், சிகிச்சைக்குச் செல்வதற்கும் நிச்சயமாக இந்த அரசு பஸ் பயணச் சலுகையை வழங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சத்துணவுக் கூடங்களிலே முதியோர்களுக்குச் சத்துணவு பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி வேடம்மாள் அவர்கள் பேசுகின்றபோது, அமெரிக்காவில் முதியோர்களுக்கு ஓட்டலில் இலவச உணவு வழங்குவதுபோல் இங்கேயும் வழங்க வேண்டும் என்று சொன்னார்கள். அதுபோல் இங்கே வழங்கினால் தனியார்களுக்குத்தான் லாபம் வரும். சத்துணவுக் கூடங்களிலே, முதியோர்கள் மதிய வேளையில் உணவு உட்கொள்ள முன்வரலாம். அப்படி மதிய உணவு உட்கொள்ள முன்வருகிறவர்களுக்கு, வாரத்திற்கு 1 கிலோ அரிசி என்று வழங்கப்பட்டு வருவதைக் குறைத்து, அரைக் கிலோ அரிசி என்று வழங்கப்பட்டு வருகின்ற திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. எனவே, இதை முதியோர்கள் நிச்சயமாகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதையும், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களை நாடி வந்து இதுபோல உதவிகளைக் கேட்கின்ற முதியவர்களுக்கு, இந்த வசதி ஏற்கெனவே அரசாங்கத்தில் இருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-35

திருமண உதவித்தொகை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். எந்த உதவித்தொகை வேண்டுமென்றாலும், விண்ணப்பங்கள் வந்த பிறகு அதைப் பரிசீலிப்பதற்கு எப்படியும் 15 நாட்கள், அதிகபட்சமாக 1 மாதம் தேவைப்படுகிறது. அவர்கள், விண்ணப்பங்களை, திருமணத்திற்கு 15 நாட்களுக்கு முன்னதாகவே வழங்கியிருப்பார்களேயானால், அதைப் பரிசீலனை செய்து அவர்களுக்குத் திருமணத்தன்றே வழங்க வேண்டுமென்று மாண்புமிகு

முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். ஆனால் அவர்கள் சான்றிதழ் தருவதில் தாமதம் ஆகிறது. திருமணத்திற்கு முன்பாகவே சான்றிதழ்களை வழங்கிவிட்டால், அதை அடுத்துப் பரிசீலனை செய்து, உடனுக்குடன் தாமதம் இல்லாமல் வழங்க வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறோம்.

அடுத்து, விண்ணப்பங்கள் முன்னால் தந்தவர்களுக்கு உதவித் தொகை பின்னால் வழங்கப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது என்பதற்காக விண்ணப்பங்கள் தந்தவுடனே, ஒவ்வொரு மாவட்ட அலுவலகத்திலும் விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டதற்கான சான்றினை அவர்களுக்குத் தந்துவிட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. விண்ணப்பங்களை அளித்ததற்கான சான்றினைப் பெற்றுக் கொண்டார்கள் என்று சொன்னால், முரண்பாடு இல்லாமல், வேறுபாடு வராமல் நிச்சயமாக வரிசைக்கிரமமாக வழங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, திருமண உதவித் திட்டம் வழங்குவது தங்களுக்குத் தெரிவதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுகுறித்து அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறோம். அதாவது, திருமண உதவித் தொகை அல்லது தையல் இயந்திரம் வழங்குவதாக இருந்தால், அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்து, அவர்கள் முன்னிலையிலே வழங்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் சென்னையில் மற்றும் சிவகாசியில் நடைபெற்றுவருகின்ற பெண்களே நடத்துகின்ற அச்சகங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்; அதில் அதிகம் பேர் ஊனமுற்றோர் வேலை செய்வதாகக் குறிப்பிட்டார்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு நான் நேரடியாகச் சென்று பார்த்த இடம், சென்னையில் உள்ள அந்த அச்சகம்தான். அங்கே இருக்கிற பணியாளர்கள் பல ஆண்டுகளாக 800 ரூபாய் தொகுப்பு ஊதியம் வாங்கி வருவதாகவும், அவர்களுடைய குறைகள் களையப்படவில்லை என்றும் சொன்னார்கள். இதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தெரிவித்து, அவர்களுடைய ஊதியத்தை 1,200 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம். மேலும் உயர்த்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை குறித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து



ஆலோசித்து, முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பணிபுரியும் விடுதிகளில் 5,000 ரூபாய் வருமான வரம்பு என்று உள்ளதை நீக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு ஒன்றியத்திலும் 30 இடங்களில் மகளிர் மன்றங்கள் இயங்கி வருகின்றன. அவைகளுடைய இயக்கம் சரியாக இருக்கிறதா என்பதைப் பார்வையிட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே அந்தப் பட்டியல் தருவிக்கப்பட்டு, அந்த ஒன்றியங்களில் உள்ள மகளிர் மன்றங்கள் முழுமையாக இயங்குகின்றனவா என்பதைப் பார்வையிட்டு அப்படி முழுமையாக இயங்கவில்லை என்று சொன்னால், அவைகளை மாற்றி அமைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறார்கள் துயர் துடைப்பு மையம். சென்னையில் இந்திய குழந்தைகள் நலச் சங்கத்தின்கீழ் அரசின் மானிய உதவியுடன் அத்தகைய ஒரு மையம் இயங்கி வருகிறது. இம்மையம் சென்னை மாநகரக் காவல் துறை ஆணையரின் உதவியுடன் துயருறும் சிறார்களை மீட்டு மறுவாழ்வளிப்பதுடன், அவர்களது பெற்றோர்களுக்கு ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் வழங்கி வருகிறது. இம்மையத்திற்குத் தொலைபேசி மற்றும் கட்டமைப்பு வசதிகளுக்காகவும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தவும் ரூ. 1.69 லட்சம் மானியம் வழங்குகிறது.

காணாமல் போன சிறார்கள் குறித்த தகவல் மையம். வறுமை, நகர வாழ்க்கையின் ஈர்ப்பு, பெற்றோர்களின் அரவணைப்பின்மை, இன்ன பிற காரணங்களால் வீட்டை விட்டு வெளியேறும் இளஞ்சிறார்கள் சமூக விரோதிகளின் பிடியில் சிக்காமல், இச்சிறார்கள் சார்ந்த தகவல்களைத் தெரிவிக்கும் வகையில் சமூகப் பாதுகாப்புத் துறையின் இளைஞர் நலக் குழுமங்கள் இயங்கும் 17 இடங்களில் “காணாமல் போன சிறார்களுக்கான தகவல் மையம்” தொடங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் வழி தவறி ஆதரவிழந்த நிலையில் வந்தோரைப் பாதுகாக்கும் பொறுப்பேற்கும் கூர்நோக்கு இல்லங்கள் 18 இயங்கி வருகின்றன. இதிலே 7 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடைபெற்று வருகின்றன. அதில் இருக்கின்ற குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற பராமரிப்பு உணவுத் தொகை தினசரி 3 ரூபாய் என்றும், 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 4½ ரூபாய் என்றும் வழங்கப்பட்டு வருவதை மாற்றி, வயது வரம்பு இல்லாமல் மாதந்தோறும் 200 ரூபாய் அவர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

பிற்பகல் 1-40

பன்னாட்டு விவசாய வளர்ச்சி நிதி நிறுவனத்தின் (ஐ.எஃப்.ஏ.டி.) உதவியுடன் தர்மபுரி, சேலம், கடலூர், விழுப்புரம், மதுரை, இராமநாதபுரம், நாமக்கல், தேனி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தில் 257 மேற்பார்வையாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் அத்தனை பேருமே பட்டதாரிகள்; பல ஆண்டுக்காலம் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்கள். இந்தத் திட்டம் 31-12-1998-உடன் முடிவடைந்துவிடுவதால் இவர்களது பணிக் காலமும் முடிவடைய இருக்கிறது. அவர்களுடைய நிலை என்ன என்று பலரும் கேட்டு இருக்கிறார்கள். எனவே நம்முடைய முதல்வர் அவர்கள் அதைக் கனிவுடன் பரிசீலித்து, அரசு இவர்கள்மீது அக்கறை கொண்டு இவர்களுக்குப் பணி இழப்பு ஏற்படாமல் இருக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு உறுப்பினர்கள் இங்கு பல கருத்துக்களைத் தெரிவித்து இருக்கின்றார்கள். அதன் அடிப்படையிலே தேவையான விளக்கங்களை நான் தந்து இருக்கிறேன் என்று கருதுகிறேன். 99 வெட்டுத் தீர்மானங்கள் தரப்பட்டு இருக்கின்றன. 17 சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களிலே தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து இருக்கின்றார்கள். நான் கூறிய விளக்கங்கள் அவைகளுக்குப் போதுமானதாக இருக்கும் என்று நம்புகின்றேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களைத் தந்து இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றை வலியுறுத்தாமல், அரசுக்கு நிதியை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே,...

**திரு. ஆர். சொக்கர்:** தலைவர் அவர்களே,......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், மணி 1.40 (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

***திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் சொன்ன ஒரு செய்தி, எங்களுக்கெல்லாம் மிகுந்த அதிர்ச்சியூட்டும் ஒரு செய்தியாக இருந்தது. அதாவது, கடந்த ஆட்சிக் காலத்திலே அன்றைய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களால், பெற்றோருக்கு இரண்டாவதாக ஒரு பெண் குழந்தை பிறந்தால், 5 ஆயிரம் ரூபாய் வைப்பு நிதியாக வழங்கப்படும் என்று ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டு அமல்படுத்தப்பட்டது; அந்தத் திட்டத்தின் மூலம் பாஸ் புத்தகமும் வழங்கப்பட்டது; ஆனால், இப்போது அந்தப் பெற்றோர்கள் வந்து கேட்கும்போது, அந்த நிதியே செலுத்தப்படவில்லை என்ற மோசடி தெரிய வந்திருப்பதாகச் சொன்னார்கள். தமிழகத்தில் உள்ள தாய்மார்களுக்குச் செய்த நம்பிக்கை மோசடியாகும் இது. கடவுளுக்குச் சமமாக இருந்த அந்தக் குழந்தைகளை, கருவாக இருந்தபோதே ஏமாற்ற ஆரம்பித்த அரசியல் செப்படி வித்தை! இந்த மோசடி எப்படி நடந்தது என்பது இதுவரையிலும் அறிவிக்கப்படாத புதிராக இருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவதற்கு முன்பாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி முழுமையான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்; இந்த மோசடி செய்தவர்களை மக்கள் முன்பாக நிறுத்தி, தெருவிலே நிறுத்தி, சவுக்கால் அடிக்கக்கூடிய அளவிற்குக்கூட (மேசையைத் தட்டும் ஒலி) செய்தாலும் தவறில்லை என்ற ஒரு யோசனையைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, விவர அறிக்கை அவையில் வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே,......

**திரு. சி. வேலாயுதன்:** தலைவர் அவர்களே,........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். யாராவது ஒருவர் கேட்டால் பரவாயில்லை. 10, 12 பேர் எழுந்து கேட்டால் எப்படி? பிறகு எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே, தயவுசெய்து முக்கியமான ஒன்று.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாம் important தான். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடுகள்) வாக்கெடுப்பு என்று சொன்னதற்குப் பிறகுமா? திரு. ஞானசேகரன்,, you are a senior Member. You have to sit down.

**கோரிக்கை என் 29--சமூக நலன்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 29-சமூக நலன், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.



**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.458,26,13,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24-4-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

135. 1985-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள்முதற்கொண்டு 1997-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 2-ஆம் நாள் வரையுள்ள கால அளவில், சென்னை, அடையார் புற்றுநோய் மருத்துவ நிலையத்திற்கு X-கதிர் நிழற்பட இரசாயனங்கள் வாங்கியதன் மீது செலுத்தத்தக்க விற்பனை வரித் தொகையைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 9-12-1997-ஆம் நாளிட்ட 556-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

136. 1973-74 ஆம் ஆண்டு முதல் 1978-79 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில், தானியங்கள், கடலை, பருப்புகள் விற்பனையின் மீது விதிக்கப்பட்ட வேறுபாட்டு விற்பனை வரித் தொகையைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 19-12-1997ஆம் நாளிட்ட



79(2டி)-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

137. திருவாளர்கள் இண்டஸ்டிரியல் "எச்" பேக்கர்ஸ், சென்னை, நிறுவனத்தினர், தென்னக இரயில்வே, இரயில்பெட்டி தயாரிப்புத் தொழிற்சாலைக்கு விற்பனை செய்த இயந்திரத் துண்டுப் பொருட்கள் தயாரிப்பிற்குச் செலுத்த வேண்டிய வேறுபாட்டு வரித்தொகை மற்றும் மேல் வரிக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 19-12-1997-ஆம் நாளிட்ட 519(டி)-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) மற்றும் 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

115. மானியக் கோரிக்கை எண் 29-சமூக நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99 (தமிழ், ஆங்கிலம்).

116. சமூக நலன் பற்றிய செயல்முறைத் திட்டம், 1998-99 (ஆங்கிலம்).

117. சமூக நலன் பற்றிய செயல்முறைத் திட்டம், 1998-99 (தமிழ்).

118. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மக்கள் சாசனம் என்ற புத்தகம், 1998. (தமிழ், ஆங்கிலம்)

119. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஆறாவது முதல் நூற்று எட்டாவது வரையிலான அறிக்கைகள், 1997-98 (13 அறிக்கைகள்)

120. கோயம்புத்தூர் குண்டு வெடிப்பு சம்பந்தமாக அரசின் வெள்ளை அறிக்கை.

# இணைப்பு

(77 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## கோரிக்கை எண் 29

## சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு 1998-99.

### அத்தியாயம்-1

**முன்னுரை**

கோரிக்கை எண் 29-ன்கீழ் 1998-99-ம் ஆண்டிற்கு ரூ. 458,26,13 ஆயிரங்கள் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

மண்ணுக்கும் கேடாய் மதித்து வந்த பெண்ணினத்தைத் தன் கண்ணுக்கும் மேலாய் போற்றிடவும், சித்திர நிகர் பெண்டிர்களைச் சீரழிக்கும் நிலையினை மாற்றி சிறப்புக்குரியவர்களாய் ஆக்கிடவும் பொற்புள்ள மாதர்களைக் கல்லாக்கி அவர்களுக்கு கல்வியில்லை, உரிமையில்லை, கடைத்தேற வழியுமில்லை என்றிருந்த நிலையினை மாற்றி, அனைத்துத் துறைகளிலும் ஆற்றலுள்ளவர்களாய் ஆக்கிடவும், அவர்களுக்கு வேண்டிய அடிப்படை உரிமைகளிலிருந்து ஆதார உரிமைகள்வரை பெற்றுத் தரவும் கொள்கையளவில் மட்டுமின்றி நடைமுறையிலும் அவர்களை நனியுயர்த்திட அரசு பாடுபட்டு வருகிறது.

நாடு விடுதலையடைந்து 50வது சுதந்திரப் பொன் விழாவினைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் இந்தியத் திருநாட்டில், குறிப்பாகத் தமிழகத்தில் பெண்கள் முன்னேற்றம் பிற மாநிலங்களினின்றும் தனித்துச் சிறந்து விளங்குகிறது. பெண்களுக்குச் சமூகத்தில் சமூகத்

தகுதி கிடைக்க வேண்டும் என்ற உணர்வுடன் அரசு தீர்க்கமாகச் சிந்தித்து, புதுப்புது மாற்றங்களையும் திட்டங்களையும் வகுத்துச் செயல்படுத்தி வருகிறது. பெண்கள் நலனுக்கு இது வழிகாட்டும் அரசாக மட்டுமல்ல; வழி வகுத்துக் கொடுக்கும் வழித்துணை அரசாகவும் இந்த அரசு திகழ்கிறது.





## அத்தியாயம் 2

## மகளிர் மற்றும் குழந்தைகள் நலம்

*2.1* நமது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் எண்ணிக்கை பெரும்பான்மை வகிக்கிறது. ஒரு நாடு சமூக, பொருளாதார மற்றும் அரசியலில் முழு வளர்ச்சி அடைய வேண்டுமெனில் பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்திற்கு அதிகபட்ச முக்கியத்துவம் அளித்தல் வேண்டும்.

*2.2.* பெண்கள் மற்றும் குழந்தைகளின் முழு பரிணாம வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக விளங்குவதற்கென தமிழ்நாட்டில் சமூக நலத் துறை துவக்கப்பட்டது. பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனை முன்னிறுத்திச் செயல்படும் இத்துறையின் முக்கிய நோக்கங்களாவன:-

-பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்திற்கென திட்டம் மற்றும் செயல்களை வகுத்தல்.

-ஆதரவற்ற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காகச் சேவை புரிய நவீன திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்துதல்.

-இத்திட்டங்களின் பயன்கள் ஏழைகள் மற்றும் ஆதரவற்ற, வேண்டுவோருக்கு மட்டுமே போய்ச் சேரும் வகையில், திட்டச் செயல்பாடுகளைக் கண்காணித்தல்.

-அரசு மற்றும் தன்னார்வுத் தொண்டு நிறுவனங்களின் சேவைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் இரு வழிகளிலும் உள்ள சிறந்த திறன்களைப் பயன்படுத்துதல்.

-குழந்தை வளர்ச்சியினை மேம்படுத்தும் விதமாகத் திட்டம் தீட்டுவது, ஊட்டச்சத்துக் குறைவு, இறப்பு விகிதம் ஆகியவற்றைக் குறைத்து ஆரோக்கிமான குழந்தை நலனுக்காகச் சத்துணவு, சுகாதாரக் கண்காணிப்பு, தடுப்பூசி, நோய்த்தடுப்பு மற்றும் முன் பருவக் கல்வி ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்.

### 2.3. பெண்களுக்கான அரசின் கொள்கை

பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சிக்கான திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழகம் என்றுமே முன்னோடியாகத் திகழ்ந்து

வருகிறது. பெண்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும் மற்றும் அவர்களின் அடிப்படைத் தேவைகளான சுகாதாரம், சத்துணவு, குழந்தைப் பராமரிப்பு மற்றும் கர்ப்ப காலப் பராமரிப்பு ஆகிய தேவைகளைப் பெறும் வழிகளை மேம்படுத்தவும் பல நலத் திட்டங்கள் துவக்கப்பட்டுள்ளன.

பெண்கள் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், அரசின் திட்ட நோக்கிலும், செயல் திறன் செயல்பாடுகளிலும், அவ்வப்போது பெரும் இடைவெளி காணப்படுகிறது. இந்திய அரசியலமைப்பிலும், சட்டத்திலும், திட்டத்திலும் பெண்களுக்கான போதுமான வழிவகைகள் இருந்தபோதிலும், உதவி தேவைப்படும் பெண்களுக்கு அரசு நலத் திட்டங்களின் முழுப் பயன் போய்ச் சேருவதில்லை. குழந்தைப் பேறு, வீட்டு வேலை மற்றும் வெளிப்புற வேலை ஆகிய மூன்று வகைச் சுமைகளின் விளைவாக அவர்களுக்குச் சத்துணவுக் குறைபாடு மட்டுமின்றி அவர்களது ஆயுட்காலம் குறைவதற்கும் காரணமாகிறது.

இதுமட்டுமின்றி, நம் நாட்டில், பெண்கள் பிறப்பிலிருந்தே இனப் பாகுபாடிற்கு ஆளாகிறார்கள். இந்த இனப் பாகுபாடு பெண்கள் மற்றும் குழந்தைகளின் அதிக இறப்பு விகிதத்திற்கும், அதிகக் குழந்தை விகிதத்திற்கும், குறைந்த சத்துணவு விகிதத்திற்கும் காரணமாக விளங்குவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. நம் நாட்டில் பெண்கள் நலனைப் பாதுகாக்கக் கணக்கிலடங்காச் சட்டங்கள் இருப்பினும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளும் பெண்களைக் கொடுமைப்படுத்தும் சம்பவங்களும் இன்னமும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

1. இந்த அரசு, பெண்கள் நலத்தினைக் காக்கக் கடமைப்பட்டுள்ளது. பெண்கள் நலம், முன்னேற்றம் மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிகபட்ச முன்னுரிமை அளிக்கிறது. பெண்களுக்குத் தற்போது சமூகத்தில் இழைக்கப்படும் பாகுபாடுகள் மறைய ஒரே வழி, பெண் குழந்தைகளின் நிலையினை உயர்த்துதலேயாகும். இக்குறிக்கோளை அடையும் முகமாக, திட்டங்கள் தீட்டப்பட்டும், செயல்படுத்தப்பட்டும் வருகின்றன.

2. சில காலகட்டங்களில் பெண்களுக்கு உதவி மற்றும் ஆதரவு தேவைப்படும் என்பதை அரசு கவனத்தில் கொண்டுள்ளது. பல ஆதரவற்ற பெண்கள் தன்னம்பிக்கை பெறவும், வாழ்க்கையில்



உறுதியும் முன்னேற்றமும் அடையவும், அரசாங்கத்தின் நிதி மற்றும் ஆதரவு, உதவி தேவைப்படுகிறது. விதவைகள், ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான இல்லங்கள் நிறுவப்படுவதற்கு அரசு வழிவகை செய்துள்ளது.

3. தமிழ்ச் சமூகத்தில் பெற்றோரின் முக்கியப் பொறுப்பாக, மகளின் திருமணம் கருதப்படுகிறது. இதன் காரணமாகவே, பெண் என்றால் திருமணச் செலவு பெற்றோருக்கு அதிகமிருக்கும் என்று பெண் குழந்தைகள் வரவேற்கப்படுவதில்லை. ஏழைகளாக இருப்பினும் அவர்கள் சக்திக்கு மீறி மகள் திருமணத்திற்குச் செலவு செய்யும் சமூக நிர்ப்பந்தங்களால், பெண் குழந்தையென்றாலே துன்பம் என்ற முத்திரை குத்தப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு ஏழைப் பெற்றோர்கள் துயர் துடைக்கும் முகமாக இவ்வரசு பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

4. சமுதாயத்தில் மிகவும் புறக்கணிக்கப்பட்ட மற்றும் ஆதரவற்ற பிரிவினரின் நலனைக் காப்பது அரசின் முக்கியப் பொறுப்பாகும். விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்டிர் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி அவர்களும் அனைவரைப்போல் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு வழிவகை செய்யும் பொருட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

5. பல்லாண்டு வளர்ச்சிக்குப் பிறகும், நமது இந்திய சமுதாயம் சாதி, மதம் என்ற கட்டுப்பாடுகளிலிருந்து வெளியே வராத நிலை உள்ளது. வரதட்சணைக் கொடுமை முற்றிலுமாக நீங்க வேண்டுமெனில், சாதி, மத வேறுபாடுகளை முழுமையாகக் களைந்து திருமணங்கள் சாதி அடிப்படையின்றி நடைபெறுதல் வேண்டும். அரசின் முக்கியக் கடமைகளுள் ஒன்று, சாதி வேறுபாடுகளை நீக்குவதும் கலப்புத் திருமணங்களை ஊக்குவிப்பதும் ஆகும்.

6. இந்திய அரசமைப்பின்கீழ் பெண்களுக்காக உள்ள அனைத்து உரிமைகளும், பாதுகாப்பும், சட்டங்களும் மறுக்கப்படாமல் முழுமையாகக் கிடைக்க வழிவகை செய்வதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. பல்வேறு சட்டங்கள் மற்றும் சீர் திருத்தங்கள் மூலம் அவை சம்பந்தப்பட்ட பெண்களை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த அடிப்படையில் முதலில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் களையப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன், சமூக நலத் துறை, பெண்களுக்குச்

[1998 ஏப்ரல் 23

சட்ட விழிப்புணர்வை ஊட்டுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. பெண்களுக்கான சட்ட உரிமைகளைச் செயல்படுத்தும் அதிகாரிகளுக்கு, பெண்களைச் சமமாகப் பாவிக்கும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மற்றும் திட்டங்கள், செயல்படுத்தப்பட உள்ளன.

## 2.4. குழந்தைகளுக்கான அரசின் கொள்கை

குழந்தைகளின் நலனுக்காகத் திட்டங்களை வகுப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. தமிழக அரசால் துவக்கப்பட்ட பல திட்டங்கள் இந்திய அரசாலும் மற்ற மாநில அரசுகளாலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. தமிழக அரசால் துவக்கப்பட்ட மதிய உணவுத் திட்டம் தற்போது பல மாநில அரசுகளாலும் முன்மாதிரியாகக் கொள்ளப்பட்டு பின்பற்றப்படுகின்றது. தமிழக அரசின் முன்னேற்றக் கொள்கைகள் குழந்தைகளின் கல்வியறிவு, சுகாதாரம் மற்றும் சத்துணவு ஆகியவற்றில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ளன.

ஒரு நாட்டின் வலிமையான அடிப்படைக்கு ஆரோக்கியமான குடிமக்கள் தேவை. நாட்டின் வருங்காலக் குடிமக்களாகிய குழந்தைகளின் நலனிற்கு முக்கியத்துவம் அளிக்காத எந்த நாடும் வளர்ச்சி நோக்கி முன்னேற இயலாது. இதனைக் கருத்திற்கொண்டு தமிழக அரசு, குழந்தைகளுக்கான நலத் திட்டங்களை, அவர்கள் கருவில் இருக்கும்போதே பயன்பெறுமாறு பேறுகால உதவி நிதி, சத்துமாவு, ஊட்டச்சத்து வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களை வகுத்துள்ளது. கருவுற்ற தாய்மார்களுக்கு விழிப்புணர்வு ஊட்டவும் அவர்களின் ஆரோக்கிய நலனைப் பேணவும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

உலக அளவில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் 0-6 வயதுவரை உள்ள குழந்தைகளின் கண்காணிப்பிற்கும், வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிப்பது குறித்து விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த வயதில்தான் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான அடித்தளம் அமையும். அரசு, வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்கு, பாதுகாப்பினைக் கருதி, சத்துணவு, சுகாதாரம், தடுப்பூசி, முன்பருவக் கல்வி மற்றும் ஊனத் தடுப்பு முயற்சிகளைச் செம்மையாக மேற்கொண்டு வருகிறது.



1998 ஏப்ரல் 23]

மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் நகரப்புறங்களில் அதிகமாகக் குடி பெயர்தல் காரணமாக அநேகக் குழந்தைகள் அனாதையாக்கப்படும் சூழ்நிலை உருவாகி வருகிறது. இம்மாதிரி குழந்தைகளுக்கு தகுந்த நிறுவனப் பாதுகாப்பு அளிப்பது அரசின் தலையாய கடமையாகும். கல்வி மற்றும் தொழில் கல்வி அளிப்பது இக்குழந்தைகளின் வருங்காலத்தை நிர்ணயிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றது. சமூக நலத்துறை, நிறுவனப் பாதுகாப்பில் உள்ள இவ்வகைக் குழந்தைகளுக்குச் சேவை செய்வதை முதற் கடமையாகக் கொண்டுள்ளது.

ஒரு குழந்தையின் உடல் மற்றும் மனவளர்ச்சி முழுமையாக உருவாவதற்கு குடும்பச் சூழ்நிலை பெரிதும் உறுதுணையாக உள்ளது. சிறந்த நிறுவனப் பாதுகாப்புகூட ஒரு குடும்பத்தில் அளிக்கப்படும் அன்பு, பாசம், மற்றும் உணர்வுபூர்வமான குடும்ப அமைப்பிற்கு ஒருபோதும் ஈடாக முடியாது. ஒதுக்கப்பட்ட மற்றும் மறுக்கப்பட்ட இவ்வகைக் குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்குக் குடும்பச் சூழ்நிலைகளை உருவாக்கித் தரும் மாபெரும் பொறுப்பு இந்தச் சமுதாயத்திற்கும் அரசிற்கும் உண்டு. சமுதாயத்தில் விழிப்புணர்வு ஊட்டுவதன் மூலம் இம்மாதிரிக் குழந்தைகளை, குழந்தை இல்லாத பெற்றோர்கள் தத்தெடுக்க ஊக்குவிக்கப்படுவார்கள். இதனைச் செயலாக்கும் பொருட்டு தத்தெடுக்கும் வழிமுறைகளைச் சுலபமானதாகவும், வெளிப்படையாகவும் ஆக்குவதற்கு அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

## 2.5. பெண்களுக்கான பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள்

உண்மையான பெண்கள் முன்னேற்றம் என்பது அவர்களுக்குப் பொருளாதார சுதந்திரம் அளிக்காமல் அடைய முடியாது என்பது யாவரும் அறிந்த உண்மை. பல்வேறு ஆய்வுகளின் முடிவுகள் மூலம் ஒரு குடும்பத்திற்கு ஆண்கள் அளிக்கும் பங்கைவிட பெண்களின் பங்கு அதிகமாக உள்ளது என நிரூபிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு, பெண்கள் பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பல முயற்சிகள் எடுத்து வருகிறது. இதன் மூலம் பெண்களுக்குச் சுய வருமானம் பெற்றுத் தருவதோடு, பெண்களுக்கு ஏற்படும் சில எதிரான சூழ்நிலைகளை எதிர்கொள்ளத் தேவையான தன்னம்பிக்கையையும் பெற்றுத் தருகிறது.

[1998 ஏப்ரல் 23

பெண்களின் இலாபகரமான வேலைவாய்ப்பிற்காக அரசு பல்வேறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துள்ளது. தற்போது 137 சங்கங்கள் வேலை வாய்ப்பை வழங்கி வருகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

| வரிசை எண் | சங்கத்தின் தன்மை | சங்கங்களின் எண்ணிக்கை | பயன்பெறுவோர் |
|---|---|---|---|
| 1 | தையல் சங்கங்கள் | 78 | 34721 |
| 2 | இணை உணவுச் சங்கங்கள் | 26 | 1457 |
| 3 | எழுதுபொருள் சங்கங்கள் | 20 | 960 |
| 4 | இதர சங்கங்கள் | 13 | 650 |

1997-98ம் ஆண்டு தையல் சங்கங்கள் மூலமாக 64 இலட்சம் ஜோடி சீருடைகள் தைக்கப்பெற்று, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயனடையும் 1 முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு வழங்கப்பட்டன. இத்துடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் இயக்ககங்களின்கீழ் நடைபெறும் பள்ளிகளில் பயில்பவர்களுக்கும் இச்சங்கங்களின் மூலம் சீருடை தைத்து வழங்கப்படுகிறது.

இணை உணவுச் சங்கங்கள் இணை உணவு தயாரித்து 6 மாதம் முதல் 3 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கும், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் வழங்குகின்றன. வருடத்தில் சுமார் 6806 மெட்ரிக் டன் இணை உணவு தயாரிக்கப்பட்டு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்திற்கு வழங்கப்படுகிறது.

அரசுத் துறையிலும் மற்றும் அரசு நிறுவனங்களிலும் பயன்படும் பல்வேறு வகையான பதிவேடுகளை அச்சடித்து விநியோகம் செய்து எழுதுபொருள் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குகிறது.

கூட்டுறவுச் சங்கங்களுடன் 49 பயிற்சி மையங்களும், 6 உற்பத்தி நிலையங்களும் செயல்படுகின்றன. ஆண்டுதோறும் சுமார் 775 பெண்களுக்கு இப்பயிற்சி நிலையங்களின் மூலம் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.



1998 ஏப்ரல் 23]

## 2.6. திருமண உதவித் திட்டங்கள்

| திட்டத்தின் பெயர் | உதவித் தொகையின் அளவு | உதவித் தொகை பெறுவதற்கான தகுதிகள் | பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி (1998-99) |
|---|---|---|---|
| 1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவி திட்டம் | ரூ. 10000 காசோலை அல்லது கேட்பு வரைவோலை. | மணப்பெண் 8வது தேர்வு எழுதியிருக்க வேண்டும். பழங்குடியினருக்கு 5வது படித்து இருந்தால் போதுமானது. ஆண்டு வருமானம் ரூ. 12,000/- 18 வயது மற்றும் அதற்கும் மேல். | 60000 ரூ. 6000 இலட்சம் |
| 2. ஏழை விதவையரது மகள் திருமண நிதியுதவித் திட்டம். | ரூ. 3000 காசோலை அல்லது கேட்பு வரைவோலை | விதவையரின் ஆண்டு வருமானம் ரூ.12000/-க்குள் இருத்தல் வேண்டும். 20 வயது முதல் 30 வயதிற்குள். ஒரே ஒரு மகளின் திருமணத்திற்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படும். | 1050 ரூ. 31.50 இலட்சம் |
| 3. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் திட்டம் (விதவை மறுமணத் திட்டம்) | ரூ. 7000 (ரூ. 5000 தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ. 2000 காசோலை) | ஆண்டு வருமானம் ரூ. 12000/-க்குள் இருத்தல் வேண்டும். 20-30 வயதுக்குள். | 196 ரூ.13.72 இலட்சம் |
| 4. ஆதரவற்ற பெண்களுக்குத் திருமண நிதி உதவித் திட்டம். | ரூ. 3000 காசோலை அல்லது கேட்பு வரைவோலை | ஆண்டு வருமானம் ரூ. 12000/-க்குள் இருத்தல் வேண்டும். 20-30 வயதுக்குள். | 100 ரூ.3.00 இலட்சம் |

| | | | |
|---|---|---|---|
| 5. அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம். | ரூ. 10000 (ரூ. 7000 தேசிய சேமிப்புப் பத்திரம், ரூ. 3000 காசோலை வழங்கப் படுகிறது).<br><br>2-10-97க்குப் பின் நடைபெறும் திருமணங்களில் மணமக்களில் ஒருவர் தாழ்த்தப் பட்ட வகுப்பின ராக இருப்பின் ரூ. 20000 உதவித் தொகை வழங்கப்படும். (ரூ.10000 தேசிய சேமிப்புப் பத்திரம், ரூ. 10000 காசோலை) | ஆண்டு வருமானம் ரூ. 12000/-க்குள் இருத்தல் வேண்டும். 20-30 வயதுக்குள் இருத்தல் வேண்டும்.<br><br>மணமக்களில் ஒருவர் தாழ்த்தப்பட்ட வகுப்பினராக இருப்பின் வருமான வரம்பு இல்லை. | 554<br><br>ரூ. 55.40 இலட்சம் |

## 2.7. டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டம்

பெண்கள் கருவுற்ற காலங்களில், ஓய்வாக இருப்பதும், மிக அதிக வேலை செய்யாமல் இருப்பதும், அவர்கள் கருவில் சுமக்கும் குழந்தையின் நலனுக்காக மட்டுமின்றி, அவர்களின் உடல் நலம் மற்றும் பேறுகாலத்திற்கும் மிகவும் அவசியமாகிறது. எனினும், இச்சமூகத்தில் நிலவி வரும் பழக்க வழக்கம் காரணமாக குடும்பங்களில் பெண்களின் நலனுக்குக் கடைசிபட்ச முக்கியத்துவமே அளிக்கப்படுகிறது. மேலும், பல குடும்பங்களில் வறுமையின் காரணமாக பெண்கள் பேறுகால தினம்வரை அன்றாடம் பொருளீட்டுவது அவசியமாகிறது. இப்பெண்களின் நலனைக் கருத்திற் கொண்டு அவர்கள் பேறுகாலத்தின்போது ஓய்வெடுக்க ஏதுவாகவும் அவர்கள் வேலைக்குச் செல்லாதிருக்கும் காலங்களில் ஏற்படும் பொருளாதார நஷ்டத்தினை ஈடுகட்டவும், பேறுகால முடிவிற்கு முன்னால் 8-12 வாரங்களில் அப்பெண்கள் சத்துணவு பெறவும், ஓய்வெடுக்கவும் உதவியாக, அரசு நிதியுதவியும் மற்றும் சத்துணவும்



அளிக்கிறது. ஒவ்வொரு தாய்க்கும் மொத்தமாக ரூ.500/- நிதியுதவி மணியார்டர் மூலம் அனுப்பப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 610.05 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 2 இலட்சம் ஏழைப் பெண்கள் பயன் பெறுவர்.

## 2.8. நிறுவனங்களின் மூலம் உதவி

### 1. சேவை இல்லங்கள்.

ஆதரவற்ற மற்றும் உதவிக்கு யாருமற்ற, எங்கும் வாழ முடியாத விதவைப் பெண்களுக்குத் தகுந்த நிறுவனப் பாதுகாப்பு அளிப்பது மிகவும் முக்கியமாகும். இவ்வகைப் பெண்கள் அவர்கள் வாழ்க்கையை மீண்டும் அமைத்துக்கொள்ளும் முகமாக, அரசு, சேவை இல்லங்களைத் தொடங்கியுள்ளது. சமூக நலத்துறை 6 சேவை இல்லங்களை, தாம்பரம், கடலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் காரைக்குடி ஆகிய இடங்களில் நடத்தி வருகிறது. இந்த இல்லங்களில் உணவு, உறைவிடம், கல்வி மற்றும் தொழிற்கல்வி இப்பெண்களுக்கு அளிக்கப்படுகின்றன. குழந்தையுடன் உள்ள இவ்வகைப் பெண்கள், அவர்களின் குழந்தைகளையும் இல்லங்களில் சேர்த்துக்கொள்ளவும் அக்குழந்தைகள் இவ்வில்லங்களிலேயே கல்வி பெறவும் வசதியுள்ளன.

தாம்பரம் மற்றும் கடலூர் இல்லங்களில் கலைப் பாடங்களைக் கொண்ட மேல்நிலை வகுப்புகளும், தஞ்சாவூர் சேவை இல்லத்தில் அறிவியல் பாடங்களில் மேல்நிலை வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. உணவுக்காகப் பெரியவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 210/-ம் சிறியவர்களுக்கு ரூ. 165/-ம் நிதி ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. மேலும் சீருடைக்காக, பெரியவர்களுக்கு ரூ. 150/-ம், சிறியவர்களுக்கு ரூ. 100/-ம் வருடத்திற்கு ஒரு முறை வழங்கப்படுகிறது. மற்றும் ஒன்று முதல் 5-ம் வகுப்பு மாணவிகளுக்கு ரூ. 35/- வீதமும், 6 முதல் 8-ம் வகுப்பு வரை உள்ள மாணவிகளுக்கு ரூ.50/- வீதமும் 9 மற்றும் 10-ம் வகுப்பு மாணவிகளுக்கு ரூ. 90/- வீதமும் பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் வாங்குவதற்கு வழங்கப்பட்டு வருகின்றது.

உடல் ஊனமுற்றோருக்காகத் தனியாக ஒரு பிரிவு தாம்பரம் சேவை இல்லத்தில் இயங்குகிறது.

[1998 ஏப்ரல் 23

தாம்பரம் சேவை இல்லத்தில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துச் செயலகப்பிரிவு ஒன்றும் தனியாக இயங்கி வருகிறது. ஒவ்வொன்றிலும் ஒரு வருடப் பயிற்சி 20 பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படுகிறது. பயிற்சிக்குப்பின் அவர்கள் அரசுத் தேர்வு எழுதலாம். செவிலியர், துணி மற்றும் வடிவமைப்பு, ஆய்வகத் தொழில் நுட்பப் பயிற்சி ஆகியன திருநெல்வேலி, காரைக்குடி மற்றும் தாம்பரம் சேவை இல்லத்தில் அளிக்கப்படுகின்றன. தஞ்சாவூரிலுள்ள சேவை இல்லத்தில் உள்ளவர்களுக்கு, நவீன தொழில் நுட்பத்தில் ஈடுபடுத்தும் வகையில், கணிப்பொறி பயிற்சியளிக்கப்படுகிறது. 10ஆம் வகுப்புப் படித்து முடித்த பெண்களைப் பல்நோக்குச் சுகாதாரப் பணியாளர் பயிற்சிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதுவரை 2000 பெண்களைப் பயிற்சி பெறப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

### 2. பணிபுரியும் மகளிர் விடுதிகள்

படித்த பெண்கள் அதிகரித்து வரும் நிலையில் அதிகமான பெண்கள் சமுதாயத்தில் வேலையினை எதிர்நோக்கியுள்ளார்கள். வேலை கிடைத்திடும் பெண்கள் தங்கள் குடும்பத்தாரையும், ஊரையும் விட்டு வெளியூருக்குச் சென்றிட வேண்டியுள்ளது. பெண்கள் பணி செய்திட வெளியூருக்குச் செல்லும்பொழுது அவர்களுக்குத் தங்கும் வசதி பிரச்சினையாக உள்ளது. பெரும்பான்மையான பெண்கள், சிறந்த தங்குமிடம், குறைந்த வாடகையிலும், வசதியானதாகவும், நல்ல சூழ்நிலையில் பாதுகாப்புடனும் எதிர்பார்க்கிறார்கள். பணிபுரியும் பெண்களுக்குச் சிறந்த தங்குமிடம் அளித்திடும் வகையில், அரசு, தமிழ்நாட்டில் 8 இடங்களில், சென்னை (2), கடலூர், மதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருச்சி மற்றும் ஓசூரில் மகளிர் விடுதிகளை ஆரம்பித்துள்ளது. மகளிரின் மாத வருமானம் ரூ. 5000/-க்குள் இருந்திட வேண்டும். வாடகை, தண்ணீர், மின் கட்டணம், உணவு ஆகியவை உள்ளுறைவோரிடமிருந்து சரிசமமாக வசூல் செய்யப்படும். விடுதிக்காக கண்காணிப்பாளர், 2 சமையலர், 1 அலுவலக உதவியாளர், 1 இரவுக் காவலர், சுகாதாரப் பணியாளருக்குரிய ஊதியத்தை அரசு ஏற்றுக் கொள்கிறது.



1998 ஏப்ரல் 23]

## 2.9. தன்னார்வு நிறுவனங்களுக்கு அரசு உதவி

### (அ) பெண்களுக்காக நடத்தப்படும் சேவை இல்லங்கள்

அரசு நிதி உதவியுடன் காந்தி கிராமத்தில் உள்ள கஸ்தூரிபாய் சேவிகாஸ்ரமத்திலும் சென்னையில் உள்ள ஸ்ரீ சேவா மந்திரிலும் இரண்டு சேவை இல்லங்கள் நடைபெற்று வருகின்றன.

### (ஆ) பணிபுரியும் மகளிர் விடுதி கட்ட நிதியுதவி அளித்தல்

தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களால் கட்டப்படும் பணிபுரியும் மகளிர் விடுதி கட்டடம் கட்டுவதற்கான மொத்தச் செலவில் 75% மத்திய அரசு மானியமாக வழங்குகிறது. மொத்த மதிப்பீட்டில் 15% அல்லது ரூ. 35000/-, இவற்றில் எது குறைந்த தொகையோ அத்தொகை மானியமாக மாநில அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தைப் பயன்படுத்த விரும்பும் நிறுவனங்கள் கட்டடம் கட்டச் சொந்தமாக நிலம் வைத்திருக்க வேண்டும். இந்நிறுவனங்கள் மாநகராட்சி/நகராட்சியின் முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும். இதே பணிக்காகப் பிற அரசிடமிருந்து உதவிகள் பெற்றிருத்தல் கூடாது. கட்டடம் கட்டப்படும் நிலத்தின் மதிப்பில் 50% மத்திய அரசால் மானியமாக அளிக்கப்படுகிறது. 1996-97 வரையில் 63 பணிபுரியும் மகளிர் இல்லக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

## 2.10. பெண்களுக்கான இதர திட்டங்கள்

### 1. வழிகாட்டி மையம்

பெண்களின் நலனுக்காகவும் வளர்ச்சிக்காகவும் பல திட்டங்கள் செயல்பட்டு வந்த போதிலும் பெண்களிடம் இத்திட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வு மிகவும் குறைவாகவே உள்ளது. இதன் விளைவாக மிகச் சில பெண்களே திட்டங்களின் மூலம் பயன் பெறுகின்றனர். பெண்களின் நலனுக்காக வழங்கப்படும் பல்வேறு நலத் திட்டங்களைப் பற்றி அவர்களுக்குத் தகவல் அளிப்பதற்காக ஒரு வழிகாட்டி மையம் ஒவ்வொரு மாவட்ட சமூக நல அலுவலகத்திலும் செயல்பட்டு வருகிறது. மையத்தின் தலைவராக இருக்கும் வழிகாட்டி அலுவலர், பெண்களுக்கான தேவையான தகவல்களை அளிப்பதற்கும், வங்கிக் கடன் விண்ணப்பங்களை வங்கிகளுக்குப் பரிசீலனைக்கு அனுப்பவும் உதவி புரிகிறார்.

[1998 ஏப்ரல் 23

1998-99-ம் ஆண்டிற்காக ரூ. 46.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. மகளிர் மன்றங்கள்**

சுய உதவிக் குழுவின் முக்கியத்துவம் உலக அளவில் உணரப்பட்டுள்ளது. கிராம அளவில் உள்ள சுய உதவிக் குழுக்கள் கிராம மகளிரை ஒருங்கிணைக்கப் பயன்படுவதோடு, மேலும் கூட்டு முயற்சியினால் கிடைக்கும் வளர்ச்சியினைப் பகிர்ந்துகொள்ளவும் பயன்படுகின்றன. கிராம மகளிர், குழுவாகப் பணியாற்றும்போது, அவர்களது தன்னம்பிக்கை மற்றும் விழிப்புணர்வு பன்மடங்காகப் பெருகுகிறது. சமூக நலத் துறை, இந்த சுயஉதவிக் குழுக்களுக்கு ஒப்புதல் அளித்து, தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 30 மகளிர் மன்றங்கள் என்ற அளவில் சுமார் 11,520 மகளிர் மன்றங்களை உருவாக்கி உள்ளது.

ஒவ்வொரு மகளிர் மன்றமும் 25 முதல் 30 பெண் உறுப்பினர்களை உள்ளடக்கியது. உணவைப் பதப்படுத்துவது, குழந்தை வளர்ப்பு, சுத்தம், சுற்றுப்புறச் சுகாதாரம், சத்துணவு ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்காக ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 13,000/- மானியமாக வழங்கப்படுகிறது. மகளிர் மன்றங்களை ஊக்குவிக்கும் பொருட்டு சிறப்பாகச் செயல்படும் மகளிர் மன்றங்களுக்குத் தலா ரூ. 2,000 வீதம் பரிசு வழங்கப்படுகிறது.

1998-99ஆம் ஆண்டிற்காக ரூ. 51.42 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3. இலவசத் தையல் இயந்திரம் வழங்குதல்**

ஒவ்வோர் ஆண்டும், சுமார் 1,000 தையல் இயந்திரங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஊனமுற்ற ஆண், பெண் இருபாலருக்கும் அவர்களின் வேலைவாய்ப்பிற்கும், தேவைக்கேற்ப வாழ்க்கை வாழ்வதற்கும் இலவசமாக வழங்கப்பட்டு வந்தன. 1997-98ஆம் ஆண்டு 3,000 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. 1998-99ஆம் ஆண்டிற்கு 3,000 தையல் இயந்திரங்கள் வழங்குவதற்கு நிதி ரூ. 54 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



1998 ஏப்ரல் 23]

**4. விதவைகளின் குழந்தைகளுக்குப் பாட நூல்கள் மற்றும் குறிப்பேடுகள் இலவசமாக வழங்குதல்**

இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் இத்திட்டம் ரூ. 12,000/-க்குக் குறைவாக ஆண்டு வருமானம் பெறும் விதவைகளின் குழந்தைகள் பயன்பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்டது. 1996-97ஆம் ஆண்டு முதல் எல்லா ஏழை விதவையரின் குழந்தைகளுக்கும் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் வழங்கவும் உதவித் தொகை ரூ. 50/- முதல் ரூ. 500/- வரை உயர்த்தியும் வழங்கப்படுகிறது. 1998-99ஆம் ஆண்டிற்கு ரூ. 16.69 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.11. தமிழ்நாடு சமூக நல வாரியம்**

தமிழ்நாடு சமூக நல வாரியம் 1954ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தமிழ்நாட்டின் தொண்டு நிறுவனங்களின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:-

1. சமூக நலத் தன்னார்வு அமைப்புகளைத் துவக்கி நிறுவுதல்.
2. தனியார் சேவை நிறுவனங்கள் பணித் திறனை வளர்ப்பதற்குத் தொழில் நுட்ப மற்றும் நிதி உதவியளித்து அவற்றின் தரத்தினை உயர்த்துதல்.
3. அரசு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

தமிழ்நாடு சமூக நல வாரியம் மாநில அரசிடமிருந்தும் (நிர்வாகச் செலவினம்) மத்திய சமூக நல வாரியத்திடமிருந்தும் நிதி உதவி பெற்று, தொண்டு நிறுவனங்கள் மூலம், குழந்தைகள், ஊனமுற்றோர்கள் மற்றும் மகளிர் ஆகியோரது மேம்பாட்டுக்காகப் பணியாற்றுகிறது. 50% முதல் 90% வரை தொண்டு நிறுவனங்களுக்கு உதவி வழங்கப்படுகிறது. எஞ்சிய செலவுத் தொகை, தொண்டு நிறுவனங்களால் ஏற்கப்படுகிறது. சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 சதவீதம்கூட நிதியுதவி அளிக்கப்படுகிறது.

1,742 தொண்டு நிறுவனங்களுக்கு ஏப்ரல் 1996 முதல் ஜனவரி 1997 முடிய ரூ. 260.80 லட்சங்கள் நிதியுதவி செய்யப்பட்டுள்ளது. 698 தொண்டு நிறுவனங்களுக்கு ஏப்ரல் 97 முதல் ஜனவரி 98

முடிய ரூ. 338.30 இலட்சங்கள் நிதியுதவி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 1,250 நிறுவனங்கள் மூலமாக 33,311 பயனாளிகள் பயன்பெற்றனர்.

## 2.12. தமிழ்நாடு மாநிலப் பெண்கள் ஆணையம்

பெண்களின் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு மாநிலப் பெண்கள் ஆணையம் துவக்கப்பட்டது. இந்த ஆணையத்தில், தலைவர் மற்றும் உறுப்பினர்கள் உள்ளனர். பெண்கள் நல உரிமைகளைப் பாதுகாப்பதோடு, பெண்களுக்கான சட்டங்கள், திட்டங்கள் மற்றும் அவற்றைச் செயலாக்குவது குறித்து, அவ்வப்போது ஆய்வு நடத்தவும், அரசுக்கு மேற்கண்டவை குறித்து ஆலோசனை வழங்குவதும் இந்த ஆணையத்தின் முக்கியப் பொறுப்புகளாகும்.

பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கப் பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டாலும், அவை குறித்தான விழிப்புணர்வு பெண்களிடையே காணப்படுவதில்லை என்பதை இவ்வாணையம் தெரிந்து கொண்டுள்ளது. தங்கள் நலனுக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்புச் சட்டங்கள் குறித்து விழிப்புணர்வு இல்லாதபட்சத்தில், அவற்றின் பலன்கள், தேவைப்படும் பெண்களுக்குப் போய்ச் சேர இயலாது.

முக்கியமாக, பெண்கள் நலச் சட்டங்கள் குறித்து, கிராமப் பெண்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கோடு, கிராமப்புற மற்றும் நகர்ப்புறக் கல்லூரிகள் மூலமாக சட்ட விழிப்புணர்வு முகாம்கள் ஏற்படுத்த ஆணையம் திட்டமிட்டுள்ளது.

பெண்கள் உரிமைகளைப் பாதுகாக்க முக்கியமாக அரசு அலுவலர்களுக்கு, அதிலும் குறிப்பாக, காவல் துறை அலுவலர்களுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஏனென்றால் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள், அநீதிகள் அனைத்திற்கும் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் காவல் துறையினருக்கே உள்ளது. ஒரு பெண் புகார் கொடுக்க, தானாகவே முன்வந்து காவல் நிலையம் சென்றால், அப்பெண்ணை வித்தியாச நோக்கோடு பார்க்கும் நிலை இன்னும் சமுதாயத்தில் நிலவி வருகிறது. இந்நிலை மாற்றப்பட வேண்டும். மாறிவரும் சமூகச் சூழ்நிலையில் காவல் துறையினர், பெண்கள் குறித்த மனப்பான்மையினை மாற்றிக்கொள்ளும் அவசியம் ஏற்பட்டுள்ளது. 1998-99ஆம் ஆண்டில்,



இனப் பாகுபாடுகளையும் விழிப்புணர்வு முகாம்கள், மிகப்பெரிய அளவில் நடத்திட ஆணையம் திட்டமிட்டுள்ளது. களப் பணியாளர்களுக்கு, குறிப்பாக, காவல் துறையினைச் சார்ந்த ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்குப் பெண்களைக் கண்ணியமாக நடத்த வேண்டிய தேவையினை உணரவைக்கும் முன்னோடிப் பயிற்சி அளித்திடத் திட்டமிட்டுள்ளது. 1998-99ஆம் நிதியாண்டிற்கு ரூ. 4.96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.13 தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்.

### (அ) முன்னுரை

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் தமிழக அரசால் டிசம்பர் திங்கள் 1983ஆம் ஆண்டு மகளிர் பொருளாதார மேம்பாட்டுக் குறிக்கோளை மையமாகக் கொண்டு நிறுவப்பட்டது. இதனுடைய அங்கீகரிக்கப்பட்ட பங்குத் தொகை ரூ. 1.00 கோடியாகும். இதில் ரூ. 78.42 இலட்சம் பங்குத் தொகையாக இதுவரை பெறப்பட்டுள்ளது. இதில் பங்கு மூலதனமாக மாநில அரசிடமிருந்து பெறப்பட்ட ரூ. 40.00 இலட்சம் மற்றும் மைய அரசிடமிருந்து பெற்ற ரூ. 38.42 இலட்சம் அடங்கும்.

### (ஆ) 31-3-97 முடிய உள்ள செயல்பாடுகள்

இந்நிறுவனம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 1,22,442 ஏழை மகளிரைப் பயனடையச் செய்துள்ளது. அவர்களில் 78,122 மகளிர், மொத்த மதிப்பீட்டுத் தொகையான ரூ. 85.43 கோடியில் ரூ. 50.27 கோடி மானியமாகவும் மற்றும் மீதமுள்ள ரூ. 35.16 கோடியை வங்கிக் கடனாகவும் பெற்றுள்ளனர்.

### (இ) 1997-98ஆம் ஆண்டின் செயல்பாடுகள்

இந்நிறுவனம் 1997-98ஆம் ஆண்டில் மேலும் சுமார் 1,18,020 ஏழை மகளிர் பயன்பெறத் திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது. இதன் எதிர்பார்க்கப்படும் மொத்தச் செலவுத் தொகை ரூ. 23.26 கோடி ஆகும். இதில் பன்னாட்டு விவசாய வளர்ச்சி நிதி (ஐஃபாட்) திட்டத்தின் கீழ் ரூ. 16.58 கோடி அரசு மானியமாகவும் எஞ்சியுள்ள ரூ. 6.68 கோடி வங்கிக் கடனாகவும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மகளிர் திட்டம் தற்போதுதான் துவங்கப்பட்டிருப்பதாலும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்/ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய இவற்றினை இத்திட்டத்துடன் இணைக்க மைய அரசின் ஆலோசனை பெற வேண்டியிருப்பதாலும், இந்த வருடத்தில் இத்திட்டத்திற்கு வங்கிக் கடன் ஏதும் அளிப்பதற்கு இல்லை.

31-12-1997 ஆம் ஆண்டு முடிய உள்ள முன்னேற்ற அறிக்கையின் விவரம் பின்வருமாறு:

1997-98ம் ஆண்டு டிசம்பர் 1997 முடிய

| வ. எண் | திட்டம் | அலகு | செயல் இலக்கு | | நிதி (இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பயன் பெற்ற வர்கள் | வங்கிக் கடன் பெற்ற வர்கள் | அரசு மான்யம் | வங்கிக் கடன் | மொத்தம் |
| 1. | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (பன்னாட்டு விவசாய வளர்ச்சி நிதி) | மகளிரின் எண்ணிக்கை | 11367 | 5464 | 453.52 | 331.42 | 784.94 |
| 2. | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (விரிவு) (மாநில அரசு நிதி) (மகளிர் திட்டம்) | " | 62497 | - | 70.26 | - | 70.26 |
| 3. | தொழிற் பயிற்சித் திட்டங்கள் | " | 190 | - | 0.09 | - | 0.09 |
| | மொத்தம் | - | 74054 | 5464 | 523.87 | 331.42 | 855.29 |

### ஈ. 1998-99-ம் ஆண்டிற்கான திட்டம்

இந்நிறுவனம் குறைந்தது 3,00,000 கிராமப்புறப் பெண்களுக்கு சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் ஆவதற்கும் மற்றும் பயிற்சி அளிக்கவும் ஏற்பாடு செய்ய உத்தேசித்துள்ளது. இதில் 71,000 பெண்கள் வங்கிக் கடன் மூலம் இணைக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மொத்த நிதி முதலீடு



ரூ. 138.93 கோடியாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதில் அரசு மானியமான ரூ. 72.05 கோடியில் (ஊரக வளர்ச்சித் துறை மானியத் தொகை ரூ. 27.72 கோடி மற்றும் இதர வகைச் செலவினங்கள் ரூ. 44.33 கோடி) எஞ்சியுள்ள ரூ. 66.88 கோடி வங்கிக் கடனாகும். இவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

1998-99-ம் ஆண்டிற்கான திட்டம்

| வரிசை எண் | திட்டம் | செயல் (மகளிர் எண்ணிக்கை) பயன் பெற்றவர்கள் | வங்கிக் கடன் உதவி | நிதி (கோடியில்) அரசு உதவி | வங்கிக் கடன் | மொத்த மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (பன்னாட்டு விவசாய வளர்ச்சி நிதி) | - | 8000 | 7.83 | 6.40 | 13.73 |
| 2. | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (விரிவு) (மாநில அரசு நிதி) (மகளிர் திட்டம்) | 3,00,000 | 63000 | 64.64* | 60.48 | 125.12 |
| 3. | தொழிற்பயிற்சித் திட்டங்கள் (பகுதி-2) | 95 | - | - | - | - |
| | 1. பயிற்சி | - | - | 0.06 | - | - |
| | 2. மேற்பார்வை மற்றும் ஆய்வு | - | - | 0.04 | - | - |
| | 3. கணிப்பாய்வு | - | - | 0.05 | - | 0.15 |
| 4. | தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (பகுதி-2) | 50 | - | 0.02 | - | 0.02 |
| | மொத்தம் - | 300145 | 71000 | 72.14 | 66.88 | 189.02 |

*இத்தொகையில் ஊரக வளர்ச்சித் துறையில் இருந்து மானியமாக எதிர்பார்க்கப்படும் தொகையான ரூ. 27.72 கோடி சேர்க்கப்படவில்லை.

[1998 ஏப்ரல் 23

**உ. சிறப்புக்கூறுகள்.**

**1. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (ஐஃபாட் நிதி உதவி)**

பன்னாட்டு விவசாய வளர்ச்சிக்கான நிதி நிறுவன உதவியுடன் செப்டம்பர் திங்கள் 1989-ம் வருடம் தொடங்கப்பட்ட தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இதுவரை 1,20,276 மகளிர் எட்டு மாவட்டங்களில் உள்ள 75 வட்டங்களில், அதாவது தர்மபுரி, சேலம், இராமநாதபுரம், நாமக்கல், தென்னாற்காடு, விழுப்புரம், தேனி மற்றும் மதுரை மாவட்டங்களில் பயனடைந்துள்ளனர். தன்னார்வுத் தொண்டு நிறுவனங்களின் கூட்டுடன் 5,101 மகளிர் குழுக்கள் இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளன. கிராமப்புற ஏழைப் பெண்கள் ரூ. 1137.23 இலட்சம் சேமிப்பு செய்து மற்றும் இத்தொகையினை சுமார் ரூ. 2274.46 இலட்சமாக சுழலச் செய்து தங்களுக்குத் தேவையான சிறு கடன்களைப் பெற்றுள்ளனர். மேலும் அவர்களுக்குச் சுயவேலை வாய்ப்புகளை மேற்கொள்ள வங்கிக்கடனாக ரூ. 3627.61 இலட்சம் இந்தியன் வங்கியின் மூலம் இத்திட்டத்தின் கீழ் பெற உதவி அளிக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 1998-ல் முடியும் நிலையில் உள்ள இத்திட்டம் 1998-99-ம் வருடத்தில் விரிவுபடுத்தப்பட உள்ள மகளிர் திட்டத்துடன் முழுவதுமாக இணைக்கப்படும்.

**2. விரிவுபடுத்தப்பட்ட மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (மகளிர் திட்டம்)**

ஜூலைத் திங்கள் 1996-ம் ஆண்டில் இந்த அரசு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தினைப் படிப்படியாக மாநிலங்களில் உள்ள மற்ற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தும் என அறிவித்துள்ளது. இந்த வருடத்தில் பன்னாட்டு விவசாய வளர்ச்சி நிதித் திட்டம் முழுவதுமாக மகளிர் திட்டத்துடன் இணைக்கப்பட்டுவிடும். மகளிர் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 1440 கோடியாகும். இதன் மூலம் ஐந்து வருடங்களில் குறைந்தது 10 இலட்சம் பெண்கள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மகளிர் திட்டத்தில், பல்வேறு திட்டங்களின் சேவைகளை ஒருங்கிணைத்தல் செயல் கொள்கையாகும். ஒருங்கிணைந்த ஊரக



1998 ஏப்ரல் 23]

வளர்ச்சித் திட்டம், ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், இந்திரா மகளிர் திட்டம், பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டம், மகளிருக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், சிறப்பு மத்தியத் திட்டம் மற்றும் உள்ள திட்டங்களின் சேவைகளை ஒருங்கிணைத்தல் இந்த மகளிர் திட்டத்தின் செயற்கொள்கையாகும். இந்த மகளிர், குழுக்கள் மூலம் ஒருமுகப்படுத்தப்பட்டு, அதன்மூலம் கிராம ஏழைக் குடும்பங்களுக்கான அரசு உதவிகளுக்கு நுழைவு வாயிலாக அமைகிறார்கள்.

1998-99-ம் வருடத்தில் இத்திட்டங்களின் மூலம் 3,00,000 மகளிர் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**3. மகளிர் பொழுதுபோக்கு மையங்கள்**

அரசாங்கத்தின் எந்தவொரு அமைப்பின் கீழும் இதுவரை மகளிருக்கு பொழுதுபோக்கு அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப் படவில்லை. நமது சமுதாயத்தில் ஆண்கள் சந்திப்பதற்கும், பொது விஷயங்களைக் கலந்து உரையாடுவதற்கும் விளையாடுவதற்கும் பல இடங்கள் உள்ளன. ஆனால், ஏழை மகளிருக்கு அத்தகைய வசதிகள் எளிதாகக் கிடைப்பதில்லை. ஆதலால், இந்நிறுவனம், மகளிர் சந்திப்பது மற்றும் பொழுதுபோக்குவதற்கான தேவையை உணர்ந்து அதற்கான அரசு அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. 1997-98 ஆம் வருடத்தில் 50 மகளிர் பொழுதுபோக்கு மையங்கள் தர்மபுரி, சேலம், விழுப்புரம், மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 10 மகளிர் பொழுதுபோக்கு மையங்கள் என்ற விகிதத்தில் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 1998-99-ம் வருடத்தில் இந்த மையங்களின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டு, மகளிர் இந்த மையங்களுக்கு வந்து போகவும் அதனுடைய வசதிகளை உபயோகப்படுத்திக் கொள்ளவும் மேலும் ஊக்குவிக்கப்படுவர். இத்திட்டத்தின் வெற்றியைப் பொறுத்து இத்திட்டம் தொடர்ந்து நடைபெறும்.

**4. தொழிற்பயிற்சித் திட்டங்கள்**

1997-98-ம் ஆண்டு மாநில அரசு ரூ. 15.00 இலட்சத்தை பகுதி-2 திட்டங்களின்கீழ் 420 மகளிர் 9 வகையான வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய தொழில் பயிற்சி திட்டங்களைச் செயல்படுத்த நிதி வழங்கியுள்ளது. அவை 1. தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி,

2. செவிலியர் பயிற்சி 3. அழகுக்கலைப் பயிற்சி 4. மருத்துவ ஆய்வகத் தொழில் பயிற்சி 5. கணிப்பொறி பயிற்சி 6. பத்திரிகைத் தொழில் பயிற்சி 7. பொதுமக்கள் தொடர்புப் பயிற்சி 8. பழச்சாறு தயாரித்தல் பயிற்சி மற்றும் 9. சிறப்புப் பணிப்பெண் பயிற்சி.

1998-99-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் தொழிற் பயிற்சி திட்டங்களைச் செயல்படுத்துதல், முன்னர் நடைபெற்ற தொழிற் பயிற்சி திட்டங்கள் குறித்த ஆய்வு எடுத்துக்கொள்ளப்படும். மேற்பார்வை மற்றும் ஆய்வுகள் முன்னுரிமை அடிப்படையில் நடத்தப்பட்டு பொருத்தமில்லாத பயிற்சித் திட்டங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களைக் கண்டறிந்து அவற்றை விலக்கி சந்தையில் அதிகத் தேவையுள்ள பயிற்சித் திட்டங்களை நடத்த முழுமையாக செயல்படும் மற்றும் பயிற்சி திட்டங்களைக் குறித்த ஆய்வை மேற்கொள்ளும் நிறுவனம் தனியாகக் கண்டறியப்படும்.

அதன்படி ரூ. 15.00 இலட்சம் செலவில் தொழிற் பயிற்சிகளில் 95 பெண்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இதனுள் ஆய்வு மேற்பார்வை மற்றும் கணிப்பாய்வு ஆகிய முன்னேற்றப் பணிகளும் அடங்கும்.

### 5. தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்

மகளிரின் பொருளாதார மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு 1998-99-ஆம் ஆண்டில் சோதனை முறையில் தகுதிவாய்ந்த மகளிர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (முதல் தலைமுறை மகளிருக்கு முன்னுரிமை) நடுத்தர வர்க்கத்தில் கீழுள்ள மற்றும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த மகளிர் தங்கள் தொழிலைத் துவங்க நிதியுதவி அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 50 மகளிருக்கு இரண்டு பிரிவுகளாக ஒரு பிரிவில் 25 மகளிர் வீதம் சென்னையில் ஒன்றும், மற்றொன்று மதுரையிலும் மொத்தம் ரூ. 2.00 இலட்சம் மதிப்பீட்டில் 3 மாதகால பயிற்சிகள் பகுதி-2 திட்டத்தின்கீழ் 1998-99-ஆம் ஆண்டில் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் செயல்பாட்டின் சிறப்பைப் பொறுத்து மற்ற மாவட்டங்களிலும் இப்பயிற்சியினைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.



### 6. மக்கள் சாசனக் கையேடு

இந்நிறுவனம் அரசின் ஆணைக்கேற்ப குடியுரிமை ஆவணம் என்ற வெளியீட்டைத் தயாரிப்பதற்கான செயல் அறிக்கையினை அரசுக்கு அனுப்பியுள்ளது. 1998-99-ஆம் ஆண்டில் மக்களுக்கு இந்நிறுவனத்தின்கீழ் இயங்கிவரும் மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் மேலும் சிறந்த அளவிலே சேவையாற்ற இந்தக் குடியுரிமை ஆவணம் முழுமையாகச் செயல்படுத்தப்படும்.

### குழந்தைகள் நலம்

2.14. குழந்தைகள் உடல்நலத்தையும், சத்துணவு பெறும் நிலைமையையும், நன்கு பாதுகாத்து, அவர்களின் ஆற்றலை வளர்க்கும் நோக்குடன், தமிழ்நாடு அரசு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. நோயாலும் சத்துணவு பற்றாக் குறையாலும் ஏற்படும் இளம் வயது இறப்பினைக் குறைத்து நமது மாநிலத்தில் ஒருங்கிணைந்த சத்துணவும், உடல்நலம் பேணும் வசதிகளும் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்களின்கீழ் குழந்தையின் உடல் வளர்ச்சியை அவ்வப்போது கவனித்தல், அவசியமாயின், அருகிலுள்ள மருத்துவ மையங்களுக்கு அனுப்பிப் பரிசோதனை செய்தல், இணை சத்துணவு வழங்குதல், முன் பருவக் கல்வி வழங்குதல் ஆகிய பணிகள் அடங்கும். சத்துணவு, மருத்துவம், முன்பருவக் கல்வி வழங்குதல் ஆகியவை மறுக்கப்பட்ட நிலையில் வாழும் குழந்தைகளுக்கு, இவைகளை முழுமையாக வழங்க முயற்சிகள் எடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

### 2.15. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் 1-7-1982 முதல் ஊரகப் பகுதிகளிலும் 15-9-1982 முதல் நகர்ப்புறங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முக்கியமான மூன்று நோக்கங்கள்:

1. ஊட்டச்சத்து வழங்குதல்
2. முன்பருவக் கல்வி
3. உடல்நலம் பேணுதல்

[1998 ஏப்ரல் 23

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் 714 குழந்தை நல மையங்கள் தவிர மீதம் உள்ள அனைத்துக் குழந்தை நல மையங்களும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழோ அல்லது தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின்கீழோ கொண்டு வரப்பட்டுள்ளன. மேற்கூறிய திட்டத்திற்கு 1997-98-ஆம் நிதியாண்டுக்கு ரூ. 464 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை இருவாரத்திற்கொருமுறை வழங்கப்பட்ட முட்டை, 1998-99-ஆம் ஆண்டு முதல் வாரத்திற்கொருமுறை வழங்கப்படும்.

ஒவ்வொரு திட்டத்தின்கீழும் சத்துணவு மையங்களின் எண்ணிக்கை, பயன் அடைந்தோர் எண்ணிக்கை பின்வருமாறு:

| திட்டம் | மைய எண்ணிக்கை | பயனடைபவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | குழந்தைகள் | தாய்மார்கள் மற்றும் முதியோர் ஓய்வூதியத் தொகை பெறுபவர். | மொத்தம் |
| I. குழந்தை நலச் சத்துணவு மையங்கள்: | | | | |
| 1. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் | 10226 | 489024 | 147025 | 636049 |
| 2. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் | 18352 | 639163 | 125237 | 764400 |
| 3. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் நகர்ப்புற குழந்தை நல மையங்கள். | 714 | 32519 | .. | 32519 |
| II. பள்ளிச் சத்துணவு மையங்கள்: | | | | |
| 4. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டப் பள்ளி மையங்கள் (ஊரகம்) | 37976 | 6112197 | .. | 6112197 |
| 5. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டப்பள்ளி மையங்கள் (நகர்ப்புறம்) | 1978 | 453227 | .. | 453227 |



1998 ஏப்ரல் 23]

**2.16 இந்திய அரசின் ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கான சத்துணவுத் திட்டம்**

இத்திட்டம் 15-8-1995 முதல், இந்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின்கீழ் உள்ள கல்வித் துறை மூலமாக, தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு, மத்திய அரசாங்கம், ஆரம்பப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக வருடத்திற்கு 2.04 இலட்சம் டன் அரிசி வழங்குகிறது.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் பயனடையும் சுமார் இரண்டு இலட்சம் கர்ப்பிணிப் பெண்களுக்குச் சத்துணவு மையங்கள் மூலமாக இலவச சத்துணவு 4 மாதங்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.

**2.17. இலவசச் சீருடை வழங்குதல்**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை கல்வி பயிலும் பள்ளிக் குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் ஒரு ஜோடி இலவசச் சீருடை வழங்கப்படுகிறது. சீருடைக்குத் தேவையான துணிகள் மாவட்ட சமூகநல அலுவலர்களுக்கு வழங்கப்படுகிறது. சமூகநலத் துறையின்கீழ் செயல்படும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் சீருடை தைக்கப்பட்டு கல்வித் துறை அதிகாரிகளின் மூலம் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. இதன் மூலம் 1996-97-ஆம் ஆண்டில் ரூ. 4536 லட்சம் செலவில் 64 இலட்சம் பள்ளிச் சிறார்கள் பயன் பெற்றனர். 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ. 5671.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.18. தமிழக அரசு பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்**

பெண் குழந்தைகளின் மதிப்பை உயர்த்த பெண் குழந்தைகளின் பெற்றோருக்கு பெண்களின் மேற்கல்விக்காகவும் திருமணத்திற்காகவும் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் பெண் குழந்தை தன்னம்பிக்கையுடன் வளர்வதற்கு வழி செய்யப்பட்டுள்ளது.

1997-98 முதல் மாற்றம் செய்யப்பட்ட பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தை உள்ள தாய் கருத்தடை சிகிச்சை செய்து கொண்டால் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின்

மூலம், ஒரு பெண் குழந்தை இருந்தால் ரூ. 3000/-ம், இரு பெண் குழந்தைகள் இருந்தால், ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ. 1500/-ம் 5 ஆண்டு நிரந்தர வைப்புத் தொகை இரசிதாக அக்குழந்தைகள் பெயரில் வழங்கப்படும். இந்த இரசீது அப்பெண் குழந்தை 20 வயது ஆகும் வரை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கட்டாயமாகப் புதுப்பித்துக் கொள்ளப்பட வேண்டும். இதனால் கிடைக்கும் பணம் அப்பெண் குழந்தை 20 வயதாகும்போது வழங்கப்படும். உத்தேசமாக ரூ. 1500 முதலீட்டிற்கு ரூ. 29000/-மும் ரூ. 3000 முதலீட்டிற்கு ரூ. 58000/- மும் கிடைக்கும். இத்திட்டத்தின்கீழ் 31-3-97 வரை 39,079 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

1998-99 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கென ரூ. 2.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1997-98-ஆம் ஆண்டு 7,252 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 2.19. ஜப்பானிய அரசின் உதவிகொண்டு தொட்டில் குழந்தைகள் இல்லம் கட்டுதல்

ஜப்பானிய அரசு ரூ. 22 இலட்சம் நிதியுதவி அளித்து, சேலம் மாவட்டத்தில் தொட்டில் குழந்தைகள் இல்லம் இயங்கக் கட்டடம் கட்டுவதற்கும், திட்டம் நல்ல முறையில் இயங்குவதற்குத் தேவையான பொருட்கள் வாங்கவும் வழிவகை செய்துள்ளது. இதற்கான கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு சமூக பாதுகாப்புத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு விட்டது. இத்திட்டம் தொண்டு நிறுவனத்தின் பங்கோடு ஆரம்பிக்கப்படவுள்ளது.

## 2.20. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்

(அ) சமுதாயத்தில் நலிவுற்ற குழந்தைகள், கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துக் குறைவு மற்றும் அதுதொடர்பான நோய்களைச் சமாளிப்பதற்காக ஒருங்கிணைந்த முறையில் வடிவமைக்கப்பட்ட ஒரு திட்டமே ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகும். இத்திட்டத்தின் பணிகள் கருவில் உள்ள குழந்தையிலிருந்து தொடங்கி 6 வயது ஆகும் வரை அக்குழந்தைக்குத் தேவையான சத்துணவு, சுகாதாரம் மற்றும் உடல், மன வளர்ச்சிக்கான தேவைகளையும் கருத்தாகக் கவனிப்பதே ஆகும். இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் முக்கிய பணிகள் இணை



ஊட்டச்சத்து, முறைசாரா முன்பருவக் கல்வி, மருத்துவ சோதனை, நோய்த் தடுப்பு, ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி மற்றும் மேல் மருத்துவப் பரிசோதனைக்கு வழி செய்தல் ஆகும்.

(ஆ) ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் முதன் முதலில் 1975-76 ஆம் ஆண்டு சென்னை நகரத்திலும் தளி மற்றும் நிலக்கோட்டை வட்டாரங்களிலும் தொடங்கப்பட்டது. இத்திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு தற்போது 44 நகர்ப்புறத் திட்டம் மற்றும் 2 மலைப்புறப் பகுதித் திட்டம் உட்பட தமிழ்நாட்டில் மொத்தம் 113 பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றில் 47 திட்டங்கள் சுவீடன் நாட்டு (சிடா) உதவியுடன் செயல்பட்டு வருகின்றன.

(இ) ஒவ்வொர் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பகுதியும் ஒரு இலட்சம் மக்கள் தொகையை உள்ளடக்கியதாகும். ஒவ்வொரு திட்டப் பகுதியும் ஒரு குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலரின் தலைமையில் ஒரு மருத்துவ அலுவலர், நான்கு மேற்பார்வையாளர்கள் மற்றும் 4 துணை மருத்துவச் செவிலியர்கள் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராம மற்றும் மலைப்புறப் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் சுகாதாரப் பணிகள் கவனிக்கப்படுகின்றன. ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் அங்கன்வாடிகள் என்று அழைக்கப்படும் 100 குழந்தை நல மையங்கள் செயல்படுகின்றன.

(ஈ) குழந்தைகள் நல மையங்கள் மூலம்தான் இத்திட்டப் பணிகள் கவனிக்கப்படுகின்றன. சுமார் 1000 மக்கள் தொகை உள்ள பகுதிக்கு ஒரு குழந்தை நல மையம் என்ற விகிதத்தில் மையங்கள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டப் பகுதியில் 2 முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 40 பேருக்கும், 6 மாதம் முதல் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 30 பேருக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 30 பேருக்கும் ஆகமொத்தம் 100 நபர்கள் ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் பயன்பெறும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் ஒவ்வொரு மையத்தின் மூலம் செயல்படுகின்றன.

[1998 ஏப்ரல் 23

| | |
|---|---|
| மொத்த ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்கள் | - 113 |
| நகர்ப்புறப் பகுதி | - 44 |
| கிராமப்புறப் பகுதி | - 67 |
| மலைப்புறப் பகுதி | - 2 |
| மையங்களின் எண்ணிக்கை | - 10226 |

**2.21. சுவீடன் பன்னாட்டு வளர்ச்சி ஆணைக் குழு உதவியுடன் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்**

காஞ்சிபுரம், திருவள்ளூர், புதுக்கோட்டை மற்றும் நீலகிரி மாவட்டங்களிலுள்ள 47 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்கள் சுவீடன் நாட்டு உதவியுடன் 1992 முதல் செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கான முதல் கட்டம் 1989ல் துவங்கி 30-6-93 உடன் முடிவுற்றது. இரண்டாம் கட்டமாக 1-7-93 முதல் தொடங்கப்பட்டு 4 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது இத்திட்டம் மேலும் ஓர் ஆண்டுக்கு அதாவது 30-6-98 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் கூடுதல் முதலீட்டின் மூலம் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் அளிக்கப்படும் பணிகளை மேம்படுத்த உதவுகிறது. இத்திட்டத்தின் முக்கிய உறுப்புகள்:

- கூடுதல் பயிற்சி
- முன்பருவக் கல்வியில் கூடுதல் உபகரணங்கள்
- ஊக்கத்தொகை
- கட்டடம் கட்டவும் பழுது பார்க்கவும் உதவி
- அங்கன்வாடிக்குத் தேவையான உபகரணங்கள் (சைக்கிள், மொப்பெட்டுடன்)
- கூடுதல் மருந்துப் பொருட்கள் வழங்குதல்
- ஊனமுற்றோர் நலன்
- வளர் இளம் பெண்களுக்கும் மற்றும் 'வில்' திட்டத்திற்கும் உதவி
- வீட்டுத் தோட்டம் பராமரிக்க உதவி



1998 ஏப்ரல் 23]

- சமையல் விளக்க நடவடிக்கைகள்
- தலைமை அலுவலகத்தில் உள்ள 22 கூடுதல் பணியிடங்களுக்கும் நீலகிரி மாவட்டத்திற்குக் கூடுதலாக 2 பணியிடங்களுக்கும் அங்கன்வாடி நிலை 2 பணியாளருக்கும் கூடுதல் உதவியாளருக்கும் ஊதியம் வழங்க நிதி உதவி.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் சிடா திட்டத்தின்கீழ் 6 மாதம் முதல் 2 வயதிற்குட்பட்ட ஒரு லட்சம் குழந்தைகளும், 2 வயது முதல் 5 வயதிற்குட்பட்ட 4.8 இலட்சம் குழந்தைகளும், 1.5 இலட்சம் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் பயனடைந்துள்ளனர்.

கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட இடையூறுகளை நீக்குவதற்கு தற்போது இருக்கும் திட்டத்தில் தேவையான மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் முக்கியமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்ட பகுதிகளாவன:- (1) வளர் இளம் பெண்கள் (2) முன்பருவக் கல்வி மற்றும் (3) வாழ்க்கைக் கல்வி.

**2.22. வளர் இளம் பெண்கள் முகாம்.**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பகுதிகளில் உள்ள அருகருகாமையிலுள்ள இரு கிராமங்களைச் சார்ந்த 50 வளர் இளம் பெண்களை ஒன்று சேர்த்து இருநாட்கள் முகாம்கள் நடத்தப்படுகின்றன. இளம் பெண்கள் வாழக்கையில் அத்தியாவசியமான குடும்ப நலக் கல்வி சம்பந்தமான விஷயங்கள் அனைத்தும் விளையாட்டு, பாட்டுகள், பயிற்சிகள் மூலமாகவே முகாம்களில் நடத்தப்பட்டு வருகின்றன. பெண் மகப்பேறு மருத்துவர் ஒருவருடன் நேருக்கு நேர் நிகழ்ச்சி நடத்தப்படுவது இம்முகாமின் சிறப்பு அம்சமாக விளங்குகின்றது. இச்சந்தர்ப்பத்தின் மூலமாக இளம் பெண்கள் இப்பருவத்தில் உடல், மன ரீதியாக ஏற்படும் மாற்றங்கள் குறித்த விஷயங்களை மகப்பேறு மருத்துவரிடம் நேரிடையாகக் கேட்க வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களிடமோ அல்லது சமுதாயத்தினரிடமோ கேட்க இயலாத விளக்கங்கள் குறித்துத் தெளிவு பெறுவதோடு, சில முக்கியமான தனிப்பட்ட பிரச்னைகள் மீதான மூட நம்பிக்கைகளை நீக்குவதற்கும் இம்முகாம் வாய்ப்பு ஏற்படுத்தித் தருகின்றது. இது தவிர, உடல் ஆரோக்கியம், சத்துணவு, தாய்-சேய் பராமரிப்பு ஆகியவைகள் குறித்தும் விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

[1998 ஏப்ரல் 23

முகாமில் வழக்கறிஞர் ஒருவருடன் நேருக்கு நேர் நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது. பெண்கள் உரிமைகள் குறித்த சிறுநாடகம் ஒன்று ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணியாளர்களால் நடத்தப்பட்டு, அந்த நாடகத்தில் நடத்தப்படும் பெண்கள் பிரச்னைகள் குறித்து வந்திருக்கும் பெண்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டு அப்பிரச்னையை எவ்வாறு அணுகுவது என்பது குறித்தும் அவற்றிற்கான தீர்வு, சட்டங்கள் மற்றும் சட்ட உதவி குறித்த விளக்கங்களும் வழக்கறிஞரால் அளிக்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சியும் இளம் பெண்கள் சம உரிமைகள் குறித்து தெரிந்து கொள்ள வழிவகை செய்கின்றது.

கடந்த அக்டோபர் 97 முதல் நவம்பர் 97 வரை திட்டத்திற்கு ஒன்று வீதம் 47 திட்டப் பகுதிகளிலும் பரீட்சார்த்த முறையில் இம்முகாம்கள் நடத்தப்பட்டு 2500 இளம் பெண்கள் பயனடைந்தனர். தொடர்ந்து, மார்ச் 98 வரையிலும் தொகுதியளவிலான முகாம்கள் நடத்தப்படும். இம்முகாம் குறித்து, பயனடைந்தோரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களை நோக்கும்போது, இம்முகாம்கள் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது மட்டுமின்றி நல்ல பயனளிக்கும் வகையில் இருப்பது அறியப்பட்டுள்ளது. இதன் காரணமாக, இம்முகாம்களை விரிவுபடுத்தி சுமார் 18,000 இளம் பெண்கள் 360 முகாம்கள் மூலம் ஜூன் 98--ற்குள் பயனடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.23. முன்பருவக் கல்வி

முன்பருவக் கல்வி அளித்தல் என்பது, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டக் குறிக்கோள்களில் முக்கியமாக இருப்பினும், திட்ட அலுவலர் முதல் பணியாளர் வரையில் இதற்கு முக்கியத்துவம் அளிக்காமல் இருந்தனர். இதுகுறித்த முக்கியத்துவத்தை அனைவரிடத்திலும் ஏற்படுத்தி, முன்பருவக் கல்விக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தினை அனைத்துப் பணியாளர்களிடமும் ஏற்படுத்தும் முகமாக, பல்நோக்கு பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. முதற்கட்டமாக அலுவலர்களுக்கும் அதன்பிறகு, களப்பணியாளர்கள் மற்றும் மையப் பணியாளர்களுக்கும் கற்றலின் இனிமை என்ற விளையாட்டு முறை பயிற்சி மூலம் அளிக்கப்பட்டது.



1998 ஏப்ரல் 23]

இதற்கான பயிற்சிக் கையேடு, குழந்தைகளுக்கான விளையாட்டுகள், பாட்டுகள், கதைகள், ஆகியவை கொண்ட முழுமையான கையேடாகத் தயாரிக்கப்பட்டு அளிக்கப்பட உள்ளது. இத்தகைய புதிய அணுகுமுறையினால், அனைவருக்கும் ஒரே மாதிரியான பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி மூலம் 75 அலுவலர்களும் 15 பயிற்றுநர்களும், 100 களப் பணியாளர்களும் 2880 மையப் பணியாளர்களும் பயிற்சி பெற்றுள்ளனர். அடுத்த கட்டமாக 1998-99ஆம் ஆண்டில் இந்தப் பயிற்சியினை மேலும் விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கீழ்க்காணும் நிதி 1998-99 ஆம் ஆண்டிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | மத்திய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் | 1509.10 | 1936.36 |
| சிடா ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் | 1472.22 | 401.64 |

## 2.24. கவனமும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள்.

தமிழக அரசு ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள் நலத்திற்காகப் பாடுபடுகிறது. இவர்களின் நலத்திற்காக இத்துறை 25 ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களை 5500 குழந்தைகளின் நலத்திற்காக நடத்துகிறது. 5 வயது முதல் 18 வயது வரையில் உள்ள ஆதரவற்ற, கைவிடப்பட்ட குழந்தைகள் இவ்வில்லங்களில் சேரலாம். அரசு இவர்களுக்கு உறைவிடம், கல்வி, மருத்துவ வசதி வழங்குகிறது. இக்குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளுடன் உடை, குறிப்பேடுகள், பாடநூல்கள் மற்றும் படுக்கை வசதிகள் வழங்கப்படுகின்றன. 5 முதல் 12 வயது வரை உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ.200/- வீதமும், 13 வயது முதல் 18 வயது வரை உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ.300 மதிப்பில் இரண்டு ஜதை சீருடைகள் வழங்கப் படுகின்றன. படுக்கை வசதிக்காக ரூ. 20/-ம் ஒவ்வொரு உள்ளுறைவோருக்கும் வழங்கப்படுகிறது.

[1998 ஏப்ரல் 23

இவ்விடுதிகளில் உள்ள ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு வருடம் ரூ. 35-ம், 6 முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் சிறுவர்களுக்கு ரூ. 50-ம், 9,10-ம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ. 90-ம், மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ.190-ம், பாடநூல்கள் வாங்குவதற்காக ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. இவர்களுக்குத் தொழிற் கல்வியும் அளிக்கப்படுகிறது.

இவ்விடுதிகளின் தரத்தினை உயர்த்துவதற்குத் தொடர் கண்காணிப்பும் ஆய்வும் அவசியமாகும். இந்நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக ஆலோசனை அளிப்பதற்கென அரசு, தலைசிறந்த சமூகப் பணியாளர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்துள்ளது.

1998-99ஆம் ஆண்டிற்கு ரூ. 345.26 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## 2.25. வேலை செய்யும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகள் காப்பகங்கள்

வேலை செய்யும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகள் பெரும்பாலும் புழுதியில் விளையாடிக்கொண்டும் பள்ளிக்குச் செல்லாமலும் இருக்கின்றனர். இதற்குக் காரணம் தமக்கு இளையவர்களைப் பார்த்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் இவர்கள் பள்ளிக்குச் செல்வது இயலாததாகிறது. இதனைத் தடுக்கவும் இவர்கள் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடாமல் தடுக்கவும் அரசு, தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களில், 17 குழந்தைகள் காப்பகங்களை 1993-94 ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகிறது. இது தவிர மேலும் 25 குழந்தைகள் காப்பகங்கள் 1995-96 ஆம் ஆண்டிலும், 75 குழந்தைகள் காப்பகங்கள் 1996-97ஆம் ஆண்டிலும், 50 குழந்தைகள் காப்பகங்கள் 1997-98ஆம் ஆண்டிலும், மொத்தமாக 167 குழந்தைகள் காப்பகங்கள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. 1998-99 ஆம் நிதியாண்டில் புதிதாக 50 காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன. அதனையும் சேர்த்து 217 காப்பகங்கள் நடத்த 1998-99ஆம் ஆண்டிற்கு ரூ. 55.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இக்காப்பகங்கள் சமூகநல வாரியத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன.



1998 ஏப்ரல் 23]

## 2.26. குழந்தைகளின் நலனில் தன்னார்வ நிறுவனங்களின் பங்கேற்பு

கட்டடங்கள் கட்டுவதற்கும், குழந்தைகள் பராமரிப்பிற்கும் தன்னார்வு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படுகின்றது. 20 சதவீதத்தை நிறுவனமே ஏற்றுக்கொள்கிறது. இதில் 80 சதவீதத்தை மானியமாக மாநில அரசு 1-4-92 முதல் வழங்குகிறது. இம்மானியம் தொடர் செலவினமான உணவு, உடை போன்றவற்றிற்கு ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 250- வீதம் வழங்கப்படுகிறது.

183 நிறுவனங்களில் பயன்பெறும் 14,377 குழந்தைகளுக்காக 98-99ஆம் வருடத்தில் ரூ.308 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## 2.27. தத்துக் கொடுத்தல்

தத்துக் கொடுத்தல்/தத்து எடுத்தல் தொடர்பான சட்டங்கள் குறித்தும் வழிமுறைகள் குறித்தும் பொது மக்களிடத்தில் மிகக் குறைந்த விழிப்புணர்வே உள்ளது. இந்திய நாட்டில் உள்ள ஒரு சில பெற்றோரிடையே குழந்தையை தத்து எடுத்துக் கொள்ளும் ஆர்வம் அதிகமாக இருந்தபோதிலும் இது தொடர்பாக விவரங்கள் கிடைப்பது அரிதாக உள்ளது.

எனவே தத்துக் கொடுக்கும் நிறுவனங்கள் பற்றிய தகவல்கள், இது தொடர்பான சட்டங்கள் மற்றும் அதன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியம் என அரசு கருதுகிறது. தத்துக் கொடுத்தல் குறித்தான விழிப்புணர்வை மக்களிடையே பரப்பவும் திட்டமிடப்பட்டுள்ளது. தொலைக்காட்சி மற்றும் வானொலி விளம்பரம் மூலமும், தொடர்பான தன்னார்வு நிறுவனங்கள், அரசு அலுவலர்கள், பெற்றோர்கள் சங்கம் ஆகியோரை ஈடுபடுத்தி, மாவட்டம்தோறும் கருத்தரங்குகள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது தத்து எடுக்க நினைக்கும் பெற்றோர்களுக்கோ அல்லது தத்துக் கொடுப்பதில் ஈடுபட்டுள்ள தன்னார்வ நிறுவனங்களுக்கோ இது தொடர்பான சட்டங்கள், வழிமுறைகள், தத்துக் கொடுக்கும் நிறுவன முகவரிகள் ஆகிய விவரங்கள் அடங்கிய கையேடு ஏதும் இல்லை. எனவே இது தொடர்பான கையேடு ஒன்றினைத் தயாரித்து வெளியிடுவதன் மூலம் தத்துக் கொடுக்கும் நிறுவனங்கள் பயன் பெறுவது தவிர இதில் ஈடுபட்டுள்ள அரசு அலுவலர்கள் மற்றும்

பொதுமக்கள், ஒதுக்கப்பட்ட மற்றும் நிர்க்கதியான குழந்தைகளை எவ்வாறு தத்து எடுப்பது என்பது குறித்த வழிமுறைகளை அறிய பயன் உள்ளதாக இருக்கும்.

இதுதொடர்பாக சுவரொட்டிகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு அரசு அலுவலகங்கள், பொது இடங்கள் ஆகியவற்றில் விநியோகம் செய்யப்படுவதன் மூலம் தத்துக் கொடுத்தல் ஊக்குவிக்கப்படும்.

தற்போது அரசு அங்கீகாரம் பெற்ற தத்து எடுத்துக் கொடுக்கும் 10 தொண்டு நிறுவனங்கள் சென்னை, கோவை, திருச்சி மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் இருக்கின்றன. மற்ற மாவட்டங்களில் இதுபோன்ற தொண்டு நிறுவனங்கள் இல்லை. ஆகையால் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தத்துக் கொடுக்கும் தொண்டு நிறுவனத்தை அடையாளம் கண்டு அவர்களுக்குத் தத்துக் கொடுப்பது தொடர்பான நடைமுறைகளைக் கற்றுக் கொடுக்க 3 நாள் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், தத்து தினம் என ஒரு நாளைத் தெரிந்தெடுத்துக் கொண்டாடவும் அன்று கருத்தரங்குகள், கூட்டமர்வுகள் மற்றும் பேரணிகள் மூலம் விளம்பரம் செய்து ஊக்குவிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்த இயக்ககத்தில் ஒரு தகவல் மையம் அமைத்து அதில் திட்டம் தொடர்பான அனைத்து தகவல்களும் சேகரித்து வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தகவல் மையம் நம் நாட்டிலும் வெளி நாடுகளிலும் வெளியிடப்படும் பருவ வெளியீடுகள், புத்தகங்களைக் கொண்டதாக இருக்கும். மேலும் தத்து தொடர்பான விவரங்களைக் கணினியில் சேகரித்து வைக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

1998-99ஆம் ஆண்டில் இதற்கென ரூ. 5.50 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





## தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்

## திட்டத்தின் சமீபகால சாதனைகளும் முன்னேற்றங்களும்

### 2.28. முன்னுரை

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் உலக வங்கியின் கடன் உதவியுடன் 20-1-1991-ல் தமிழ்நாட்டில் 24 மாவட்டங்களில் 318 வட்டாரங்களில் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வந்தது. இத்திட்டமானது 31-12-1997 அன்று முடிவடைந்தது. இத்திட்டத்திற்காகப் பெறப்பட்ட கடன் உதவி ரூ. 321.34 கோடியானது 5-12-1990 முதல் திட்டத்திற்காகச் செலவிடப்பட்டு 1997-ம் வருடம் டிசம்பர் 31-ல் முடிவடைந்தது. இந்தத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள் 6-36 மாத குழந்தைகளிடையே ஏற்படும் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் குறைத்து இந்த வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இயல்பு நிலையை உயர்த்துவதும், கடந்த 1991-ம் வருடக்கணக்கின்படி குறிப்பாக கிராமங்களில் 1000-க்கு 65 ஆக இருந்த சிசு மரண விகிதத்தைக் குறைப்பதும் மற்றும் குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையை 50 சதவிகிதமாகக் குறைப்பதும் ஆகும்.

### 2.29. எதிர்காலத் திட்டம்

மத்திய அரசு மற்றும் உலக வங்கி உதவியுடன் பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத் திட்டம்-3 துவக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்-2-ஐச் செயல்படுத்தியதால் ஏற்பட்ட பயன்களை வலுப்படுத்தி ஊட்டச்சத்துக் குறைபாடு நிலையை மேலும் குறைப்பதோடு சிசு மரணத்தின் எண்ணிக்கையைக் குறைப்பது மற்றும் குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது மற்றும் கர்ப்ப சம்பந்தமான இறப்புகளின் எண்ணிக்கையைக் குறைப்பது போன்ற பல நோக்கங்களை இத்திட்டம் உள்ளடக்கியது. மேலும் இத்திட்டத்தின் மூலம் குழந்தைப் பருவ வளர்ச்சி மற்றும் கல்வி ஆகியவற்றில் தனிக் கவனம் செலுத்தப்படும். இத்திட்டமானது 1998 ஆம் வருடம் இடையில் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[1998 ஏப்ரல் 23

## 2.30 புதிய திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

பெண்களுக்கு உரிய உரிமைகள் வழங்குவதன் மூலம் அவர்களின் குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்த முடிவதோடு குடும்பத்தின் நிலையையும் மேம்படுத்தி இதன் மூலம் ஒரு முழுமையான குழந்தை நல முன்னேற்றத்தை அடைய முடியும்.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சியில் சம்பந்தப்பட்ட பணிகளையும் திட்டங்களையும் ஒருமுகப்படுத்திச் செயல்படுத்துதல்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் நல முன்னேற்றத்தில் மக்களின் கவனத்தைத் திருப்பி சமுதாயத்தின் பொறுப்பை உணரச் செய்து குழந்தைகளின் மேம்பாட்டை வலிமையாக்குவதற்குத் திட்டத்தை அவர்களாகவே முன்வந்து ஏற்று நடத்த வழி வகுத்தல்.

திட்டம்-2ன் மூலம் பெற்ற பயன்களை வலுப்படுத்துவதுடன் புதிய வழிமுறைகளாக முழு மேலாண்மை, இளம் மகளிருக்கான ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பணிகள், ஒருங்கிணைந்த திட்டப் பணிகள், திட்டப் பிணைப்பாளருக்காகத் தேவைக்கேற்ப பயிற்சியளித்தல், பெண்களின் மேம்பாடு போன்றவற்றில் தனிக் கவனம் செலுத்தப்படும். புதிய உத்தியாக, கிராம அளவில் கிராம மக்களைக் கொண்டே திட்டப் பணிகளின் செயல்பாடுகளை முறைப்படுத்தக் குழு அமைக்கப்படும்.

## 2.31. குறிக்கோள்

- குழந்தைகளிடையே காணப்படும் மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டை 30 சதவிகிதமாகக் குறைப்பது.
- குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளின் நிலையை 50 சதவிகிதமாகக் குறைத்தல்.
- சிசு மரணத்தை 30 சதவிகிதமாகக் குறைக்க வழிவகை செய்தல்.
- கர்ப்பிணிகளின் இறப்பு விகிதத்தை 10 சதவிகிதமாகக் குறைக்க வழிவகை செய்தல்.



1998 ஏப்ரல் 23]

## 2.32. திட்ட மதிப்பீடு

இந்தப் புதிய திட்டத்தினை ஐந்தாண்டுகளுக்குச் செயல்படுத்த ரூ. 157.69 கோடி செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.33. இத்திட்டத்தின் சாதனைகள்

இத்திட்டத்தின் மூலம் 1991-ம் வருடம் முதல் 0-36 மாத குழந்தைகள் சுமார் 36 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர். கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் சுமார் 17.26 இலட்சம் பேர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தில் பயனடையும் குழந்தைகளின் எண்ணிக்கை எச்சமயத்திலும் தொடர்ந்து சுமார் 14 இலட்சங்களாக இருந்து வந்தது. இத்திட்டப் பணிகளின் செயல்பாட்டினால் கிராமச் சமுதாயத்தில் இயல்பு நிலை மற்றும் முதல் நிலை குழந்தைகளின் எண்ணிக்கை 86.82 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. மேலும் குழந்தைகளிடையே காணப்பட்ட கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு 0.86 சதவிகிதமாகவும் மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடு 12.32 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டது.

## அத்தியாயம்-3

## ஊனமுற்றோர் மறுவாழ்வு

**3.1.** 1992-ஆம் ஆண்டுக்கு முன்வரை ஊனமுற்றோர் மறுவாழ்வுப் பணிகள் அனைத்தும் சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வந்தன. ஊனமுற்றோர்க்கென உள்ள தனிப்பட்ட பிரச்னைகளைக் கருத்தில்கொண்டும் இதற்கென தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தவும் வேண்டி சிறப்புத் திறனும் கூடுதல் வசதியும் கொண்டதுமான ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை 1992-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

**ஊனமுற்றோரின் தொகை**

மாதிரிக் கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகையில் ஊனமுற்றோர் இரண்டு விழுக்காடு ஆகும். 1991-ம் ஆண்டு தேசிய கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் 2 விழுக்காடு என்பது 11,12,766 ஆகும். ஊனமுற்றோர் வகைவாரியான விவரம் பின்வருமாறு:

| வ.எண். | ஊனத்தின் வகை | ஊனமுற்றோரின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | பார்வையற்றோர் | 2.12 | 19.2 |
| 2. | பேசும்திறன் அற்று காது கேளாதோர் | 2.25 | 20.5 |
| 3. | கை, கால் ஊனமுற்றோர் | 6.47 | 58.8 |
| 4. | மனவளர்ச்சி குன்றியோர், தொழுநோயால் பாதிக்கப் பட்டு குணமடைந்தோர் மற்றும் இதர வகை ஊனமுற்றோர் | 0.16 | 1.5 |
| | மொத்தம் | 11.00 | 100.00 |





**உயர்ந்துவரும் நிதி ஒதுக்கீடு**

ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கென 1990-91-ஆம் ஆண்டில் ரூ. 433 இலட்சங்கள் என்று இருந்த நிதி ஒதுக்கீடு, அதிகரிக்கப்பட்டு 1998-99-ஆம் ஆண்டில் ரூ.1778.06 இலட்சங்கள் என்று உயர்ந்துள்ளது. ஊனமுற்றோர் நிலையை உயர்த்த ஊனமுற்றோர் நலனில் அரசு கொண்டுள்ள ஆழ்ந்த அக்கறையினை ஆண்டுக்காண்டு நிதி ஒதுக்கீடு உயர்த்தி வருவதைக் கொண்டு அறியலாம்.

### 3.2. ஊனமுற்றோருக்குச் சிறப்புக் கல்வி

ஊனமுற்றோருக்காக நிறுவப்பட்டுள்ள சிறப்புப் பள்ளிகளின் மூலம் அவர்களுக்குச் சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு மானியம் பெற்று நடைபெறும் சிறப்புப் பள்ளிகள் விவரம் பின்வருமாறு:--

| வ.எண். | பள்ளியின் வகை | அரசுப் பள்ளிகள் | அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் | | நகராட்சிப் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | மான்யம் பெறும் பள்ளிகள் | மான்யம் பெறாத பள்ளிகள் | | |
| 1. | [illegible]ருக்கான பள்ளி | 11 | 11 | 25 | . | 47 |
| 2. | பேசும்திறன் குறைந்து செவித்திறன் இழந்தோர் பள்ளி | 10 | 19 | 39 | 2 | 70 |
| 3. | மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி | 1 | 13 | 33 | . | 47 |
| 4. | கடுமையாகக் கை கால் பாதிக்கப்பட்டோருக்கான பள்ளி | 1 | 13 | 36 | . | 50 |
| 5. | தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோருக்கான பள்ளி | . | 1 | 2 | | 3 |
| | மொத்தம் | 23 | 57 | 135 | 2 | 217 |

[1998 ஏப்ரல் 23]

அரசுச் சிறப்புப் பள்ளிகள் நடைபெறும் இடங்கள் பின்வருமாறு:

| பார்வையற்றோருக்கானது. | பேச்சுத்திறன் குறைந்து செவித்திறன் இழந்தோருக்கானது. | கடுமையான கை, கால் ஊனமுற்றோருக்கானது. | மனவளர்ச்சி குன்றியோருக்கானது. |
|---|---|---|---|
| பூவிருந்தவல்லி | தஞ்சாவூர் | மதுரை | சென்னை |
| திருச்சிராப்பள்ளி | தருமபுரி | | |
| தஞ்சாவூர் | கடலூர் | | |
| சேலம் | புதுக்கோட்டை | | |
| மதுரை | காஞ்சீபுரம் | | |
| கடலூர் | சேலம் | | |
| சிவகங்கை | ஈரோடு | | |
| நாகர்கோவில் | விருதுநகர் | | |
| கோயம்புத்தூர் | உதகமண்டலம் | | |
| புதுக்கோட்டை | சென்னை | | |
| தருமபுரி | | | |

மேற்குறிப்பிடப்பட்ட அரசு சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் ஊனமுற்ற குழந்தைகளுக்கு இலவசமாக சிறப்புக் கல்வியுடன் உணவு, தங்குமிடம் ஆகியவை வழங்கப்படுகின்றன. ஆண்டுக்கு இரண்டு ஜோடி சீருடை இலவசமாக வழங்கப்படுகின்றது. இந்தச் சிறப்புப் பள்ளிகள் மூலம் 8726 ஊனமுற்ற குழந்தைகள் சிறப்புக் கல்வி பெறுகிறார்கள். 1998-99ஆம் ஆண்டிற்கு சிறப்புக் கல்விக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 887.30 இலட்சங்களாகும்.

பேசும்திறன் குறைந்த, செவித்திறன் குறைந்துள்ள குழந்தைகளுக்கென 20 முன்பருவப் பள்ளிகள் மாநிலம் முழுவதும் இயங்கி வருகின்றன. செவித்திறன் குறைந்த குழந்தைகள் 200 பேர் இப்பள்ளிகளின் மூலம் சிறப்புக் கல்வி பெறுகிறார்கள்.

**3.3. ஊனமுற்றோருக்குக் கல்வி உதவித் தொகை**

ஊனமுற்ற குழந்தைகளின் கல்விக்காக புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வாங்க, ஆரம்பக் கல்வி வரை பயிலும் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் அரசு உதவித் தொகை வழங்குகிறது. 1997-98 முதல் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு மாதம் ரூ. 25-ம், ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு மாதம் ரூ. 75-ம் வழங்கப்படும். ஒன்பதாம் வகுப்பு முதல் கல்லூரிப் படிப்பு வரை



1998 ஏப்ரல் 23]

பயிலும் மாணவ மாணவிகளுக்கு ரூ. 85- முதல் ரூ. 240- வரை கல்வித் தகுதிக்கேற்றவாறு மாத உதவித் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தில் 14490 நபர்கள் பயன்பெற்று வருகிறார்கள். 1998-99ஆம் ஆண்டில் இதற்கான செலவு ரூ. 83.45 இலட்சங்களாகும்.

**3.4. பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவி**

பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் பார்வையற்ற மாணவர்கள் தேர்வுகளில் வினாக்களுக்கு இவர்கள் வாய்மூலம் சொல்லும் பதிலினை அவ்வாறே எழுத பார்வையுள்ள உதவியாளரை வைத்துக்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறார்கள்.

பார்வையற்ற மாணவர்கட்கு தேர்வு எழுத உதவி புரிபவர்களுக்கு ஒரு தேர்வுத் தாளுக்கு ரூ. 15- வீதம் உதவித் தொகையை இத்துறை வழங்கி வருகிறது. இந்த உதவித் தொகையை பெறும் பள்ளிகள் பின்வருமாறு:

1. பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை.
2. பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி.
3. பார்வையற்றோருக்கான சிறுமலர் மேல்நிலைப் பள்ளி, சென்னை.
4. பார்வையற்றோருக்கான புனித லூயிஸ் மேல்நிலைப் பள்ளி, சென்னை.

சுமார் 200 மாணவர்கள் இத்திட்டத்தினால் ஆண்டுதோறும் ரூ. 0.25 இலட்சம் செலவில் பயனடைந்து வருகிறார்கள்.

**3.5. அரசு மண்டல பிரெய்லி அச்சகம்**

பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி வளாகத்தில் பார்வையற்றோருக்கான பிரெய்லி புத்தகங்களை அச்சிட்டுத் தரும் மண்டல பிரெய்லி அச்சகம் இயங்கி வருகிறது. இந்த அச்சகம் மூலம் அரசு மற்றும் அரசு மான்யம் பெறும் பார்வையற்றோருக்கான பள்ளிகளில் பயிலும் பார்வையற்றோருக்கு

[1998 ஏப்ரல் 23

இலவசமாக பிரெய்லி புத்தகங்கள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன. சுமார் 2000 பார்வையற்ற மாணவர்கள் பயன்பெறும் வகையில் 1998-99ஆம் நிதியாண்டிற்கு ரூ. 15.02 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.6. சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி

சிறப்புக் கல்வியினை மேம்படுத்தும் வகையில் ஆசிரியர்களுக்கு பார்வையற்றோர், செவித்திறன் குறைந்தோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோரைக் கற்பிக்கும் பயிற்சி நடத்தப்படுகிறது.

பூவிருந்தவல்லியில் பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள மண்டலப் பயிற்சி மையத்தில் 35 ஆசிரியர்களுக்குப் பார்வையற்றோருக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதில் மாநில அரசால் தேர்வு செய்யப்படும் 15 ஆசிரியர்களுக்கும் சேர்த்து பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிக்காக ரூ. 5.10 இலட்சம் செலவிடப்படுகிறது.

செவித்திறன் குறைந்தோருக்குக் கற்பிக்கும் ஆசிரியர் பயிற்சி, சென்னை சிறுமலர் காதுகேளாதோருக்கான பள்ளியில் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 50 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1997-98ஆம் ஆண்டு முதல் பயிற்சியின் போது வழங்கப்படும் மாத [illegible]த்தொகை ரூ. 300 [illegible] அதிகரிக்கப்பட்டுள்ளது. 1998-99-ல் இப்பயிற்சிக்காக ரூ. 4.50 இலட்சம் செலவிடப்படுகிறது.

மனவளர்ச்சி குன்றியோருக்குக் கற்பிக்கும் பயிற்சி பாலவிகார் மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளியில் 1997-98 முதல் பயிற்சி பெறும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 25 ஆக உயர்த்தப்பட்டு நடைபெறுகிறது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 1.50 இலட்சம்.

## 3.7. ஊனமுற்றோருக்கான பயிற்சி

கிண்டியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் காது கேளாதோருக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஒரு சிறப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு தற்போது பேசும் திறன் இழந்த, காது கேளாத 16 மாணவர்கள் பொருத்துநர் பிரிவில் பயிற்சி பெற்று வருகின்றனர். 1998-99ஆம் ஆண்டிற்கு ரூ. 1.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1998 ஏப்ரல் 23]

பூவிருந்தவல்லியிலுள்ள பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி மையம் இயங்கி வருகிறது. இங்கு கீழ்க்கண்ட தொழில் பிரிவுகளில் திருத்தியமைக்கப்பட்ட பயிற்சித் திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்கப்படுகிறது.

1. பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திரம் இயக்குபவர்
2. மின்கம்பி சுற்றுபவர் (ஓராண்டு காலம்)
3. புத்தகம் கட்டுபவர் (ஆறு மாத காலம்)

ஒவ்வோர் ஆண்டும் 30 பார்வையற்றோர் இந்நிலையத்தில் பயிற்சி பெறுகிறார்கள். பயிற்சி பெறும் மாணவர்களுக்கு இலவசமாக இருப்பிடம், உணவு இரண்டு ஜோடி சீருடைகள் வழங்கப்படுகின்றன. 1998-99ஆம் ஆண்டிற்கு ரூ. 16.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.8. நவீன பயிற்சி மற்றும் உற்பத்திக்கூடம்

முட்டுக்காட்டில் இயங்கி வந்த ஊனமுற்றோருக்கான நவீன பயிற்சி மற்றும் உற்பத்திக்கூடம் மாற்றப்பட்டு தற்போது கிண்டியில் இயங்கி வருகிறது. இந்த நவீன பயிற்சி மற்றும் உற்பத்திக் கூடத்தில் ஊனமுற்றோருக்கு இலவசமாக வழங்கப்படும் மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் மற்றும் மடக்குக் குச்சிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

1997-98ஆம் ஆண்டில் இந்த நவீன பயிற்சி மற்றும் உற்பத்திக்கூடம் மூலம் 3694 மூன்று சக்கர வண்டிகளும், சக்கர நாற்காலிகளும் உற்பத்தி செய்யப்பட்டன. 1998-99ஆம் நிதியாண்டிற்கு ரூ. 58.03 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நவீன பயிற்சி மற்றும் உற்பத்திக்கூடம் இயங்கி வந்த முட்டுக்காடு நிலத்தை பல்வகை ஊனமுற்றோருக்கான தேசிய நிலையம் ஆரம்பிப்பதற்கென மத்திய அரசின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 3.9. பார்வையற்ற பெண்களுக்கான தொழிற்கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு மையம், பூவிருந்தவல்லி

18 வயதிலிருந்து 40 வயது வரையிலான (தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) பார்வையற்ற ஆதரவற்ற அனாதைப் பெண்கள் இந்த இல்லத்தில் சேர்க்கப்பட்டு சாக்குக்

கட்டிகள் தயாரிப்பதிலும், துணி நெய்வதிலும் இவர்களுக்கு ஆறு மாதகாலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்குப்பின் இவர்களுக்கு இவ்வில்லத்திலேயே வேலை அளிக்கப்படுகிறது. இங்கு தயாரிக்கப்படும் படுக்கை விரிப்புகள், துண்டுகள், கட்டுத் துணிகள் மற்றும் சாக்குக் கட்டிகள் அரசு மருத்துவமனை மற்றும் பள்ளிகளில் விற்பனை செய்யப்படுகின்றன. இத்திட்டத்திற்கு 1998-99ஆம் ஆண்டிற்கு ரூ. 7.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 40 பார்வையற்ற பெண்கள் இவ்வில்லத்தில் பயிற்சி பெற்றுப் பயனடைந்து வருகிறார்கள்.

## 3.10. பயிற்சி பெற்ற பார்வையற்ற மற்றும் காது கேளாதோரை சிறப்புத் தொழில் பழகுநராக அமர்த்துதல்

பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி நிலையத்திலும், சென்னை கிண்டியில் இயங்கும் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திலும் பயிற்சி பெற்ற பார்வையற்ற மற்றும் காது கோளாதவர்கள் அரசு மற்றும் அரசு சார்பு மற்றும் தனியார் நிறுவனங்களில் சிறப்புத் தொழில் பழகுநராக மாதம் ரூ. 400/- வீதம் உதவித் தொகையுடன் சிறப்புத் தொழில் பயிற்சியில் அமர்த்தப்படுகின்றனர். தொழில் பழகும் காலம் ஓராண்டு முடிந்தபின் அவர்கள் பயிற்சி பெற்ற அதே நிறுவனத்தில் காலியிடம் எழும்போது நிரந்தரப் பணியில் அமர்த்தப்படுகிறார்கள். 1998-99ஆம் ஆண்டிற்கு ரூ.0.39 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

## 3.11. ஊனமுற்றோருக்காக மூன்று சதவீத இட ஒதுக்கீடு

அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் (அரசு மற்றும் உள்ளாட்சி நிர்வாகம்) எழும் பணியிடங்கள்/பயிற்சியிடங்களில் மூன்று சதவீதத்தை ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மூன்று சதவீதத்தில் ஒரு சதவீதம் பார்வையற்றோருக்கும், ஒரு சதவீதம் பேசும் திறன் இழந்த காது கேளாதோருக்கும், ஒரு சதவீதம் கை கால் ஊனமுற்றோருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 3.12. வேலையற்ற பார்வையற்றோருக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை

வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை கீழ்க்குறிப்பிட்டவாறு ஐந்து வருட காலத்திற்கு அல்லது 40 வயது



வரை (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) அல்லது வேலை கிடைக்கும் வரை இதில் எது முன்னரோ அதுவரை வழங்கப்படுகிறது.

அ. வழங்கப்படும் நிவாரணத்தொகையின் விவரம் (மாதம் ஒன்றுக்கு)

| | | |
|---|---|---|
| 1. | பட்டதாரிகள்/முதுநிலைப் பட்டதாரிகள் | ரூ. 250/- |
| 2. | 10-ம் வகுப்பு/மேல்நிலை வகுப்புத் தேர்ச்சி | ரூ. 200/- |
| 3. | இதர வகுப்புகள் | ரூ. 150/- |

ஆ. 18 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) இருக்க வேண்டும்.

இ. வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து ஓராண்டுக்குமேல் காததிருப்பவராக இருக்க வேண்டும்.

1997-98ஆம் ஆண்டில் இதன்மூலம் 1031 ஊனமுற்றோர்கள் பயனடைந்துள்ளனர். 1998-99ஆம் ஆண்டிற்கு ரூ.22 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.13. சுய வேலைவாய்ப்பு

கல்வித் தகுதியோ, தொழில் திறனோ அற்ற ஊனமுற்ற நபர்களை வருமானம் தரக்கூடிய பணியில் அமர்த்த முடியாத பட்சத்தில், அவர்கள் சுயவேலைவாய்ப்பில் ஈடுபடும் பொருட்டு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் பெற்றுக் கொள்ள பரிந்துரைக்கப்படுகிறார்கள். ரூ. 1000/- அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இதில் எது குறைவோ அது அரசு மானியமாக வழங்கப்படுகிறது. 1998-99ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 1500 ஊனமுற்ற நபர்கள் பயனடையும் வண்ணம் ரூ.8.00 இலட்சம் நிதி ஒதுகீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.14. ஊனமுற்றோருக்கு இலவச உபகரணங்கள் வழங்குதல்

ஒவ்வோர் ஆண்டும் ஊனமுற்றோருக்கு இத்துறை மூலம் இலவசமாக மூன்று சக்கர சைக்கிள்கள், சக்கர நாற்காலிகள், காதொலி கேட்கும் கருவிகள், கருப்புக் கண்ணாடி, மடக்கும் குச்சி, பிரெய்லி கைக்கடிகாரங்கள் மற்றும் சூரிய ஒளியினால் இயங்கும் பேட்டரிகள்

[1998 ஏப்ரல் 23

வழங்கப்படுகின்றன. 1998-99ஆம் நிதியாண்டில் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

| உபகரணங்களின் விவரம் | 1998-99ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | 1998-99ஆம் ஆண்டு பயன் பெற உள்ளோர் |
|---|---|---|
| 1. மூன்று சக்கர வண்டிகள் | 40.25 | 2100 |
| 2. சக்கர நாற்காலிகள் | 3.50 | 150 |
| 3. காதொலிக் கருவிகள் | 12.00 | 1773 |
| 4. கருப்புக் கண்ணாடி மற்றும் மடக்குக் குச்சிகள் | 3.04 | 1500 |
| 5. சோலார் பேட்டரிகள் | 9.00 | 1500 |
| 6. பிரெய்லி கைக்கடிகாரங்கள் | 3.50 | 1000 |
| மொத்தம் | 71.29 | 8023 |

### 3.15. பார்வையற்றோரைத் திருமணம் செய்து கொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கான சலுகைகள்

கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் போன்றே பார்வையற்றவரை திருமணம் செய்து கொள்ளும் பார்வையுள்ளவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:

1. பாராட்டுச் சான்றிதழ்
2. திருமணச் செலவிற்காக ரொக்கத் தொகை ரூ.3000/-
3. தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ.7000/-

இத்திட்டத்திற்காக 1998-99ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வோராண்டும் இத்திட்டத்தின் மூலம் 100 தம்பதிகள் பயனடைவார்கள்.

### 3.16. உடல் ஊனமுற்றோரைத் திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாதவருக்கான சலுகைகள்

இத்திட்டத்தின்கீழ், உடல் ஊனமுற்றவரை திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாதவருக்கான சலுகைகள் பின்வருமாறு வழங்கப்படுகின்றன:



1998 ஏப்ரல் 23]

1. பாராட்டுச் சான்றிதழ்
2. திருமணச் செலவிற்கென ரொக்கத் தொகை ரூ.3000/- மற்றும்
3. தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ. 2000/-க்கானது

இத்திட்டத்தின் மூலம் 1997-98ஆம் ஆண்டில் 100 தம்பதிகள் பயன் அடைந்தனர். 1998-99ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.17. உடல் ஊனமுற்றோர்களுக்கு பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்ய பயணச் சலுகை (அரசுப் பேருந்துகளில்) வழங்குதல்

பார்வையற்றவர்கள் மற்றும் உடல் ஊனமுற்றோர் அனைவரும் வயது வரம்பின்றி தங்கள் இருப்பிடத்திலிருந்து 100 கிலோ மீட்டர் தூரம் வரை அரசுப் பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்ய சலுகை அளிக்கப்படுகிறது. இச்சலுகை அவர்கள் கல்விக்கூடம், மருத்துவமனை, தொழிற்பயிற்சி மற்றும் வேலைக்குச் சென்றுவர வழங்கப்படுகிறது. 1997-98-லிருந்து பார்வையற்றவரும், கால் ஊனமுற்றவரும் விரைவுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.80.00 இலட்சம் நிதி 1998-99-ல் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 3.18. கடும் ஊனமுற்றோருக்கான பராமரிப்பு உதவித்தொகை

கடுமையான ஊனமுற்றோர்களை உடைய குடும்பத்திற்கு மாதம் ரூ.100/- வீதம் பராமரிப்பு மான்யம் வழங்கப்படுகிறது. அவர்களின் பெற்றோர்கள்/பாதுகாவலர்களுடைய மாதாந்திர வருமானம் ரூ.1000-த்திற்குள் இருக்க வேண்டும். இது 1997-98ஆம் ஆண்டு முதல் ரூ.150/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பயன்பெறும் நபர்கள் 1050-லிருந்து 2900 ஆக உயர்ந்துள்ளது. 1998-99ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.52.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.19. செயற்கை அவயங்கள் பொருத்தும் துணை நிலையம், மதுரை

கடுமையான கை, கால் ஊனமுற்ற குழந்தைகளுக்கான அரசுப் பள்ளியில் பயிலும் ஊனமுற்ற குழந்தைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு செயற்கை அவயங்கள் பொருத்தும் துணை நிலையம் ஒன்று மதுரையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த

நிலையத்தின் மூலம் ஊனமுற்ற குழந்தைகளுக்கு மருத்துவ அறுவை சிகிச்சை, இயற்பியல் சிகிச்சை மற்றும் உபகரணங்கள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 1998-99ஆம் நிதியாண்டில் ரூ. 8.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாநில விருதுகள்**

ஊனமுற்றோரின் சேவையைப் பாராட்டி ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் ஊனமுற்றோருக்கு அரிய சேவை புரிந்தவர்களுக்கு கீழ்க்கண்ட மாநில விருதுகள் வழங்கப்படுகின்றன. சிறந்த மாவட்ட ஆட்சியர், சிறந்த தொழிலதிபர், சிறந்த பணியாளர், சிறந்த ஆசிரியர், சிறந்த சமூகப் பணியாளர், சிறந்த மருத்துவர், சிறந்த நிறுவனம் மற்றும் சிறந்த மாணவர் (எஸ்.எஸ்.எல்.சி.மற்றும் மேல்நிலைப் பள்ளியில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற பார்வையற்ற மற்றும் காது கேளாதோர்க்கானது)

## 3.20. மாவட்ட மறுவாழ்வு மையங்கள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாவட்ட மறுவாழ்வு மையம் ஒன்று ஊனமுற்றவர்களுக்குத் தேவையான உதவிகளை அவர்களின் வீடு தேடிச் சென்று சேவை புரிந்து வருகிறது. இத்திட்டம் இந்திய அரசு உதவியுடன் நடத்தப்படுகிறது.

இதேபோன்று இதர 28 மாவட்டங்களிலும் மாவட்ட மறுவாழ்வு மையங்கள் 1997-98ஆம் ஆண்டு மாநில நிதியுடன் நிறுவப்பட்டுள்ளன. இம்மாவட்ட மறுவாழ்வு மையங்களின் மூலமாக ஊனமுற்றவர்களைக் கண்டறிந்து அவர்களின் ஊனத்தன்மைக்கு ஏற்றவாறு உதவிகளும் உபகரணங்களும் மற்றும் தேவையான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. இதனைத் தவிர இந்த மாவட்ட மையங்கள் ஏற்கெனவே மாவட்ட மறுவாழ்வு அலுவலகங்கள் மூலமாகக் கவனித்து வந்த பணிகளையும் மேற்கொள்ளும். இதற்காக ரூ. 306.81 இலட்சம் 1998-99ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## 3.21. இளம்பிள்ளைவாத மறுவாழ்வுத் திட்டம்

இளம்பிள்ளைவாத நோய் வராமல் தடுக்கவும், இளம்பிள்ளை வாத நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் 1989ஆம் ஆண்டிலிருந்து இந்த ஒருங்கிணைந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் நிறைவேற்றப்பட்டு



வருகின்றது. இதுவரை 8 கட்டங்கள் நிறைவு பெற்று 1997-98ஆம் ஆண்டில் ஒன்பதாவது கட்டம் நிறைவேற்றப்படவுள்ளது. இத்திட்டமானது 342 ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றப்பட்டு அதில் 58,108 நபர்கள் பயனடைந்துள்ளனர். 1998-99ஆம் நிதியாண்டில் ரூ.101.47 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இளம்பிள்ளைவாத நோய் வராமல் தடுப்பது மற்றும் இளம்பிள்ளைவாத நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டத்தில் இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சைகள், அறுவை சிகிச்சைகள், இயற்கை முறை உடற்பயிற்சி, இலவசமாக மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, உதவி உபகரணங்கள், அக்குள் கட்டை ஆகியவை வழங்கியும், சிறப்புப் பள்ளிகளில் சேர்த்தல், கல்வி உதவித்தொகை அளித்தல், தொழிற்பயிற்சி அளித்தல், வேலை வாய்ப்பு அளித்தல், சுயவேலைவாய்ப்புக்கு அரசு மானியத்துடன் வங்கிக் கடனுக்கு பரிந்துரைத்தல், முதியோர் ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் பராமரிப்பு உதவித்தொகை வழங்குதல் ஆகியவை மூலமும் உதவப்படுகிறார்கள். மருத்துவ அறுவை சிகிச்சைகள் அனைத்து மாவட்டத் தலைநகர மருத்துவமனைகளின் மூலம் செய்யப்படுகின்றன.

## 3.22. மாநில ஒருங்கிணைப்புக் குழு

ஊனமுற்றோர் (இணையான வாய்ப்புகள், உரிமைகள், பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம் 1995-னை மத்திய அரசு இயற்றியுள்ளது. இச்சட்டம் 7-2-96 முதல் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஊனமுற்றோருக்கான பல்வேறு நலத்திட்டங்களின் செயல்பாட்டினைக் கண்காணிக்க மீளப் பார்வையிட மற்றும் இதுகுறித்த ஆலோசனைகள் வழங்கிட மாநிலக் கொள்கைகளை வகுத்திட உதவுதல் என்பது போன்ற சட்டத்தின்கீழ் தரப்பட்டுள்ள பல்வேறு பணிகளுடன் மாநில அரசு நிர்ணயிக்கும் ஏனைய பணிகளை மேற்கொள்வதற்கு மாநில ஒருங்கிணைப்புக் குழுவினை ஒவ்வொரு மாநில அரசும் அமைக்க வேண்டும் என்று இச்சட்டத்தின் பிரிவு 13 தெரிவிக்கிறது.

இக்குழு மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் தலைமையின்கீழ், 16 அரசு சார்ந்த உறுப்பினர்களும், 6 அரசு சார்பற்ற நிறுவனங்களின் மூலமாக பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர்களும் 3 சட்டமன்ற

உறுப்பினர்களும், 2 அலுவலகத்தைச் சார்ந்த உறுப்பினர்களும் கொண்டது. 1997ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இக்குழுவின் முதல் கூட்டம் நடைபெற்றது. இக்குழுவின் பரிந்துரைகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

**3.23. மனவளர்ச்சி குன்றிய மகளிருக்கான பாதுகாப்பு இல்லம்**

14 வயதுக்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய மகளிரைப் பாதுகாக்கும் வகையில் மாநிலத்தில் 6 தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. 30 பேர்களைக் கொண்ட ஒவ்வொரு இல்லத்திலும் தங்கும் வசதி மற்றும் மருத்துவ வசதியும் உள்ளன. இதற்காக ரூ.12.87 இலட்சம் 1998-99-ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.24. சட்டப்படிப்பு முடித்த ஊனமுற்றோருக்கு உதவி**

சட்டப்படிப்பு முடித்த உடல் ஊனமுற்ற பட்டதாரிகள் வழக்கறிஞர் மன்றத்தில் பதிவு செய்து கொள்ளவும், புத்தகங்கள் வாங்கவும் ரூ. 3000- உதவித் தொகை வழங்கப்படுகிறது.



## அத்தியாயம்-4

### சமூகப் பாதுகாப்புத் துறை

**4.1.** தமிழக அரசு சமூகப்பாதுகாப்புத் துறை வழியே புறக்கணிக்கப்பட்ட ஆதரவற்ற சிறார்கள் மற்றும் தவறிழைத்த சிறார்களின் நலனுக்காக பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. 1986ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச்சட்டம் மற்றும் 1956ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் அமைந்துள்ள நிறுவனங்கள் சமூகப் பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

வாழ்க்கைக் களத்தில் இறங்குமுன்னர் பயிற்சியும், பக்குவம் பெறுவதுடன், அதன் இன்றியமையாமையை உணர்ந்து, சிறார்களின் நலனுக்கென அமைந்துள்ள இல்லங்களில் கேடில் விழுச்செல்வம் கல்வியுடன் நலிவுறும் வாழ்க்கைக்கு ஊன்றுகோலனையத் தொழிற் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

**4.2. 1986ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச்சட்டத்தின் கீழமைந்த நிறுவனங்கள்**

(அ) வழிதவறி, ஆதரவிழந்த நிலையில் வந்தாரை பாதுகாத்துப் பொறுப்பேற்கும் கூர்நோக்கு (குறுகிய கால) இல்லங்கள் 18 ஆகும். இவற்றுள் 11 அரசினராலும் 7 தனியாராலும் நடத்தப்படுகின்றன. புறக்கணிக்கப்பட்ட ஆதரவற்ற சிறார்கள் இளைஞர் நலக்குழுமங்கள் மூலமாகவும் தவறிழைத்த சிறார்கள் இளைஞர் நீதிமன்றங்கள் மூலமாகவும் இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். தனியார் கூர்நோக்கு இல்லங்கள், குழந்தைகள் பாதுகாப்புச் சங்கம், விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கம் மற்றும் பாலமந்திர் ஆகியவை அரசின் மானிய உதவியுடன் இயங்கி வருகின்றன.

(ஆ) இளைஞர் நலக் குழுமங்கள் மற்றும் இளைஞர் நீதிமன்றங்களினால் நிறுவனங்களுக்கு கல்வி மற்றும் நன்னெறிப்பயிற்சிக்கென அனுப்பப்படும் சிறார்களுக்கென 1986ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தின்கீழ் மாநிலத்தில் 23 இளைஞர் மற்றும் 8 இளைஞர்கள் இல்லங்கள் உள்ளன. அவற்றுள் 2 சிறப்பு இல்லங்கள் மற்றும் 8 இளைஞர் இல்லங்கள் அரசினராலும் 13 இளைஞர் இல்லங்கள் அரசின் மானிய உதவியுடன் தனியாராலும்

நடத்தப்படுகின்றன. தவறிழைத்ததாகக் கருதப்படும் சிறார்கள் இளைஞர் நீதிமன்றங்கள் மூலம் சிறப்பு இல்லங்களிலும், ஆதரவற்ற சிறார்கள் இளைஞர் நலக்குழுமங்கள் மூலம் இளைஞர் இல்லங்களிலும் சேர்க்கப்படுகின்றனர். மனநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கென சென்னை பாலவிஹார் நிர்வாகத்தின்கீழ் ஓர் இளைஞர் இல்லம் இயங்கி வருகிறது.

இவ்வகை நிறுவனங்களினின்றி சிறார்களின் முன்னேற்றத்திற்குத் தக்கது எனக் கருதும் நிறுவனங்களின் பொறுப்பில் ஒப்படைக்கவும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

## 4.3. இளைஞர் நலக் குழுமங்கள்

1986ஆம் ஆண்டில் இளைஞர் நீதிச்சட்ட பிரிவுகளின் கீழ்வரும் புறக்கணிக்கப்பட்ட சிறார்கள் தொடர்புள்ள வழக்குகளை விசாரிக்க 13 இளைஞர் நலக்குழுமங்கள் இயங்கி வருகின்றன. ஒரு தலைவர் மற்றும் அலுவலர் சார்பற்ற 5 உறுப்பினர்களைக்கொண்டு (மகளிர் ஒருவர் உட்பட) இந்த இளைஞர் நலக் குழுமங்கள் இயங்கி வருகின்றன.

மேலும் நான்கு இளைஞர் நலக்குழுமங்கள் திண்டுக்கல், மயிலாடுதுறை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் நிறுவ 1997–98–ல் அரசு அனுமதித்துள்ளது.

## 4.4. இளைஞர் நீதி மன்றங்கள்

சென்னை நகரில் பன்னிரெண்டாவது பெருநகர நீதிமன்ற நடுவர், மாவட்டங்களில் தலைமைக் குற்றவியல் நீதிமன்ற நடுவர், உட்கோட்ட குற்றவியல் நீதிமன்ற நடுவர், குற்றவியல் முதல் வகுப்பு நடுவர் ஆகியோர் தவறிழைத்த சிறார்களின் வழக்குகளைத் தீர்வு செய்து வருகின்றனர்.

## 4.5. 1956ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் அமைந்த நிறுவனங்கள்

1956ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் தவறிழைத்தவர்களாகக் கருதப்படும் பெண்கள் மற்றும் சிறுமியர்க்கு மகளிர் காப்பகங்கள் மற்றும் பெண்கள் பாதுகாப்பு இல்லங்கள் புகலிடம் தந்து பயிற்சி மற்றும் மறுவாழ்வு அளிக்கின்றன.



இத்துறையின் கீழ் 6 மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள் சென்னையில் இரண்டும், மதுரை, திருச்சி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் இயங்கி வருகின்றன.

நீதிமன்ற விசாரணைக் காலத்தில் மகளிருக்குப் புகலிடம் அளித்து பராமரிக்க ஏதுவாக ஆறு மீட்பு இல்லங்கள், அரசினர் மகளிர் காப்பகங்கள், பாதுகாப்பு இல்லங்களுடன் இணைந்து இயங்குகின்றன. இவை தவிர மணமாகாத தாய்மார்களுக்கென இரண்டு இல்லங்கள் தொண்டு நிறுவனங்களால் அரசின் மானிய உதவியுடன் நடத்தப்படுகின்றன.

## 4.6. கல்வி பயிற்சி

அனைத்து சிறப்பு/இளைஞர் இல்லங்களிலும் 8ஆம் வகுப்பு வரை கல்வி அளிக்கப்படுகிறது. செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லம் மற்றும் சென்னை அரசினர் பெண்கள் சிறப்பு இல்லங்களிலும் பள்ளி இறுதி வரை கல்வி அளிக்கப்படுகிறது. உயர் கல்வியில் நாட்டமும் தகுதியும் உள்ள இல்லவாசிகள் இல்லத்தில் தங்கும் காலத்தைப் பொறுத்து வெளியில் உள்ள மேல்நிலைப்பள்ளி, கல்லூரி/தொழில்நுட்பக் கல்லூரி, தொழிற்பயிற்சி நிறுவனங்கள்/தொழில் கல்லூரியில் சேர்ந்து பயிற்றுவிக்கப்படுகிறார்கள். பள்ளிக் கல்வி மட்டுமல்லாது முறைசாராக் கல்வி மூலமும் இல்லவாசிகளுக்கு கல்வி அளிக்கப்படுகிறது.

## 4.7. தொழிற்பயிற்சி

சிறார்களுக்கிடையே தன்னம்பிக்கையினை மேம்படுத்தும் நோக்கில் சமூக பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் சிறப்பு/இளைஞர் இல்லங்களில் இல்லவாசிகளுக்கு கீழ்க்குறிப்பிட்ட தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தச்சு, புத்தகம் கட்டுதல் இயந்திரத்தச்சு, கொத்து வேலை, தையல் மற்றும் பூவேலை, சோப்பு தயாரிப்பு, தோட்டம் மற்றும் வேளாண்மை, நெசவு, இசைக்கருவி பயிற்சி, பாய் நெசவு, மாட்டுப்பண்ணை, கருமாரப்பணி மற்றும் உலோகப்பணி.

இவை மட்டுமின்றி பின்வரும் செயல்திறன் வளர்ச்சித் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன:

1. மெழுகுவர்த்தித் தயாரிப்பு
2. பனைநார் பொருட்கள் தயாரிப்பு
3. காகிதப் பொம்மைகள் தயாரிப்பு
4. பனை ஓலைப் பொருட்கள் தயாரிப்பு
5. மின்விசை மாவு ஆலை
6. இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர தானியங்கி வாகனங்கள் பழுதுபார்ப்பு
7. வீட்டு மின் அலகுப்பணி
8. தண்ணீர்க்குழாய் பழுதுபார்ப்பு
9. ஸ்கிரீன் பிரிண்டிங்
10. பனியன் தயாரிப்பு

மேற்காணும் தொழில் அலகுகளில் சென்னை அரசினர் பெண்கள் சிறப்பு இல்லம் மற்றும் தஞ்சாவூர் அரசினர் இல்லங்களில் உள்ள தையற் தொழிற்கூடங்களும், செங்கல்பட்டு சிறப்பு இல்லத்தில் நெசவு தொழிற்கூடமும் தஞ்சாவூர், இராணிப்பேட்டை இளைஞர் இல்லங்களில் தச்சு தொழிற்கூடங்களும் நவீன இயந்திரமயமாக்கப்பட்டுள்ளன. இராணிப்பேட்டை அரசினர் இளைஞர் இல்லத்தில் பற்றவைப்பு மற்றும் உற்பத்தித் தொழிற்கூடம் துவக்கப்பட்டு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

மகளிர் காப்பகங்கள்/பெண்கள் பிற்காப்பு நிறுவனங்களில் தையல் மற்றும் பூவேலை, பாய் நெசவு மற்றும் கை நெசவு ஆகியவற்றில் பயிற்சி வழங்கப்படுகிறது. சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் இல்லவாசிகளுக்கு மின் சலவையகம் மூலம் பயிற்சி வழங்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட தொழில்கூடங்களில் இல்லவாசிகள் பயிற்சி பெறுகிறார்கள்.

சிறார்களுக்கான பிற்காப்பு நிறுவனங்களில் புத்தகம் கட்டுதல், கருமாரப்பணி மற்றும் வேளாண்மை ஆகிய தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இந்நிறுவனங்களில் 20 இல்லவாசிகள் படிப்பு உதவித்தொகையுடன் பயிற்சி பெறுகிறார்கள்.

சென்னை அரசினர் பெண்கள் சிறப்பு இல்லத்தில் குழந்தைகள் காப்பகம் ஒன்று இயங்கி வருவதுடன் 15 மாணவிகள் இப்பிரிவில்



பயிற்சி பெறுகிறார்கள். சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் 20 இல்லவாசிகளுக்கு மனையியல் பயிற்சி அளிக்கப்படுகிறது. இளைஞர்/சிறப்பு இல்லத்தில் பயிற்சி பெற்று வெளியே சென்ற முன்னாள் இல்லவாசிகள் தங்குவதற்காக பிற்காப்பு விடுதி ஒன்று சென்னை அரசினர் இளைஞர்/சிறப்பு இல்ல வளாகத்தில் ஆரம்பித்து நடந்து வருகிறது. 30 இல்லவாசிகள் பயன் பெறுகிறார்கள்.

## 4.8 இளைஞர் வழிகாட்டி நிலையங்கள்

சென்னை, மதுரை, வேலூர், தருமபுரி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தனியார் நிர்வாகத்தில் இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்நிலையங்கள் இளைஞர் நலக்குழுமங்கள், இளைஞர் நீதிமன்றங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களால் பரிந்துரைக்கப்படும் சிறுவர்/சிறுமியரின் மனநிலையை ஆராய்கின்றன.

## 4.9 பிற்காப்பு நிறுவனங்கள்

இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களில் பயிற்சி முடித்து வெளியேறும் சிறுவர்களின் பராமரிப்புக்கான மூன்று பிற்காப்பு இல்லங்கள் உள்ளன. இவற்றில் இரண்டு சிறுவர்களுக்கான இல்லங்கள் ஆத்தூர் (காஞ்சிபுரம் மாவட்டம்) மற்றும் மதுரையிலும், பெண்களுக்கான ஓர் இல்லம் வேலூரிலும் உள்ளன. கல்விப்பயிற்சி மற்றும் தொழிற்பயிற்சி பெற்றுவரும் இல்லவாசிகள் பயிற்சியை முழுமையாக முடித்து வெளியேற அவர்களின் இல்ல நீக்க நாட்களுக்குப் பிறகு மேலும் மூன்று ஆண்டுக்காலம் பிற்காப்பு இல்லங்களில் தங்கி பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் இல்லவாசிகள் நிறைவான கல்வி அல்லது தொழிற்பயிற்சி பெற வேண்டும் என்பதே ஆகும். இவ்வகையான ஏற்பாட்டின் மூலம் பயிற்சி பெற்ற இல்லவாசிகள் தன்னம்பிக்கையுடன் சிறப்பு இல்லங்களை விட்டுச் செல்லும் மனநிலை உருவாகிறது.

## 4.10 மறுவாழ்வு நடவடிக்கைகள்

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்களில் பயிற்சி பெற்று வெளியேறும் இல்லவாசிகளின் மறுவாழ்வுக்கு இத்துறை அதிகமான அக்கறை காட்டுகின்றது.

1. கஸ்தூரிபாய் காந்தி நினைவு மறுவாழ்வு தொழில் கூட்டுறவுச் சங்கம் என்ற தொழிற்துறை இயக்குநரிடம் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் பெண்களுக்கான அரசினர் இளைஞர் மற்றும் சிறப்பு இல்லம், சென்னை-10-ல் பயிற்சி பெற்று வெளியேறும் இல்லவாசிகள் மறுவாழ்விற்காக இயங்கி வருகிறது.

2. இத்துறையில் தமிழ்நாடு தேர்வாணையத்தின் வரம்புக்குட்படாத பதவிகளில், முன்னாள் இல்லவாசிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டமும், திருமணம் செய்து கொள்ளும் மணமக்களுக்கு அவர்களின் திருமண நாள் செலவாக ரூ. 300/-ம், புதுவாழ்வு துவங்க உதவித்தொகையாக ரூ. 1,000/-ம் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 16 பெண்கள் இந்த உதவியைப் பெற்றுள்ளனர்.

3. மகளிர் காப்பகங்களிலிருந்து விடுவிக்கபபடும் பெண்கள் சுயவேலைவாய்ப்பு பெற ஒழுக்கநெறி பிறழிய மகளிருக்கான தமிழ்நாடு நலநிதி ஏற்படுத்தப்பட்டு அதிகபட்சமாக ரூ.5000/-ம் வரை நிதியுதவி அளித்து, கறவை மாடுகள், சிறுகடைகள், தையற்கடை போன்றவை வைத்துச் சொந்தமாகத் தொழில் செய்து முன்னேற வகை செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுகாறும் 124 பெண்கள் மறுவாழ்வு பெற்றுள்ளனர்.

## 4.11 இளைஞர் நீதிச் சட்டத்தின்கீழ் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் திட்டப்பணிகள்

### (அ) தொழிற்பயிற்சி பெறும் இல்லவாசிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்

அரசினர் இளைஞர் சிறப்பு இல்லங்களில் தொழிற்பயிற்சிபெறும் இல்லவாசிகளில் திறமைவாய்ந்த இல்லவாசிகளுக்கு முறையே மாதம் ரூ. 50/- மற்றும் ரூ. 30/- வீதம் ஊக்கத்தொகை அளிக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தில் ரூ. 0.65 இலட்சம் செலவில் ஆண்டுதோறும் 150 இல்லவாசிகள் பயன்பெற்று வருகின்றனர்.

### (ஆ) சிறார்கள் நலனுக்கான குடும்ப உதவித்திட்டம்

வறுமையின் காரணமாக இளைஞா இல்லங்களுக்கு அனுப்பப்படும் சிறுவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு உதவும் வண்ணம் சிறார்களை அவர்களது பெற்றோர்/உறவினரிடம் ஒப்படைத்து





அவர்களது குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான சிறார்கள் ஒரு குழுவின் மூலம் தேர்வு செய்யப்பட்டு அவர்களின் பராமரிப்பு, கல்வி, உடல் நலம் இவற்றுக்கென ஓர் இல்லவாசிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100/-வீதம் உதவி வழங்கப்படுகிறது. 1997-98-ல் இத்திட்டத்திற்கான மதிப்பு ரூ.1.00 இலட்சம் ஆகும். பயன்பெறும் இல்லவாசிகள் 100.

### (இ) சிறுவர்கள் பிச்சையெடுத்தலை ஒழித்தல்

சிறார்கள் பிச்சை எடுக்கும் நிலையினைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தை இத்துறை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் மூன்று கட்டங்களாகச் செயல்படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட பகுதிகளில் துயருறும் சூழலில் பிச்சை எடுக்கும் குழந்தைகள் குறித்த தகவல்களைச் சேகரித்தல், புதிய இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் துவக்குதல் மற்றும் இளைஞர் வழிகாட்டி நிலையங்களை வலுப்படுத்துதல். இந்தியக் குழந்தைகள் நலச்சங்கத்தின்கீழ் ஒரு இளைஞர் வழிகாட்டி நிலையம் சென்னையில் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

## 4.12 சாலையோரச் சிறார்களுக்கான இரவு விடுதிகள்

தெருவோரச் சிறார்களின் நலன் குறித்து, தமிழக அரசு சிந்தித்து, முதற்கட்டமாக அவர்களுக்கு இரவு விடுதிகளை அமைக்கலாம் எனத் திட்டம் வகுத்தது. இவ்வகைச் சிறார்கள் தங்கள் வாழ்க்கையை பெரும்பாலும் நடைபாதை ஓரங்களிலும். பேருந்து நிழற்குடைகளிலும் கழிக்கின்றனர். இந்நிலை, அவர்களைச் சமூக விரோதிகளிடம் தொடர்பு ஏற்படுத்தி குற்றவாளிகளாக மாற வழிவகை செய்கிறது. சமூகத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இச்சிறார்களுக்கு இத்தங்கும் புகலிடங்கள் மறுவாழ்வு வழங்கும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் தனியார் நிறுவனங்களால் அரசின் மானிய உதவியுடன் 13 புகலிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 7 இல்லங்கள் சென்னையிலும், 2 மதுரையிலும், 1 சேலத்திலும், 1 விழுப்புரத்திலும், 1 வேலூரிலும். 1 கோவையிலும் நடைபெறுகின்றன. இவற்றுள் 6 தனியார் நிறுவனங்களால் நடத்தப்பட்டுவரும் 7 புகலிடங்கள் இந்திய அரசின் மானிய உதவியும் எஞ்சியுள்ள 6 புகலிடங்கள் தமிழக அரசின் மானிய உதவியும் பெறுகின்றன. தமிழ்நாடு அரசு இவ்வில்லங்களுக்கு ஆண்டுக்கு தலா ரூ. 40,000/-

ஒட்டுமொத்த மானியமாகவும், ரூ. 7500/- முறைசாராக்கல்வி மற்றும் தொழிற்கல்விக்கென்றும் மற்றும் ஒரு இல்லவாசிக்கு ஒரு நாளைக்கு தலா ஒரு ரூபாய் வீதம் உணவு செலவின மானிய உதவியும் வழங்குகின்றது.

சாலையோர சிறார்களுக்கு இரவு நேரங்களில் இப்புகலிடங்கள் பாதுகாப்பாக அமைந்துள்ளன. சுமார் 2,100 சிறார்கள் தொழிற்பயிற்சி மற்றும் முறைசாராக்கல்வி ஆகியவை பெறுவதின் மூலம் பயன் பெறுகின்றனர்.

திருச்சி நகரில் சாலையோர மற்றும் பணிபுரியும் சிறார்களுக்கான தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்கீழ் இரண்டு அனாதை இல்லங்கள் துவக்கப்பட்டு நடைபெறுகின்றன. 1997-98ஆம் ஆண்டில் கீழ்க்காணும் இடங்களில் மேலும் புகலிடங்கள் துவங்க ரூ. 6.55 இலட்சம் செலவில் அரசு அனுமதித்துள்ளது:--

| | | | |
|---|---|---|---|
| சென்னை | .. | .. | 4 |
| திருநெல்வேலி | .. | .. | 1 |
| திண்டுக்கல் | .. | .. | 1 |
| இராமநாதபுரம் | .. | .. | 1 |
| மதுரை | .. | .. | 1 |
| மொத்தம் | .. | .. | 8 |

மேலும் 400 சாலையோரச் சிறார்கள் இத்திட்டம் மூலம் பயன்பெறுவார்கள்.

### 4.13. இடர்ப்பாடுகள் தலையீட்டு மையம் ஆரம்பித்தல்

குழந்தைகளைத் தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் புறக்கணித்தலைத் தடுக்கும் நோக்குடன் தன்னார்வு நிறுவனங்களின்கீழ் இடர்ப்பாடுகள் தலையீட்டு மையம் ஒன்றைத் துவங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்துகிறது. சமூகநோக்குள்ள நபர்கள், குழந்தைகள் தவறாகப் பயன்படுத்தப்படும் நிகழ்வுகளை அறிய நேரிட்டால் இம்மையத்தில் முறையிடலாம்.

இம்மையம் தலையிட்டு அக்குழந்தை தவறாகப் பயன்படுத்தப்படுதலைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்வதுடன், அக்குழந்தைக்குத் தற்காலிகமாகப் புகலிடம் மற்றும் பாதுகாப்பு



அளிக்கிறது. பெற்றோருக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல் வழங்குகிறது. பொதுமக்களிடையே குழந்தைகள் தவறாகப் பயன்படுத்துதல் சார்ந்த விழிப்புணர்வு ஏற்படுத்த பிரச்சாரம் மேற்கொள்கிறது. இத்திட்டத்தில் 100 குழந்தைகள் பயன்பெறுகிறார்கள்.

மேற்படி மையத்தை வலுப்படுத்தும் வகையில் 1997-98-ல் மேலும் ரூ. 1.69 இலட்சம் அனுமதித்து, நேரடி தொலைபேசி வசதி, கட்டிட வாடகை. சமூகப் பணியாளர் தொகுப்பூதியம் ஆகியவற்றிற்காகவும் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் நடத்தவும் வழி செய்துள்ளது.

### 4.14. சிறப்புப் பராமரிப்பு மையங்கள்

ஆதரவற்ற அனாதைச் சிறார்களுக்கு அன்பும், அரவணைப்பும் அளிக்கும் வகையில் 2 சிறப்புப் பராமரிப்பு மையங்கள் (சிறுமியர்க்கு 1 சிறுவர்களுக்கு 1) துவங்கப்பட்டு நடந்து வருகின்றன.

சென்னை அரசினர் பெண்கள் சிறப்பில்லத்தில் 1 மையமும், இராணிப்பேட்டை அரசினர் இளைஞர் இல்லத்தில் 1 மையமும் தன்னார்வு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. திட்ட மதிப்பு ரூ. 1.20 இலட்சம், 100 சிறார்கள் பயன்பெறுகிறார்கள். சிறுவர்களைப் பராமரிக்க இல்லத்தாய்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### 4.15. பயிற்சிப் பெற்ற இல்லவாசிகளுக்கு நிதியுதவி

அரசினர் இளைஞர்/சிறப்பு இல்லங்கள் மற்றும் மகளிர் காப்பகங்களில் பல்வேறு தொழில் மையங்களில் பயிற்சி பெற்று வெளியேறும் இல்லவாசிகளுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்துகிறது. கருவிகள் வடிவில் இந்த உதவி வழங்கப்படுகிறது. இதனால் சுயமாகத் தொழில் துவங்குவது எளிதாகிறது.

### 4.16. திட்ட முன்னேற்றம் மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு

யூனிசெப் உதவியுடன் 1991-ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்புத்துறை இயக்ககத்தில் திட்ட முன்னேற்றம் மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. சமூகப் பாதுகாப்புத் துறையினால் அமல் செய்யப்படும் குழந்தைகள் நலத்திட்டங்களை (நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்கள் சாராத பணிகள்)

[1998 ஏப்ரல் 23

கண்காணிப்பதுடன் மட்டுமின்றி நிறுவனங்களில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சேவையின் குறுமத் தரத்தை உறுதி செய்தலும் இப்பிரிவின் நோக்கங்களாகும்.

துயருறும் சூழ்நிலையில் உள்ள சிறார்கள் சார்ந்த கருத்தரங்குகள் நடத்துதலோடு, தன்னார்வுத் தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் சாலையோர சிறார்களுக்கான நலத்திட்டங்கள் போன்ற பணிகளையும் திட்ட முன்னேற்றம் மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு கவனித்து வருகிறது.

**4.17. சிறார்கள் சமுதாயத்தின் சீர்கேடுகளுக்கு ஆட்படுதலைத் தடுத்துக் கட்டுப்படுத்தும் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் அரசினர் இளைஞர்/சிறப்பு/கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் அரசினர் பிற்காப்பு நிறுவனங்களுக்கு மைய அரசின் 50 சதவிகிதம் நிதியுதவியுடன் கீழ்க்காணும் மேம்பாடுகளை ரூ. 42.78 இலட்சம் செலவில் 1997-98-ல் அரசு அனுமதித்துள்ளது:--

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| அ. | அரசினர் இளைஞர் மற்றும் சிறப்பு இல்லக்கல்விப் பிரிவுகளுக்கு விஞ்ஞான உபகரணங்கள் மாதிரிகள் வழங்குதல். | 8.60 |
| ஆ. | சென்னையிலுள்ள அரசினர் பெண்கள் இளைஞர் மற்றும் சிறப்பு இல்லத்தில் சுகாதார குட்டைகள் தயாரிக்கும் அலகு துவங்குதல் | 3.00 |
| இ. | இராணிப்பேட்டை மற்றும் தஞ்சாவூரிலுள்ள அரசினர் இளைஞர் இல்லங்களில் வெற்றிட திண்காரைக்கட்டு செங்கற்கள் தயாரிக்கும் அலகு துவங்குதல் | 6.00 |
| ஈ. | இராணிப்பேட்டை அரசினர் இளைஞர் இல்லத்தில் திரை அச்சுத்தொழில் அலகு துவக்குதல் | 1.00 |
| உ. | சென்னை அரசினர் பெண்கள்/சிறப்பு இல்லம் மற்றும் செங்கற்பட்டு அரசினர் சிறப்பு இல்ல மாணவ/மாணவிகளுக்கு கணிப்பொறிகள் வழங்கி பயிற்சி அளித்தல். | 1.50 |
| ஊ. | அனைத்து இளைஞர்/சிறப்பு இல்ல தையல் அலகுகளுக்கு மின்தையல் இயந்திரங்கள் வழங்குதல். | 1.00 |
| எ. | சென்னை, விழுப்புரம் மற்றும் வேலூர் அரசினர் கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் சென்னை அரசினர் பெண்கள்/சிறப்பு இளைஞர் இல்லத்திற்கு மூன்றடுக்கு இரும்பு படுக்கைகள் வழங்குதல். | 5.33 |



1998 ஏப்ரல் 23]

| | | |
|---|---|---|
| ஏ. | அனைத்து இளைஞர்/சிறப்பு/கூர்நோக்கு இல்லவாசிகளுக்கு தலா ஒரு தலையணை, 2 தலையணை உறைகள் மற்றும் ஒரு போர்வை வழங்குதல். | 7.21 |
| ஐ. | அனைத்து சிறப்பு/இளைஞர்/கூர்நோக்கு இல்ல மாணவர்களுக்கு விளையாட்டுப் பொருட்கள் வழங்குதல். | 1.26 |
| ஒ. | அனைத்து சிறப்பு/இளைஞர்/கூர்நோக்கு இல்லங்களுக்கு சமையல் பாத்திரங்கள் வழங்குதல். | 7.88 |
| | மொத்தம் | 42.78 |

1997-98ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்களையும் அரசு அனுமதித்துள்ளது--

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| இளைஞர்/சிறப்பு இல்லங்களில் வாத்தியக் குழுவிற்கு வாத்தியக் கருவிகள் வழங்குதல் | 1.53 |
| சென்னை அரசினர் பெண்கள் / இளைஞர் சிறப்பு இல்லத்தில் கழிப்பறைகள் மற்றும் குளியலறைகள் கட்டுதல். | 2.60 |
| தனியார் நிறுவனங்களில் நடத்தப்படும் கூர்நோக்கு இளைஞர் இல்லங்களுக்கு மர அணிகள் வழங்குதல் | 4.22 |

[1998 ஏப்ரல் 23

## அத்தியாயம்-5

## முதியோர்களுக்கான ஒய்வூதியத் திட்டம்

**5.1.** இந்தத் திட்டம் முதியோர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். உற்றார், உறவினர் ஆதரவின்றி வாழ வழியற்றவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட இனங்களின்கீழ் இத்திட்டத்தை மாநில அரசு செயல்படுத்துகிறது.

(1) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம் (1-4-1962 முதல் அமல்படுத்தப்படுவது)

(2) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம் (1-11-1974 முதல் அமல்படுத்தப்படுவது)

(3) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவை) திட்டம் (1-6-1975 முதல் அமல்படுத்தப்படுவது)

(4) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம் 21-8-1981 முதல் அமல்படுத்தப்படுவது)

(5) கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித் தொகைத் திட்டம் (25-4-1986 முதல் அமல்படுத்தப்படுவது)

### 5.2. முதியோர்களுக்கான ஒய்வூதியத் திட்டம்

### (அ) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம்

கண்பார்வையற்றோர், தொழுநோய், மனநோய், பாரிசவாய்வு மற்றும் அவயம் இழந்து வருவாய் ஈட்ட முடியாத நபர்கள் உதவித் தொகை பெற குறைந்தபட்ச வயது வரம்பு 60 ஆகும். மற்ற ஆதரவற்ற நபர்களுக்குக் குறைந்தபட்ச வயது வரம்பு 65 ஆகும். இத்திட்டம் 1-4-1962 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### (ஆ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் திட்டம்)

1974 ஆம் ஆண்டு "முதியோர் உதவித் தொகை" திட்டம் ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்களும் பயன்பெறும் வகையில் விரிவு படுத்தப்பட்டது. உடல் ஊனம் 50 சதவிகிதம் அளவும், அதற்கு



1998 ஏப்ரல் 23]

மேலும் உள்ள, ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் 55 வயது நிரம்பியவர் மட்டும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறத் தகுதி உடையவர் ஆவர். 1975-ல் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவோர் வயது 45 ஆகக் குறைக்கப்பட்டது. 1975ஆம் ஆண்டில் அரசின் உத்தரவின்படி இந்தக் குறைந்தபட்ச வயது வரம்பு கண்பார்வையற்றோருக்குப் பொருந்தாது.

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியாளர், மாவட்ட மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலர் ஆகியோர் அடங்கிய குழு ஏற்படுத்தப்பட்டது. அக்குழுவானது, ஊனமுற்றோரிடமிருந்து ஓய்வூதியம் வேண்டிப் பெறப்படும் மனுக்களை ஆய்வு செய்து, அவர்களுக்கு வயது வரம்பின்றி அதனை வழங்கும். இத்திட்டம், 1982 முதல் தொழுநோயாளிகளும் பயன் பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### (இ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவை) திட்டம்

இந்தத் திட்டம் 1975 முதல் ஆதரவற்ற விதவைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. முதலில் பயனாளிகளுக்குக் குறைந்தபட்ச வயது வரம்பு 45 என ஆணையிடப்பட்டது. 1978ஆம் ஆண்டு வயது வரம்பு 40 ஆக்கப்பட்டது. 1990ஆம் ஆண்டு முதல் மேற்கண்ட வயது வரம்பை நீக்கி அரசு ஆணையிட்டுள்ளது. முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டத்தில் கூறப்பட்டுள்ள மற்ற நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

### (ஈ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம்

இத்திட்டம் 21-8-1981 முதல் 60 வயது நிரம்பிய ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு அமலாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### (உ) கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித் தொகை திட்டம்

25-4-1986 முதல் 30 வயது நிரம்பிய, கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் அமலாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. கணவருடன் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் எவ்விதத் தொடர்பும்

[1998 ஏப்ரல் 23

இல்லாமலும் அல்லது நீதிமன்றத்திலிருந்து விவாகரத்துச் சான்றிதழ் பெற்றவரும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெறத் தகுதி உடையவர்கள் ஆவர்.

## 5.3. உதவித் தொகை வழங்கும் முறை

மேற்கண்ட திட்டத்தின்கீழ் உதவித் தொகை ஒப்பளிப்பு அதிகாரம் கோட்டாட்சியருக்கு அளிக்கப்பட்டது. மேற்கண்ட ஒப்பளிக்கும் அதிகாரம், நலிந்தோர் நலத்திற்கான வட்டாட்சியர்களுக்கு 1989 முதல் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு முதியோர் உதவித் தொகை பெறும் நபர்களுடன் நேரடியாகத் தொடர்புள்ள அலுவலர்களுக்கு அரசு இந்த அதிகாரத்தை வழங்கி, தேவையான நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்குவதில் தாமதத்தைத் தவிர்த்து உதவி செய்து வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித் தொகை, அதனைப் பெறுபவர்களின் முகவரிக்கு சிறப்பு வட்டாட்சியரால் அனுப்பப்படுகிறது. இதற்கான பண அஞ்சல் கட்டணச் செலவையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது. முதியோர் உதவித் தொகைக்கான பட்டியல்கள் எழுதி வழங்கும் முறைகளில் உள்ள வேலைப் பளுவைக் குறைப்பதுடன், அதில் ஏற்படும் பிழைகளைத் தவிர்க்கும் நோக்கத்துடன் அரசு, கணிப்பொறி மூலம் பண அஞ்சல் தொகையினை அனுப்ப அனுமதி வழங்கியுள்ளது.

**முதியோர் உதவித் தொகை உயர்வு:** இந்தத் திட்டங்களின்கீழ் வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 75-லிருந்து ரூ. 100 ஆக 1-7-95-லிருந்து உயர்த்தப்பட்டது. 1998-99-லிருந்து இத்தொகை ரூ. 150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## 5.4. முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கு வழங்கப்படும் இதர உதவிகள்

### (1) இலவச வேட்டி/சேலை வழங்குதல்

ஆண்டுக்கு இரு முறை பொங்கல் பண்டிகை மற்றும் சுதந்திர நாளன்று உதவித் தொகை பெறும் ஆண்களுக்கு, தலா ஒரு கைத்தறி வேட்டியும், பெண்களுக்கு, தலா ஒரு கைத்தறிப் புடவையும் 1979ஆம் ஆண்டின் சுதந்திர நாள் முதல் அளிக்கப்பட்டு வந்தது. 1991 ஆம் ஆண்டு முதல் தீபாவளிக்கும் வேட்டி/புடவை வழங்க அரசு



1998 ஏப்ரல் 23]

உத்தரவிட்டது. ஆனால் 1992-93 ஆம் ஆண்டு முதல் முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் வருடத்தில் பொங்கல் மற்றும் தீபாவளி ஆகிய இரு பண்டிகை நாட்களுக்கு மட்டிலும் இலவச வேட்டி மற்றும் புடவை, முதியோர் உதவித் தொகை பெறும் நபர்களுக்கு வழங்கப்படுகிறது.

### (2) சத்துணவுக் கூடத்தில் மதிய உணவு வழங்குதல்

அனைத்து முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கும், நாள்தோறும் மதிய சத்துணவு இலவசமாக சத்துணவுக் கூடங்களில் வழங்கப்படுகிறது.

(அ) சத்துணவுக் கூடங்களில் மதிய சத்துணவு சாப்பிடாத, முதியோர் உதவித் தொகை பெறுவோருக்கு வாரந்தோறும் நபருக்கு ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது.

(ஆ) சத்துணவுக் கூடங்களில் மதிய சத்துணவு சாப்பிடும், முதியோர் உதவித் தொகை பெறும் நபர்களுக்கு வாரந்தோறும் நபருக்கு அரைக்கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது.

**முதியோர் உதவித் தொகை--பயன் அடைவோர் எண்ணிக்கை**

| | | |
|---|---|---|
| (1) | முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) | 3,36,207 |
| (2) | முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம் | 34,554 |
| (3) | முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவை) திட்டம் | 2,81,073 |
| (4) | முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம் | 70,001 |
| (5) | கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித் தொகை திட்டம் | 51,896 |
| | மொத்தம் | 7,73,731 |

[1998 ஏப்ரல் 23

## அத்தியாயம்-6

### அரசு மறுவாழ்வு இல்லங்கள்

**6.1.** தொழுநோயால் அவதியுறும் பிச்சைக்காரர்கள் நோயினைக் குணப்படுத்தவும், அவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்கவும், தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் 10 இடங்களில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களை அமைத்து உள்ளது.

1. பரனூர்-காஞ்சிபுரம் மாவட்டம்
2. உளுந்தூர்பேட்டை-விழுப்புரம் மாவட்டம்
3. பர்கூர்-தர்மபுரி மாவட்டம்
4. புதுக்கோட்டை-புதுக்கோட்டை மாவட்டம்
5. விண்ணப்பள்ளி-ஈரோடு மாவட்டம்
6. மனையேறிப்பட்டி-தஞ்சாவூர் மாவட்டம்
7. ஒய்.புதுப்பட்டி - மதுரை மாவட்டம்
8. மல்லவாடி - திருவண்ணாமலை மாவட்டம்
9. செல்லியம்பட்டி - தர்மபுரி மாவட்டம்
10. தேவியாக்குறிச்சி - சேலம் மாவட்டம்

**6.2. நிர்வாகம்**

முன்னர், சிறைத் துறைத் தலைவரின்கீழ் இயங்கி வந்த இவ்வரசு மறுவாழ்வு இல்லங்கள் 24-5-97 முதல் சமூக நலம் மற்றும் சத்துணவு இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டு இயங்கி வருகின்றன. ஒவ்வோர் இல்லமும் ஒரு நிர்வாக அலுவலரால் நிர்வகிக்கப்படுகிறது.

**6.3. அனுமதி**

ஒவ்வோர் இல்லத்திலும் 400 பெரியவர்களும், 25 சிறுவர்களும், (ஆண், பெண் உட்பட) தங்குவதற்கு வசதியுள்ளது. தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ள தானாக வரும் நோயாளிகளும், பிச்சை எடுத்ததற்காகத் தண்டனை பெற்றவர்களும் இல்லங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். மணமானவர்களின் கணவரோ அல்லது மனைவியோ தொழுநோயால் பாதிக்கப்பட்டு, பிச்சை எடுப்பவராக இருந்தால், மற்றவரையும் இவ்வில்லத்தில் சேர்க்க அனுமதி உள்ளது. அவர்களுக்குக் குழந்தைகள் இருப்பின், அவர்களும் இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர்.



1998 ஏப்ரல் 23]

**6.4. உள்ளுறைவோருக்கு அளிக்கப்படும் வசதிகள்**

உள்ளுறைவோருக்கு இலவசமாகத் தங்க வசதியும், உணவு, உடை, மருத்துவ வசதி மற்றும் பல தொழில்களில் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. அவர்கள் விளையாடுவதற்கான வசதியும், திரைப்படம் காண்பிக்க வசதியும், நூலகம் போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

**அ. உணவு**

தொழுநோயால் பாதிக்கப்பட்ட இல்லவாசிகளுக்கு நாளொன்றுக்கு ரூ. 15 வீதமும், அவர்களுடைய குழந்தைகளுக்கும், சார்ந்துள்ளவர்களுக்கும் நாளொன்றுக்கு ரூ. 10 வீதமும் வழங்கப்படுகின்றன. காந்தி ஜெயந்தி, சுதந்திர தினம் போன்ற சிறப்பான நாட்களில் ஒவ்வொரு உள்ளுறைவோருக்கும் ரூ. 3-க்கு சிறப்புணவுக்கு வழங்கப்படும் தொகை ரூ. 5- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**ஆ. இருப்பிடம்**

உளுந்தூர்பேட்டை, பர்கூர் மறுவாழ்வு இல்லங்களைத் தவிர மற்ற எல்லா இல்லங்களும் குடும்பத்தினர்கள் தங்கக்கூடிய அறைகள் கொண்ட 4 தொகுதிகளாக (ப்ளாக்) கீழ்த்தளத்தில் அமைந்துள்ளன. மேலும், முதல் மாடியில் தனி நபர் தங்குவதற்கு துயில்கூடங்கள் (டார்மிடரிஸ்) கட்டப்பட்டுள்ளன. உளுந்தூர்பேட்டை மற்றும் பர்கூர் இல்லங்கள் ஒற்றைத்தளக் கட்டிடமாகவும், நிரந்தரக் கொட்டகைகளாகவும் உள்ளன.

**இ. உடை, பாய் போன்றவை**

ஜனவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் உள்ளுறைவோருக்கு இரண்டு ஜோடி உடைகள் வழங்கப்படுகின்றன. அண்மையில் பொங்கலை முன்னிட்டு இலவச சேலைகளும், வேட்டிகளும் உள்ளுறைவோருக்கு வழங்க ஆணையிடப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை, போர்வையும், ஆண்டுதோறும் சிறப்பான வகை இரப்பர் காலணிகளும் வழங்கப்படுகின்றன. தட்டு, டம்ளர் மற்றும் பாய் முதலியன வழங்கப்படுகின்றன.

[1998 ஏப்ரல் 23

### ஈ. மருத்துவ வசதிகள்

உள்ளுறைவோருக்கு மருத்துவ சிகிச்சை இலவசமாக அளிக்கப்படுகிறது. இரண்டு மருத்துவ அதிகாரிகள், இரண்டு செவிலியர்கள், ஒரு ஆய்வுக்கூடத் தொழில் நுட்பப் பணியாளர், ஒரு மருந்தாளுநர், ஒரு உடற்கூறு பயிற்சியாளர், ஒரு பேறுகால உதவியாளர், ஒரு உதவி ஆண் செவிலியர், ஒரு உதவி பெண் செவிலியர் முதலானவர்கள் ஒவ்வோர் இல்லத்திலும் உள்ளுறைவோரின் மருத்துவத் தேவைகளைக் கவனிக்கின்றனர். இவர்களுக்குத் தொழுநோய் சிகிச்சை அளிப்பதோடு மட்டுமின்றி மற்ற நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தீவிர சிகிச்சை பெற வேண்டிய நோயாளிகள், 10 பேர் தங்கக்கூடிய தனி வார்டுகளில் அனுமதிக்கப்பட்டு, அவர்களுக்கு சிறப்புணவு மற்றும் மருந்துகள் அளிக்கப்படுகின்றன. எல்லாவித வசதிகளும் கொண்ட அறுவை சிகிச்சைக் கூடங்கள் பர்கூர், உளுந்தூர்பேட்டை இல்லங்கள் தவிர்த்து மற்ற இல்லங்களில் உள்ளன. கைவிரல் முடமானவர்கள், கால் விளங்காதவர்கள் மற்றும் உடற்கூறு சரியில்லாத நிலையில் உள்ளவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.

### உ. உடற்கூறு பயிற்சியும், தொழில் பயிற்சியும்

ஒவ்வோர் இல்லத்திலும் ஓர் உடற்கூறு பயிற்சியாளர் உள்ளார். மின் கருவி (எலக்ட்ரிகல் ஸ்டிமுலேட்டர்), மெழுகுப் பூச்சு சாதனத் தொட்டி (வாக்ஸ் பாத்) ஆகியவற்றின் உதவியைக் கொண்டு ஊனமுற்ற உறுப்பினர்களுக்கும் உடற்கூறு பயிற்சி, தேவையுள்ள உள்ளுறைவோர் அனைவருக்கும் உடற்கூறு பயிற்சியாளர்களால் அளிக்கப்படுகிறது. புண் மற்றும் உருச்சிதைந்த நோயாளிகளை உடற்கூறு பயிற்சியாளர்களும் மற்றும் மருத்துவ அதிகாரிகளும் அறுவை சிகிச்சைக்காகத் தேர்ந்தெடுக்கின்றனர். புண்ணாவதைத் தவிர்ப்பதற்காக, உள்ளுறைவோருக்கு நுண்ணிய துளைகளுடன் கூடிய இரப்பர் காலணிகள் அளிக்கப்படுகின்றன.

### ஊ. பொழுதுபோக்கு வசதிகள்

ஒவ்வோர் இல்லத்திலும் விளையாட்டுப் பொருட்கள் வாங்குவதற்கு ஒவ்வோர் ஆண்டுக்கும் ரூ. 200 அரசு அனுமதித்துள்ளது. ஒவ்வோர் இல்லத்திலும் இல்லவாசிகளின் பொழுது போக்குக்காக வருடத்திற்கு ரூ. 400/–க்கு இசைக் கருவிகளும் வாங்கி அளிக்கப்படுகின்றன.



1998 ஏப்ரல் 23]

### எ. கல்வி மற்றும் இதர வசதிகள்

இவ்வில்லவாசிகளில் இலக்கியம் மற்றும் பொதுக் கல்வி மேம்பாட்டிற்காக இரண்டு செய்தித் தாள்கள் மற்றும் இலக்கியப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

### 6.5. உள்ளுறைவோரின் குழந்தைகளுக்கான வசதிகள்

தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர் தாலுக்காவில், இத்தாப்பூர் என்னுமிடத்தில் நடத்தப்படும் சிறப்புப் பள்ளியில் அனுமதிக்கப்படுகின்றனர். மேற்படி நோயினால் பாதிக்கப்படாத குழந்தைகள் கூடுமான வரையில் தனியாகப் பிரிக்கப்பட்டு, இவ்வில்லங்களின் அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர்.

1. சீருடை, புத்தகங்கள், பெட்டி முதலியவைகளுக்காக ஒவ்வொரு குழந்தைக்கும் ஆரம்பச் செலவினமாக ரூ.75/- அரசு வழங்குகிறது.

2. மேலும், இவ்வில்லங்களிலுள்ள பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு, வரும் ஆண்டுக் கல்விக்காகவும் கீழ்க்கண்டவாறு செலவினம் மேற்கொள்ள அரசு ஆணை வழங்கியுள்ளது.

இரண்டாம் வகுப்பு முதல் ஏழாம் வகுப்பு வரை ரூ. 20 (ஒவ்வோர் ஆண்டிற்கும்)

எட்டாம் வகுப்பு மற்றும் ஒன்பதாம் வகுப்புக்கு ரூ. 30/- (ஒவ்வோர் ஆண்டிற்கும்)

பத்தாம் வகுப்பிற்கு ரூ.50/–

பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளுக்கு ரூ. 75/- (ஒவ்வோர் ஆண்டிற்கும்)

### 6.6. உள்ளுறைவோர் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள்

இவ்வில்லங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள தொழுநோயாளிகளில் உடல் நலத்துடன் இருப்போருக்குக் கீழ்க்கண்ட துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

1. துணி நெய்தல் (கைத்தறி, விசைத்தறி)
2. பாய் பின்னுதல்
3. காலணி தயாரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்

4. தையல்
5. தச்சுவேலை
6. விவசாயம்
7. காகித உறை செய்தல் (புதுக்கோட்டை இல்லத்தில் மட்டும்)

## 6.7. கைத்தறிகள் மற்றும் விசைத்தறிகள்

தற்போது 135 கைத்தறிகளும், 77 பாய்த்தறிகளும் பத்து இல்லங்களிலும் உள்ளன. இல்லவாசிகளால் தயாரிக்கப்படும் பொருட்களில் அவர்களின் தேவைகள் போக மீதமுள்ளவை, அருகிலுள்ள மாவட்ட மருத்துவமனைகளுக்கு விற்கப்படுகின்றன. ஒய்.புதுப்பட்டி மற்றும் உளுந்தூர்பேட்டை இல்லங்களில் நிறுவப்பட்டுள்ள ஊரக நூற்பாலைகளில் மாதத்திற்கு 10,000 சிட்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 34 தையல் இயந்திரங்கள் இவ்வில்லங்களில் உள்ளன. இல்லவாசிகளுக்கு வழங்கப்படும் உடைகள், தையல் கலையில் தேர்ச்சி பெற்ற இல்லவாசிகளாலேயே தைக்கப்பட்டு அளிக்கப்படுகின்றன.

## 6.8. காகித உறை தயாரிப்புப் பிரிவு

புதுக்கோட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் காகித உறை தயாரிப்புப் பிரிவு 1-2-1978 முதல் இயங்கி வருகிறது.

## 6.9. அரசினர் காப்பு முகாம், மேல்பாக்கம்

1-3-1954 முதல் நடத்தப்பட்டு வந்த மேல்பாக்கம், அரசினர் காப்பு முகாம் இத்தகைய முகாம்களில் முதன்மையானதாகும். சென்னை நகரில் பிச்சைக்காரர்கள் பிரச்னைகளைத் தீர்க்கவும் அவர்களுக்கு அவர்களின் திறமைக்குத் தக்க வகையில் தொழிற்பயிற்சி கொடுத்து, அவர்களைத் திசை திருப்பி, மறுவாழ்வு தந்து, சிறந்த குடிமகனாக ஆக்குவதே இந்த விடுதியின் நோக்கமாகும்.

### இல்லத்தில் அளிக்கப்படும் வசதிகள்

இவ்வில்லத்திலிருப்போருக்கு இலவசமாக உணவு, தங்கும் வசதி, ஆடைகள், மருத்துவ வசதிகள் வழங்கப்படுவதுடன் பல்வேறு துறைகளில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.



**6.10** டிசம்பர் 97 மாதத்தில் அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் அரசினர் ஏழைகள் பராமரிப்பு விடுதியில் உள்ள இல்லவாசிகள் விவரம்:

| அரசு மறுவாழ்வு இல்லத்தின் பெயர் | மொத்த எண்ணிக்கை (400 பெரியவர் மற்றும் 25 குழந்தைகள்) | பெரியவர் | | குழந்தைகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| 1. பரனூர் | 425 | 185 | 130 | 12 | 17 | 344 |
| 2. மல்லவாடி | 425 | 128 | 78 | 5 | 12 | 223 |
| 3. உளுந்தூர்பேட்டை | 425 | 98 | 56 | 3 | - | 157 |
| 4. செல்லியம்பட்டி | 425 | 149 | 75 | 16 | 14 | 254 |
| 5. தேவியாக்குறிச்சி | 425 | 138 | 76 | 6 | 4 | 224 |
| 6. விண்ணப்பள்ளி | 425 | 111 | 68 | 9 | 5 | 193 |
| 7. ஒய். புதுப்பட்டி | 425 | 223 | 122 | 7 | 16 | 368 |
| 8. புதுக்கோட்டை | 425 | 172 | 105 | 4 | 7 | 288 |
| 9. பர்கூர் | 425 | 152 | 101 | [illegible] | 10 | 274 |
| 10. மனையேறிப்பட்டி | 425 | 153 | 78 | 1 | 4 | 236 |
| 11. அரசினர் ஏழைகள் பராமரிப்பு விடுதி மேல்பாக்கம், சென்னை | 950 | 64 | 21 | 0 | 0 | 85 |
| மொத்தம் | 5200 | 1573 | 910 | 74 | 89 | 2646 |

## தொகுப்புரை

மகளிர் மேம்பாட்டிற்கும், மழலையர் வளர்ச்சிக்கும், ஊனமுற்றோர் உயர்வுக்கும், நலிந்தோர் நலனுக்காகவும் பாடுபடும் இத்துறை பல்வேறு சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதோடு, அத்திட்டங்களின் பயன்கள், உரியவர்களை உரிய காலத்தில் அடைவதற்குத் தேவையான எல்லா முயற்சிகளையும் எடுக்கும் என்று இம்மாமன்றத்தில் உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



## இணைப்பு

### 1998-99 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டப் பணிகளின் விவரப் பட்டியல்

| தொடர் எண் (1) | திட்டப் பணிகளின் விவரம் (2) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| | *மகளிர் மற்றும் குழந்தைகள் நலம்* | |
| 1. | சென்னை மாநகரில் சமூக நலத் துறையின்கீழ் வரும் அனைத்து அலுவலர்களை ஊக்குவிக்கவும், அவர்களது தேர்ச்சித் திறனை மேம்படுத்தவும் அவர்களுக்கு பயிற்சி அளித்தல் | 3.24 |
| 2. | குழந்தைகளைத் தத்து எடுத்தல் | 5.50 |
| 3. | சட்டக் கல்வி அறிவு விழிப்புணர்வுத் திட்டம் | 1.50 |
| 4. | ஆண்-பெண் பண்பு உணர் திட்டம் | 3.12 |
| 5. | திண்டுக்கல்லிலுள்ள அரசு அனாதை இல்லத்திற்குக் கட்டடம் கட்டுதல் | 20.00 |
| 6. | திருவண்ணாமலையிலுள்ள அரசு அனாதை இல்லத்திற்குக் கட்டடம் கட்டுதல் | 20.00 |
| 7. | தமிழ்நாட்டிலுள்ள பணிபுரியும் தாய்மார்கள், நோயுற்ற தாய்மார்கள் ஆகியோரின் குழந்தை களுக்கான குழந்தைகள் காப்பகம் 50 தொடங்குதல் | 13.09 |
| 8. | அரசு அனாதை இல்லத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு இலவச செருப்புகள் வழங்குதல் | 2.75 |
| 9. | கிண்டி வெட்கோ அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு மகளிர் ஆணையத்தின் தலைவருக்கு அலுவலக அறை வசதி செய்தல். | 4.00 |
| 10. | புதுக்கோட்டை அரசு புதுவாழ்வு இல்ல அலுவலகப் பயனுக்காக, கல்கட்டுமானப் பதிவேட்டு அடுக்கு அறை | 0.15 |
| 11. | சமையல் நோக்கத்திற்காக அரசு புதுவாழ்வு இல்லங்கள் ஐந்திற்கு எரிவாயு அடுப்பு, எரிவாயு சிலிண்டர்கள் வழங்குதல் | 5.75 |

| தொடர் எண் (1) | திட்டப்பணிகளின் விவரம் (2) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 32. | இளங்குற்றவாளிகள் கண்காணிப்பு இல்லத்திற்குப் புத்தகங்கள், வெளியீடுகள் வழங்குதல் | 1.80 |
| 33. | சமூகப் பாதுகாப்பு இயக்ககத்திற்கு பேக்ஸ் வசதி செய்து கொடுத்தல் | 0.45 |
| 34. | சென்னை, இராயபுரம், அரசினர் இளங்குற்றவாளிகள் இல்லத்தில் ஆழ்குழாய்க் கிணறு தோண்டுதலும், மின் இணைப்பைப் புதுப்பித்தலும் | 2.00 |
| 35. | இயக்ககத்திலுள்ள இயக்குநரின் நேர்முக எழுத்தருக்காக ஓர் அறையை மாற்றியமைத்தல் | 2.30 |
| 36. | 9 இளங்குற்றவாளிகளின் சிறப்பு இல்லங்களுக்கும், சென்னை அரசினர் கண்காணிப்பு இல்லத்திற்கும் நீரைச் சுத்தப்படுத்தும் சாதனத்திற்கு வகை செய்தல் | 2.40 |
| 37. | செங்கற்பட்டு, ஆத்தூர், மதுரை அரசினர் பிற்காப்பு இல்லங்களுக்குத் தொலைபேசி வசதி செய்து கொடுத்தல் | 0.45 |